
குருவுடன்
வாழ்ந்தவர்
மன்னார்குடி பானுகுமார்

# குருவுடன் வாழ்ந்தவர்

அ.நி மன்னார்குடி பானுகுமார்

# பொருளடக்கம்

## பகுதி அ

## வாழ்க்கை வரலாறு


| | | |
|---|---|---|
| | அணிந்துரை | 7 |
| 1. | உயிரில் கலந்த உறவு | 9 |
| 2. | குருபக்தி | 13 |
| 3. | மனித இழையில் ஒரு புனித விளக்கு | 16 |
| 4. | தோன்றிற் புகழோடு தோன்றுக | 21 |
| 5. | தாய்மையே தலைசிறந்தது | 24 |
| 6. | விளையும் பயிர் முளையில் தெரியும் | 27 |
| 7. | இளமையில் வறுமை கொடிது | 31 |
| 8. | பிச்சைப் புகினும் கற்கை நன்றே | 34 |
| 9. | பாதை வகுத்த சன்மார்க்க சங்கம் | 38 |
| 10. | ஆசிரியர் பயிற்சி | 41 |
| 11. | ராணிப்பேட்டையில் ஆசிரியர் பணி | 45 |
| 12. | சித்பவானந்தருடன் புலவர் | 48 |
| 13. | துறவறம் பூண்ட தூயவர் | 50 |
| 14. | பறவை பட்டணம் பறந்தது | 53 |
| 15. | பாம்பன் சுவாமிகள் கோயிலில் பூசாரியாக | 55 |
| 16. | சுத்தானந்த பாரதியாருடன் | 57 |

| | | |
|---|---|---|
| 17. | குருவின் தரிசனம் | 61 |
| 18. | குருவின் திருவடி நிழலில் | 63 |
| 19. | உலக சமாதானப் பொங்கல் | 66 |
| 20. | நல்லாசிரியர் விருது | 68 |
| 21. | பாத்திரமறிந்து பிச்சையிடுதல் | 70 |
| 22. | குருவின் மீது பிள்ளைத் தமிழ் பாடிய புலவர் | 72 |
| 23. | அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே | 76 |
| 24. | சமநோக்கு சத்திய சீலர் | 79 |
| 25. | மருத்துவத் தொண்டு | 81 |
| 26. | சர்வரோக நிவாரணி | 84 |
| 27. | ரிஷிகேஷில் புலவர் | 87 |
| 28. | பத்திரகிரியாரும் பட்டினத்தாரும் | 89 |
| 29. | செய்நன்றி அறிதல் | 92 |
| 30. | ஞானத்தை மலர வைப்பதே குருவின் வேலை | 95 |
| 31. | செங்கற்பட்டில் புலவர் | 97 |
| 32. | காசா லேசா | 102 |
| 33. | கணத்திலே எல்லாம் காட்டும் | 104 |
| 34. | ஆழியாறில் அடைக்கலம் | 106 |
| 35. | சேவைக்காக வாழ்ந்தவர் | 108 |
| 36. | வாக்குத் தவறாத வள்ளல் | 113 |
| 37. | பொள்ளாச்சியில் தொண்டு | 115 |
| 38. | குழந்தைப் பண்பும் பெருந்தன்மையும் | 118 |
| 39. | அருள் அன்னையின் அன்பில் | 120 |
| 40. | புலவரின் சொற்பொழிவுகள் | 122 |
| 41. | உண்மையே தெய்வீகமானது | 125 |
| 42. | வாழ்வியல் வழிகாட்டி | 127 |

43. புலவர் எழுதிய கடிதங்கள் 131
44. புலவர் சொன்ன பொன்மொழிகள் 133
45. வேதலோக அன்புத்தலைவராக 135
46. திருவாசகத்தில் உருகிய தியாகராஜர் 139
47. ஒன்றைப்பிடி உறுதிப்பிடி கடைப்பிடி 141
48. ஆனந்தமாக இருங்கள் 143
49. இறைநிலைப் பயணம் 147
50. வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் 150

பகுதி ஆ

## அன்பர்கள் பார்வையில் அய்யா...

1. மூத்த பேராசிரியர் திருமதி. மாரியம்மா - மாமனிதர்
2. பேராசிரியர் பிரம்மகுட்டி அம்மாள் - தொண்டாற்றின் இன்பமுற்றவர்
3. ஜோதிடர் கே. ராமலிங்கம் - கோளும் குறிக்கோளும்
4. கவிஞர் முருகொளி - அடிவருட சென்னாய்கொல்லோ
5. பிரம்மஞானி நிவேதிதா சீனிவாசன் - நினைத்துப் பார்க்கிறேன்
6. துணைப்பேராசிரியர் திரு. கருணாகரன் - ஞானப்புருஷர்
7. பிரம்மஞானி 7 கே. நரேந்திரன் - ஆசிர்வாதமகிமை

8. அருள்ஜோதி பாலசுப்பிரமணியம் - எங்கள் தாத்தா

9. அருட்செல்வி பிரேமாவதி சினிவாசன் - உயிரறிவாய் நிலைத்தவர்

## பகுதி 'இ'

## குருவைப் பற்றி அய்யாவின் புத்துணர்வூட்டும் கட்டுரைகளில் சில

1. குருவின் நினைவுகள் - பெரியநாயக்கன்பாளையம் மலர்
2. தொண்டே தொழுகை - திருவண்ணாமலை ஞானமலர்
3. நல்ல மனப்பான்மை - திருநெல்வேலி மலர்
4. குருவருளும் திருவருளும் - வேதாத்திரிமகரிஷி பன்முக ஆய்வு
5. குடும்ப அமைதி - கோபிச்செட்டிப்பாளையம் மலர்
6. தொண்டாற்றி இன்பம் காண்போம் - நாமக்கல் வெள்ளி விழா மலர்
7. நல்வழி காட்டும் நூல் - மகரிஷியின் 100 நிகழ்ச்சிகள்
8. சன்மார்க்கம் - வேதாத்திரிய இலக்கிய கருத்தரங்கு

# அணிந்துரை

**'எப்பொருளை எச்செயலை எக்குணத்தை**
**எவ்வுயிரை ஒருவர் அடிக்கடி நினைந்தால்**
**அப்பொருளின் தன்மையாய் நினைப்போர் ஆற்றல்**
**அறிவினிலும் உடலினிலும் மாற்றங்காணும்**
**இப்பெருமை இயல்பூக்க நியதியாகும்**
**எவரொருவர் குருவை மதித்து ஒழுகினாலும்**
**தப்பாத குருவுயர்வு மதிப்போர் தம்மைத்**
**தரத்தில் உயர்த்திப் பிறவிப் பயனை நல்கும்'**

என்ற வேதாத்திரி மகரிஷியின் வாக்கிற்கேற்ப - குருவை நினைத்தே வாழ்ந்த புலவர் - அவர்போலவே உருவத்திலும் - பண்பிலும் மாறியதை நாம் அறிவோம். அவரைப் பார்த்து சுவாமிஜி என்று ஏமாந்தவர்கள் பலர். அந்த அளவிற்கு தோற்றத்திலும் பண்பிலும் ஒற்றுமை.

அவரது வாழ்க்கை வரலாற்றை 50 தலைப்புகளில் மிகவும் சுவையாகவும் பக்திச் சுவையுடனும் இப்புத்தகம் படைக்கப்பட்டுள்ளது. கையில் எடுத்தவுடன் ஒரே மூச்சில் படித்து இன்பமுற்றேன்.

ஆன்மீக கருத்துகளுக்கும் பொக்கிஷமாகவும், ஆழ்ந்த தத்துவ விளக்கங்களுக்கும் களஞ்சியமாகவும் விளங்கும் இந்நூலினது தனிப் பெருமையாவது - ஞானக்கடலாகவும் உணர்வுமிக்க கலைஞராகவும் விளங்கிய புலவர், குருவுடன் இணைந்து வாழ்ந்தவர் - அவரோடு பேசியவர் என்பதே இத்தகைய பெறுதற்கரிய பேறு அவருக்குக் கிடைத்திருந்தது.

குருவுடன் வாழ்ந்தவர் என்ற இப்புத்தகம் உலக இன்பங்களைத் தேடியலையும் மக்களுக்கு உண்மையான இன்பம் எதுவென்று உணர்த்துவது மட்டுமல்லாமல் இன்பத்தை அடைதற்குரிய வழியையும் காட்டுகின்றன.

'குருவுடன் வாழ்ந்தவர் வாழ்க்கை' உலக நன்மைக்காகவே எழுந்தது. இவரது அருள் மொழிகள் குருவாய் வந்த இறைவனை நேருக்கு நேர் காணுமாறு செய்ய வல்லவை.

புலவர் அய்யாவின் வாழ்க்கை வரலாறு, குருவின் மூலமாக பரம்பொருளைக் காணற்குரிய பயிற்சியின் வரலாறு எனலாம். அவர்தம் வாழ்க்கை, இறைவனை நாம் நேருக்கு நேர் காணுமாறு செய்ய வல்லது. அவரது வரலாற்றைப் படிப்பவர்கள், குருவின் அவசியத்தையும், கடவுள் ஒருவரே உண்மைப் பொருள் மற்ற அனைத்தும் மாயை, பொய்ப்பொருள் என்பதை உணராமற்போகார்.

தெய்வத்தின் திருவுருவாக வாழ்ந்தவர். அவர் திருவாய் மொழிகள் வெறும் கல்விமானின் சொற்களல்ல. வாழ்வெனும் நூலின் பக்கங்கள் அவை. அவர்தம் சுய அனுபூதியின் வெளிப்பாடுகள்.

அய்யாவின் வரலாறு அன்பு எனும் அறத்தைக் கற்றுக் கொடுக்கும் பாடமாகும். அவர் கொண்ட அன்பிற்கு ஊர், உலகம் எனும் எல்லைகளோ, வேறு வரையறைகளோ கிடையாது. அவரது வாழ்க்கை வரலாறு படிப்போர்க்கு அன்னாரின் தெய்வீக அன்பு ஒரு தூண்டுகோலாக இருக்கட்டும்.

நம்மோடு வாழ்ந்து - நாம் பார்த்து - பழகி - ரசித்து - வாழ்த்தி - வணங்கிய - நடமாடும் தெய்வமாய் உலா வந்த குருவின் முதன்மைச் சீடர் வாழ்வியல் சரிதை நூல் - ஒவ்வொரு இல்லத்திலும் இருக்க வேண்டிய ஞானக் கருவூலம்.

புலவரின் தொண்டில் மகிழும்

**அருள்நிதி. பானுமதிகுமார்**

# 1. உயிரில் கலந்த உறவு

"எனக்கென்று தனியாக ஒரு வாழ்க்கை கிடையாது. என் வாழ்க்கை என்றோ அருட்தந்தை வேதாத்திரியின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. அவரது அடிமை நான்..."

அவரது வாழ்க்கைக் குறிப்பைத் தெரிவிக்கும்படிக் கேட்டதற்கு, புலவர் தியாகராஜர் கூறிய பதில் இது.

அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு, இது நூற்றுக்கு நூறு உண்மை என்பது நன்றாகத் தெரியும். அவருக்கென்று ஒரு தனியான வாழ்க்கை ஒருபோதும் இருக்கவில்லை. வேதாத்திரி மகரிஷிக்காக அவரது இயக்கத்திற்காக மட்டுமே வாழ்ந்தார் அவர்.

பொதுவாக துறவிகளின் வாழ்க்கையின் பல பகுதிகள் - குறிப்பாக அவர்களது இளமைக்காலம் - அவர்கள் புரிந்த ஆன்மீக சாதனைகள் - பெற்ற அனுபவங்கள் போன்றவை வெளிச்சத்திற்கு வராமலேயே மறைந்து விடுகின்றன.

ஏனெனில் முழுமையாக இறைவனையே - குருவையே சரணடைந்து வாழ்கின்ற அவர்கள் தங்களைப் பற்றிப் பேசுவதைக் கூடியவரை தவிர்த்து விடுகிறார்கள். பேராசிரியர் - புலவர் தியாகராஜருடைய வாழ்க்கையும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை.

2010 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ஆழியாறில் தங்கியிருந்த போது 'ஐயா சுவாமிஜியின் உண்மைச் சீடராக வாழ்ந்த தங்களின் வாழ்க்கை வரலாறு மனவளக்கலை அன்பர்களுக்கு வழிகாட்டியாக அமையுமே! தங்களின் வரலாறு எழுத அனுமதி கொடுங்கள்' என்றேன்.

சிறிது நேரம் சிந்தித்த புலவர் 'குருவின் அருளால் தங்கள் விருப்பம் போல் செய்க' என்று அனுமதி தந்தார்கள். ஒருவார காலம்

தங்கியிருந்தேன். - 'தான் பயணித்த பாதைகளைச்' சொன்னார்கள். நினைவுக்கு வந்த சில சம்பவங்களை தொடர்ந்து சொல்லிக் கொண்டே வந்தார்கள்.

கடந்த இருபது வருடங்களாக அவருடன் ஆத்மார்த்தமாக கலந்து இருந்தபோது - சேகரித்த செய்திகளும் இப்புத்தகம் அமைய வித்தாக அமைந்தது. அவரது கடந்த காலங்களில் ஏற்பட்ட சோதனை களை எழுதியபோது, எம் கண்களிலே நீர்த்துளிகள் பனித்ததுண்டு.

மகான்களும், சாதுக்களும், துறவிகளும், அருளாளர்களும் சோதனைகளை சாதனைகளாக மாற்றிய ஜீவாத்மாக்கள். சோதனை யின்றி சாதனையா?

புலவர் இருக்கும் போதே அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதி முடிக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தபோதும், அது அவரது மறைவிற்குப் பிறகே நிறைவேற வேண்டும் என்பது இறையாற்றலின் கட்டளையாக இருந்தது.

புலவர் தியாகராஜர் அவர்களைப் பற்றி நீங்கள் அதிகமாக அறிந்து கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் ஒரு சில வார்த்தைகளில் நான் அவரைப் பற்றிச் சொல்லுகிறேன்.

அவர் அற்புதமாக அன்பு செலுத்தும் புண்ணிய ஆத்மா. மனித குலத்திற்குத் தியாகம் செய்வதற்காகவே அவதரித்தவர். அதனால்தானோ என்னவோ, அவருக்கு தியாகராஜன் என்று பெயரிட்டுள்ளனர். பெயருக்கேற்றவாறே தியாகமாகவே வாழ்ந்தவர்.

மற்றவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவதை அவர் தனது வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்தார். அவரும் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார். அவர் தன்னைச்சுற்றி உற்சாகத்தைப் பரப்பினார். மக்கள் கவலையை மறக்கும்படி செய்தார்.

புலவரின் வாழ்க்கையின் முக்கியமான அம்சம் அவரது தூய - எளிய வாழ்க்கைதான். இயல்பான எளிமை - ஆழ்ந்த ஞானம் - கருணை - புரிந்து கொள்ளும் சக்தி - இரக்கம் அனைத்தும் அவரது இதயத்தில் நிறைந்து இருந்தன.

அவரிடம் ஆழ்ந்த ஞானமும், பரந்த அறிவும் இருந்தன. அதே நேரத்தில் அவரிடம் கர்வமில்லாத எளிமையும் இருந்தது. இத்தகைய ஞானமும் அறிவும் கொண்டிருப்பவர் எளிமையாக இருப்பது காண்பதற்கு அரிய காட்சியாகும்.

அவர் குழந்தைபோல எளிமையாக இருப்பார். அதே நேரத்தில் வேதாத்திரியின் சீடர்களுக்கு மத்தியில் தலைசிறந்த சீடராக விளங்கினார். அவர் முற்றிலுமாகத் தன்னைப்பற்றி நினைத்ததில்லை. அவர் தன்னை விசேஷ அந்தஸ்து உடைய மனிதராக ஒருபோதும் எண்ணிப் பார்த்தது இல்லை.

செங்கற்பட்டில், அருள்நிதி திரு சடகோபன் தம்பதியர்கள் எங்கள் இல்லம் வந்து 'ஒரு பெரிய ஞானியை உங்களிடம் ஒப்படைக்கிறேன். நமது குருநாதரிடம் அருகில் இருக்க முடியுமா? ஆனால், அவரது முதன்மைச் சீடரின் அருகில் இருப்பதை, நீங்களும் உங்கள் குடும்பமும் வாழ்நாள் முழுவதும் உணர்வீர்கள்' என்று அறிமுகப்படுத்தினார்கள்.

அன்றிலிருந்து அவரை நாங்கள் சிக்கெனப் பிடித்துக் கொண்டோம். நூறு பிறவியில் நூறு துறவிகளின் இணக்கத்தை, ஒரே பிறவியில் ஒரே துறவியிடம் பெற்ற அனுபவத்தை - ஆசிர்வாதத்தை - வாழ்த்துக்களை - எங்கள் பொக்கிஷமாகப் பாதுகாத்து வருகிறோம்.

எனது எதிர்மறையான குணங்களுக்கு, நேர்மாறான குணத்தை புலவரிடம் கண்டேன். புலவரிடம் நான் 20 ஆண்டுக் காலம் இருந்த காலகட்டத்தில் ஒருமுறைகூட கோபப்பட்டு நான் பார்த்ததில்லை.

கோபத்தில் கடுமையாகப் பேசிப் பார்த்தில்லை. எந்தச் சூழ்நிலையிலும் அவர் குரலை உயர்த்திப் பேசியதில்லை. இது அவரது தனிச்சிறப்பான தன்மையை வெளிப்படுத்தியது.

இதுபோன்ற குணத்தை சாதாரணமாக மனிதர்களிடம் காணமுடியாது. நான் எளிதில் உணர்ச்சி வசப்படுவேன். இன்னும் அதே நிலையில் இருக்கும் எனக்கு நேர்மாறான நிலையில் புலவர் இருந்தார். அவர் இப்படி இருப்பதற்கு எந்த அளவுக்கு கடுமையாக முயற்சி செய்தார் என்பது எனக்குத் தெரியாது. ஒருவேளை அது அவரது பிறவிக் குணமாகவும் இருக்கலாம்.

சாந்தம் மற்றும் அமைதியுடன் இருப்பதும் முற்றிலும் கோபப் படாமல் இருப்பதும் அற்புதமான குணநலன்கள். எந்த ஒரு மனிதரி டத்திலும் அவர் குறை காணமாட்டார். மக்களிடம் உள்ள நற்குணங் களையே அவர் போற்றிப் பாராட்டுவதை நான் கண்டிருக்கிறேன்.

ஆக்கப் பூர்வமான விஷயங்களிலேயே அவர் கவனம் செலுத்தினார். எதிர்மறையான விஷயங்களில் அவர் பார்வை சென்றதில்லை. எதையும் அவர் திருந்தச் செய்வார். சொற்களை வெளியிடுவதில் கவனமாக இருப்பார்.

எதைக் கேட்டாலும் 'குருவின் அருள்' என்றே பதில் வரும். வார்த்தைகளில் மாட்டிக் கொள்ளக் கூடாது என்பார். தனது எண்ணங்களிலும் செயல்களிலும் மிகவும் கவனமாக இருப்பார். பிரம்மச்சரியத்தின் மகிமையை, மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறது நமது புலவரின் வாழ்க்கை.

தினசரி பணிகள் ஒவ்வொன்றுக்கும் நேரம் ஒதுக்கி அதன்பின் செயல்படுவார். வாழ்க்கையில் ஆன்மீகத்துக்கு உள்ள முக்கியத்து வத்தைப் பறை சாற்றினார். அதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்.

அவர் ஒவ்வொரு விஷயத்திலும் ஆன்மீக அணுகுமுறையை நூறு சதவீதம் கடைப்பிடித்தார். அவர் பல ஆண்டுகள் தவமியற்றி-பிரார்த்தனை செய்து - தொண்டாற்றி இந்த இயல்பைப் பெற்றிருக் கிறார். மேலும் இந்த இயல்பு அவர் பிறந்தது முதல் இரத்தத்தில் கலந்திருக்கிறது.

இந்த மாபெரும் மகானோடு பேசியிருக்கிறோம். அவருடன் உரையாடியிருக்கிறோம். அவர் உபதேசங்களைக் கேட்டிருக்கிறோம். அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்திருக்கின்றோம்.

குருவின் தொண்டில்
பானுகுமார்.

செங்கற்பட்டு
25.5.2011

❋

# 2. குருபக்தி

*'அங்கும் இங்கும் அலையாமல்*
*அருகே இருந்து ஆனந்தம்*
*எங்கே? எங்கே? என்றவரை*
*இருந்தபடியே இன்பமுற*
*செங்கை காட்டி அழைக்கின்ற*
*குருவே தவமே பணிகின்றேன்'.*

– புலவர் தியாகராஜன்

பக்தி மூன்று வகைப்படும். ஈஸ்வரனுக்கு நேராகச் செய்யும் பக்தி ஈஸ்வர பக்தி. அடியார்களுக்குச் செய்யும் பக்தி அடியார் பக்தி. ஆச்சாரியரிடம் செய்யும் பக்தி குருபக்தி. இதனை சிவபக்தி - ஜங்கம பக்தி - குருபக்தி என்று சொல்வார்கள்.

இந்த மூன்றிலே மிகவும் சிறந்தது குருபக்தி. மாதா பிதா குரு தெய்வம். மாதா பிதாவை காட்டுகிறார். பிதா, குருவை அடையாளம் காட்டுவார். குரு தெய்வத்தைக் காட்டுகிறார்.

இறைவன் அன்பும் கருணையும் நிறைந்தவன். அவனது கருணை எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கிறது. அங்கு இங்கு என்றில்லாமல் எங்கும் உள்ளது அவனது கருணை.

அந்த கருணையைப் பெற வேண்டுமானால், ஆச்சாரியார் மூலமாகத்தான் எளிமையாகப் பெற முடியும். குருநாதர் பல ஆண்டுகள் தவம் செய்து அந்தத் இறையருளைச் சேர்த்து வைத்திருக் கிறார். அதனை தன் சீடனுக்கு பாய்ச்சி விடுகிறார். ஆகையினால் தான் சிவபக்தியைக் காட்டிலும் குருபக்தியே சிறந்தது என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

அருணகிரிநாதர் 'குருவாய் வருவாய் அருள்வாய் குகனே' என்று சொல்கிறார். ஆண்டவனே அவருக்கு குருவாய் வந்தார்.

மாணிக்கவாசகருக்கு எம்பெருமானே திருப்பெருந்துறையில் குருவாக வந்தார். விவேகானந்தருக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் குருவாக அமைந்தார்.

அயோத தெளமியர் என்ற குருநாதர் ஒருவர், கங்கைக் கரையில் இருந்தார். அங்கு ஒரு குருகுலம் வைத்து நடத்தினார். ஓராயிரம் சீடர்கள் இங்கு படிக்கிறார்கள். அவர்களிலே முதல் மாணவன் ஆரணியென்பது: அவன் பாஞ்சால நாட்டு அரசகுமாரன்.

குருகுலத்திலே ஒருவேளைதான் சாப்பாடு. ஒரு நாள் காலையில் பாடம் நடந்தது. அயோததெளமியார் அந்த ராஜகுமாரனைக் கூப்பிட்டார். ''ஆருணீ! நமக்குச் சொந்தமான வயலிலே மடை உடைபட்டு வெள்ளமாகத் தண்ணீர் ஓடுகிறது: அந்த மடையை அடைத்து விட்டு வா'' என்றார்.

'குரு வார்த்தைக்கு மறு வார்த்தை இல்லை' என்று மண்வெட்டியைத் தூக்கிக் கொண்டு வயலுக்குப் போனான் ஆருணி,

அரண்மனையிலே வளர்ந்தவன். மண்ணைவெட்டிப் போட்டான். மடை அடைபடவில்லை மண் உடைந்து கொண்டே இருக்கிறது.

காலை முதல் மாலை வரை வேலை செய்தான். மடை அடைபடவே இல்லை. 'குருநாதர் சொன்ன வேலையை - இட்ட கட்டளையை நிறைவேற்றாமல் நான் திரும்பிப் போகலாமா? இந்த சரீரம் வேண்டுமா? என்று மண்வெட்டியை மடையிலே போட்டுவிட்டு 'குருநாதா!' என்று குறுக்கே படுத்துவிட்டான்.

அங்கு வருகின்ற தண்ணீர் அவனைத் தாண்டுவதற்கு அஞ்சி அப்படியே அணை மாதிரி தேங்கி நின்றது.

இரவு 9 மணிக்குப் பாடம் சொல்லித் தருகின்ற பொழுது முதலிலே உட்காருகின்ற பையனைக் காணோம்.

''ஆருணீ எங்கே?' என்றார் குரு.

'காலையிலே போனவன் இன்னும் வரவில்லை' என்றனர் மற்ற மாணவர்கள்.

அந்தக் காலத்தில் டார்ச் லைட் கிடையாது. தீவட்டி எடுத்துக் கொண்டு போகிறார். அந்த வயலுக்குப் போய் 'ஆருணி!' என்றார்.

'சுவ்ாமி!' என்றான்.

'உன்னையே தியாகம் செய்து விட்டாய்! எழுந்து வா' என்றார். அப்படியே கங்கையைப் பிளந்து கொண்டு வந்துவிட்டான். அவன் தலையிலே கையை வைத்து 'எல்லா ஞானமும் வந்து விட்டது. போய் விட்டுவா' என்றார்.

ஒரு வினாடியிலே ஞானம் கொடுத்தார். ஆச்சாரியன் கண்ணாலே பார்த்தால் ஞானம் வந்துவிடும். அப்படிப்பட்டவர்கள்தான் ஆச்சாரியர்கள்.

ஆச்சாரிய பக்தியிலே சிறந்தவர் பெருமிழலைக் குறும்பர். ஆச்சாரிய பக்தியிலே உயர்ந்தவர் அப்பூதி அடிகளார். குருநாதராகிய அப்பர் சுவாமிகளையே தெய்வமாகக் கருதி உயர்ந்தவர்.

எனவே, சிறந்ததொரு எளிமையான மார்க்கம் குரு பக்தி. அந்த குருபக்தி செய்வோமானால் ஆச்சாரியனுடையே கருணை நமக்கும் கிடைக்கும். நமது பதிவுகள் எல்லாம் வெந்து நீராகும். மெய்ஞ்ஞானம் உண்டாகும்.

இத்தகைய குருபக்தி கொண்டவர்தான் நமது புலவர் தியாகராஜனார். தனது எண்ணம் - சொல் - செயல் - எல்லாவற்றையும் குருவுக்கே அர்ப்பணித்தவர். எந்நேரமும் குருவின் நினைவிலேயே வாழ்ந்தவர். ஆம்! அருட்தந்தை வேதாத்திரியின் முதன்மைச் சீடராய் வாழ்ந்து காட்டியவர் புலவர்.

❋

# 3. மனித இழையில் ஒரு புனித விளக்கு

அறிவின் முழுமையை நோக்கிய பயணத்தில் மனிதகுலம் சென்று கொண்டிருக்கிறது. இந்தப் பயணத்தை ஊக்கப்படுத்துவதற்காக ஆங்காங்கே அந்தந்தக் காலகட்டத்தில் மகான்கள் - அருளாளர்கள் வந்தார்கள், வருகிறார்கள், வருவார்கள்.

ராமகிருஷ்ணரைப் பிரசவிக்க சந்திரமணி அம்மையாரையும், விவேகானந்தரை பிரசவிக்க புவேனஸ்வர மாதாவையும் வேதாத்திரி மகரிஷியைப் பிரசவிக்க சின்னம்மாவையும் தேர்ந்தெடுத்த இயற்கை தகவமைப்பு - புலவர் தியாகராஜரைப் பிரசவிக்க, கர்மயோகமும் ஞானயோகமும் ஒருங்கே விளையும் கொங்கு நாட்டைச் சேர்ந்த பொன்னம்மாவை தேர்ந்தெடுத்தது.

கொங்குநாடு, மனவளம் - தனவளம் - தொழில்வளம் மிக்கது. கொங்குநாட்டு மக்களுக்கு அறிவியல் சார்ந்த உழைப்பே மூலதனம். சீர்திருத்தம் புதுமை ஆன்மீகம் ஆகிய பதியங்கள் இங்கு முன்னரே போடப் பெற்றுள்ளன.

புரட்சியாளர் பெரியார் பிறந்த மண். விந்தை மனிதர் ஜி.டி. நாயுடு பிறந்த மண். மிகச் சிறந்த நிதியமைச்சர் சண்முகஞ் செட்டியார் உலாவந்த மண். அவினாசிலிங்கம் செட்டியாரும் - சி.சுப்பிரமணியம் - நாச்சிமுத்துக் கவுண்டரும் - சுவாமி சித்பவானந்தரும் முறையே கல்வித் துறையிலும், வேளாண் துறையிலும், மோட்டார் துறையிலும், ஆன்மீகத் துறையிலும், சரித்திரம் படைத்த மண்.

அறிவியல் பார்வை படர்ந்துள்ள இந்த மண்ணில் பழைய முரட்டுப்பக்தி எடுபடாது. எனவே அறவின்பாற்பட்ட ஆன்மீக வித்தை விதைத்து வெற்றி கண்டுள்ளார் வேதாத்திரி மகரிஷி.

இத்தகைய புண்ணிய பூமியில் வேதாத்திரி மையங்கொள்ளும் என்றுணர்ந்த இறையாற்றல் - அவரது முதன்மைச் சீடரையும் இங்கேயே பிரசவித்தது.

கொங்குநாட்டின் - நாமக்கல் மாவட்டம் - திருச்செங்கோடு வட்டத்தில் - பெரிய மணலி என்னும் சிற்றூர். இங்கு ஜேடர் பாளையும் - தேவனாங்கபுரம் என்று அடுத்தடுத்த சிற்றூர்களில் நெசவுத் தொழில் செய்யும் தேவாங்கச் செட்டியார் இன மக்கள் - கன்னடத்தை தாய் மொழியாகக் கொண்டு வாழ்ந்தது வந்தனர்.

இச்சமுதாயத்தில் அருட்தொண்டர்களும் மிக்க கற்றறிந்த பெரியோர்களும் வாழ்ந்து வந்தனர். இத்தகைய புகழ்மிக்க சந்ததியில் ஞானம் நிறைந்த - கே.பி. கந்தசாமி சர்மா - பொன்னம்மா தம்பதியினர், எளிமையாகவும் பக்தி சிரத்தையுடனும் தமது சமயத்தைப் பின்பற்றி வாழ்ந்து வந்தனர்.

அவர்களுக்கு, கடைசியாக ஆறாவது குழந்தையாக ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு தியாகராஜன் என்று பெயர் சூட்டினர். தியாகராஜர் 1932 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐந்தாம் நாள் குமாரபாளையத்தில் அவதரித்தார். (அவரது குடும்பம் அப்போது குமாரபாளையத்தில் வசித்து வந்தது)

ஒரு சிறு துளியிலிருந்துதான் மிகப் பிரம்மாண்டமான அதிசயங்கள் உருவாகின்றன. ஒரு சின்ன அசைவிலிருந்துதான் மகாமகா சாதனைகள் உருவாகின்றன. உலக மானுடப் பேரறமும் அப்படித்தான். ஒவ்வொரு மனிதனின் - ஏன் ஒவ்வோர் உயிரின் -சிறு சிறு செயல்பாடுகள் கூட இயற்கைப் பேராற்றலின் செவ்விய தகவமைப்பிற்கான விதைகள் அல்லவா?


'உடலமைப்பிலே சிசுக்களாகத் தோன்றும் ஜீவன்கள் உண்மையிலே சிசுக்களல்ல. பிறவிகளில் தேடிய அறிவு - ஆற்றல் - அனுபவங்களால் ஏற்பட்ட சுபாவங்கள் குழந்தை என்கிற உறையிலே அடங்கி ஒடுங்கிக் கிடக்கின்றன.

காலச்சக்கரத்தில் இவ்வுறையைக் கழற்றிக் கொண்ட அந்தந்த சுபாவங்கள் பெருமைகளாகவும் சிறுமைகளாகவும் விரிகின்றன, ஒன்றும் 'அறியாத பச்சைக் குழந்தைகளாய்ப் பெற்றவர்களின் கரங்களில் கிடக்கும் கிடக்கும் ஜீவர்கள் - பருவம் வரும்போது விண்ணவர்களுடன் ஒப்பிடத்தக்க மேன்மக்களாகவோ அல்லது வையகமே அஞ்சி நடுங்கும்படியான பாதகர்களாகவோ ஆகப் போகிறவர்களன்றோ?


ஆனால், இந்த மர்மங்கள் யாவும் காலம் என்கின்ற காரிருளில் மறைந்து கிடக்கின்றது. எனினும் மேன்மக்கள் மண்ணதனில் பிறவியெய்துதலிலே தனிப்பெருமை ஒன்று உண்டு என்பது பெரியோர்களது துணிவு. அதாவது அவர்கள் அறநெறியில் நிலை நிற்கின்ற செல்வர்கள் வீட்டிலோ அல்லது அறிவாளிகளாகிய உத்தமர் குலத்திலோ உதிக்கிறார்களாம்.

பொன்னம்மா மாதாவின் மடியில் தோய்ந்திருந்த பிள்ளை, இவ்விதியின்படி இகலேகத்தில் பிறந்திருந்ததையும், குருவுக்கேற்ற முதன்மைச் சீடராக - வாழ்ந்து காட்டும் துறவியாக - அறிவும், ஆற்றலும், தபோபலமும் அதனிடத்துப் புதைந்து கிடந்ததையும் யார் அறிந்தார் அக்காலத்தில்.

நிலையற்ற இவ்வுலகில் பற்பலஉயிர்கள் 'தோன்றி வாழ்ந்து மறைகின்றன. அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது. பிறப்பில் மிகவும் உன்னதமானது மனிதப் பிறவி ஆகும். பிறவியின் மேன்மையையும் மகத்துவத்தையும் அறிந்து அறவழியில் நின்று ஆன்மீகத் தொண்டாற்றிய பல சித்தர்களும் ஞானிகளும் தோன்றிய இந்த புண்ணிய பூமியில் - தன்னுடைய வாழ்வில் உன்னத நிலையை உணர்ந்து வேதாத்திரி மகரிஷியின் சீடராக அருட்பணி செய்திடவே புனித விளக்காய் தோன்றியவர் புலவர் தியாகராஜர்.



தாயார் திருமதி. பொன்னம்மாள்



தந்தையார் திரு. கே.பி. கந்தசாமி சர்மா

# 4. தோன்றிற் புகழோடு தோன்றுக

'மனிதனானவன் புகழுடன் வாழவேண்டுமானால் அவன் சிறந்த ஆளுமைப் பண்புகளைப் பெற்றிருத்தல் அவசியமாகும்.

'ஆளுமை என்பது ஒருவனுடைய உடற்பண்புகள் - உளப் பண்புகள் - மனப்போக்குகள் - சமூக அறநெறிப் பண்புகள் போன்ற எல்லாமும் - அனுபவம் - நடையுடை பாவனைகள் - வாழ்க்கை முறை போன்ற யாவும் அடங்கியதே ஆளுமை'

உடல், உள்ளப் பண்புகளின் தனிப்பட்ட ஒருங்கமைப்பே ஒருவனுடைய ஆளுமை' ஆல்போர்ட் என்ற அறிஞர் கூறுகிறார்.

இத்தகைய ஆளுமையுடனும் வல்லமையுடனும் வளமையுடனும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்தான் அய்யா புலவர் தியாகராஜர்.

சுவாமி **விவேகானந்தர்** கூறிய கருத்துக்களுள் ஒன்று, நிறை நிலையடைந்த மனிதன் கடவுளாகின்றான். குறைநிலையடைந்த கடவுளே மனிதனாக இருக்கின்றான். இந்தக் கருத்துப்படி பார்த்தால், நம்முடைய புலவர் அய்யாவை கடவுள் என்று சொன்னால் அது மிகையாகா. அந்தக் கடவுளாகத் தன்னை ஆக்கிக் கொண்டதற்கு எல்லா நிலையிலும் நிறைநிலை தளும்புவதை உணரலாம்.

குடும்பத்திலே ஒரு சிறந்த மகனாக விளங்கி இருக்கிறார். அவர் சிறந்த அருளாளராக ஆன பொழுதும் அவர் குடும்பத்திற்கு அவர் சிறந்த மகன்தான். ஸுபுத்ர: குலதீப: என்று சொல்கிறது **சுபாஷிதம்.** நல்ல சான்றோனாக விளங்கி குலத்திற்கே விளக்காக விளங்கிருக்கிறார் நம் புலவர் அய்யா.

மேலும், இளமையில் கிடைத்த சான்றோர்களின் கூட்டுற வினால் இந்த மண்ணிலே பிறந்த மேலாம் கருத்துக்களை நன்கு

அனுஷ்டித்து, பெரியோர்களுடன் சேர்ந்த காரணத்தால் சிறந்த ஒரு மனிதனாக தன்னை ஆக்கிக் கொள்வதற்காக, அவர் முயற்சி செய்தார் என்று நாம் சிந்திக்கலாம்.

பின்பு, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலும், ஆசிரியராகப் பணி புரிந்த போதும் நல்லாரிணக்கம் ஒன்றையே பெரிதும் விரும்பியுள்ளார்.

அன்று சிறுவன் சித்தார்த்தனின் ஜாதகத்தைப் பார்த்த ஜோதிடர்கள் 'இவர் பெரிய துறவியாவார். உலகை ஆளும் உத்தமனாக மாறுவார்' என்றனர். தாயுமானவரின் ஜாதகத்தைப் பார்த்த ஜோதிடர்கள் 'இவன் பரநாட்டத்தில் மேன்மை மிக எய்துவான்' என்றனர்.

இன்று புலவர் தியாகராஜரின் ஜாதகமும் குருவுக்கேற்ற சீடராக துறவியாக அருள் தொண்டாற்றும் அருளாளர்களைப் போல் அமைந்திருந்தது. மகான்களும் அருளாளர்களும் பிறக்கும்போது புகழோடுதான் தோன்றுவார்கள். இது காலத்தின் கட்டாயம்.

தியாகராஜரின் தாய் தந்தையர் ஷேக்ஸ்பியர் கவிதைகளைப் படித்தார்களோ என்னவோ தெரியாது. ஆனால் வைரத்தையும் முத்தையும் இணைத்து ஓர் அற்புதமான மகனைப் பெற்றெடுத்துள்ளார்கள்.

வான் பொய்த்தாலும் காவிரி பொய்த்தாலும் வளநதிகள் பொய்த்தாலும் ஞானமழை மட்டும் பாரதத்தில் பொய்ப்பதில்லை. திருமூலர் முதலாக முளைத்தெழுந்த சித்தர்கள் - காலமழை ஈரம் கசிகின்ற இந்த ஞானபூமியில் வள்ளலாராக வீற்றிருந்தவர் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி ஆவார்.

அத்தகைய மகானின் ஞானப்பரம்பரையில் வந்த புலவர் தியாகராஜர் அவர்கள் 1932 முதல் 2011 வரை இப்பூவுலகில் வாழ்ந்த ஜீவன்முக்தர். எண்பது ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்திருந்து குரு சேவையை செய்து - தொண்டே தொழுகையாக வாழ்ந்த வள்ளல்.

முப்பது ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றி நல்லாசிரியர் விருது பெற்றவர்.

சுத்தானந்த பாரதி முதல் பல ஞானிகளையும் - மகான் களையும் - சான்றோர்களையும் சந்தித்துப் பழகிய புலவர், இறுதியில் வேதாத்திரியே குரு என்றுணர்ந்தார்.

குருவுடன் பத்தாண்டுகள் அணுக்கத் தொண்டராகவும், உலக சமுதாயசேவா சங்கத்தின் தொண்டராக - பேராசிரியராக நாற்பது

ஆண்டுகளும், தொண்டாற்றி இன்பமுற்றவர். சித்த மருத்துவத்தை கற்றுணர்ந்து - அதை மானுடத்தின் உடல் நலத்திற்காக பயன் படுத்தினார்கள்.

அருட்தந்தையின் மறைவுக்குப் பிறகு, ஆறாண்டுகள் ஆழியாறிலே அமர்ந்து குருவின் தொண்டில் தன்னை இணைத்துக் கொண்ட தியாகசீலர்.

குருவின் ஒவ்வொரு அசைவிலும் கூடவே இருந்து, இணைந்து உடலால் - உயிரால் - உணர்வால் - உருவத்தால் குருவாகவே மாறி உலக சமுதாய சேவா சங்கத்தின் மூத்த பேராசிரியராகவும் - பொள்ளாச்சி வேதலோக அன்புநிலைய அறக்கட்டளையின் தலைவராகவும் தொண்டாற்றியவர் புலவர்.

மனவளக்கலை அன்பர்கள் எவ்வாறு இருக்க வேண்டும்? வேதாத்திரியின் சீடர்கள் எவ்வாறு இருக்கும் வேண்டும்? என்று வாழ்ந்து காட்டிய முதன்மைச் சீடர்.

அன்பு - அடக்கம் - எளிமை - தூய்மை - இனிமை - பணிவு - பேச்சாற்றல் போன்ற பண்புகளின் உறைவிடமாக இலக்கணமாக வாழ்ந்தவர்.

தம் வாழ்நாள் முழுவதையும் தம் குருவின் சேவைக்காக உலக மக்களுக்காகவே அர்ப்பணித்து - உலகநலத் தொண்டராக வாழ்ந்தவர் நமது புலவர். நம்மிடையே வாழ்ந்த சீடராக - ஞானியாக - தர்மத்தின் தலைவராக - யோகியாக - சித்தராக - தனி மனித வாழ்வியல் - உயிர் பண்பியல் அனைத்திலும் சிறந்தோங்கி மக்களுக்காக மக்களிடையே மக்களில் ஒருவராக வாழ்ந்த நமது புலவர் அவர்கள்.

**தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப - வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து நம்மிடையே தெய்வமாக வாழ்ந்து வருகிறார்கள்.

❋

# 5. தாய்மையே தலைசிறந்தது

**வா**ழும் மானுடத்தின் வணக்கத்துக்குரியவர் தாயார். தன் வயிற்றையே வீடாக்கி வளருகின்ற உயிருக்காக, தன் சுவை உணர்வுகளையே கட்டுப்படுத்திக் கொள்வது தாய்மை.

தொட்டிலைஆட்டும்கையே உலகத்தை ஆள்கிறது. கடவுள் எல்லா இடங்களிலும் இருக்க முடியாததால் தாய்மார்களை உண்டாக்கினார்.

கடவுளுக்குப் பெயரே தாயென்று சிறு குழந்தைகளின் உதடுகளிலும் இதயங்களிலும் இருக்கின்றன.

அதுமட்டுமல்ல - குழந்தை பிறந்தவுடன் அதன் நலத்திற்காகத் தன் சுக துக்கங்களையே துறந்துவிடுவது தாய்மை.

தாய் பொன்னம்மா.... மாலையில் விளக்கேற்றி அதற்குக் குங்குமம் இட்டு ' சுடரே உன்னைப் போல் எங்கள் குலத்தை விளக்க ஒரு சோதி மைந்தனை அருள்வாயாக! என்று அருட்சோதியை வணங்கியவர்.

'தாய்சொல் மிக்க வாசகமில்லை. சேய் ஒன்றுக்குத் தம் தாயிடம் பக்தி விசுவாசம் இயல்பாகவே உண்டாகிறது. அவள் புகட்டுவதெல்லாம் பிள்ளையின் உள்ளத்தில் வேதவாக்கியமென உள்ளத்தில் ஊடுருவிப் பாய்கிறது. ஆகையால் அவள் எத்தகைய பாலூட்டி அறிவூட்டி வளர்க்கின்றாளோ அத்தகையது ஆகின்றது பிள்ளை. பெரியோர்கள் பெற்றிருந்த பெருமையில் பெரும்பகுதி அவர்கள் தம் அன்னையரிடமிருந்து பெற்றதன்றோ!

பொன்னம்மா மாதா புகட்டிய கல்வியும் - அதை தியாகராஜன் கிரகித்த விதமுமே அவன் தனது வாழ்வில் அடைந்த மேன்மைக்கு முக்கியக் காரணமாக அமைந்தது.

அன்னையின் அன்பு கடலைவிட ஆழமானது. நிலத்தைவிட பரந்தது. விண்ணைவிட உயர்ந்தது. அன்பு பாசம் தியாகம் அறம் ஆகிய பண்புகளின் கூட்டுத்தொகை அன்னை பொன்னம்மா.

மனிதர்கள் அவரவர்கள் தாயினால்தான் உருவாக்கப்படுகிறார்கள்.

யாதேவி - கோசலை - தேவகி - ஜீஜாபாய் - பொன்னம்மா இவர்களின் வரப்பிரசாதங்களல்லவோ? கிறிஸ்தும், புத்தனும், இராமனும், கண்ணனும், சிவாஜியும், தியாகராஜனும்!

தாய் பேசும் வார்த்தைகளையே பிள்ளைகளும் பேசும். ஆதலால் தாயார் மங்கலகரமான சொற்களையே பேசத்தகும். எட்டு வயது வரை தாயிடமே குழந்தை வளரும். தாயின் பேச்சு நடையெல்லாம் குழந்தைக்கும் பிடிபடும்.

பொன்னம்மா என்ற பெயருக்கேற்ப - பொன் அம்மாவாகவே வாழ்ந்தவர். தனது ஆறு குழந்தைகள் மீதும் அளவற்ற அன்பையும், பாசத்தையும், ஆன்மீகத்தையும் ஊட்டி வளர்த்தார்கள்.

குழந்தை செல்வங்கள் நிறைந்த இல்லத்தில் வறுமையும் குடி கொண்டது. வறுமையை தனது உழைப்பால் விரட்டினார் தாய். அப்போது ஜேடர்பாளையத்தில் குடியிருந்தார்கள். அதிகாலையிலேயே எழுந்து, இட்லி சுட்டு வியாபாரம் செய்தார்கள். வீட்டின் வாயிலிலேயே இட்லிக் கடை. கணவர் கந்தசாமி சர்மா சுற்றியுள்ள கிராமங்களுக்கும் இட்லிகளை எடுத்துச் சென்று வியாபாரம் செய்து வந்தார்.

'தாயைப்போல பிள்ளை நூலைப்போல் சேலை' என்பர். இளம் வயதிற் பிடிபட்ட பழக்கங்கள் வழக்கங்களாக இயல்பாக மாறும். ஆதலால் தாய் பேச்சிலும் நடையிலும் குழந்தைக்கு அரிய உதாரணமாயிருக்க வேண்டும். இத்தகைய குணங்கள் கொண்ட பொன்னம்மாவின் செல்ல வளர்ப்புதான் தியாகராஜன்.

தாய் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக விளங்கியவர் பொன்னம்மா. இவரிடம் மந்திரம் போன்ற வாய்ச் சொல் இருந்தது. குழந்தைகளிடம் தூய மொழிகளை இனிமையாகப் பேசுவார்.

நாமாவளி - சிறுசிறு தோத்திரங்கள் - சிறுகதைகள் - நீதிகள் - வீரர் செயல்கள் - பெரியார் பெருமை - இயற்கை அழகைப் பற்றிய வருணனைகள் இவற்றைக் குழந்தைகளுக்குச் சொல்லி வளர்த்தார்.

பெற்ற தாயினும் பெரியதொன்றில்லை. அன்னையின் பெருமைக்கு அளவில்லை. ஆற்றலும் ஆயுளும் ஒழுக்கமும் புலமையும் நிறைந்த தீர மைந்தனை அருள்வாய்! இராமன் - கண்ணன் - கந்தன் - விஜயன் - சிவாஜி - அப்பர் - வள்ளுவர் - கம்பர் இளங்கோ - ஏசுநாதர் - புத்தர் - தாயுமானவர் - வள்ளலார் - சுத்தானந்த பாரதி - வேதாத்திரி மகரிஷி - புலவர் தியாகராஜன் , இராஜராஜன் - அன்பாயன் - அக்பர்

அளவை - திலகவதி - மங்கையர்க்கரசி - சந்தனை - மீராபாய் - ராதை - சீதை - பாஞ்சாலி போன்ற குழந்தைகளை எங்களுக்கு அருள்வாயாக?''

பெற்றோர்கள் வித்துத் தொடரே குழந்தைகள். வினைத் தொடரே வித்துத் தொடராக மலர்வதால் முன்னோர்கள் செய்த வினைக்கேற்பவே மக்கள் ஞானியாகவோ - சான்றோர்களாகவோ அல்லது மாக்களாகவோ வாழ்கிறார்கள் - இதைத்தான் வள்ளுவரும்

**'தம்பொருள் என்ப தம்மக்கள் அவர்பொருள்**
**தம்தம் வினையால் வரும்'**

வினைப்பதிவுகளை முன்பிறந்த குழந்தைகளுக்குப் பகிர்ந்தளித்து விட்டு ஆறாவது குழந்தையாக அவதார புருஷராக அறிஞராக வந்த வரலாறு உண்டு.

இறைவன் பிரபஞ்சமாகக் காட்சியளிக்கும்பொழுது பஞ்ச பூதங்களாக விளங்குகிறார். அப்பஞ்சபூதங்கள் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன்மாத்திரைகளைப் பெற்றுள்ளன. தன்மாத்திரைகள் ஒவ்வொன்றிலும் இறைவன் ஆறாவதாக விளங்குகின்றான்.

'ஆறு அறிவதுவே அவற்றோடு மனனே' என்று ஆறின் சிறப்பை தொல்காப்பியர் பறைசாற்றுகின்றார். அதாவது மனிதனுக்கு உள்ளது ஆறாவது அறிவு சிறப்பு என்கிறார். சமுதாயம் கண்ட சமயங்கள் ஆறு, தத்துவங்கள் ஆறு, மனித குணங்கள் ஆறு.

தெய்வ சிந்தனை - பூஜை - புனஸ்காரம் அருட்பாடல்களைப் பாடல் - பஜனை - நல்லார் கூட்டம் - பெரியாரை உபசரித்தல் - பெற்றோரை நன்கு மதித்தல் - குழந்தைகளிடம் அன்பாயிருத்தல் - மனைவியுடன் ஒற்றுமையாயிருந்து இங்கிதமறிந்து நடத்தல் - வந்தனைக் கொண்டு மானமாகப் பிழைத்தல் - இனிய மொழிகளைப் பேசல் - மகான்களைப் பற்றிப் பேசல் - குழந்தைகளுக்குச் சிறு கதைகளைச் சொல்லி நல்வழி பயிற்றல் - இவையெல்லாம் தந்தைக் குரிய கடமைகளாகும்.

தந்தை வழியே மைந்தன் வருவான். தந்தை நல்வழி செல்க! தான் நினைத்த மாதிரியே ஒரு நல்ல மனிதனாக தன் மகன் வரவேண்டுமென்பதை எதிர்பார்க்கும் மனிதனே தந்தை ஆவான். தனது கடைசிக் குழந்தை தியாகராஜன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றினான்.

# 6. விளையும் பயிர் முளையிலே தெரியும்

ஒரு மகானின் முதிர்ந்த ஞானத்திற்கான வலுவான விதை அந்த மகானின் இளமைப் பருவத்தில் வீழ்ந்திருப்பது ஒரு பொதுவான விதி.

பொருள் வறுமை இருந்தாலும், அருள் வளம் பெற்று வாழ்ந்தவர் கந்தசாமி சர்மா ஆவார். தம் ஊரில் அமைந்த சன்மார்க்கச் சங்கத்தில் பல ஆண்டுகள் தலைவராக இருந்தவர். வள்ளலாரின் சன்மார்க்க நெறியைப் பின்பற்றி தொண்டாற்றி வாழ்ந்தவர்.

தியாகராஜன் ஆசிரியர் பயிற்சி பெற்றபின்புதான் காபி கடை வைத்து பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டார்கள்.

**ஆன்மீக நாட்டம் கொண்ட சர்மா, திருச்செங்கோட்டில் ஒரு துறவி சாமியாரிடம் ஒரு ஆண்டு தனியாக தவம் செய்து வந்தார். அவரால் தொடரமுடியாத ஆன்மீக வாழ்க்கையை, அவரது கடைசி புதல்வன் தியாகராஜன் நிறைவேற்றி வைத்தார்.**

தியாகராஜன், தனது ஐந்து வயது வரை உடலிலே ஆடையின்றியே இருந்தாராம். துறவுக்கான விதை அப்போதே விதைக்கப்பட்டது.

இளம் வயதில் வீட்டில் பெறும் பயிற்சியும், பள்ளியில் பெறும் பயிற்சியும், நாம் வாழ்கின்ற சூழ்நிலையில் பெறும் பயிற்சியும், நம்முடைய ஆளுமைத் திறனுக்கும், அறிவிற்கும், பண்புக்கும் முக்கியக் காரணங்களாக அமைகின்றன. ஒரு குழந்தை மகானாக உருவாகுவதில் பெற்றோர்கள், உறவினர்கள், சூழ்நிலைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

தியாகராஜனுடைய நடை, உடை பாவனை, பணிவு, அடக்கம், எளிமை ஆகிய பாவனைகளில் துறவுக்கான தோற்றம் தெரிந்தது.

தன்னலம் மறந்து பொதுநலம் நாடும் பேருள்ளம் கொண்டவர்களே உண்மைத் துறவிகளாவார்கள். அவர்கள் இளமையிலிருந்துகூடத் துறவிகளாக வாழலாம்.

சிலப்பதிகாரம் என்னும் ஒப்பற்ற செந்தமிழ்க் காவியம் தந்த சேர இளவரசர் இளங்கோவடிகள் அத்தகையராவார்.

மாதவி வயிற்றில் பிறந்த பனிமலர்ச் செல்வி மணிமேகலை என்ற இளங்கன்னியும் இளமைத் துறவு பூண்டவள்தானே!

ஆதிசங்கரர் - திருஞானசம்பந்தர் போன்றவர்களும் இளமையில் துறவு பூண்டவர்களே!

அண்மைக் காலத்தில் உலகப் புகழ் பெற்ற உத்தமத் துறவி **விவேகானந்தரும்** இளந்துறவி அன்றோ?

இவ்வாறு இளமையிலேயே பற்று அற்று வாழ்ந்தவர்கள் மிகப் பலராவார்கள்.

பால்ய வயதில் சிந்தனைத்திறனும் - தியாகராஜனின் சிந்தனையில் ஆழ்ந்தது விந்தைதான். இந்த விந்தையில்தான் இருக்கிறது வேதாத்திரியின் சீடர் என்ற ஆலமரத்தின் வதை.

பால்ய தியாகராஜனுடைய ஆன்மீக நாட்டத்தைப் பார்க்கும் போது - சிறு வயதில் சந்நியாசம் வாங்கிய ஆதி சங்கரரும் -பால் குடிக்கும் பருவத்தில் ஞானத்தைப் போதித்த ஞானசம்பந்தரும் - ராமகிருஷ்ணரும் - விவேகானந்தரும் நமது நினைவுக்கு வரத்தான் செய்கிறார்கள்.

மிகச் சிறு வயதிலிருந்தே ஆன்மீக விஷயங்களில் அதிக நாட்டம் செலுத்தினான் தியாகராஜன். பக்தி மிக்க அவனது தாயாரிடமும் அருகே இருந்த சன்மார்க்க சங்கத்துக்கு வரும் சன்மார்க்கிகளிடமும் சமய நூல்கள் ஏராளமாக இருந்தன.

ஒருநாள் தியாகராஜன் அந்த நூல்களை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தபோது ஓரிரு நூல்கள் அவனது கவனத்தை வெகுவாக ஈர்த்தன. மீண்டும் மீண்டும் அந்த நூல்களைப் படித்தான் அவன்.

அந்த நூல்களில் விரிந்திருந்த பெருவாழ்வுகள் அவனது மனத்தில் இனம் புரியாததோர் உணர்வையும் ஆழ்ந்த அமைதியையும் நிறைத்தது. அவர்களுடன் தன் வாழ்க்கையை இணைத்துக் கொள்ள

வேண்டும் என்ற பேரார்வம் அவனுள் கிளர்ந்தெழுந்தது - தாயுமானவர் சுவாமி - மாணிக்கவாசகர் - இராமலிங்க வள்ளலார் ஆகிய மூவரின் வாழ்க்கை வரலாறும் அவர்களது பாடல்களுமே அந்த நூல்கள்.

இறைபக்தி குழந்தை தியாராஜனின் குணமாக இருந்தது. கீர்த்தனைகள் தியாகராஜனிடம் அற்புத விளைவுகளைத் தோற்று வித்தன. அவன் தமது பெற்றோர் நடத்திய பூஜை, பிரார்த்தனை, கீர்த்தனை ஆகியவற்றில் ஆர்வத்துடன் கலந்து கொண்டான்.

இளம் வயதில் ஆன்மீகத்தில் ஈடுபட்ட திருஞானசம்பந்தர் - திருநாவுக்கரசர் போலவே தியாகராஜனும் இறைவன் பால் அளவற்ற அன்பு பூண்டிருந்தார். குழந்தைப் பருவத்தில் நாம் உருவாக்கும் மனப்பாங்குகள் வாழ்க்கைக் காலம் முழுவதும் நிலைக்கும்.

குருநானக் நாள்தோறும் பக்திப் பாடல்களைப் பாடுவார். இதைக் கேட்கப் பலர் வருவார்கள். அந்தக் கூட்டத்தில் ஏழு வயது சிறுவன் ஒருவனும் நாள்தோறும் வந்து செல்வான்.

ஒரு நாள் குருதேவர் அவனை அழைத்து 'நாள்தோறும் தவறாமல் வந்து பாடல்களைக் கேட்கிறாயே... உனக்குப் பாட்டு கேட்பதில் ஆர்வமா?' என்று கேட்டார்.

அதற்கு அந்தச் சிறுவன் ''அய்யா! என் தாயார் என்னை அடுப்பைப் பற்ற வைக்கச் சொன்னார். அப்போது சிறுசிறு சுள்ளிகள் முதலில் எரிந்து சாம்பலான பிறகே பெரிய விறகுகள் எரிவதைக் கவனித்தேன். இதனால் நான் இளமையிலேயே ஆன்மீகக் கூட்டங்களுக்கு வந்து இறப்பதற்கு முன்பு புண்ணியம் தேடிக்கொள்ள விழைந்தேன்'' என்று விளக்கினான்.

இந்தப் பதிலைக் கேட்ட குருதேவர் சிறுவனின் ஞானத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார்.

அதைப் போலவே சன்மார்க்க சங்கத்திற்கு அடிக்கடி வந்த போன அந்தச் சிறுவனான தியாகராஜனின் ஞானத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தனர் சன்மார்க்கிகள்.

தனக்கு உணவு கிடைப்பதில் சிரமம் இருப்பினும் - தன்னிடம் இருப்பதைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளுவதில் தியாகராஜனுக்கு தனி மகிழ்ச்சி. வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் பிச்சைக்காரர் களுக்கும் தானம் செய்வார். காக்கைகளும் குருவிகளும் அவர் கையால் கிடைக்கும் உணவை உண்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைந்தன.

தியாகராஜன் ஏழை எளிய மக்களிடம் அன்பும் கருணையும் கொண்டிருந்தார். இன்றைய மனித தர்மங்களை இந்த மண்ணிற்குத் தரும் ஒரு மாபெரும் அருளாளராக அருட்தந்தையின் முதன்மைச் சீடராகப் போவது குழந்தைப் பருவத்தில் தெரிந்தது. விளையும் பயிர் முளையிலே தெரியும் அல்லவா?

❋

# 7. இளமையில் வறுமை கொடிது

**''ஏழ்மை நோய் விதி என்று எண்ணி ஏமாந்திருந்தேன்**
**என்னுள்ளுணர்வெனக்கு இயம்பிய தென் தெரியுமோ**
**வாழ்வு தொடங்கும் போதே வளமனைத்துள்ளும் இணைந்துள்ளதே**
**வறுமைநோய் செயல்விளைவாய் வந்த பயன்'**

இது அருட்தந்தையின் வறுமை பற்றிய விளக்கமாகும்.

'கொடிது கொடிது வறுமை கொடிது - அதனினும் கொடிது இளமையில் வறுமை' என்ற ஔவையார் பாடலுக்கு இணங்க, ஆசிரியர் பயிற்சி படித்து முடிக்கும்வரை வறுமையில் வாழ்ந்தார் தியாகராஜர்.

தந்தை கந்தசாமி சர்மா, பெரிய குடும்பத்தின் சுமையை தாங்க முடியாதவராக இருந்தார். ஜவுளி வியாபாரம் செய்தார்கள். மொத்தமாகத் துணிகளை வாங்கி கிராமம் தோறும் விற்பனை செய்து பிழைப்பு நடத்தினார்கள்.

ஆறு குழந்தைகளை வைத்துக் கொண்டு - கணவரின் சொற்ப வருமானத்தில் வாழ்க்கை நடத்த மிகவும் சிரமப்பட்டார் தாய் பொன்னம்மா. பிள்ளைகளுக்கு கால் வயிற்றுக்காவது கஞ்சி ஊத்த வேண்டுமே? என்ன செய்வார் பாவம்?

தனது வீட்டிலேயே இட்லி வியாபாரம் தொடங்கினார். பெரிய ஆட்டுக்கல்லில் இரவெல்லாம் மாவாட்டி, அதிகாலை எழுந்து இட்லிகளை சுட ஆரம்பித்து விடுவார். தனது வீட்டின் முகப்பிலேயே இட்லிக் கடையைத் தொடங்கினார்.

தியாகராஜன் வீட்டின் கடைக்குட்டியாதலால், அம்மாவிடம் செல்லம் அதிகம். தாய் பொன்னம்மா குழந்தைகளுக்கெல்லாம் கூழ்

கொடுப்பார். கடைக்குட்டிக்கு மட்டும் கூழ் குடிக்குக் - கடித்துக் கொள்வதற்கு வெல்ல உருண்டை கொடுப்பார்கள்.

வெல்லம் என்றால் மற்ற குழந்தைகளும் கேட்பார்களே என்று இது 'மண்ணுண்டே' என்று கன்னடத்தில் சொல்லியிருக்கிறார்கள். (மண் உருண்டை)

விபரம் அறியாத வயதில் சொன்ன அந்த வார்த்தையையே சொல்லிக் கொண்டு 'அம்மா... அம்மா....மண்ணுண்டே கொடு' என்று அம்மா பின்னாலேயே அலைவாராம். பெரியவனான பின்புதான் அது மண்ணுருண்டை இல்லை வெல்லக்கட்டி என்று புரிந்து கொண்டாராம்.

ஆறு பிள்ளைகளுக்கும் வெல்லக்கட்டி கூட கொடுக்க முடியாத வறுமை. வறுமை அதிகமிருந்ததால் கந்தசாமி சர்மாவால் தம் குழந்தைகளை படிக்கவைக்க இயலவில்லை.

ஆனால் தியாகராஜனுக்கு மட்டும் கல்வி கற்பதில் தனியான ஆனந்தம். உயர்நிலைக் கல்வி முடித்தவுடன், ஊரில் இருக்கும் இ. எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுதும் மாணவர்களுக்கு டியூசன் சொல்லிக் கொடுத்து பொருளீட்டினார்.

பகலில் மாணவிகளுக்கும், இரவில் மாணவர்களுக்கும் டியூசன் சொல்லிக் கொடுத்து குடும்ப வறுமையை ஓரளவு போக்கினார்கள்.

அன்று, வேதாத்திரி மகரிஷி தனது வறுமையை உழைப்பால் மாற்றினார். இன்று அவரது முதன்மைச் சீடர் தனது வறுமையை கல்வி கற்று, அதன் மூலம் பொருளீட்டி தனது வறுமையைப் போக்கினார்.

வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வறுமை ஒரு காரணமல்ல. வறுமையை அயராத உழைப்பினால் விரட்டி விடலாம். வறுமையைச் செம்மையாக்கிச் சாதனைகள் படைத்தவர்களைப் பாருங்கள்.

**63 நாயன்மார்களில்** பலர் இளமையில் வறுமையில் வாடியவர்களே.

எடிசன் - மேரி கியூரி - ரைட் சகோதரர்கள் - **கலிலியோ** போன்ற விஞ்ஞானிகள் வறுமையில் வாழ்ந்து - வறுமையை உழைப்பால் தகர்த்தவர்கள்.

'ட' யைக் கண்டுபிடித்த **லிப்டன்** வறுமையில் உழன்றவர்.

**ஹென்றி போர்டு - ஜி டி. நாயுடு** (ஓட்டல் சர்வர்) வறுமையைச் சந்தித்தவர்கள்.

படுக்கக் கூட இடம் இல்லாத வீட்டில் வசித்தவர் **டாக்டர் அம்பேத்கார்.**

அமெரிக்க முன்னாள் குடியரசுத் தலைவர் **உட்ரோ வில்சன் ஆன்ட்ரூ ஜான்சன்** கொடிய வறுமையில் இருந்தவர்கள்.

லண்டன் தெருக்களில் உண்ண உணவின்றி ஒரே ஒரு கிழிந்த ஆடையை உடுத்திக் கொண்டு திரிந்த பெர்னாட்ஷா வறுமையில் உழன்றவர்.

உலகக் கோடீஸ்வரர் **'ராக்பெல்லர்'** கிளார்க்காகக் கஷ்டப் பட்டவர்தான்.

ரஷ்யப் புரட்சியாளர் 'லெனின்' வறுமையான குடும்பத்தில் தோன்றியவர்.

வானதி பதிப்பகம் திருநாவுக்கரசு - வி.ஜி. பன்னீர்தாஸ் போன்றவர்கள் வறுமையை எதிர்கொண்டவர்கள்.

முன்னாள் பிரதமர் லால்பதூர் சாஸ்திரி கல்வி கற்கக்கூட வசதியில்லாத வறுமையில் வாழ்ந்தவர்.

முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். இளமையில் வறுமையில் வாடியவர்.

❋

# 8. பிச்சை புகினும் கற்கை நன்றே

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.**

ஒருவனுக்கு அழியாத சிறந்த செல்வம் கல்வியே. மற்ற செல்வங்கள் எல்லாம் செல்வமாகாது. கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பார்கள். ஒரு குடும்பத்தில் பல குழந்தைகள் இருப்பினும் கற்ற குழந்தையையே தாய் அதிகம் சீராட்டுவாள், பாராட்டுவாள்.

**குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையாம்**
**கல்வி அழகே அழகு'**

என்று **நாலடியார்** கல்வியின் அழகைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

சிறுவன் தியாகராஜனுக்கு கல்வி கற்பதிலே மிகவும் ஆர்வம் உண்டாகியது. தன்னுடைய மூத்தவர்கள் அதிகம் படிக்காவிட்டாலும் இவனுக்கு மட்டும் கல்வி கற்பதில் ஒரு ஈடுபாடு.

சிறுவன் தியாகராஜன் தனது ஆரம்பக் கல்வியை வேப்பம்பட்டி புதூரில் படித்தான். பின்னர் அவனது குடும்பத்தினர் எளச்சிப்பாளை யத்திற்கு குடிபெயர்ந்தனர்.

உயர்நிலைக்கல்வியை திருச்செங்கோடு பள்ளியில் பெற்றோர்கள் படிக்க வைத்தனர். ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை சிறுவன் தியாகராஜன் எளச்சிப்பாளையத்திலிருந்து திருச்செங்கோட்டுக்கு நாள்தோறும் (சுமார் பத்து மைல்கள்) நடந்தே போய் படித்து

வந்தான். இருப்பினும் கல்வியின் முதல் மாணவனாகவே தியாகராஜன் விளங்கினான். அக்காலத்தில் பெரும்பாலும் ஏழை மற்றும் கிராமப்புற மாணவர்கள் நடந்து சென்றே கூட கல்வியைக் கற்று வந்தனர்.

குடும்பப் பொருளாதாரம் தியாகராஜனுக்கு தொடர்ந்து படிக்கத் தடை செய்தது. இருப்பினும், கல்வி கற்பதில் சிறுவனுக்கு தணியாத தாகம். பிச்சை புகினும் கற்கை நன்றே என்பதற்கிணங்க, அப்பள்ளியில் பணியாற்றிய ஆசிரியர் கா.பா. கண்ணன் என்பவரின் அன்பைப் பெற்று அவரிடம் அடைக்கலமானான் சிறுவன்.

சிறுவன் படிப்பில் காட்டும் ஆர்வம், அவனது பணிவு - அடக்கம் - எளிமை - ஏழ்மை ஆகியவை ஆசிரியர் கண்ணனின் மனதைக் கவர்ந்தது. எனவே தனது வீட்டிலேயே அவனைத் தங்க வைத்து பள்ளி இறுதி வகுப்பு வரை படிக்க வைத்தார்.

பள்ளிநேரம் நேரம் தவிர மற்ற நேரங்களில் ஆசிரியர் வீட்டில் உள்ள வேலைகள் அனைத்தையும் சிறுவன் செய்து வந்தான். தனது குருநாதர் வேதாத்திரியின் பிஞ்சு விரல் வறுமையின் காரணமாக - அன்று விசைத்தறியில் ஓடியது. இன்று தியாகராஜனின் பிஞ்சு விரல்கள் துணி துவைத்தல் போன்ற கடுமையான வேலைகளில் ஈடுபட்டது.

ஆசிரியர் திரு கா.பா. கண்ணன், தனது மேல் பயிற்சிக்காக பல மாதங்கள் வெளியூர் சென்று விட்டார். தியாகராஜனுக்கு வீட்டு வேலை மிகவும் அதிகமானது. காட்டுக்குச் சென்று சமையலுக்கு விறகு ஒடித்து வரும்போது கைகளெல்லாம் சிவந்து இருக்கும். எழுத வேண்டிய கை துவண்டு போனது. இருப்பினும் கற்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் இந்த சிரமங்கள் எல்லாம் சிறுவனுக்கு வலியாகத் தோன்றவில்லை.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்குப் பணம் கட்ட வேண்டும். குடும்பத்தினர் சாப்பிடவே கஷ்ட ஜீவனம் நடத்தி வந்தனர். படிக்க வைத்த வீட்டிலும் கையை விரித்து விட்டனர். தியாகராஜன் தவித்தான், துவண்டான், இயற்கைப் பேராற்றல் அவனை சோதித்தது.

நீண்ட சிந்தனைக்குப் பிறகு, தனது தாய் வழி உறவுக்காரர் திரு. ராஜகோபால் செட்டியார் சேலத்தில் செல்வந்தராக இருப்பதை அறிந்தான். அவர் ஒரிஸ்ஸா வரை ஜவுளி வியாபாரம் செய்து வந்தார்.

அவரைத் தேடி சென்றான். சேலம் சென்ற தியாகராஜன் - செட்டியார் காலில் விழுந்து 'எனக்கு தேர்வுக் கட்டணம் செலுத்த

வசதி இல்லை' என்றான். மனமிரங்கி சிறுவனை அரவணைத்துக் கொண்டு - அவனது கோரிக்கையை ஏற்று அவனுக்கு உரிய தேர்வுக் கட்டணத்தை செட்டியார் செலுத்தி மகிழ்ந்தார்.

ஒரு சமயம், சென்னையில் 'அஷ்டாங்க ஹிருதயம்' என்ற ஒரு மருத்துவப் புத்தகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டார் வேதாத்திரி மகரிஷி. அதனுடைய ஆசிரியர் ஆயுர்வேத பூஷணம் பண்டித மேதை ஆர்.துரைசாமி அய்யங்கார். வேப்பேரியில் வசித்து வந்தார். அப்புத்தகத்தின் விலை ரூ.5.

அந்தப் புத்தகத்தை வாங்க நினைத்தார் வேதாத்திரி. வேப்பேரி சென்றார். கையில் ரூ.3 மட்டும் இருந்தது. புத்தகத்தை வாங்காமல் திரும்பிப் போகவும் மனமில்லை.

சடாரென்று ஆசிரியரின் காலில் விழுந்து 'என்னிடம் மூன்று ரூபாய்தான் இருக்கிறது. இதை வாங்கிக் கொண்டு ஒரு புத்தகம் கொடுங்கள்' என்று உள்ளம் உருகக் கேட்டார். புத்தக ஆசிரியரோ நெஞ்சுருகிப் போனார். வேதாத்திரியை அப்படியே அரவணைத்து ஒரு புத்தகத்தைக் கொடுத்தார் ஆசிரியர்.

கற்பதில் குருவும் சீடரும் ஒரே வழியில் பயணித்துக் கொண்டுதான் இருந்தார்கள். 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்ற அதிவீர ராம பாண்டியன் வாசகம்தான் நமக்கு நினைவுக்கு வருகின்றது.

பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டதும் சிறுவன் நரேந்திரனுக்கு (விவேகானந்தரின் இயற்பெயர்) இரண்டு விஷயங்களில் மனம் செல்லவில்லை. 'ஆங்கிலம் படிக்க மாட்டேன். கணக்குப் போட மாட்டேன்.' என்றான் அவன்.

ஆங்கிலம் அன்னியருடைய மொழி. ஆங்கிலேயர் பேசுவது. அதை நான் ஏன் கற்க வேண்டும்? நம் தாய் மொழியாகிய வங்காளியைத் தான் கற்பது மேலல்லவா என்ற போக்கில் இருந்தது அவனது பேச்சு.

தகுந்த சமாதானங்கள் சொல்லப்பட்டபின் அவன் ஆங்கிலம் கற்க ஆரம்பித்து பின்னர் நல்ல தேர்ச்சியும் அடைந்தான். பிற்காலத்தில் லண்டன் மாநகரில் அவன் பேசிய ஆங்கிலத்தைக் கேட்டு ஆங்கிலேயப் பெருமக்களே வியந்து பாராட்டினர்.

கணக்குப் பாடத்தில் மனம் ஓடவில்லை. கூட்டல் - கழித்தல் - பெருக்கல் - வகுத்தல் இவைகளைப் பார்த்து - 'நான் என்ன

பலசரக்குக் கடையாக வைக்கப் போகிறேன்? இவைகளை யார் கற்பார்கள்? என்று வெறுத்து ஒதுக்கினான்.

கணக்குப் போடுவதில் அவனுக்குச் சிறிதும் விருப்பமில்லை. வயது ஆக ஆக அவன் இலக்கிய, இதிகாசங்களை மிகவும் அக்கறையுடன் படிக்க ஆரம்பித்தான்.

நரேந்திரனைப் போலவே, சிறுவன் தியாகராஜனும் ஆங்கிலம் - கணக்குப் பாடங்களைப் படிக்க விருப்பமில்லாமல் இருந்தான். ஆனால், தமிழ் இலக்கிய இதிகாசங்களையும், ஞானநூல்களையும் ஆழ்ந்து ஆர்வத்துடனும் அக்கறையுடனும் படித்தான்.

ஆன்மீக சமுதாய அறிஞர் ஜே.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் 'ஞானமற்ற கல்வி பயனற்றது' என்ற கூற்று இங்கு நினைக்கத்தக்கது.

இ.எஸ்.எஸ்.எல்.சி.யிலும், எஸ்.எஸ்.எல்.சி தேர்வுகளிலும் தமிழ்ப் பாடங்களில் மட்டும் அதிகம் மதிப்பெண்கள் பெற்றிருந்தான்.

இந்த தமிழ் ஆர்வமே, பின்னாளில் சிறந்த தமிழாசிரியராகவும் நல்லாசிரியராகவும் தியாகராஜனை உயர்த்தியது.

வாழ்க்கையில் நிகழ்கிற ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒரு பாடத்தைக் கற்கிற யுக்தி தியாகராஜனுக்கு இருந்தது. இது அவரை மற்ற மாணவர்களிடமிருந்து வெகுவாக வித்தியாசப்படுத்தியது. ஞானசம்பந்தரைப் போல் திருநாவுக்கரசரைப் போல் அறிவு தாகம் மிகுந்திருந்தது.

# 9. பாதை வகுத்த சன்மார்க்க சங்கம்

மகான்கள், அருளாளர்கள் அனைவரும் சிறுவயதிலேயே மற்ற சிறுவர்களைவிட வித்தியாசமாகக் காணப்படுவார்கள். தன் வயதொத்த பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருக்கையில் அவர்கள் மட்டும் ஆன்மீகப் பாதையில் பயணிப்பது இயற்கை விதியாகும்.

பூரி என்ற தலத்திற்கு பக்தர்கள் செல்கின்ற பாதை காமார்புகூர் வழியாகச் சென்றது. அப்பாதையில் ஒரு தர்மசத்திரம் இருந்தது. அந்த சத்திரத்தில் சாதுக்கள் பலர் தங்கிச் செல்வதுண்டு.

ஒருமுறை அந்த சத்திரத்தில் தங்கிய சாதுக்களைக் காண கதாதரன் (இளம்வயதில் இராமகிருஷ்ணரின் பெயர்) அடிக்கடி செல்வதுண்டு. அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தான். சமையலுக்கு நீர் கொண்டு வருவதும் அடுப்பெரிக்க சுள்ளிகள் சேகரிப்பதும் கதாதரன் அன்றாடம் செய்யும் பணிகளாக இருந்தன.

சாதுக்களின் தியானத்தையும், புனித தீ வளர்த்து வழிபாடு செய்வதையும் கதாதரன் கூர்ந்து கவனிப்பது வழக்கம். இனிய இயல்பும் உதவும் மனப்பாங்கும் பெற்றிருந்த கதாதரனை, சாதுக்கள் அன்புடன் நடத்தினார்கள். தாங்கள் சமைத்த உணவை அவனுடன் பகிர்ந்து உண்பார்கள்.

அதைப் போலவே, சிறுவன் தியாகராஜனும் தனது வீட்டுக்கருகே இருக்கும் சன்மார்க்க சங்கத்திற்கு அடிக்கடி சென்றுவிடுவான். திரு கந்தசாமி சர்மா குடும்பம் அங்கிருந்த சன்மார்க்க சங்கத்தில் மிகவும் ஈடுபாட்டுடன் இருந்தது.

எனவே, சன்மார்க்க சங்கத்துக்கு வரும் சன்மார்க்கிகள் சர்மா வீட்டில் வந்து தங்கிச் செல்வதுண்டு. பல சன்மார்க்கிகள் சில நாட்கள் சன்மார்க்க சங்கத்திலேயே தங்குவதும் உண்டு.

சன்மார்க்க சங்கத்தில் தங்கிய சனமார்க்கிகளை காணச்செல்லும் தியாகராஜன், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தான். அவர்களுக்கு நீர் கொண்டு வருவதும், அடுப்பெரிக்க சுள்ளிகள் சேகரிப்பதும் தியாகராஜனின் அன்றாடப் பணிகளாக இருந்தன.

தனது வயதொத்த பிள்ளைகளுடன் விளையாடப் போகாமல் அவர்கள் பேசுவதையெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பார். சன்மார்க்கி களுக்கு உதவி செய்வதில் மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

இவர் பின்னாளில் பெரிய அருட்தொண்டாற்றுவதற்குக் காரணமாக அமைந்தது அவர் கிராமத்தில் அமைந்த சன்மார்க்க சங்கமாகும்.

மனிதன் செல்லக்கூடிய எல்லாப் பாதைகளிலும் ஒரு சமயத்தில் ஒரு பாதை மிகச் சிறந்தாக இருக்கிறது. இங்கே தியாகராஜன் சென்ற சன்மார்க்கப் பாதை அவருக்கு சிறப்பாக அமைந்தது.

சன்மார்க்கம் என்றால் என்ன? வள்ளலாரே விடைதருகிறார்.

**''ஆடாதீர் சற்றும் அசையாதீர் வேறொன்றை**
**நாடாதீர் பொய் உலகை நம்பாதீர் வாடாதீர்**
**சன்மார்க்கச் சங்கத்தைச் சார்வீர் விரைந்தினி இங்**
**கென்மார்க்க மும் ஒன்றாமே''**

சத்.... என்கிற தகரம்....என்கிற.... னகரம் மெய்யாக மாறி...... சத்மார்க்கமாக..... என்பது சன்மார்க்கம் என்று மருவியது.

சத்....உண்மை மார்க்கம்....துவாரம் அல்லது பாதை.... சன்மார்க்கம் என்பது உண்மையைத் தெரிவிக்கின்ற மார்க்கம் ஆகும்.

இதனை பொதுநெறி - அருள்நெறி - பெருநெறி - ஒளிநெறி என்றெல்லாம் வள்ளலார் பல அருட்பாவில் விளக்கியுள்ளார். மேலும் வள்ளலார் தாம் கண்டது சுத்த சன்மார்க்கமே.

**'இன்புறலாம் எவ்வுலகும் ஒத்திட வாழ்ந்திடலாம்'**

**'அருட்சோதி பெருமான் அம்மையும் அப்பனுமாய்**
**அருளாளராகி அமர்ந்து இருக்கின்றார்.**
**அவரது அருள்பெறவே ஆசை யுண்டேல்**
**வம்மீன் இங்கே'**

**'அம்பலத்தாடும் ஜோதி தன்னை**
**நினையுங்கள் சுகம் பெறுவீது!**

அன்று வேதாத்திரி மகரிஷிக்கு அருள் பாலித்த அருட்பிரகாச வள்ளலார், இன்று அவரது சீடருக்கும் தனது சன்மார்க்கிகள் மூலம் பாதை வகுத்துக் கொடுத்தார். குரு சீடர் இருவருமே வள்ளலார் அருள் பெற்றது பெரிய ஒற்றுமையாக அமைந்தது.

தனது பருவ வயதில் தனித்திருந்து தவம் புரிந்தார். பிரார்த்தனை மற்றும் தியானத்தில் ஈடுபட்டார். தமது ஊருக்கு வரும் சன்மார்க்கிகள், சாதுக்கள் போன்ற சான்றோர்களை தனது வீட்டிற்கு அழைத்து வந்து அவர்களுக்குச் சேவை செய்து மகிழ்ந்தார்.

சன்மார்க்கிகளிடமிருந்தும் சாதுக்களிடமிருந்தும் புலன்களை அடக்கப் பயிற்சி எடுத்துக் கொண்டான். அருகில் இருப்பவர்களுக்கு தொண்டு புரிந்தான். அவர்களிடம் அன்பும் கருணையும் கொண்டு பழகி வந்தான்.

கிராம மக்களுக்கும், ஏழை மாணவர்களுக்கும் தொண்டு புரிந்தான். தினசரி பெரும்பான்மையான நேரம் பிரார்த்தனை, தியானம், நூல்களை வாசித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டான்.

இப்படித் தீவிரமான ஆன்மீகப் பயிற்சியினால், அற்புத மனிதருக்கு ஆன்மீக ஒளி பிறந்தது. அவர் இந்த நிலையை அடைந்த நாளிலிருந்து அவரது லட்சியப் பணி தொடங்கியது.

தான் பெற்ற இன்பத்தை எல்லோரும் அடைய வேண்டும் என்று விரும்பினார். பின்னாளில் சன்மார்க்க சங்கத்துக்கு தனது குருநாதரை (வேதாத்திரி மகரிஷி) மூன்று முறை அழைத்து வந்தார். சுத்தானந்த பாரதியார் போன்ற ஞானிகளையும் சாதுக்களையும் தான் பிறந்த ஊரில் இருக்கும் சன்மார்க்கச் சங்கத்திற்கு அழைத்து வந்து அவர்களது உபதேசங்களைக் கேட்டு அவ்வூர் மக்களைப் பயனடையச் செய்தார்.

❋

# 10. ஆசிரியர் பயிற்சி

**"வாழ்வினையே கல்வி போதனைக்கே நல்கி வாழும்
உயர் நிலை பெற்றவர் ஆசிரியர்."**

**- வேதாத்திரி மகரிஷி**

ஆசிரியப் பணி புனிதப் பணி. எனவே ஆசிரியராவதை தனது லட்சியமாகக் கொண்டார் தியாகராஜன்.

இலட்சியம் இல்லாத வாழ்க்கை துடுப்பு இல்லாத படகைப் போன்றது. காற்றுக்கு அசையலாம். இலக்கை அடைய முடியாது. இலட்சியமே வாழ்க்கையின் ஒளிவிளக்கு. தமிழ் ஆசிரியராவதே தமது லட்சியம் என்பதை உணர்ந்தார் தியாகராஜன்.

தனது வாழ்க்கையில் சாதிக்க விரும்பும் ஆசிரியர் பணி குறித்த இலட்சியப் பயணத்தில் தன் பயணத்தைத் தொடர்ந்தார்.

பேரூர் சாந்தலிங்க அடிகளார் நடத்தும் தமிழ்க்கல்லூரியில் படிக்கத் திட்டமிட்டார். ஆனால் அதற்குரிய பள்ளியிறுதித்தேர்வு அசல் சான்றிதழ் அவரிடம் காணாமல் போயிருந்தது.

ஆந்திர மாநிலத்தில், பணிக்குச் சேர தன்னுடைய பள்ளி யிறுதித்தேர்வு ஒரிஜினல் சான்றிதழை அனுப்பியிருந்தார். அந்த நிறுவனத்தில் அவருக்கு வேலையும் தரவில்லை. அவர் அனுப்பிய சான்றிதழையும் தரவில்லை. அந்த சான்றிதழ் தொலைந்து விட்டதாக தகவல் தரப்பட்டது.

தியாகராஜன் தனது இலட்சியத்தில் உறுதியாக இருந்தான். முயற்சி செய்யத் தொடங்கினான்.

முயற்சி செய்து பார்க்கும் வரை தன்னால் முடியக் கூடியது இதுவென்று ஒருவருக்கும் தெரியாது. சும்மா இருக்க யாருக்கும்

உரிமையில்லை. இருட்டை சபித்துக் கொண்டிருப்பதைவிட ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றுவது நல்லது.

மலையை நகர்த்த விரும்புகிறவன் முதலில் கற்களை நகர்த்தக் கற்றுக்கொள்ள வேண்டும். முதல் முயற்சியே தோல்வியில் முடிந்தால் இன்னொரு முறை முயன்று பார்க்க வேண்டும். அதுவும் தோற்றால் மீண்டும் முயற்சிக்க வேண்டும்.

சான்றிதழும் இல்லை. கல்லூரியும் தொடங்கப் போகிறது. இதை விட்டால் ஒரு வருடம் வீணாகிவிடும். எப்படியும் தமிழ் கல்லூரியில் சேர்ந்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் முயற்சித்தார். நம்பிக்கைத்தானே வாழ்க்கை.

பவானியில் இருக்கும் திரு மு.கண்ணப்பன் என்பவர் தியாகராஜனின் நினைவுக்கு வந்தார்.

திரு.மு.கண்ணப்பன், பவானியில் திருமுறைக் கழகம் என்ற அமைப்பை மிகவும் சிறப்பாக நடத்தி வந்தார். எல்லோருக்கும், சிவன் கோயிலில் தேவாரம், திருவாசகம் சொல்லித் தருவார். ஆண்டுதோறும் மிகச் சிறப்பாக விழா கொண்டாடுவார்.

இவரிடம் தியாகராஜனின் தந்தை திரு கே.பி. கந்தசாமி சர்மா மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார். அவரது திருமுறைக் கழகத்திற்கு தன்னால் முடிந்த பொருளுதவி செய்வார்.

தம் ஊர் சன்மார்க்கச் சங்கத்துக்கு அவரை அழைத்து வந்து சொற்பொழிவு செய்ய ஏற்பாடு செய்வார். இதற்குரிய செலவுகளையும் கந்தசாமி சர்மா ஏற்றுக்கொள்வார். இதனால் இவரது குடும்பம் திரு மு. கண்ணப்பனாரிடம் மிகவும் நெருக்கமாக இருந்தது.

இதனை சரியாக தியாகராஜன் பயன்படுத்திக் கொண்டார். பவானி சென்று தன் நிலைமையை விளக்கினார். கண்ணப்பனாரும் கற்பதில் அவனுக்குள்ள ஆர்வத்தை அறிந்தார். தனது சொந்த செல்வாக்கினால் பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் வித்வான் படிப்பில் சேர்த்து விட்டார்.

பின்னர், கல்வித்துறைக்கு எழுதி பள்ளியிறுதி வகுப்பு சான்றிதழின் நகலினைப் பெற்று தமிழ்கல்லூரியில் சமர்ப்பித்தார்.

தனது முயற்சியைக் கைவிட்டு **நரேந்திரன்** பின்வாங்கியிருந்தால் ஒரு விவேகானந்தர் உருவாகியிருக்க மாட்டார். தனது முயற்சியைக் கைவிட்டு விட்டு **வேதாத்திரி** தறியிலேயே நெய்துகொண்டிருந்தால்

உலக சமுதாய சேவா சங்கம் கிடைத்திருக்காது. தனது முயற்சியை தியாகராஜன் கைவிட்டு விட்டு இருந்திருந்தால் ஒரு நல்லாசிரியர் - ஒரு முதன்மைச் சீடர் கிடைத்திருக்க மாட்டார்.

முன் வைத்த காலை பின்வைப்பதில்லை, வெற்றிக்கு முன்னர் ஓய்வென்பதில்லை' என்று செயல்பட்டு தமிழ் கல்லூரியில் சேர்ந்தார்.

தனது வித்வான் படிப்பை அங்குள்ள விடுதியில் தங்கிப் படித்தார். பெரிய மணலியில் இருந்த அன்புள்ளம் கொண்ட ஒரு செட்டியார் மாதா மாதம் ஒரு தொகை கொடுத்து அவருக்கு உதவி வந்தார்கள்.

அப்போது, அத்தமிழ் கல்லூரியின் முதல்வராக இருந்தவர் திவான் பகதூர் - கோவை கிழார் - திரு சி. எம். ராமச்சந்திர செட்டியார். அன்பே வடிவானவர். மாணவன் தியாகராஜனின் அடக்கம் - எளிமை - சுறுசுறுப்பு முதலிய குணங்கள் அவரை ஈர்த்தன.

வார விடுமுறை நாட்களில் தியாகராஜன் அக்கல்லூரி முதல்வர் வீட்டுக்குச் சென்று அவருக்கேற்ற பணிவிடைகளைச் செய்து வந்தான். தீபாவளி போன்ற விடுமுறைகளிலும் முதல்வர் வீட்டுக்குச் சென்று அங்கு அவரது பணிகளை பகிர்ந்து கொண்டான்.

விடுமுறை நாட்களில் கோவை சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ள கைதிகளுக்கு 'யோக நல்வாழ்வு வகுப்புகள்' எடுத்து பாடம் சொல்லிக் கொடுப்பதை தியாகராஜன் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அங்கு படிக்கும்போது ஒருநாள் பக்கத்திலிருந்த காட்டில் தனிமையில் படிப்பதற்காகச் சென்றார். இங்கு விஷ ஜந்துக்களும் மிருகங்களும் நடமாடும். நீ சின்னப்பையனாக இருக்கிறாய் இங்கெல்லாம் வரக் கூடாது என்று ஒருவர் இவரிடம் எச்சரித்திருக்கிறார்.

அவர் கூறியதை தியாகராஜன் பொருட்படுத்தாது அமர்ந்து படித்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் அவர் மடியில் ஏதோ கனமாக ஊர்வதைப் போல உணர்ந்து பார்த்திருக்கிறார்.

ஒரு கருநாகம். 'மயிர்க்கால்களெல்லாம் ஜிவ்வுன்னு ஆடிப் போச்சு தொடைமேல ஒரு பக்கமிருந்து மறுபக்கம் இறங்கிப் போகுது - ஆடாம அசையாம உக்காந்திருந்தேன் - அதன் பிறகு அந்தப் பக்கமே போறதில்லை' என்று ஒரு முறை கூறினார்.

விடுமுறை நாட்களில் கல்லூரி மாணவர்கள் மருதமலைக்குச் செல்வார்கள். ஒருமுறை நான்கு மாணவர்களுடன் சேர்ந்து இவரும்

சென்றார். மலையின் மீது நடந்து சென்று கொண்டிருக்கும்போது ஒருவர் இங்கேயெல்லாம் வரக்கூடாது, புலிகள் நடமாட்டம் உள்ளது என்று கூறினார்.

உடனிருந்தவர்கள் 'தியாகராஜா புலி வந்ததும் அதன் வாயில் உன் கையைக் கொடு. நாங்க ஆளுக்கொடு காலைப்பிடித்துத் தூக்கிப் போட்டுற்றோம்மனாங்க. நா கையைக் குடுக்கறதாம். இவங்க புலியின் காலைப் பிடித்துக் தூக்கிப் போடுவாங்களாம் - எப்படி இருக்கு பாருங்க கூத்து - இவுங்க சகவாசமே வேண்டாம்னு ஓடிவந்துட்டேன்' என்று நல்லாரிணக்கம் என்ற தலைப்பில் பேசும் போது தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.

❋

# 11. ராணிப்பேட்டையில் ஆசிரியர் பணி

இந்த தேசத்தை நிர்மாணம் செய்பவர்களே ஆசிரியர்கள்தான். ஏனென்றால் இந்த நாட்டுப் பிரஜைகளை ஆசிரியர்களே உருவாக்கு வதால், ஆசிரியர்களே தேசத்தை நிர்மாணித்து வருகிறார்கள்.

**"உடலுக்கும் அறிவிற்கும் ஒழுக்கம் காட்டி உயர்த்தி வாழ்வின் வளத்தைக் காப்பவர் ஆசிரியர்."**

**- வேதாத்திரி மகரிஷி**

தனது இலட்சியக் கனவான ஆசிரியர் பணியை - தான் படித்த பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் ஒரு வருடம் செய்தார்கள்.

ஆசிரியர் பணி அர்ப்பணிக்கும் பணியாக இருக்க வேண்டும் என்பது அய்யாவின் கருத்து. இந்த ஆசிரியர் பணிக்கு அர்ப்பணிக்கும் பாங்குடையவர்கள்தான் வரவேண்டும். போதிப்பது என்பது ஒரு தொழிலோ அல்லது வியாபாரமோ அல்ல. அது ஒரு பணி. அது ஒரு தொண்டு என்பார்கள்.

பணி என்று சொல்கின்றபோது கொடுக்கின்ற பாங்கு அதிகமாக இருக்க வேண்டும். வாங்குவது குறைவாக இருக்க வேண்டும். ஆகவே, அதிகப் பணம் சம்பாதிக்கும் எண்ணமுடையவர்கள், எவ்வளவு சீக்கிரம் இப்பணியிலிருந்து வெளியேற முடியுமோ அவ்வளவு விரைவில் இந்த நாட்டிற்கு நன்மை ஏற்படும் என்று சொல்வார்கள்.

தனது கொள்கைப்படியே, ஆசிரியர் தொழிலை தெய்வமாகவும், அதே நேரத்தில் அக்கல்லூரி நிர்வாகிகளிடம் பணிவுடனும் அடக்கத் துடனும் நடந்து கொண்டார்கள்.

இதனைக் கண்ட மற்ற ஆசிரியர்கள் 'என்ன தியாகராஜா அடிமை போல் பணியாற்றுகிறாயே?' என்று கேலியும் கிண்டலும் செய்வார்கள். இந்த விமர்சனங்கள் எல்லாவற்றையும் பாராட்டுப் பத்திரங்களாகவே அய்யா எடுத்துக் கொள்வார்.

அங்கு பணி புரிந்து கொண்டிருந்தபோது, அய்யாவுக்கு தமிழக அரசின் அரசுப் பள்ளியில் தமிழாசிரியர் பணி கிடைத்தது. ராணிப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில், 1961 ஆம் ஆண்டு தமிழாசிரியராகப் பொறுப்பேற்றார். அங்கு ஐந்தாண்டுகள் பணி புரிந்தார்.

அங்கிருக்கும்போது, அவரது மூத்த சகோதரியின் புதல்வன் திரு.வாசுதேவன் தமிழாசிரியர் பயிற்சி முடித்து, ராணிப்பேட்டையில் உள்ள செகண்டரி பள்ளியில் ஆசிரியராக பணிக்கு வந்தார். அவர் அய்யாவை விட எட்டு வயது இளையவர்.

தனது சகோதரியின் மகனுடன் ஒரு வீடு எடுத்து தங்கி, இருவரும் வேலை பார்த்து வந்தனர். ஒரு சமையல்காரரை வைத்து சமைத்து சாப்பிட்டு வந்தார்கள். சமையல்காரரோ சமையல் சாமான் களை எல்லாம் களவாடி வருவதை அறிந்தார். இதனை எல்லாம் கண்காணிக்கத் தவறிய வாசுதேவனையும் கடிந்து கொண்டார். பின்பு இருவருமே சமைத்து சாப்பிட்டு வந்தனர்.

உறவினரான திரு வாசுதேவனை, தனது வழியில் ஆன்மீகப் பயணத்தில் செல்ல பயிற்சி கொடுத்து வந்தார். நாள்தோறும் பள்ளி முடிந்ததும், மாலையில் அங்கிருக்கும் சன்மார்க்க சங்கத்திற்கு அழைத்துப் போவார்.

ஒரு தடவை, திரு.வாசுதேவன் பள்ளி முடிந்ததும், மற்ற ஆசிரியர்களுடன் அய்யாவுக்குத் தெரியாமல் சன்மார்க்க சங்கத்திற்கும் போகாமல் 'நிச்சய தாம்பூலம்' சினிமாவுக்குச் சென்று விட்டார். இரவு திரும்பி வந்த வாசுதேவனுக்கு, கோபம் கொண்ட அய்யாவின் முகம் தெரிந்தது. 'இனிமேல் இதுபோல் செய்தால் நான் மிகவும் கண்டிப்புடன் தண்டிப்பேன்' என்று எச்சரித்து விட்டார்.

அய்யாவின் அடிச்சுவடியில் பயணித்த, அருள்நிதி திரு வாசுதேவன் இன்று தானே ஒரு சன்மார்க்க சங்க கிளையைத் தொடங்கி நடத்தி வருகிறார்.

இராணிப்பேட்டையிலுள்ள சன்மார்க்க சங்கத்துடன் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார்கள். பல சன்மார்க்கிகளை தனது செலவில் அழைத்து

வந்து இங்கு சொற்பொழிவாற்றச் செய்வார்கள். பள்ளி நேரம் போக எஞ்சிய நேரங்களை சன்மார்க்கத் தொண்டில் கழித்து வந்தார்.

அங்கு பணிபுரிந்தபோது, தனது நல்லாரிணக்கதையும், சத்சங்கத் தொடர்புகளையும் அய்யா வளர்த்துக் கொண்டே வந்தார்கள்.

**'நல்லா ரிணக்கமு நின்பூ சைநேசமு ஞானமுமே**
**அல்லாது வேறு நிலையுள தோவக மும்பொருளும்**
**இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வு மெழிலுடம்பும்**
**எல்லாம் வெளிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே.'**

'நல்லவர்களுடைய சேர்க்கையும், தேவரீரது பூஜையில் விருப்பமும், ஞானமும் அல்லாமல் உறுதி நிலை வேறு உண்டோ? வீடும், சொத்துகளும், மனைவியும், பந்துக்களும், பிள்ளைகளும் உலக வாழ்க்கையும் அழகிய உடம்பும் இவை யாவும் (கயிற்றில் பாம்பு தோன்றுவது போல) வெளி மயக்கத் தோற்றமே ஆகும்' என்ற பட்டினத்தார் வாக்கின்படி வாழ்ந்தார் அய்யா.

❋

# 12. சித்பவானந்தருடன் புலவர்

**'கர்மமானது கோடிமுன்னே செய்தாலும் நின்**
**கருணைப் பிரவாக அருளைத்**
**தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ!'**

'அற்பப் பொருளுக்காகத் தாகம் கொண்டுள்ள என் மனதில் அருள்தாகம் கொள்ளும்படி அண்ணலே நீ அருள் புரிவாயாக' என்று தாயுமானவரைப் போல் புலவரும் அருள்தாகம் கொண்டு அலைந்தார்.

இன்று இருந்து நாளைக்கு அழிந்துபோம் பொருளுக்காக, மனிதன் படும்பாடு எவ்வளவு பெரியது! ஊர் ஊராக அலைந்து திரிதல், ஓயாது உழைத்தல் ஆகிய இத்தனைவித இயக்கமும் பொருளல்லாப் பொருளை நாடியுண்டாகிற தாகத்தாலேயாம்.

என்றைக்கு அது அருள்தாகமாக மாறுகிறதோ அன்றைக்குப் புதிய வாழ்வு துவங்குகிறது. தாகம் எல்லார்க்குமுண்டு. தாகமில்லாது முன்னேற்றமில்லை. பொருள் தாகம் மனிதனைப் பண்படுத்துகிறது. அருள்தாகம் ஆறுதல் அளிக்கிறது.

அய்யாவின் அருள்தாகம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருந்தது. சன்மார்க்க சங்கத்தில் திளைத்த புலவருக்கு, திருப்பராய்த் துறையில் இருக்கும் சுவாமி சித்பவானந்தரின் மேல் நாட்டம் சென்றது.

அய்யாவைப் போல், கொங்கு நாட்டில் அவதரித்த சுவாமி சித்பவானந்தர் தனது ஐ.சி. எஸ். படிப்பையும் உதறித்தள்ளி, ராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து துறவியானார். ராமகிருஷ்ணரின் உபதேசத்தை தமிழகமெங்கும் பரப்ப, திருப்பராய்த்துறையில் தபோவனம் தொடங்கினார்.

அந்தர் என்றால் உள்ளே, யோகம் என்றால் இணைதல். ஜீவாத்மாவைப் பரமாத்மாவோடு இணைக்கும் பயிற்சியாகும்.

மூன்று நாள் பயிற்சியில், நாள்தோறும் நாமஜபம், தியானம், அர்ச்சனை, சொற்பொழிவு, சத்சங்கம், பஜனை போன்ற நிகழ்வுகள் மனிதனை முழுமையாக்கும். ஆன்மீகப் பாதையில் எளிதாக பயணிக்க வைக்கும். இந்தப் பயிற்சி வகுப்புகளுக்குச் செல்லும் போதெல்லாம் சுவாமி சித்பவானந்தருடன் உறவாடி மகிழ்ந்தார் அய்யா.

சுவாமியின் கீதை விளக்கமும், தாயுமானவர் பாடல்களுக்கான விளக்கமும், திருவாசகர் உரையும், அய்யாவைக் கவர்ந்த நூல்களாகும்.

தனது சொற்பொழிவில் இந்நூல்களின் கருத்துக்களையும், சித்பவானந்தரின் கருத்துக்களையும் சொல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். முக்தி அடையும்வரை சித்பவானந்தரின் திருவாசக உரையை படித்து மகிழ்ந்தார்.

**நல்லாரைக் கண்பதுவும் நன்றே - நலமிக்க**
**நல்லோர் சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்**
**குணங்கள் உரைப்பதும் நன்றே அவரோடு**
**இணங்கியிருப்பதும் நன்றே.**

என்றவாறு நல்லாரிணக்கம் கொண்டு வாழ்தலை தமது வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டு வாழ்ந்தார்கள் அய்யா.

# 13. துறவறம் பூண்ட தூயவர்

**'வெறுத்து ஒதுக்குவது துறவாகாது. அறிந்து உணர்ந்து தொடர்பு மற்றும் உறவினைச் சரியாகக் கணக்கிட்டு அளவு முறைவுடன் அனுபோகம் கொள்ளும் மனநிறைவே துறவாகும்.'**

**- வேதாத்திரி மகரிஷி**

துறவிகளில் மூன்று வகை உண்டு. விருப்பு வெறுப்புகளை எல்லாம் அறவே அறுத்து இறைவனுடைய சேவையொன்றிலேயே மனத்தை திடமாக நிறுத்திவிடும் துறவிகள் ஒரு வகை.

காஷாயம் தரித்துக் கொண்டு பிறகு ஏன் இந்த ஆசிரமத்தில் சிக்கிக் கொண்டோம் என்று சஞ்சலப்பட்டுத் திண்டாடும் துறவிகள் ஒரு வகை.

வேடத்தினால் துறவியாகி, அந்த துறவறத்துக்குப் பின்பு குடும்ப ஆசை முன்னை விட அதிகமாகி, தமது பிள்ளை பெண்களின் திருமணம் முதலிய நிகழ்வுகளில் தீவிர சிரத்தை காட்டி மனத்தில் எல்லா கிரகஸ்தர்களையும் விட அதிக கிரகஸ்தர்களாகும் சம்சார சந்நியாசிகள் ஒரு வகை.

ஆனால், புலவர் தியாகராஜருடைய துறவறம் அப்பழுக்கற்றது. 'விடுமின் முற்றவும்'' என்ற நம்மாழ்வார் வாக்குப்படி முதலில் எண்ணத்தால் துறவியானார். பின்பு மனதால், செயலால் துறவறத்தைக் கடைப்பிடித்தார்.

தனது குருநாதரைப் போன்று, தூய வெள்ளை ஆடைகளையே அணிந்து, வெண்தாடியுடன் காட்சி தந்தார்.

'ஒருவர் சுத்த பிரம்மச்சரிய விரதத்தை அனுஷ்டித்தாலொழிய, ஆத்மாவைப் பற்றிய சூட்சும உண்மைகளை அறிந்து கொள்ள முடியாது' என்ற ராமகிருஷ்ணரின் வாக்குகளை பின்பற்றியவர் புலவர்.

துறவு மனப்பான்மை என்பது மிகவும் அபூர்வமான ஒன்று என்று சாத்திரங்கள் சொல்கின்றன. எத்தனையோ தர்மங்களை எல்லாம் எடுத்துச் சொல்லும் வேதம், கடைசியாகச் சொல்கிறது "அனைத்தையும் வெல்லுகிறது துறவு" என்று.

சத்யம் என்று தொடங்குகின்ற **நாராயண உபநிஷத்** மந்திரம் சந்யாசத்திலே முடிகிறது. சந்யாசம்தான் உயர்ந்தது என்று சொல்லி 'சந்யாஸயேவ அத்யரேசயத்' என்று சந்யாசத்தை நன்கு புகழ்ந்து இருக்கிறது. காரணம் வாழ்க்கையின் நிலையாமையை நன்கு உணர்ந்து பற்றற்றவர்களாய் துறவை மேற்கொள்வது அவ்வளவு எளிதான செயல் அல்ல.

தலையை மழித்துக் கொள்வதாலும், உடையை மாற்றிக் கொள்வதாலும் மட்டும் நாம் துறவியாகி விட்டோம் என்று நினைக்கக்கூடாது. உண்மையான துறவானது நிலையாமையை நன்கு உணர்ந்து இறைவனையே குறிக்கோளாகக் கொண்டு உலகியலிலே ஆழ்ந்து செல்லாமல் இறைவனை அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு இருப்பது. இத்தகைய துறவு வாழ்க்கையை நம் புலவர் அய்யா அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள்.

'நெற்றி உச்சியில் ஞாபகமாயிரு, உற்றுற்றுப் பார்த்திடு. உன்னை - உலகை - பின் - கற்றபடி நட - கருத்துடன் விழிப்புடன் பற்றற்று வாழும் பழக்கம் உண்டாகவிடும்' என்பார் மகரிஷி.

'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' என்ற வாசகத்தால் மாபெரும் துறவியானார் **பட்டினத்தார்**. 'சும்மா இரு' என்ற மந்திரத்தால் ஞானியானார்கள் **தாயுமானவரும் அருணகிரியாரும்.**

'செத்துத் தொலை' என்ற வார்த்தை வேங்கடராமனை **ரமண மகரிஷி**யாக்கியது. இந்தக் கொங்கு நாட்டு இளைஞனை அவர் ஊரில் இருந்த சன்மார்க்க சங்கம் துறவியாக்கியது. இந்த சன்மார்க்க சங்கம்தான் மரம், செடி , கொடி, போன்று அசைந்தாடும் மனத்தை மலை போல உறுதியாக்கி, உன்னதத் துறவியாக்கி, உலக சமுதாய சேவா சங்கத்திற்கு, ஏன் தமிழகத்திற்கே தாரை வார்த்தது.

நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் பிரம்மச்சாரிய வாழ்க்கை வாழவேண்டும் என்று அடிக்கடி அய்யா வலியுறுத்துவார்கள். அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அறு+பற்று=(அறுபது) பற்று அற்று, அதாவது உடல் பற்று அற்று வாழுங்கள் என்பார்கள். பிரம்மச்சாரிய வாழ்வு பற்றி அழகாக அன்பர்களுக்கு விளக்குவார்கள்.

பிரம்மச்சரியம் என்றால் இந்திரியக் கட்டுப்பாடு மட்டும் அல்ல. நம்மில் பலர் இவ்வாறாக நினைத்துக் கொள்வதால்தான் அதைப்பற்றிய தவறான கருத்தும் குழப்பமும் ஏற்படுகின்றது.

நம்முடைய உடல் பெறக்கூடிய எல்லா இன்பங்களுக்கும் உயர்வாக இருப்பதாக நாம் நினைத்துக் கொண்டிருப்பது சிற்றின் பத்தைத்தான். இதைக் கட்டுப்படுத்தினால் மனம் மற்ற இன்பங்களில் இலயிப்பதை நிறுத்திவிடும். இதனால்தான் பிரம்மச்சரியம் என்றால் சிற்றின்பத்தை விலக்குவது என்ற பொருள் ஏற்பட்டு விட்டது. இப்படி ஒரு புலன் உணர்வை மட்டும் நிறுத்தி விடுவது பிரம்மச்சரியம் ஆகிவிடாது.

பிரம்மனை உணர்வது பிரம்மச்சரியம். மனம், தன் மூலமான பிரம்மத்தை உணர்வது பிரம்மச்சரியம். மகான்களும், முனிவர்களும் கூட இல்லறத்தில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால், இவர்களுடைய கவனம் சிற்றின்பத்தின் பால் செல்லவில்லை. பேரின்பத்தையே நாடிச் சென்றார்கள். இறைவனை எண்ணி இறையுணர்வுடன் வாழ்ந்தார்கள்.

வாழ்க்கையில் இன்பத்தை அனுபவிக்க வெவ்வேறு புலன்களும் உணர்வுகளும் பயன்படுகின்றன. ஆனால் நிறைவான இன்பம் பேரின்பம். இறைவனிடம் செலுத்தும் அன்பில்தான், பற்றில்தான் இருக்கிறது என்பதை உணர வேண்டும். பிரம்மத்தை உணர்ந்து பிரம்ம ஞானியாக பிரம்மச்சாரிகளாகப் பரிணமிப்பதில்தான் ஆனந்தம்.

அய்யா அவர்கள் பற்றில்லாமல் வாழ்ந்திருந்தார்கள். அன்போடு வாழ்ந்திருந்தார்கள். அன்பிற்கும் பற்றிற்கும் வேறுபாடு இருக்கிறது. விளாம்பழம் எப்படி பழுத்ததும் ஓட்டிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கின்றதோ அதுபோல அய்யா பற்றற்ற நிலையிலேயே வாழ்ந்தார்.

எப்படி வெள்ளரிப்பழம் பழுத்ததுமே கொடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கின்றதோ அதுபோல அய்யாவும் பற்றற்ற நிலையிலேயே இருந்தார்.

பற்றில்லாத அந்தப் பெரியாரை நாமும் பற்றிக் கொண்டு உய்யும்வழி தேடிக் கொள்வோமாக.

# 14. பறவை பட்டணம் பறந்தது

'ராணிப்பேட்டை அரசினர் உயர்நிலைப்பள்ளியிலிருந்த அய்யா சென்னைக்கு மாறுதல் விண்ணப்பம் அனுப்பினார். அவரது கோரிக்கையை ஏற்று, சென்னை சைதாப்பேட்டை மாதிரி மேல்நிலைப் பள்ளிக்கு மாறுதல் கிடைத்தது. இந்த வாய்ப்பை புலவர் தமது வாழ்நாளில் நன்கு பயன்படுத்திக் கொண்டார்.

வாழ்க்கை என்பது வாய்ப்புகளின் தொகுப்பு. பயன்படுத்தப் படும் வாய்ப்புகள்தான் பெருகும். வாய்ப்புகள் நம்மைச் சுற்றி எங்கும் நிறைந்துள்ளன. அவற்றை இனங்கண்டு பயன்படுத்திக் கொள்பவன் வெற்றியடைகிறான்.

வாய்ப்பு வாழ்க்கையின் திருப்புமுனையாக அமையும். உண்மையை உணரும் வாய்ப்பை பயன்படுத்தாவிட்டால், ஒரு புத்தர் உலகுக்குக் கிடைத்திருக்கமாட்டார்.

விறகுவெட்டி மகனாகவே இருந்து வாய்ப்பைத் தவற விட்டிருந்தால், ஒரு ஆபிரகாம் லிங்கன் உருவாகியிருக்க மாட்டார்.

சாதாரண ஆசிரியராகவே இருந்து வாய்ப்பைத் தவற விட்டிருந்தால், அருட்தந்தைக்கு ஒரு முதன்மைச் சீடரும், உலக சமுதாய சேவா சங்கத்திற்கு ஒரு வைரமும் கிடைத்திருக்காது.

சென்னை சென்ற புலவர், சைதாப்பேட்டை மாதிரி மேல் நிலைப்பள்ளியில் 1966 ஆம் ஆண்டு முதல் பணி ஒய்வு பெறும் வரை, அதாவது 1990 ஆம் ஆண்டு வரை அங்கேயே தமிழாசிரியராக பணிபுரிந்தார்கள்.

அங்கிருந்தபோது, எம்.ஏ. பட்டம் பெற்றார்கள். அங்கிருந்த போதுதான் பல மகான்களையும் சான்றோர்களையும் அறிஞர் களையும் சந்தித்தார்கள்.

சுத்தானந்த பாரதியார் போன்ற மகான்களுடன் ஆத்மார்த்த தொடர்பு ஏற்பட்டது சென்னையில்தான்.

அங்குதான் தன்னுடைய குருநாதரைக் கண்டு அவருடன் ஐக்கியமானார்கள். குருவின் மூலமாக பல சான்றோர்களையும், அறிஞர் பெருமக்களையும் சந்திக்கும் வாய்ப்பு பெற்றார்கள்.

மொத்தத்தில், தமிழகத்தின் தலைநகர வாசம், அய்யாவிற்கு ஆன்மீகப் பாதையில் வெற்றிகரமாக பயணிக்கவும், மானுடத்திற்கு தொண்டாற்றி இன்பமுறவும் நல் வாய்ப்பாக அமைந்தது.

# 15. பாம்பன் சாமிகள் கோயிலில் பூசாரியாக

"இவ்வுலகம் கோடிக்கணக்கான மனிதர்களின் பிறப்பையும் இறப்பையும் கடந்து வந்துள்ளது. அம்மானுடப் பிறப்பில் ஞானிகள், சித்தர்கள், மகான்கள் ஆகியோர் மானுடத்தை உயர்த்தப் பிறந்தவர்கள்.

தன்னை அறிந்த மாமனிதர்கள் சுயநலம் அற்றவர்கள். ஞானத் தேடலே மனிதனின் ஊனத்தை மாற்றும். புற ஊனத்தை மருத்துவம், தொழில்நுட்பத்தால் மாற்றலாம். அக ஊனத்தை ஞானத்தாலேயே பெறமுடியும். இத்தகைய ஞானத்தேடலே புலவரின் தாகமாயிருந்தது.

தனது நண்பர் புலவர் திரு.ம. கா. காமாட்சிநாதனுடன் திருவான்மியூர் ஈஸ்வரன் கோயிலுக்கு மாலை நேரங்களில் செல்வார். அங்கு இருவரும் திருவருட்பா மற்றும் தேவாரப் பாடல்களை பாடுவார்கள். மேலும், திருவருட்பாவுக்கும் தேவாரத்திற்கும் விளக்கங்கள் எழுதி சிறுசிறு புத்தகங்களாக வெளியிட்டுள்ளனர்.

இரண்டு வருடங்கள், திருவான்மியூரில் உள்ள பாம்பன் சாமி திருக்கோயிலில் மாலை வேளைகளில் பூஜை செய்தும் வந்தார்கள். அய்யா அவர்கள் பாம்பன் சாமிகள் மீது அளவு கடந்த பற்றும் பாசமும் வைத்திருந்தார்கள்.

சென்னையில் உள்ள திருவான்மியூர் கடற்கரை அருகே அமைந்துள்ளது பாம்பன் சாமிகள் சமாதியும் அவரது கோயிலும்.

ராமேஸ்வரத்தில் உள்ள பாம்பன் கிராமத்தில் 1848 ஆம் ஆண்டு பிறந்தவர் பாம்பன் சாமிகள். இயற்பெயர் அப்பாவு. இவரது பள்ளிப்பருவ காலத்தில் மிகச்சிறந்த மாணவனாக விளங்கினார்.

தனது 13 வது வயதில் குமரகுரு கடவுள் மீது தினம் ஒரு பாட்டு வீதம் 100 நாட்களில் 100 பாடல்கள் எழுதினார். இவரது மானசீக குரு அருணகிரிநாதராவார்.

இவரது தமிழறிவையும் முருக பக்தியையும் கண்ட திரு சேதுமாதவ ஐயர் இவருக்கு ராமேஸ்வரம் அக்னி தீர்த்தத்தில், விஜயதசமி அன்று உபதேசம் வழங்கினார்.

குருவின் கட்டளைப்படி 1878 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டு, ஒரு மகனுக்கும். இரண்டு மகள்களுக்கும் தந்தையானார். இல்லறத்தில் இருந்தாலும் நாள்தோறும் முருக பக்தியுடன் பூசை புனஸ்காரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார்.

முருகனது தரிசனத்தை பலமுறை கண்டார். தனது மகளுக்கும் மனைவிக்கும் உடல்நலமின்றி இருந்தபோது விபூதி கொடுத்தும் குணமாக்கினார்.

1891 ஆம் ஆண்டு புகழ் பெற்ற **சண்முக கவசத்தை** எழுதினார். 30 பாடல்கள் அடங்கிய இக்கவசம் இன்றும் மானுடத்தின் கவசமாக விளங்கி வருகிறது.

முருகன் மீது 6666 பாடல்களும் முருகனைப்பற்றி ஆயிரம் திருநாமங்களும் எழுதினார். சிதம்பரம், காசி சென்ற இவர் கடைசியில் சென்னையில் தங்கினார். 1929 ஆம் ஆண்டு மே மாதம் முப்பதாம் நாள் ஏற்கனவே நிர்மாணித்திருந்த இடத்தில் மகா சமாதி அடைந்தார். இவரது ஜீவசமாதியில் இன்றும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து, அவரது அருளாசியினைப் பெற்று மகிழ்ச்சியடைந்து வருகின்றனர்.

பாம்பன் சாமிகள், சண்முகக் கவசத்தின் மீதும் அவரது தூய தமிழ் பாக்களின் மீதும் புலவர் அளவறியா பற்றுக் கொண்டிருந்தார். அவரது கோயிலில் சண்முகக் கவசம் ஓதுவதையும், பூஜை செய்வதையும் தன் வாழ்நாள் பாக்கியமாகக் கருதினார்.பாம்பன் சாமிகளின் அருளாசி, அவரை அங்கே காந்தம் போல் இழுத்துச் சென்று கொண்டிருந்தது.

பின்னர் குருவுடன் ஐக்கியமானவுடன், அவருடனேயே தங்கி விட்டார். சந்தர்ப்பம் கிடைக்கும்போது பாம்பன் சாமிகள் கோயிலுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

## 16. சுத்தானந்த பாரதியாருடன்...

தமிழகம் தந்த, ஆனால் மறந்த, ஒரு மாமனிதர். சிவகங்கையில் பிறந்த இவரது இயற்பெயர் வேங்கடசுப்பிரமணியம். மறந்த மகான்களில் சுத்தானந்த பாரதியும் ஒருவர். அரவிந்தர் ஆசிரமத்தில் 25 ஆண்டு காலம் மௌனம் இருந்து, ஆன்மீகத்தின் உச்சியில் இருந்து தொண்டாற்றியவர்.

எட்டு வயது முதல் பேரின்பத்தையே நாடிச்சென்ற அவருக்கு பல மகான்களின் அருளால் வழி துலங்கியது. குடும்பத்தில் ஏற்பட்ட சில நிகழ்வுகள் அவரைத் தனிமையை நாடச்செய்தன.

'ஏன் மனித வாழ்க்கை துன்பமானது?' எவ்வளவு வழிபாடு செய்தாலும் எதிர்பார்ப்பது கிடைப்பதில்லை? இன்பமோ யார் வாழ்விலும் நிரந்தரமாகக் காணவில்லை. இன்பமான இறைவன் இன்பத்திலிருந்து படைத்த உலகம் துன்பக் காடானது ஏன்? என்ற கேள்விகளில் அவர் குழம்பியிருந்தபோது - பூரணானந்தர் முதல் குருவாக வந்து பகவத்கீதையும் யோகப் பயிற்சிகளும் விளக்கி வழி காட்டினார். தன் பெயர் கூட அவசியமில்லை என்று கருதிய உத்தம ஞானியான ஞானசித்தர் இராஜயோகம் பயிற்றினார்.

ஞானாசிரியரான கவியோகி, பள்ளிக்கூட ஆசிரியராகி மாணவர்களுக்கு பாடங்களை செய்முறைகள் மூலமாக எளிமையாகக் கற்பித்தார்.

**'எல்லார் உடலும் இறைவனாலயமே'** என்ற அவருடைய வாக்கின்படி சாதி, மத, நிற பாகுபாடின்றி சுற்றியுள்ள கிராமங்களுக்கு எல்லாம் சென்று பொதுநலச் சேவை செய்தார். சாரணப் பயிற்சி பெற்று, சாரணரை உண்மையான கர்ம யோகிகளாக பொதுநலத் தொண்டர்களாகப் பயிற்றினார்.

அருளரசியல் புலவரான சுத்தானந்தர், மகாத்மா காந்தி, பாரதியார், வ.வே.சு. ஐயர், அரவிந்தர், திலகர், சிதம்பரம் பிள்ளை, கல்கி கிருஷ்ணமூர்த்தி போன்ற தலைவர்களுடன் சேர்ந்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

பாலபாரதி, சமரசபோதினி ஸ்வராஜ்யா போன்ற பத்திரிக்கைகளுக்கு ஆசிரியராக இருந்து காந்தியத்தைப் பரப்பி, சுதந்திரக் கனலை மூட்டினார். வ.வே.சு. ஐயர் குருகுலத்தின் மூலம் திறமையான தேசபக்தர்களை உருவாக்க முயன்றார்.

அனைத்து மதங்களின் சமரசத்தைக் காண கிருத்துவ, இசுலாம் மத மக்களுடனேயே இருந்து அவர்கள் வாழ்க்கை முறையிலேயே வாழ்ந்து அவர்களுக்கு சர்வ மத சமரசத்தை விளக்கினார்.

பின் இயற்கை மருந்து முறையில் பல சாதனைகள் புரிந்து பல இயற்கை மகாநாடுகளை நடத்தினார். பிற்காலத்தில் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவில் உறுப்பினராகச் செயல்பட்டார்.

இந்திய அரசாங்கத்தால், சமாதான தூதுவராகவும், கவிஞராகவும் ரஷ்யா சென்று அந்த நாட்டின் உயர்ந்த பரிசாகிய **'சோவியத் லாண்டு'** விருது அளிக்கப் பெற்றார். மூன்றுமுறை உலகப் பயணம் சென்ற கவியோகி, அந்தந்த நாட்டு மொழியிலேயே பேசி அங்குள்ளவர்களுக்கு சமயோகம் பயிற்றுவித்தார்.

ஆன்மீகத்தின் சிகரங்களான சீரடி சாய்பாபா, ரமணர், அரவிந்தர், அன்னை சேஷாத்திரி சுவாமிகள், சிவானந்தர், மேகர் பாபா, ஞானானந்தகிரி சுவாமிகள், சத்திய சாய்பாபா, வேதாத்திரி மகரிஷி போன்ற மகான்களைச் சந்தித்துப் பழகியுள்ளார்.

ஆயிரம் நூல்களும், ஐயாயிரம் இன்னிசைப் பாடல்களும், எழுதி வெளியிட்டு மனித சமுதாயத்தையே சிறப்புறச் செய்த கவியோகியின் இலக்கியங்களின் சிகரம் பாரத சக்தி மகாகாவியம். அதன் சுருக்கம் யோகசித்தி.

அவரது பாரதசக்திக்கு தமிழ்நாடு அரசு 'ராஜராஜ சோழன்' விருது வழங்கிப் பாராட்டியது. பல அரிய யோக இரகசியங்கள் அடங்கியது பாரத மகாகாவியம்.

டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் குறிப்பிட்டுள்ளது போல சுத்தானந்த பாரதியார் அவர்கள் தூய வாழ்க்கையும் யோகசித்தியும் மதிநுட்பமும் பரந்த நூலறிவும் வாய்ந்தவர்.

**'எல்லா உயிர்க்கும் இறைவன் ஒருவனே**
**எல்லா வுடலும் இறைவனா லயமே**
**எல்லா ருக்கும் இயல்பாம் இன்பம்**
**எல்லார் வாழ்வும் இறைவன் யோகமே'**

இதுவே இவரது யோகசித்தியின் எடுப்பும் முடியும். தமது இறுதி நாள் வரை யோகசித்தியைப் படித்தும் மற்றவர்கள் படிக்கக் கேட்டும் இன்பம் எய்தியவர் நமது புலவர்.

சென்னையில் இருந்தபோது அவருடன் நெருங்கிப் பழகி வந்தார். புலவர் சந்தித்த மிகப்பெரிய மகான்களில் சுத்தானந்தர் குறிப்பிடத்தக்கவராவார்.

மாதா மாதம், தனது ஆசிரியர் சம்பளம் வாங்கியவுடன், சுத்தானந்தரைச் சந்தித்து ஒரு பகுதி தொகையை காணிக்கையாக வழங்கி மகிழ்ந்தார். சுத்தானந்த பாரதியின் பல நூல்களுக்கு அணிந்துரை வழங்கி சிறப்புப் பெற்றார்.

இது குறித்து சக ஆசிரியர்களிடமிருந்து, விமர்சனங்களும் எழுந்தன. 'ஒரு ஐயர் துறவிக்குப் போய் சன்மானம் தருகிறாரே?' விமர்சனங்களையும் தூற்றுதல்களையும் புலவர் எப்போதும் லட்சியம் செய்ததில்லை. சுத்தானந்த பாரதியாரை தம் மனதில் உயர்ந்த நிலையில் வைத்து உறவு கொண்டு வந்தார்கள்.

பின்னாளில், வேதாத்திரி மகரிஷியிடம் இணைந்தபோதும் சுத்தானந்தருடன் அய்யா தொடர்பு கொண்டிருந்தார். இவரது மூலமாக மகரிஷி அவர்கள் அளித்து வந்து துரியாதித தீட்சையைப் பெற்றுப் பயனடைந்தவர் சுத்தானந்தர். மேலும் மகரிஷியின் உடற்பயிற்சியினையும் கற்றுக் கொண்டு, அதில் வரும் மகராசனம் சிறப்பு பற்றி பல கூட்டங்களில் பேசி மகிழ்ந்தார்.

பல சமயங்களில், மாலை நேரங்களில் புலவர் பணியாற்றிய பள்ளிக்கூடத்திற்கு வந்து, தமது காரில் பல கூட்டங்களுக்கு அழைத்துச் செல்வதை சுத்தானந்தர் வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரது பிறந்த ஊரான சிவகங்கைக்கும் பலமுறை அழைத்துச் சென்றுள்ளார்.

புலவர் மீது சுத்தானந்த பாரதியார் அளவு கடந்த அன்பும் மதிப்பும் கொண்டிருந்தார். 'புலவர், என்றே அவரை அழைப்பார்கள். வெளியூரில் இருந்தாலும், அடிக்கடி புலவரிடம் கடிதம் மூலமும்

தொடர்பு கொண்டிருந்தார். நமக்கு 'ஊர் பாரே உறவு இறைவனன்றி யாரே?' என்ற வாசகத்தைப் புலவருக்கு கடிதம் எழுதும்போதெல்லாம் குறிப்பிட்டுப் பாராட்டுவார்.

தனது அண்ணன் மகன் இராமலிங்கத்தின் திருமணத்தை சுத்தானந்தர் தங்கியிருந்த யோக சமாஜ்யத்தில் நடத்தினார். சுத்தானந்தர் சுயமரியாதைப்படி திருமணத்தை நடத்தினார்.

தமது சொந்த ஊரில் அமைந்திருக்கும் சன்மார்க்க சங்கத்தின் பவளவிழாவிற்கு சுத்தானந்தரை அழைத்துச் சென்று, அங்கு உரையாற்றிட ஏற்பாடு செய்தார்கள். அப்போது தனது வீட்டில் அவரை மூன்று நாட்கள் தங்கவைத்து உரையாடி மகிழ்ந்தார்.

தமது வாழ்நாள் முழுவதும் சுத்தானந்த பாரதியாரின் நூல்களை விலை கொடுத்து வாங்கி தன்னிடம் அன்பு பாராட்டும் அன்பர் களுக்கு பரிசாகக் கொடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்கள் நமது புலவர்.

❋

# 17. குருவின் தரிசனம்

'குருவானவர் உருவத்தில் மனிதர் - அருபத்தில் தெய்வம்.'

–வேதாத்திரி மகரிஷி

தகுந்த அலைவரிசை வேண்டி தொலைக்காட்சி சேனலைத் திருப்பினால் விருப்பப்பட்ட அலைவரிசை நமக்குக் கிடைக்கும். புலவரும் ஞானத்தைத் தேடும் அலைவரிசையைத் திறந்துவைத் திருந்தார். வேதாத்திரி மகரிஷியும் புலவரைத் தேடி வந்தார். எப்படி? யார் மூலமாக வந்தார்?

அருட்தந்தை, பதினெட்டு முறை உலகை வலம் வந்த உத்தமராவார். அவரது இரண்டாவது அமெரிக்கப் பயணம் நிறைவு செய்து வந்ததற்காக, கூடுவாஞ்சேரியில் 1974 ஆம் ஆண்டு வரவேற்பு விழா நடக்க இருந்தது.

புலவரின் ஆன்மீக அன்பர்களில் 'திருக்கோயில்' என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் திரு. முருகவேள் அவர்கள் வேதாத்திரி மகரிஷியின் நிகழ்ச்சி நடைபெற இருக்கிற விபரத்தை அய்யாவிடம் சொல்லி 'நீங்களும் வருகிறீர்களா?' என்று கேட்டார்.

'அய்யா நானும் வருகிறேன்' என்று சொல்லிவிட்டார்.

குறிப்பிட்ட நாளன்று இருவரும் புறப்பட்டனர். தத்துவஞானி வேதாத்திரியின் உரையைக் கேட்டு உருகினார் புலவர். அவரது பார்வை வீச்சும் அவரது சொல்லும் காந்தம் ஊசியைக் கவர்ந்திழுப்பது போல புலவரைக் கவர்ந்து ஈர்த்தன.

தான் தேடிக்கொண்டிருந்த ஆன்மீகப் பெரியவர் தன்னுடைய குரு இவர்தான். இவரை சிக்கெனப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணத்தால் உறுதி பூண்டார்.

நமது எண்ணமே நாமாகிறோம். அவரவர் வாழ்வைச் சீரமைக்கும் அற்புத சிற்பி அவரவர் எண்ணமே. புலவர் எண்ணமே அவரை அந்த நிலைக்கு உயர்த்தியது.

ஒரு மனிதன் தான் நினைப்பதாகவே மாறுகிறான். ஒரு மனிதனின் நடத்தை என்பது அவனது உள்மன எண்ணங்களின் வெளிப்புற வெளிப்பாடு என்று பழங்காலத் தத்துவத்தால் ஜேம்ஸ் லேன் ஆலன் கவர்ந்திழுக்கப்பட்டார்.

இந்துக்களின் புனித இலக்கியமான உபநிடதங்களில் அதைக் காண்கிறார், 'மனிதன் தான் நினைப்பதாகவே மாறுகிறான்.' புத்தரின் எழுத்துக்களில் அது அழகாக வெளிப்படுவதைக் காண்கிறார்.

'மனம்தான் எல்லாமே. நீ என்ன நினைக்கிறாயோ அதுவாகவே மாறுகிறாய். மார்கஸ் ஆரலியஸ்சின் தியானங்களில் 'உங்கள் வாழ்வை உங்கள் உங்கள் எண்ணங்கள்தான் உருவாக்குகின்றன.'

கன்பியூசியஸ், முகமது, அரிஸ்டாட்டில், சாக்ரடீஸ் போன்ற பலரது எழுத்துக்களில் அதே கருத்து வெளிப்படுவதைக் கண்டார். இலட்சக்கணக்கானவர்கள் கண்டதைப் போலவே அவர் இக்கருத்தின் பிரபல வடிவத்தை பைபிளில் கண்டார். 'ஒருவன் தன் இதயத்தில் நினைப்பது போலவே ஆகிறான்'(புனோவெர்ப் 237)

'எண்ணியவெல்லாம் எண்ணியபடியே யாகும். எண்ணத்தால் உறுதியும் - ஒழுங்கும் அமைந்திடும்' என்ற மகரிஷியின் வாக்கிற்கேற்ப புலவரது எண்ணம் உறுதி பெற்றது. குருவை சிக்கெனப் பிடித்தார்.

அன்று கடவுளைக் காணமுடியுமா என்று கேள்வி கேட்டுக் கொண்டிருந்த நரேந்திரருக்கு - அவருடைய கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் - ஸ்ரீராமகிருஷ்ணரை அடையாளம் காட்டினார். இன்று அய்யாவின் ஆன்மீகப் பயணத்திற்கு - பத்திரிக்கை ஆசிரியர் திரு முருகவேள் வேதாத்திரி மகரிஷியை அடையாளம் காட்டினார்.

❋

# 18. குருவின் திருவடி நிழலில்

**'வினைப்பதிவுகள் கருமையத்தில் அலையாக சுருங்கியுள்ளது. இதைத் தூய்மை செய்துகொள்ள தேவை தவம் - அறம். தவம், அறம் முறையாக உணர்ந்தவர்கள் பிறருக்கு உணர்த்தும் தகுதி பெற்றபோது அவரைத்தான் ஞானகுரு என்கிறோம்.'**

**– வேதாத்திரி மகரிஷி**

ஆன்மீக வாழ்க்கையில், குரு தவிர்க்க முடியாதவரா? குருவைத் தேடிக் கண்டுபிடிப்பது எளிதான செயலாக இல்லாதிருக்கலாம். ஆயினும், இடையூறு எதுவாயினும், குருவாக ஒருவரை ஏற்றுக் கொள்வது தவிர்க்க முடியாதது ஆகும்.

உண்மையான குரு யார்? தெய்வீகப் பாதையில் முன்னேறி யிருப்பவர்தான் உண்மையான குரு. அவர் புத்தர் போலவோ, ஏசுநாதர் போலவோ இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவர் இறைவனைக் காண வேண்டும் என்ற தாகம் கொண்டு, அதை அடைவதில் சிரத்தையும் ஆர்வமும் சமர்ப்பண மனோபாவமும் கொண்டவராக இருக்கிறார்.

அவர், தூய்மையும் கட்டுப்பாடும் உடையவராக இருக்கிறார். அவர் உண்மையை உறுதியாகக் கடைப்பிடிக்கிறார். அவர் ஆன்மீகப் பாதையில் உங்களைவிட அதிகம் முன்னேறிய நிலையில் இருக்கிறார்.

நீங்கள் எதைக் கற்க வேண்டுமோ அதை அவர் உங்களுக்கு போதிக்கிறார். நீங்கள் கடந்து செல்ல வேண்டிய பாதையை அவர் உங்களுக்குச் சுட்டிக்காட்டலாம். அந்தப் பாதையில் நடக்க அவர் உங்களுக்கு வழிகாட்டலாம்.

புலன் மயக்கத்திலிருந்து மனிதனை விடுவிக்க குரு ஒருவரால் தான் முடியும். குரு இல்லாத வித்தை பாழ் என்பார்கள். ஞான மார்க்கத்திற்கு குரு தேவை. அறியாமை என்ற இருளை அகற்றுபவர்

குரு. ஒருவன் வேதங்கள் கற்றிருந்தாலும், ஆகமங்கள், உபநிடதங்கள் பயின்று இருந்தாலும் குருவின்றி மெய்ஞ்ஞானம் அடைய முடியாது.

வாழ்க்கையின் வழிகளையும், ஆன்மீகப் பணிகளையும் குரு காட்டுவார். குருவே தெய்வம். குருவினிடத்தே நிழல் போன்ற நின்று, அவரது செயல்களுக்கெல்லாம் ஒத்துப் பழகி இருத்தல் வேண்டும்.

குருவிற்கு மேலானது ஏதுமில்லை. எவரைப் பார்த்த மாத்திரத்திலேயே மனதில் தானாகவே சாந்தியும் திடமும் மகிழ்ச்சியும் உண்டாகிறதோ அவரே பரம குரு என்கிறது குரு கீதை.

எல்லோராலும் குருவாகி விட முடியாது. மிதந்து கொண்டிருக்கும் மரக்கட்டை பல மனிதர்களையும் விலங்குகளையும் ஆற்றைக் கடந்து அழைத்துச் செல்லக்கூடும். நல்ல குரு, பிறவிக் கடலைக் கடக்கச் செய்யும் வலுவான கட்டை போன்றவர் என்பார் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

இந்த அரும்பிறவியில் முன் வினை அறுத்து, எல்லையில்லா மெய்ப்பொருளை அடைவதற்கு, வந்த ஒரு உதவி குரு உயிரின் சேர்க்கை. அவரின் திருவடியை வணங்கி மகிழ்வதாக வேதாத்திரி மகரிஷி இன்பமுறுகிறார்.

நீங்கள் போதிய அளவுக்குத் தூய்மையுடனும் பணிவுடனும் இருந்தால் குருநாதர் வருவார். உங்களுக்கு வழிகாட்டுவார்.

நாம் சீடனாக இருந்து, நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ள விரும்பினால் குருநாதர் நம்மை உருவாக்க, ஆயத்தமாக இருக்கிறார்.

பக்தன் தகுந்த மனப்பரிபாகம் அடையும்போது, குரு தானாக வருவார். குருவைத் தேடி அலைய வேண்டியதில்லை.

**ஸ்ரீராமகிருஷ்ணருக்கு தோதாதப்புரியும் – விவேகானந்தருக்கு ராமகிருஷ்ணரும் – சித்பவானந்தருக்கு சுவாமி சிவானந்தரும் – விசிறி சாமியாருக்கு சுவாமி ராமதாசும் – சிதானந்தருக்கு சுவாமி சிவானந்தரும் தேடி வந்தது போல புலவர் தியாகராஜருக்கு வேதாத்திரி மகரிஷி குருவாக வந்தார்.**

சைதாப்பேட்டையில் இருந்த புலவருக்கு, தியாகராயநகர் வால்மீகி தெரு அழைப்பு விடுத்தது. ஆம்!

சென்னை தியாகராயநகரில் வால்மீகி தெருவில் வேதாத்திரி மகரிஷி அவர்கள் தங்கியிருந்தார்கள். அவரிடம் சென்று, அய்யா

குண்டலினி யோகத்தை முறைப்படி கற்றுக் கொண்டார். புலவரின் அன்பில் திளைத்த மகரிஷி, அவரைத் தன்னுடைய அணுக்கத் தொண்டராக அமர்த்திக் கொண்டார்.

குரங்குக்குக் குட்டியானது, குரங்கைப் பிடித்துக் கொள்வது போல் குருவை பக்தன் பற்றி நிற்க வேண்டும். குரு பார்வை கிடைத்ததும், பூனை தன் குட்டியை தூக்கிச் செல்வது போல் சீடனை குரு தூக்கிச் செல்வார். புலவரும் குருவைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

**'மூர்த்தி தவம் தீர்த்தம் முறையாகச் செய்தோர்க்கு**
**வார்த்தைச் சொல்ல சற்குருவும் வாய்க்கும் பராபரமே'**

என்றார் தாயுமானவர். இயேசுவும் பன்னிரு சீடர்களும், விவேகானந்தரும் ராமகிருஷ்ணரும், சகோதரி நிவேதிதையும் விவேகானந்தரும், குரு சிஷ்ய உறவுக்கு வழிகாட்டியதைப் போல வேதாத்திரி மகரிஷியும் புலவர் தியாகராஜரும் குரு சிஷ்ய உறவுக்கு நமக்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்தனர்.

❋

## 19. உலக சமாதானப் பொங்கல்

**'இந்த அரும் பிறவியில் முன்வினையறுத்து எல்லையில்லா மெய்ப்பொருளை அடைவதற்கு வந்த ஒரு உதவி குரு உயிரின் சேர்க்கை வணங்கி குரு திருவடியை வாழ்த்தி வாழ்வேன்'**

–வேதாத்திரி மகரிஷி

சென்னை தியாகராய நகரில் வால்மீகி தெருவில் மகரிஷி தங்கியிருந்தார்கள். புலவரும் மகரிஷியும் பக்கத்து பக்கத்து அறைகளில் தங்கியிருந்தார்கள். பட்டினத்தாரும் - பத்திரகிரியாரும் போல் அருகருகே வசித்து வந்தனர்.

அன்னை லோகம்பாள், கூடுவாஞ்சேரியிலிருந்து புலவருக்கும் சேர்த்து சாப்பாடு கொண்டு வருவார்கள். அப்படிக் கொண்டு வராத நாட்களில் புலவர்தான் சமையல்காரர்.

பிரம்மச்சாரியின் சமையல் எப்படி இருக்கும்? இவரது சமையல் நூதனமானது. இவரது சமையல் ஆன்மீகமானது. அரிசி, பருப்பு, உப்பு, காய்கள், கடுகு, காரம் என்று தன்னிடம் இருக்கும் அத்தனையும் ஒன்றாகப் போட்டு வேக வைப்பார். அனைத்தும் வெந்ததும், ஒரு கிண்டு கிண்டி இறக்கி வைத்து விடுவார்.

மகரிஷி, இதனை மிகவும் விரும்பி ருசிச்சு சாப்பிடுவார்கள். 'உலக சமாதானப் பொங்கல்' என்று இதற்குப் பெயரும் வைத்தார்கள். பிற்காலத்தில் இத்தகைய சமையல்களை, அருள்நிதி உமாவும் செய்து மகரிஷிக்கு வழங்குவதுண்டு. அதை புலவர் பொங்கல் என்று அழைத்து மகிழ்ந்தார்கள்.

அன்னை லோகம்பாள், கூடுவாஞ்சேரியிலிருந்து புலவருக்கும் சேர்த்துதான் சமயம் கிடைக்கும்போதெல்லாம் சாப்பாடு கொண்டு வருவார்கள். இருவரையும் அன்னை சாப்பிட அழைப்பார்கள்.

மகரிஷிக்கு முதலில் பரிமாறும்படியும் - தான் பிறகு சாப்பிடுவ தாகவும் புலவர் கூறுவார்.

'இருவருக்கும் போட்டுவிட்டால் அவளுக்கு வேலை முடியு மல்லவா?' என்பார் சுவாமிஜி.

'இல்லை நீங்கள் முதலில் சாப்பிடுங்கள். நான் பிறகு சற்று கழித்து சாப்பிடுகிறேன்' என்று அய்யா கூறிவிடுவார்கள்.

அம்மாவும் 'விட்டுருங்க அவன் அப்புறம் சாப்பிடட்டும்' என்று குறிப்பறிந்து கூறிவிடுவார்.

'நான் நிறைய சாப்பிடுவேன். சாமி கொஞ்சமாகத்தான் சாப்பிடுவார். அதனால் அவரோட சேர்ந்து சாப்பிட கூச்சப்பட்டுக் கொண்டு அப்படிச் சொல்றேன் என்பதைப் புரிஞ்சுக்கிட்டு - அம்மா சாமிகிட்ட சொன்னாங்க' என்று பின்னாளில் புலவர் கூறுவார். அன்னையின் சாப்பாட்டை புலவர் மிகவும் ருசிச்சுச் சாப்பிடுவார்கள்.

# 20. நல்லாசிரியர் விருது

ஒரு சிறந்த கல்வி நிறுவனத்திற்கு மூன்று சிறப்பு அம்சங்கள் இருக்க வேண்டும். அவைகள் முறையே ஆசிரியர்கள் - செயல் முறைத் திட்டம் - மாணவர்கள். இந்த மூன்றிலே ஆசிரியர்கள் பங்கு மிகவும் முக்கியமானது.

ஆசிரியர்கள் ஆன்மீக உள்ளம் படைத்தவர்களாக இருக்க வேண்டும். அவர்களுடைய ஆன்மீக வாழ்வு, தியாகமும், தொண்டும் கொண்டதாக இருக்க வேண்டும். அவர்கள் தியாக புருஷர்களாக தொண்டு உள்ளம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

ஆசிரியர்கள் மாணவ மாணவியருக்கு புத்தகத்தின் மூலமாகப் போதிப்பதைவிட, தங்கள் வாழ்வின் மூலமாகப் போதிப்பது அதிகமாக இருக்க வேண்டும். ஏனென்றால் நூற்றுக்கணக்கான மாணவ மாணவியர்கள் ஓர் ஆசிரியரின் வாழ்வை மிக உன்னிப்பாக கவனிக்கிறார்கள்.

அடுத்து ஆசிரியர்கள் சிறந்த ஒழுக்க சீலர்களாக இருக்க வேண்டும். இன்று நாட்டிலுள்ள கேடுகளுக்கு எல்லாம் ஒழுக்கமின்மையே காரணம். நம் நாட்டிலுள்ள பெரும்பான்மை மக்களிடமும் சமுதாயத் தலைவர்களிடமும் லஞ்சமும் சுயநலமும் தாண்டவமாடுகின்றன.

இதற்கு எல்லாம் காரணம், ஆசிரியர்களது ஒழுக்கமின்மையே காரணமாகும். வேலியே பயிரை மேய்ந்தால் பயிர் வளர்வது எங்ஙனம்?' ஆகவே ஆசிரியர்கள் சிறந்த ஒழுக்க சீலர்களாகவும் அறிவிற் சிறந்தவர்களாகவும் இருக்க வேண்டும். இதற்காக அவர்கள் தங்களது ஒழுக்கத்தையும் அறிவையும் எப்போதும் மேம்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

அய்யா பணிபுரிந்த பள்ளிக்கருகில், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் இருந்தது. இதில் 70க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள்

பணிபுரிந்து வந்தனர். இருப்பினும், புலவரை மட்டும்தான் **அய்யா ஆசிரியர்** என்று எல்லோரும் அழைப்பார்கள்.

அந்த அளவுக்கு, ஆசிரியத் தொழிலில் ஈடுபாடும் ஆர்வமும் நிறைந்து காணப்பட்டார். அனைத்து ஆசிரியப் பெருமக்களுக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார். ஆசிரியருக்குரிய இலக்கணம் முழுவதும் நிரம்பப் பெற்றிருந்தார் என்றால் மிகையாகாது.

தமிழக அரசின் கல்வித்துறை இவருக்கு நல்லாசிரியர் விருது வழங்கி கௌரவித்தது.... அய்யாவுக்கு நல்லாசிரியர் விருது வழங்கியதால் அந்த விருதே பெருமையடைந்தது எனலாம்.

அய்யாவிற்கு விருது வழங்கியதில் பலசிறப்புகள் அமைந்திருந்தன. இவருக்கு விருது வழங்கிய நாள் ஆகஸ்டு பதினைந்து 1991.

இவர் ஓய்வு பெற்ற பின்னரே நல்லாசிரியர் விருது அப்போதைய முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களால் வழங்கப்பட்டது. இவருக்கு விருது வழங்கியதை நாளிதழ்கள் செய்தி வெளியிட்டு பாராட்டின.

நல்லாசிரியர் விருது மட்டும் அய்யாவைத் தேடி வரவில்லை. பல விருதுகள் அய்யாவைத் தேடி வந்தன.

அய்யா சைவ சித்தாந்தத்தில் எம். ஏ.படிப்பில் 'ஓ' கிரேடு வாங்கி சிறப்பு மாணவராக தேர்ச்சி பெற்றவர். இதனால் திருவாடுதுறை ஆதினம் '**சித்தாந்த இரத்தினம்**' என்ற பட்டத்தை வழங்கியது.

சுத்தானந்த பாரதியார் '**புலவர் மணி**' என்ற பட்டத்தையும் மாணவர் மன்றம் '**ஆசிரியர் மணி**' என்ற பட்டத்தையும் அய்யாவுக்கு வழங்கியது.

❋

# 21. பாத்திரமறிந்து பிச்சையிடுதல்

**'விழிப்பு நிலையோடு தான் நம் அளவுக்குத் தக்கபடிதான் நாம் பிறர்க்கு உதவவேண்டும். நீதிபதி முன் நிறுத்தப்படும் குற்றவாளியை எப்படி அந்நீதிபதி அவன் குற்றமற்றவனாகவும் இருக்கக் கூடும் என்று விசாரணையைத் துவக்குகிறாரோ அதேபோல நம்மிடம் உதவி நாடுபவரை 'இவன் ஏன் எமாற்றுக்காரனாய் இருக்கக் கூடாது' என்று ஒரு கேள்வி எழுப்பிக் கொண்டு பிறகு நல்லவன்தான் என்று சோதித்து அறிந்த பிறகே அளவோடு உதவி அளிக்க வேண்டும்.**

– வேதாத்திரி மகரிஷி

ஒருமுறை தனது சொந்த ஊருக்குச் சென்றுவிட்டு, மருந்துப் பையுடன் அய்யா ஆழியார் புறப்பட்டார்கள். வழியில், ஈரோடு பேருந்து நிலையத்தில் பேருந்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்போது, ஒரு மனிதர் வேகமாக இவரிடம் வந்து '500 ரூபாய் ரூபாய்க்கு சில்லறை இருக்கிறதா' என்று கேட்டார்.

இரக்க மனமுடைய அய்யா, தன்னிடமுள்ள சில்லறை ரூபாய்களை எல்லாம் திரட்டி அவரிடம் 500 ரூபாயைக் கொடுத்தார்.

பணத்தைப் பெற்றுக் கொண்ட அவர், அய்யாவிடம் 500 ரூபாய் நோட்டு எதையும் கொடுக்காமலேயே வேகமாக நடையைக் கட்டினார்.

'ஐயா! ரூபாய் நோட்டை கொடுக்காமலேயே போகிறீர்களே!' என்று சத்தம் போட்டிருக்கிறார். அந்த ஆள் இவரைத் திரும்பிப் பார்த்துவிட்டு, வேக வேகமாக நடையைக் கட்டிவிட்டான்.

'இப்படிக் கூட நூதனமான திருட்டுகளை செய்கிறார்கள். ஏதோ உதவியாக இருக்கட்டுமே என்று சிரமப்பட்டு, காற்றில் பறந்துவிடாமல் பணத்தையும் எண்ணிக்கொண்டு, கனமான பைகளை கீழேயும் வைக்க முடியாமல், சில்லறை ரூபாய்களை திரட்டிக்

கொடுத்தேன். இதுக்குத்தான் பாத்திரமறிந்து பிச்சையிடுன்னும் பெரியவங்க சொல்லியிருக்காங்க' என்று தனக்கு வேண்டியவர்களிடம் சொல்லி ஆதங்கப்படுவார். தனது சொற்பொழிவுகளிலும் இதைக் குறிப்பிடுவார்கள்.

பொதுவாக, அய்யா உதவி செய்யும்போது பாத்திரமறிந்துதான் உதவி செய்வார்கள். அன்று தன் இரக்க குணத்தால் ஏமாந்துவிட்டார். தன்னை ஆதரித்தவர்களுக்கு, கற்பதற்கு, சிரமப்படுபவர்களுக்கு, திருமணத்திற்கு சிரமப்படும் உறவினர்களுக்கு, வயதான துறவி களுக்கு என்று உதவி செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

ஒருமுறை உறவினர் ஒருவர், இவரிடம் ஏதோ உதவி கேட்கிறார். அருகில் நானும் இருக்கிறேன்.

'உனக்கு உன் குடும்பத்திற்காக ஒருமுறை உதவி செய்துள்ளேன். திரும்பத் திரும்ப உதவி கேட்டால் நான் எங்கே போவது? இந்த வயதிலும் நானும் கஷ்டப்பட்டுதானே சம்பாதிக்கிறேன்' என்று அவரிடம் கூறினார்.

'பிறருக்கு உதவி புரிவதில் கூட நாம் இக்காலத்தில் விழிப்போடு இருக்க வேண்டியுள்ளது. உதவி தேவைப்படுபவர்கள்தான் அதற்கு தகுதியுடையவர்கள்தான் - நம்மை நாடி வருகிறார்கள் என்று நினைப்பதற்கில்லை. அப்படித் தகுதியுடையவர்களாயிருப்பினும், தகுதி பெற்ற எல்லோருக்குமே நாம் உதவி செய்ய முடியுமா? என்பதையும் நாம் சிந்தித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்ற வேதாத்தரி மகரிஷியின் வரிகளை அருகே இருந்தவர்களிடம் சொல்லி பகிர்ந்து கொண்டார்கள்.

நாம் ஒரு கனி மரம் வளர்க்கிறோம். கனிகளை மட்டும்தான் கொடுத்து உதவி செய்யலாமே ஒழிய மரத்தையே வெட்டிக் கொடுத்து விட்டால், பிறகு கனி எப்படிக் கிடைக்கும்? பொருள் பறிக்கவே சிலர் பற்பல வேடங்களில் நம்மை நாடி வரும் இக்காலத்தில், பிறர்க்கு உதவி செய்வது என்பது கூரிய ஆயுதம் போன்றது. தவறி மாட்டிக் கொண்டால் அதற்கு நாமே பலியாகி விடுவோம்.

ஆனால், அதே நேரத்தில் தனக்கென்று பாதுகாப்பாக மிகச் சிறிய தொகையை வைத்துக்கொண்டு, மீதித் தொகையை உடனுக் குடன் பிறருக்கு உதவி செய்துவிடுவார். தம்மிடம் பணத்தை தேங்கவிட மாட்டார்கள்.

# 22. குருவின் மீது பிள்ளைத் தமிழ் பாடிய புலவர்

**'குரு காணிக்கையாக நீங்கள் காலையில் எழுந்தவுடன்'' வாழ்க வையகம் - வாழ்க வளமுடன்'' என்று வாழ்த்தினால் அதுவே பெருமதிப்புள்ள காணிக்கையாகும். அனைத்து உள்ளங்களிலும் எழும் இவ்வொலி அலை - உலக மக்கள் மனதிலே ஊடுருவி அமைதிக்கு ஏற்ற பணிகளைச் செய்யத் தூண்டும்.'**

**– வேதாத்திரி மகரிஷி**

பிள்ளைத் தமிழ் என்பது ஒருவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தை இனிய மொழி வளத்தோடும் பக்தி ரசத்தோடும் வெளியிடும் ஓர் அருஞ்செயலாகும்.

தனது குருவின் வாழ்க்கைச் சரித்திரத்தை இலக்கிய வளத்தோடு பிள்ளைத்தமிழ் பாடி பரவசமடைய ஆசைப்பட்டார் புலவர். தன்னுடைய நண்பரும் பக்கத்து ஊர்க்காரருமான கவிஞர் முருகொளி - அய்யாவின் சிறந்த நண்பர்களில் ஒருவர். அவரையும் சேர்த்துக் கொண்டு 'வேதாத்திரி மகரிஷி பிள்ளைத்தமிழ்' எழுதி வெளியிட்டார்.

தனது வருவாயிலிருந்து, பத்தாயிரம் ரூபாய் செலவு செய்து - அதனைப் புத்தகமாக பதிப்பித்தார். புத்தகத்தின் முதல் பக்கத்தில் தனது குருவின் படத்தையும், இரண்டாவது பக்கத்தில் தனது தந்தையார் திருமலி கே. பி. கந்தசாமி சர்மாஜி அவர்களின் படத்துடன் - அவர்களின் 90 - வது பிறந்த நாளுக்கு இந்நூலைக் காணிக்கையாக்கினார்.

இப்பிள்ளைத் தமிழ் புத்தகத்தை, நண்பர் முருகொளியையும் அழைத்துக் கொண்டுபோய் மகரிஷியிடம் கொடுத்து ஆசி வேண்டினார். அப்போது மகரிஷி அவர்கள் சொன்னார்கள்.

திருவாளர்கள் புலவர் முருகொளி, தியாகராஜன் ஆகியோர் என் பெயரில் பிள்ளைத் தமிழ் பாடி வெளியிட்டுள்ளனர். தமிழ்நாட்டில் மூர்த்தி வணக்கங்களில் சுப்பிரமணிய சுவாமிகள் மீது திருப்போரூர் பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தத்தைச் சிதம்பர சுவாமிகள், அருந்தமிழில் பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார். மேலும் வணங்கப்படும் தெய்வங்களைப் பற்றிப் புலவர்கள், பிள்ளைத் தமிழ் பாடியுள்ளதை அறிவேன்.

அண்மையில், நமது மன்றத்து அன்பர் புலவர் மா.கு. காமாட்சி நாதன் அவர்கள் வள்ளலார் மீது அருமையான பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார்.

என் பெயரில் எழுதிய பிள்ளைத் தமிழைப் பார்க்கும்போது எனக்கே ஒரு சரித்திர கால நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது.

'அதிவீரராமபாண்டியன், நைடதம் முற்பகுதி பாடியபின், தனது தமையனார் வரதுங்கபாண்டியனிடம் கருத்துரைக்காக அளித்தார். பாடல்களில் உள்ள மொழி வளத்தை அறிந்து, தம்பியை வரதுங்கராம பாண்டியன் பாராட்டினார். அதோடு அவர் மற்றொரு கருத்தையும் தெரிவித்தார்.

'தம்பி! நீ ஒரு நரனைப் பற்றிப் பாடியிருக்கிறாய்! அரனைப் பற்றிப் பாடியிருந்தால், எவ்வளவோ நன்றாக இருக்குமே! என்று தெய்வத் தகைமையை வெளிப்படுத்திக் கூறினார். இதைத் தனது மனைவியிடம் (அரசியாரிடம்) காண்பிக்கும்படியும் தெரிவித்தார்.

பிறகு நூலைப் பாடி முடித்தபின் அதிவீரராம பாண்டியன் தனது அண்ணியாரிடம் பாடிய நூலாகிய, நைடதத்தைச் சமர்ப்பித்தார். கருத்துரை வழங்குமாறு வேண்டினார்.

ஒரு வாரம் பொறுத்து வரும்படிக் கூற - வந்தபின் 'உயர்ந்த காவியம் இது. ஆயினும், வேட்டை நாயின் நடையைப் போன்று இருக்கிறது' என்று கூறினார்.

இந்த வார்த்தையை செவியுற்ற அதிவீரராம பாண்டியன், அண்ணன் வரதுங்க பாண்டியன் மீது (இந்த ஆட்சியில் சகோதரனாகிய தனக்கும் சரிபாதி பங்கு - பாத்தியம் - இருக்கிறது என்பதை உணர்த்த) போர்முரசு முழங்கினான். அதை அறிந்த அரசி வரதுங்க பாண்டியனின் தேவி-மைத்துனன் அதிவீரராம பாண்டியனுக்கு.

**'செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்**
**பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே!**
**விரதமே பூண்டிந்த மேதினியை யாண்ட**
**பரதனையும் ராமனையும் பார்!'**

என்று ஒரு ஓலையை எழுதியனுப்பினார்.

'மெய்யன்பு கொண்ட பரதனையும், இராமனையும் பார்' என்ற கவியே அந்த ஓலையில் எழுதப்பட்டிருந்தது.

அதிவீரராம பாண்டியனுக்கு உள்ளம் நெகிழ்ந்தது. கண்ணீர் ததும்பியது. அண்ணியின் கருணை உள்ளத்தின் தகைமையறிந்து விரைவாக வந்து அண்ணியார் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

அரசியாராகிய அண்ணியார் கூறினார். 'தம்பி வேட்டை நாய் நடைபோல உள்ளது என்ற என் வார்த்தை, உன் உள்ளத்தைத் தைத்துவிட்டது போலும்! அதற்கு விளக்கம் கூறுகிறேன் கேள்!

'வேட்டைநாய் போகும்போது வேகமாக ஓடும். வரும்போது மெதுவாக சோர்ந்து வாடிய முகத்தோடு வரும்!' அதேபோன்று உன்னுடைய நூலின் முற்பகுதியில், வேகமாகச் சுறுசுறுப்பாகக் காவியத்தின் மொழி நடை மிளிர்கிறது. பிற்பகுதியோ ஓரளவு சோர்வுற்றுக் காண்கிறது. இதற்குக் காரணம் பின்னர் நான் (உனது போர் முரசால்) அறிந்தேன்.

முற்பகுதியைப் பார்த்த உனது தமையனாராகிய அரசர் பாண்டிய மன்னன் 'நரனைப் பற்றி எழுதியதைவிட, அரனைப் பற்றி எழுதியிருந்தால் நலமாக இருக்குமே!' என்று கூறியதால் உனது மனம் வாட்டமுற்றது. அதன் காரணமாக உனது நூலில் பிற்பகுதி சோர்வுற்றுக் காண்கிறது. இதைத்தான் வேட்டை நாய் நடை என்று கூறினேன் என்றாலும் உனது நூலைப் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்று கூறி ஆசி வழங்கினார்.

இதே போன்று, தியாகராஜனும் முருகொளியும் எழுதி வெளியிட்ட பிள்ளைத் தமிழை என்னிடம் தந்தபோது 'எத்தனையோ மகான்கள் நமது நாட்டில் வாழ்ந்தார்கள். மக்களுக்கு அருள்தொண்டு ஆற்றி உள்ளார்கள். என்மீது பிள்ளைத் தமிழ் பாடியிருப்பதற்குப் பதிலாக அத்தகைய பெரியோர்கள் மீது பாடியிருக்கலாமே என்று எனது கருத்தைக் குறிப்பிட்டேன்.

அவர்கள் இருவருமே இது எங்கள் உள்ளத்தில் எழுந்த எழுச்சி. ஆசை ஆர்வத்தின் காரணமாகத் தூண்டப்பட்டு நாங்கள் இந்த நூலைப் படைத்திருக்கிறோம். வெளியிட்டு இருக்கிறோம் என்றார்கள்.

''இவ்விரு புலவர்களின் உள்ளன்பை, மதிப்பின் மேன்மையைப் பெரிதும் பாராட்டுகிறேன். இத்தகைய நூல் எழுதியதற்கு மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரும்பாலும் இந்நூலின்கண் எனது வாழ்க்கைச் சரித்திரம் அடங்கி உள்ளது என்பதே சாரமாகும்'' என்று கூறினார் வேதாத்திரி.

# 23. அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே

*எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே*
*அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே'*

என்று தாயுமானவர் பாடுகின்றார். எல்லாரும் இன்புற்றிருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? ஒருவருக்கொருவர் அன்பு செய்ய வேண்டும். எல்லா உயிர்களையும் தம் உயிர் போல எண்ணி ஒழுக வேண்டும்.

அன்பைப் பெருக்கி எனது ஆருயிரைக் காக்கவந்த
இன்பப்பெருக்கே இறையே பராபரமே

என்பதற்கிணங்க அன்பைப் பெருக்குவது ஆருயிரைக் காக்கும் வழி. அன்பைப் பெருக்கினால் ஆருயிரைக் காக்கலாம். இறையின்பம் பெருகும்.

புலவர் மனிதரிடம் மட்டுமா அன்பு செலுத்தினார். பாரதி சொன்னானே காக்கை குருவி எங்கள் ஜாதி என்று....... அப்படி விலங்குகளிடத்திலும் மிகவும் அன்பு பாராட்டினார்.

புலவரின் வாயிலிருந்து அன்பான வார்த்தைகளே வரும். இனிமையான வார்த்தைகளே வரும். அவரது அன்பு மாசற்றது. பார்க்கும் அன்பர்களை எல்லாம் தமது குருநாதராகவே எண்ணி அன்பு செலுத்தி வந்தார்.

அப்போது, அதாவது 1996 ஆம் ஆண்டில் அறிவுத் திருக்கோயிலில் வள்ளலார் குடிலின் பின் பகுதியில் அய்யா தங்கியிருந்தார். தற்போது அங்கே வேதாத்திரிய உள்ளுணர்வுக் கல்விமைய அலுவலகங்கள் அமைந்துள்ளன.

அய்யா அவர்களுக்கு நீண்ட நாட்களாக தோல் வியாதி யிருந்ததால் உப்பில்லாமல் தாமே சமைத்துச் சாப்பிடுவார். சமையல் சாமான்கள், சித்த மருந்துப் பொருட்கள் எப்போதும் அவரது அறையில் இருக்கும்.

ஒருநாள் மொட்டை மாடி வழியாக சில குரங்குகள் கைகளில் பொட்டலங்களை வைத்துக் கொண்டு மாமரத்தில் குதித்தன. சில பொட்டலங்களைதவறவிட்டதால் மீண்டும் மொட்டை மாடி வழிய சென்று எடுத்து வந்தன.

புலவருக்குப் பக்கத்தில், திருமூலர் குடிலில் தங்கி இருந்த மூத்த பேராசிரியை திருமதி மாரியம்மாள், இந்தக் காட்சியைக் கண்டார். அவர் பக்கவாட்டிலிருந்த கதவருகில் சென்று 'அய்யா அய்யா என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? கதவைத் திறந்து வைத்திருக்கிறீர்களா? வெளியில் வந்து பாருங்கள் குரங்குகளின் அட்டகாசத்தை' என்றார்.

'அம்மா எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் நிற்கிறேன். கதவு திறந்ததை மூட மறந்துவிட்டேன். அதுகளுக்கு அவை தேவைப் படுகிறது போலும் என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்' என்றார்.

'குரங்குகள் வெல்லம், கருப்பட்டி, கல்கண்டு போன்றவற்றை மண்ணில் போடுகிறது! மண்ணில் படாமலிருந்தால் எடுத்துக் கொள்ளலாமே!

'அம்மா இறைவன் இந்தப் பொருட்கள் உனக்குத் தேவை இல்லையடா என்கிறான்' என்றார்.

குரங்குகள் இவரது அறையின் முன்புறம் வந்து நின்றால் தின்பதற்கு ஏதாவது போடுவார். ஒரு நாள் காலை பேராசிரியர்கள் குடியிருப்பிலிருந்து வெளியில் வந்தார். (தற்போதைய பெண்கள் கழிப்பிடத்திற்கு மேற்குப்புறம் உள்ள கட்டடம்) ஓங்கார மண்டபத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கிறார்.

அவருக்குப் பக்கத்து அறையிலிருந்து பேராசிரியர் மாரியம்மா வெளியில் வந்தார். ஒரு குரங்கு முன்புறம் நீளமாகத் தொங்கிய புலவரின் துண்டைப் பற்றிக் கொண்டது. இவர் நடையை நிறுத்தி நின்று விட்டார். குரங்கு அவரது முகத்தைப் பார்க்கிறது. அவரும் குரங்கையே பார்க்கிறார். சற்று நேரத்தில் பிடியை விட்டுவிட்டு ஓடிவிட்டது.

'குரங்குகளுக்கு எதுவும் போடாதீர்கள்? என்று சொன்னால் கேட்க மாட்டேன்கிறீர்களே! குரங்கு கடித்திருந்தால் என்னவா யிருக்கும்? இப்போது துண்டைப் பிடித்த குரங்கு என்ன சொல்லி விட்டுச் சென்றது' என்று சிரித்துக் கொண்டே கேட்டார் பேராசிரியர்.

'என்னடா இன்று ஒன்றும் கொடுக்காமல் போற, கொடுத்துட்டுப் போடாங்குது' என்றார் புலவர்.

மனிதன் என்பதற்கு அடையாளமே அவனிடம் உள்ள அன்புதான். ஒவ்வொரு மனிதனின் அடித்தளத்தில் இருப்பது அன்பும் கருணையும்தான். அன்பும் கருணையும் மனித வாழ்வுக்கு இன்ப ஊற்றுக்கள்.

அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்து அடிப்படையிலர் ஆற்றும் கடமையெல்லாம் அன்பின் செயலாம். அன்புதான் வாழ்வின் ஊற்று. சிறிது வெறுப்புணர்ச்சியானாலும் நமது உள்ளத்தை இனிமை கெடச் செய்யும்.

அன்பால் என்பு (எலும்பு) உருக வேண்டும். நெஞ்சம் இளக வேண்டும். இளகிக் கரைய வேண்டும். கரைந்து கரைந்து நாமே அன்புருவாய் நிற்க வேண்டும். அப்படி நின்றால் நாம் மட்டுமல்ல எல்லோரும் இன்புற்றிருக்கலாம்.

❋

# 24. சமநோக்கு சத்திய சீலர்

ஜனகர் வெப்பத்தையும் தட்பத்தையும் ஒன்றாக நோக்கினார்.

தருமர் இகழையும் புகழையும் ஒன்றாகப் பார்த்தார்.

ராமர் காட்டையும் நாட்டையும் ஒன்றென மதித்தார்.

அப்பரடிகள் பொன்னையும் மண்ணையும் ஒன்றெனப் பார்த்து உழவாரப் படையால் பேர்த்து எறிந்தார். அவ்வாறு காண்கின்ற காட்சி அருங்காட்சி எனப்படும்.

அக்காட்சியைக் காண்போர் மனம், அலையற்ற கடல் போல, காற்றில்லாத இடத்தில் எரியும் விளக்கைப் போல், சலனமற்று இருக்கும் அவர்களின் உள்ளம் எப்போதும் குளிர்ந்திருக்கும். அவர்கள் முகம் மலர்ந்திருக்கும். கண்களில் கருணை வழியும். அத்தகைய ஆன்றோரைக் காண்பது ஒரு இனிய காட்சியாகத் திகழும். கண்டால் கண் குளிரும்.

அப்போது மகரிஷி உடல் நலமில்லாமல் இருந்தார்கள். ஆழியாறில் நடைபெறும் பயிற்சிகளுக்குச் செல்லாமல் அங்கே மருத்துவரின் பரிந்துரைப்படி ஓய்வில் இருந்தார்கள். எப்போதாவது ஒருமுறை அதுவும் மாலை நேரங்களில் மட்டும்தான் தங்கியிருந்த இடத்தில் இருந்து, லிப்டில் இறங்கி வந்து உள்ளே இருக்கும் பிரகாரத்தில் உடல்நிலைக்கேற்ப ஓரிரு சுற்றுகள் மெதுவாக நடந்து வருவார்கள்.

அப்போது குருவின் தரிசனம் பெற நூற்றுக்கணக்கான அன்பர்கள் அம்மண்டபத்தைச் சுற்றி நிற்பார்கள். அன்பர்களைப் போல் அய்யாவும் ஒரு ஓரத்தில் நின்று குருவை தரிசிப்பார்கள்.

அவ்வாறு ஒரு முறை குரு தரிசனத்தை தூரமாக ஒரு ஓரத்தில் நின்று தரிசித்து வந்தபோது.... மகரிஷி 'தியாகராஜா.... என்று அன்புடன் அழைத்தார்கள். நின்ற இடத்தில் காலணிகளை கழற்றி விட்டு, குருவின் அருகே ஓடி வந்தார்கள்.

'தியாகராஜா மெதுவாக வா நீ வரும்வரை நான் இங்கேயே நிற்கிறேன், என்று சிரித்துக் கொண்டே சொன்னார்கள். இந்நிகழ்ச்சி அங்கிருந்த அனைவரையும் மெய் சிலிர்க்க வைத்தது.

குருவுடன் இருக்கும் நெருக்கத்தை வைத்துக் கொண்டு, அவரை நேரில் போய் தரிசிக்கலாம் - பார்க்கலாம். ஆனால், அய்யாதான் சமநோக்கு சத்திய சீலராயிற்றே! மற்ற அன்பர்களைப் போலவே அய்யாவும் ஆசி பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

கம்பராமாயணத்தில் ஒரு காட்சி வரும். கைகேயி இராமனை காட்டுக்குப் போ என்றபோதும், தசரதன் நாட்டினை அரசாளுக என்றபோதும் - இராமனின் முகம் எப்போதும் போல் அன்றலர்ந்த தாமரைப் போல் இருந்ததாக கம்பர் சொல்லுவார்.

அதைப்போலவே, அய்யாவை திருவான்மியூரிலிருந்து போகச் சொன்னபோதும் - பின்பு ஆழியாறிலிருந்து பொள்ளாச்சிக்கு போகச் சொல்லிய போதும் - பின்பு பொள்ளாச்சியிலிருந்து ஆழியார் வாருங்கள் என்ற அழைத்தபோதும், இராமனைப் போல் அன்றலர்ந்த தாமரை போல் - சமநோக்கு சத்திய சீலராகவே வாழ்ந்து வந்தார்கள்.

❋

# 25. மருத்துவத் தொண்டு

புலவரின் சேவை மனப்பான்மையானது அவரை மருத்துவத் துறை நோக்கி ஈர்த்தது. எங்கே அவரது சேவை தேவையென்ற ஈர்ப்பு இழுத்ததோ அங்கே அவர் சென்றார்.

பல வகையான மூலிகைகளையும் அவை எவ்வகையான தன்மையுடையன - என்றும் அன்பர்களிடம் விளக்குவார். புலவர் தேர்ந்த மருத்துவராகத் திகழ்ந்தார். நண்பர்களுக்கும் அன்பர்களுக்கும் மருத்துவம் செய்து நோயகற்றியிருக்கிறார்.

தனது குருநாதர் எப்படி வைத்தியத்தை கற்க வைத்திய பூபதி எஸ்.கிருஷ்ணராவிடம் போனார்களோ, அவ்வாறே அய்யாவும் பல வைத்தியர்களைத் தேடிச் சென்றார்கள்.

புழல் ரெட்டை ஏரி திரு டி. கன்னியப்பன் - அருப்புக்கோட்டை மருத்துவ மேதை சுந்தர மகாலிங்கம் - வில்வனூர் வைத்தியர் மாணிக்க சுவாமிகள் - நாமகிரிப்பேட்டை டாக்டர் கே. பெரியசாமி, அரக்கோணம் திருமதி கஜலெட்சுமி ஆகியோரிடம் சித்த வைத்திய முறைகளைக் கற்றுத் தேர்ந்தார்கள்.

தான் கற்றுத் தேர்ந்த வைத்திய முறைகளைப் பின்பற்றி, மருந்துகள் தயாரித்து மானுடத்திற்கு நல்க முடிவு செய்தார்கள். இதற்காக, தனது சகோதரர் மகனான திரு இராமலிங்கம் மற்றும் அவரது துணைவியார் திருமதி ரேணுகா அம்மையாரைத் தேர்ந்தெடுத்தார்கள்.

'அய்யா இந்த மருந்துகளைச் செய்யும் முறைகளைக் கற்றுக் கொண்டால் ஒரு குடும்பமே பிழைக்கலாம். மற்றவர்களது நோய் களையும் குணப்படுத்தலாம்' என்று கூறி அவர்களுக்கு தான் கற்ற மருத்துவமுறைகளைக் கற்றுக்கொடுத்தார்கள்.

மேலும் மருந்து தயாரிக்க வேண்டிய அரவை இயந்திரம் போன்ற கருவிகளையும், சாதனைகளையும் மூலிகைகளையும் வாங்கித் தந்தார்கள்.

மருத்துவ மாமேதை புழல் அய்யா திரு டி. கன்னியப்பன் அவர்களை தனது ஊருக்கே அழைத்து வந்து திரு இராமலிங்கம் தம்பதியினருக்கு சித்த வைத்தியம் கற்றுத் தந்தார்கள்.

அகத்தியர் அருள் பெற்ற அருப்புக்கோட்டை மருத்துவ மேதை சுந்தர மகாலிங்கம் அவர்கள் வீட்டிற்கு திரு இராமலிங்கத்தை அழைத்துச்சென்று நான்கு நாட்கள் தங்கவைத்து பாசான வகைகளை சுத்தம் செய்யும் மருத்துவத்தை கற்கச் செய்தார்கள்.

வில்வனூர் சித்த வைத்தியர் மாணிக்க சுவாமிகளிடம், சித்த வைத்தியம் கற்கச் செய்தார். அவர் அய்யாவின் ஊருக்கே சென்று ரசமணி செய்யக் கற்றுக் கொடுத்தார்.

நாமக்கல் மாவட்டம் நாமகிரிப் பேட்டையில் டாக்டர் திரு.கே.பெரியசாமி மூலமாக சித்த வைத்தியத்தை கற்க தக்க ஏற்பாடுகள் செய்து கொடுத்தார்கள்.

முறையாக வைத்தியம் கற்றுக் கொடுத்தபின்பு, பதினாறு வகையான மருந்துகளைத் தயாரிக்கத் தேவையான பொருள் உதவிகளைச் செய்தார்கள்.

1. பற்பொடி
2. ஆஸ்துமா சூரணம்
3. சுகர் சூரணம்
4. இதய நோய் சூரணம்
5. செரிமான சூரணம்
6. சுகம் சூரணம்
7. வயிற்று வலி மாத்திரை
8. சளி இருமல் கப மாத்திரை
9. சுர மாத்திரை
10. பேதி மாத்திரை
11. கூந்தல் தைலம்
12. மூட்டுவலி தைலம்

13. குளிர்ச்சி தைலம்

14. சத்து லேகியம்

15. இணை களிம்பு

16. சுக பாம்

போன்ற மருந்துகளைத் தயாரிக்கச் செய்து, அதனை தாம் தங்கியிருக்கும் இடங்களில் எல்லாம் வைத்திருப்பார்கள். புலவரைப் பார்க்கும் அன்பர்கள், தங்கள் நோய்களைக் கூறி அதற்குரிய மருந்துகளை வாங்கிச் செல்வார்கள்.

குன்னக்குடியில் 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற சித்த மருத்துவக் கருத்தரங்கில், திரு இராமலிங்கத்தை கலந்து கொள்ள ஏற்பாடு செய்தார்கள்.

மேலும், 2007 ஆம் ஆண்டு, கொல்லிமலையில் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகம் நடத்திய சித்த மருத்துவ மூலிகை மருந்து பயிற்சி முகாமில், திரு இராமலிங்கம் தம்பதியினரைக் கலந்து கொள்ளச் செய்து, சித்த மருத்துவச் செம்மல் சான்றிதழ் பெற உதவிசெய்தார்.

ஏற்காட்டில் நடைபெற்ற மூலிகைக் கருத்தரங்கில், அய்யாவின் சத்து லேகியத்திற்கு முதற் பரிசு கிடைத்தது.

## 26. சர்வரோக நிவாரணி

அய்யா, தனக்கு வந்த தோல் நோயை இரண்டு மாதங்களில் போக்கிவிடுவதாக சங்கற்பம் செய்து, அதில் வெற்றியும் அடைந் தார்கள். இதன் இரகசியத்தை ஒரு நாள் அய்யாவிடம் கேட்டேன்.

நம் குருநாதர் சிறுநீர் சிகிச்சையைப் பற்றி கூறியிருந்தார்கள். *(அருட்தந்தையின் கேள்வி பதில் பாகம்2)* அதனை குருவின் ஆசியால் முயற்சி செய்து வெற்றி பெற்றேன் என்றார்.

**அய்யா சிறுநீர் என்பது மருத்துவமா?**

சிறுநீர் சிகிச்சை என்பது பழைய வைத்தியமே. இந்தியாவிற்கு மட்டுமல்ல உலகிற்கு ஒரு புது கண்டுபிடிப்பு இல்லை. உலகில் இந்த வீட்டு வைத்தியம் பல நூற்றாண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிறுநீர், சிவாம்பு, சிவநீர், அமரி என்றழைக்கப்படும் சிறுநீர் விலை உயர்ந்த ரசாயனமாகும். சிறுநீர் ஓர் அற்புத மருந்து. திவ்யமான அம்ருதம். இயற்கையின் ஒரு அற்புதம். இயற்கையின் வரு வரப்பிரசாதம். உடல் ஆரோக்கியத்திற்கு, விலை மதிக்க முடியாத ஒரு பொருள்.

**அய்யா – சிறுநீர் கழிவுப் பொருள் என்று கூறுகிறார்களே?**

மக்கள் அறியாமையால் சிறுநீர் கழிவுப் பொருள் என்றும் - விஷத்தன்மை உள்ளது என்றும் கூறுகின்றனர். இயற்கையின் அற்புதங்களில் ஒன்று சிறுநீராகும். தன் உடம்பிற்குத் தானே தயாரிக்கும் உன்னத ஒப்பில்லாத மருந்துதான் சிறுநீராகும்.

சீனாவில், இன்றைக்கும் முந்நூறு கோடி மக்கள் சிறுநீர் அருந்தி வருகின்றனர். சிறுநீர் சாப்பிட்டு யாருக்கும் இதுவரை எந்த எதிர்விளைவுகள் வந்ததில்லை. மனித உடம்பில் உள்ள, விஷப்

பொருள்களும் மரணமடைந்த நோய்க் கிருமிகளும் மலத்தின் மூலம் வெளியேறிவிடுகிறது. சிறுநீர் நமது ஆரோக்கியத்திற்கு நூறு சதவீதம் பாதுகாப்பானது.

சிறுநீர் உயர்ந்த ரசாயனமாகும். திவ்யமான அம்ருதமாகும். ஆரோக்கியத்திற்கு விலை மதிக்க முடியா ஒரு பெருநிதி. நோய்களுக்கு ஒரே வைத்தியம்.

### அய்யா – சிறுநீர் பற்றி நமது முன்னவர்கள் பரிந்துரைத்துள்ளார்களா?

நம் முன்னோர்கள் எழுதியிருக்கும் நூல்களிலிருந்தும் பழைய சரித்திரங்களிலிருந்தும் மற்றும் ஆயுர்வேத நூல்களிலிருந்தும் சிறுநீரின் மகத்துவத்தை உணரலாம்.

திருவள்ளுவர் - திருமூலர் - காகபுசுண்டி - தேரையர் முதலிய சித்தர்களும் ஞானிகளும் எழுதியிருக்கும் நூல்களிலிருந்தும் நாம் அறிந்து கொள்ளலாம். பைபிளிலும் சிறுநீர் சிகிச்சை பரிந்துரைக் கப்பட்டுள்ளது.

### அய்யா – சிறுநீரில் மருத்துவ குணம் உள்ளதா?

ரசாயன நூல் - உடல் நூல் ஆராய்ச்சியாளர்களும் மனித உடலுக்கு மிகவும் போஷாக்கைத் தரக்கூடிய - நன்மை தரக்கூடிய யூரியா அதிக அளவில் அதாவது 3400 மில்லி கிராம் சிறுநீரில் 1459 மில்லி கிராம் யூரியா இருப்பதாகக் கண்டுபிடித்துள்ளார்கள்.

யூரியாவிலிருந்துதான் பல மருந்துகள் தயாரிக்கின்றனர். நமது உடம்புக்குத் தேவையான மருந்தை, நமது உடம்பே தயாரிக்கும் யூரியா சிறுநீரில் உள்ளது. அதனை அருந்தினால் நமது ஆரோக்கியத்திற்கும் நமது நோய்களுக்கும் சிறந்த மருந்தாக அமைகிறது. சிறுநீர் உயிர் காக்கும் மருந்தாகும்.

### அய்யா – சிறுநீர் என்னென்ன நோய்களைத் தீர்க்கும்?

உடலில் உள்ள எல்லா நோய்களையும் போக்கக்கூடிய ஒரே வைத்தியம் சிறுநீரே. சாதாரண தலைவலி,காய்ச்சல், கண் நோய், தோல் நோய் முதல் புற்றுநோய், சர்க்கரை நோய், காச நோய், ரத்தக் கொதிப்பு போன்ற உடலில் ஏற்படும் எல்லா நோய்களையும் போக்கக் கூடிய ஒரே வைத்தியம் சிறுநீரே. உடலில் உள்ள எல்லாத் தீமைகளையும் போக்கக்கூடிய ஒரே வைத்தியம் சிறுநீரே.

## அய்யா – மொரார்ஜிதேசாய் சிறுநீர் சாப்பிட்டவரா?

முன்னாள் பாரதப்பிரதமர் மொரார்ஜி தேசாய் முப்பது வருடமாக சிறுநீர் அருந்தி நூறு வயதுவரை ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். 1978 ஆம் ஆண்டு தனது ஆரோக்கியத்தின் இரகசியத்தை உலகுக்கு வெளிப்படுத்தினார்.

## சிறுநீரில் தாதுக்கள் அடங்கியுள்ளவா?

நமது இரத்தம் தயாரிக்கும் உபபொருள்தான் சிறுநீர். நாம் சாப்பிட்ட உணவில் அதிகமாயிருக்கும் சில வகை இரசாயனங்களை இரத்தம் சிறுநீருக்கு அனுப்பி விடுகிறது. அதை நாம் மீண்டும் அருந்துவதால் அதிலுள்ள சத்துக்களை நமது உடம்பு உறிஞ்சிக் கொண்டு நோய் எதிர்ப்பு சக்தியை வளர்க்கிறது.

ஆரோக்கியமானவனுடைய சிறுநீரில் உடம்பிற்குத் தேவையான பத்தொன்பது வகையான தாதுக்கள் அடங்கி உள்ளன.

## அய்யா – சிறுநீர் சிகிச்சை எப்படி செய்வது?

தினமும் அதிகாலை எழுந்தவுடன் விடும் சிறுநீரைப் பிடித்து அருந்த வேண்டும்.

தோல் நோய் உள்ளவர்கள், ஏழு நாள் கடந்த நமது பழைய சிறுநீரை, சிறிது சுடவைத்து உடல்முழுவதும் வெந்நீரில் குளிக்க வேண்டும்.

கடுமையான பத்தியம் எதுவும் இல்லை. புகை பிடித்தல், மதுபானம், மாமிசம் ஆகியவற்றை நீக்க வேண்டும். (மேலும் விபரங்கள் புத்தகத்தில் படித்து தெரிந்து கொள்ளலாம்.

இண்டர்நெட்டில், சிறுநீர் சிகிச்சை பற்றிய விவரங்களும், அதற்குரிய மருத்துவமனைகள் விலாசமும் கிடைக்கும்.

## அய்யா – சிறுநீர் சிகிச்சை பற்றி புத்தகங்கள் உள்ளனவா?

ஆங்கிலத்தில் நூற்றுக்கணக்கான புத்தகங்கள் உள்ளன. சென்னையில் ஹிக்கிம்பாதம்ஸ் கடையில் கிடைக்கும்.

தமிழில் 'சர்வரோக நிவாரணி' என்ற புத்தகம் ஒன்று மட்டும் உள்ளது. ராசிபுரத்தில் உள்ள தெய்வீக வாழ்க்கை சங்கம் வெளியிட்டுள்ளது. மிகவும் பயனுள்ள புத்தகம்.

எனது கேள்விகளுக்கு விடை தந்ததுடன் 'சர்வரோக நிவாரண' புத்தகத்தையும் எனக்குக் கொடுத்து மகிழ்ந்தார்கள்.

# 27. ரிஷிகேஷில் புலவர்

ரிஷிகேஷ் உலக யோக மையம். ஆன்மீகவாதிகளின் காந்தக்களம். ரிஷிகளின் இருப்பிடம். மூன்று பக்கமும் இமயமலை சூழ்ந்திருக்க புண்ணிய நகரம். இமயமலை தொடங்கும் இடம். கங்கை பூமியில் வந்து இறங்கும் இடம். ஆத்ம சாதகர்கள் அவசியம் பார்த்து தவம் செய்ய வேண்டிய பூமி.

ஆண்டுக்கு ஒருமுறை, அருட்தந்தை ரிஷிகேஷில் ஏழு நாட்கள் பயிற்சி நடத்துவார்கள். அந்த வருடம், புலவரும் அருட்தந்தையுடன் சென்று காசி, அலகாபாத், ரிஷிகேஷ் போன்ற இடங்களைப் பார்க்க விருப்பப்பட்டார். ஆனால், சூழ்நிலையின் காரணமாக மகரிஷி மட்டும் முன்னதாக டெல்லி சென்று ஒரு அன்பர் வீட்டில் தங்கியிருக்கிறார்கள்.

ஒரு வாரம் கழித்து புலவரும் திரு. கண்ணன்மணி என்பவரும் டெல்லிக்குப் புகைவண்டியில் பயணிக்கிறார்கள். முதன் முறையாக தமிழகத்தை விட்டு நெடுந்தொலைவு பயணத்தை, அய்யா மிகவும் இரசித்தார்கள்.

ஆனால் தலைநகரான டெல்லியை நெருங்க நெருங்க இருவருக்கும் திடீரென்று அச்சம் வருகிறது. தங்களுக்கு டில்லி புதுசு. மகரிஷி அன்பர்களை அனுப்பி தங்களை அழைத்துவரச் சொல்வார்கள். அன்பர்களுக்கோ இவர்களைத் தெரியாது. இவர்களுக்கோ டில்லி அன்பர்களைத் தெரியாது. குழப்பத்துடன் டில்லி புகைவண்டி நிலையத்தை அடைகின்றனர்.

ஆனால், அங்கு இவர்களை வரவேற்க அருட்தந்தை, தனது அன்பர்களுடன் காத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து இருவருக்கும் வியப்பு. மறுபக்கம் மகிழ்ச்சி. இதை தன் வாழ்நாள் முழுவதும் அன்பர்களிடம் சொல்லி மகிழ்வது அய்யாவின் வழக்கம்.

தாய் குரங்கை பிடித்துக் கொள்வது போல், முதலில் குருவைப் பிடித்துக் கொண்டார். பின்பு குட்டியை, தாய் பூனை தூக்கிச் செல்வது போல் தன் சீடரை தூக்கிச் சென்றார்கள் அருட்தந்தை.

ரிஷிகேஷில் இமயமலையின் பிரமிப்பையும், கங்கையின் பிரவாகத்தையும், மகரிஷியின் உபதேசங்களையும், ஆனந்தமாக பார்த்து, கேட்டு, மகிழ்ந்த புலவர், பின்பு சென்னை திரும்பினார்கள்.

**'நாடும் நகரமும் நல்திருக்கோயிலும்**
**தேடித் திரிந்து சிவபெருமான் என்று**
**பாடுமின் பாடிப்பணிமின் பணிந்தபின்**
**கூடியநெஞ்சத்துக் கோயிலராக் கொள்வனே'**

என்று திருமந்திரப் பாடலுக்கேற்ப புலவரின் ரிஷிகேஷ் பயணம் அமைந்திருந்தது குருவின் திருவருளேயாகும்.

❋

# 28. பத்திரகிரியாரும் பட்டினத்தாரும்

**'தன் மயமாய்த் தான் அதுவாய் தவறிடாது இயங்கும் உன் தன்மையினை எண்ண எண்ணத் தவமது ஆனந்தமே'.**

**– வேதாத்ரி மகரிஷி**

பத்திரகிரியாரும் பட்டினத்தாரும் போல வேதாத்திரி மகரிஷியும் புலவர் அய்யாவும் சென்னை, தியாகராயநகர் திருமலைப்பிள்ளை ரோடில் உள்ள வால்மீகி தெருவில் அதாவது காமராஜர் நினைவு இல்லத்திற்கு அருகில் வசித்து வந்தனர்.

இங்கு, புதன் வெள்ளி ஞாயிற்றுக் கிழமைகளில் அருட்தந்தை உபதேசம் செய்வார்கள். உள்ளூரிலிருந்தும், வெளியூரிலிருந்தும் ஏன் வெளிநாட்டிலிருந்தும் அன்பர்கள் வந்து தீட்சை பெற்றுச் சென்றனர். புலவர்தான் இங்கு பொறுப்பாசிரியர்.

இருவரும் தங்கியிருந்த இடத்திற்கு அருகிலேதான், வள்ளுவர் கோட்டம் அமைந்திருந்தது. அப்போதுதான் திறக்கப்பட்டதால் அங்கு அவ்வப்போது பேரறிஞர்களும், தமிழ் சான்றோர்களும் வந்து உரையாற்றிக் கொண்டிருந்தனர். மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று உரைகளைக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்தனர்.

'தியாகராஜா! வள்ளுவர் கோட்டத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்குச் சென்று வாயேன்' என்று அருட்தந்தை புலவரிடம் சொன்னார்கள்.

'வேண்டாம் சாமி, இங்கு இருப்பதிலேயே எனக்கு ஆனந்தமாக இருக்கிறது. இங்கேயே இருந்து என் கடமையைச் செய்வதில் மகிழ்ச்சியாக உள்ளது' என்று புலவர் சொன்னார்கள்.

இந்த நேரத்தில் ஒரு உண்மை நிகழ்ச்சி ஞாபகம் வருகிறது. ஏகநாதர் என்பவர் ஜனார்த்தன சுவாமி என்ற குருவிடம் வாசம் செய்தாராம். பல ஆண்டுகளாக ஏகநாதருக்கு ஆசிரமத்தில் சமையல் வேலை. ஆசிரம வரவு செலவு கணக்குகள் பார்த்தல், குரு பத்தினிக்குத் தேவையான சாமான்களை சேகரித்துக் கொடுத்தல், உடன் படிக்கின்ற மாணவர்களை கவனித்துக் கொள்ளுதல், குருவிற்குத் தேவையான எல்லாப் பணிகளையும் கைங்கர்யங்களையும் செய்து இப்படிப் பல ஆண்டுகள் அவர் செய்து வந்தார். படித்தவர்கள் எல்லாம் வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருந்தார்கள்.

ஒருநாள், ஆசிரமக் கணக்கில் பத்து பைசா குறைந்து விட்டது. அதற்காக இரவில் வெகுநேரம் விழித்து கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தார். குருநாதரும் ஏதோ விளக்கு எரிந்து கொண்டு இருக்கிறதே என்று கேட்டுக் கொண்டே வந்தார். இவர் அந்தக் கணக்கில் இருந்ததால், குருநாதர் வந்ததைக் கவனிக்கவில்லை.

ஏதோ ஆன்மீக விஷயமாக சிந்திக்கிறார் என்று குருவும் போய்விட்டார். கொஞ்ச நேரம் கழித்து 'கண்டுபிடித்து விட்டேன் கண்டுபிடித்து விட்டேன்' என்று ஏகநாதர் கூப்பாடு போட்டார். உடனே குருநாதர் ஓடிவந்து 'என்னப்பா? என்ன கண்டுபிடித்தாய்?' என்று கேட்டார். பத்து பைசாவைக் கண்டுபிடித்து விட்டேன்' என்று சொன்னார்.

குருநாதர் மிகவும் வருத்தப்பட்டார். 'நம்மிடம் இந்த சீடன் பல வருடங்களாக இருக்கிறான். அவனுக்கு ஒரு சாட்சாத்காரம் வரவில்லையே. இப்படி கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறானே' என்று மனதில் நினைத்துக் கொண்டு போய்விட்டார்.

மறுநாள் காலையில், ஏகநாதர் ஆற்றில் குளித்து விட்டு சமையலுக்காக குடத்தில் தண்ணீர் கொண்டு வந்து கொண்டிருக் கிறார். அப்போது, அரச மரத்தடியிலே தத்தாத்ரேயர் அவர்களின் தரிசனத்தை குருவின் அருளால் கண்டார். தத்தாத்ரேயருக்கு வணக்கம் செலுத்தினார். மறுபடியும் குடத்தை எடுத்துக் கொண்டு, ஆசிரமம் சென்று தண்ணீர் குடத்தை இறக்கிவைத்துவிட்டு, சமையல் காரியங்களைச் செய்யத் துவங்கினார்.

அப்போது குரு வந்து 'ஏகநாதா உனக்கு ஏதாவது சாட்சாத்காரம் கிடைத்தா? ஏதாவது தெய்வக் காட்சி கண்டாயா? ' என்று கேட்டார்.

அதற்கு ஏகநாதர் 'ஆமாம். குருவின் அருளால் தத்தாத்ரேயரை தரிசனம் பண்ணும் பாக்யம் கிடைத்தது' என்று சொன்னார்.

உடனே, குரு மிகவும் வருத்தப்பட்டார். 'வெகு சாதாரணமாகச் சுலபமாகக் கிடைத்ததால் அல்லவோ இந்த தெய்வீகக் காட்சி உனக்கு மிகவும் அருமையாகத் தெரியவில்லை. தெய்வீகக் காட்சி கிடைத்த பின்பு, உன்மத்தமாகப் பித்தனாக அல்லவோ ஆகிவிடுவார்கள். இவன் மறுபடியும் சென்று, அடுப்பு பற்ற வைக்கிறானே' என்று கூறினார்.

அதற்கு ஏகநாதர் சொன்னார் 'குருநாதா! என்னைப் பொறுத்தவரை நான் இவ்வாசிரமத்தில் 12 ஆண்டுகளாக இருக்கிறேன். என்றைக் காவது உம்மிடம் சாட்சாத்காரம் அல்லது தெய்வீக காட்சியைக் காட்டுங்கள் என்று நான் கேட்கவில்லையே. எனக்குத் தெய்வம் என்றோ குரு என்றோ வித்தியாசம் கிடையாது.

தெய்வம் என்றால் எனக்கு தாங்கள்தானே. அப்படியே தெய்வக் காட்சியை எனக்குக் காட்டினீர்கள். அத்தெய்வம் காட்சி கொடுத்தது. அப்புறம் போய்விட்டது. நான் கைங்கர்யம் செய்ய வேண்டும் என்று நினைத்தால் தங்கள் பாதங்களைப் பிடித்து விடலாம். உங்களுக்கு என்ன கைங்கர்யம் வேண்டுமானாலும் செய்யலாம். அந்தத் தெய்வத்திற்கு அப்படிச் செய்ய முடியாதே- அப்படி இருக்கும்போது எனக்கு கண்கண்ட தெய்வமாக இருப்பவர் குருநாதர் ஆகிய தாங்கள் அல்லவோ? இதைவிட்டு எனக்கு வேறு எந்த தெய்வக்காட்சி வேண்டும்?' என்று ஏகநாதர் தன் குருநாதரிடம் சொன்னவுடன் ஜனார்த்தன சுவாமிகள் அவருடைய குருபக்தியை நினைத்து கண்ணீர் வடித்தார்.

அதுபோன்றே, இன்று புலவரின் பதிலைக் கேட்டு அருட்தந்தை கண்ணீர் விட்டார்கள்.அப்படி ஒரு குருபக்தியும் குரு கைங்கர்யமும் புலவருக்குக் கிடைத்தது.

## 29. செய்நன்றி அறிதல்

இதயத்தின் ஞாபகமே நன்றி. நன்றி என்ற நற்குணம் எல்லாப் பண்புகளிலும் சிறந்த நற்குணமாகயிருப்பதோடு மட்டு மல்லாமல் அது மற்றவைகளுக்குப் பெற்றோராகவும் இருக்கிறது.

மனவளம் பெற்றவர்கள் தெளிந்த மனநிலை கொண்டிருப் பார்கள். ஆசை சினம், கவலை இல்லாத பண்பு உள்ளவராகக் காணப் படுவார்கள். நன்றியுணர்வு மிக்க பண்பு உள்ளம் கொண்டிப்பார்கள்.

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்நன்றி கொன்ற மகற்கு'**

என்ற குறளையும் நன்கு மனதால் உணர்ந்தவராக இருப்பர். ஒரு வேளை உணவு உண்ணும்போது அதனைப் படைத்தவர்களை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு பிடி உணவில் உலக ஒற்றுமை இருப்பதைக் காணலாம்.

'உழைப்பினால் பதில் உலகுக்கு ஈந்திடு' இவ்வாறு ஒரு பிடி உணவை வைத்துக் கொண்டு சிந்தித்தால் உலகத்தையே பார்க்கலாம். உலகசேவையைப் பார்த்து அதற்குப் பதில் செய்ய வேண்டும் என்ற கருத்து வருவதே நன்றியுணர்வு ஆகும் என்று வேதாத்திரி மகரிஷி விளக்குகின்றார்.

குருவின் மொழிக்கேற்பவே நன்றியுணர்வுடன் வாழ்ந்தவர் நமது புலவர். சமுதாயத்தினருக்கு மட்டுமின்றி தனக்கு காலத்தினால் உதவி செய்தவர்களையும் வாழ்நாள் முழுவதும் போற்றி வந்தார்.

**காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது'**

தனது பள்ளி இறுதித் தேர்வுக்கு உதவி செய்த சேலம் திரு ராஜகோபால் செட்டியார் அவர்கள், மிகப்பெரிய அளவில் ஜவுளி

வியாபாரத்தை ஒரிசா வரை செய்து வந்தார்கள். அவருக்கு ஒரே மகள். மிகச் சிறப்பாக திருமணம் செய்து வைத்தார்கள்.

இன்பம் துன்பம், ஏற்றம் இறக்கம், வெற்றி தோல்வி, செல்வம் வறுமை என்பது இயற்கைதானே?

இந்த இயற்கை விதியின்படி, செல்வந்தரான திரு.ராஜகோபால் செட்டியார் வியாபாரத்தில் நட்டமடைந்து வறுமையுற்றார்கள். அப்போது புலவர் தம் குருநாதருடன் இணைந்து தியாகராயநகரில் வசித்து வந்தார்கள். செட்டியாரின் வறுமையைக் கேள்வியுற்ற புலவரின் மனம் வாடியது.

தனது குருநாதர் வேதாத்திரி மகரிஷியை அழைத்துக் கொண்டு, சேலத்திலுள்ள திரு. ராஜகோபால் செட்டியார் வீட்டிற்குச் சென்றார்கள். தானும் குருவும் சேர்ந்து செட்டியார் வீட்டில் தன ஆகர்ஷண சங்கற்பம் செய்தார்கள்.

மகான்களின் வருகையால் திரு.ராஜகோபால் செட்டியாரின் வறுமை விரைவில் நீங்கிற்று. மறுபடியும் ஜவுளி வியாபாரம் சூடு பிடித்து செல்வந்தரானார். தன் வாழ்நாள் முழுவதும் தனக்கு உதவி செய்த புலவரின் நன்றிக்கடனை பலரிடமும் சொல்லி மகிழ்ச்சியடைந்தார்கள்.

தான் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை படிப்பதற்கு - வீட்டிலேயே இடமும், உணவும் கொடுத்து படிக்க வைத்தவர் திரு.கா.ப. கண்ணன் ஆவார்கள். இவர் ஆசிரியராகப் பணியாற்றிய போது, அங்குள்ள கூட்டுறவு கடன் சங்கத்தில் தலைவராக இருந்து பணியாற்றியபோது ஏற்பட்ட தவறுகளுக்காக தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார்.

சென்னையில் ஆசிரியராகப் பணியாற்றி வந்த புலவர், தனக்கு ஆதரவளித்த திரு.கா.பா. கண்ணனின் நிலைமையை கேள்வியுற்றார். அப்போதைய கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியனும் திரு.கா.பா. கண்ணன் அவர்களும் ஒன்றாகப் படித்தவர்கள். இதனைப் பயன்படுத்திக் கொண்டு கல்வி அமைச்சரை சந்தித்து திரு. கண்ணனின் தற்காலிக பணிநீக்கத்தை நீக்கி அவரை மீண்டும் பணியிலமர்த்த உதவி செய்தார்கள்.

திரு.கா.பா. கண்ணன் பணி ஓய்வு பெற்றபின்பும், அவருக்குத் தேவை ஏற்படும்போதெல்லாம் நிதிஉதவி செய்து வந்தார்கள். தாம் ஆழியாறில் தங்கியிருந்தபோது, அவரை அருட்தந்தையிடம்

அறிமுகப்படுத்தி, அவரது ஆசியைப் பெற்றுத் தந்தார்கள். அவர், ஆழியாறிலேயே தங்கி பயனடையவும் ஏற்பாடு செய்தார்கள். ஆனால் திரு. கண்ணனால் தொடர்ந்து அங்கிருக்க முடியவில்லை.

நன்றி செலுத்தப்பட வேண்டியது ஒரு கடமை. உரிமையுடன் யாரும் எதிர்பார்க்கக் கூடாது.

உதவி பெற்றவன் அந்த உதவியை என்றைக்கும் மறக்கக் கூடாது உதவி செய்தவன் தான் செய்த உதவியை என்றைக்கும் நினைத்துப் பார்க்கக் கூடாது.

தான், பேரூர் சாந்தலிங்கம் தமிழ்க்கல்லூரியில் படித்தபோது, மாதா மாதாம் பணம் அனுப்பிய பெரியமணலி செட்டியார் ஒருவருக்கு, அவர் அனுப்பிய பணத்துடன் அதற்குரிய வட்டியையும் சேர்த்து வழங்கி மகிழ்ந்தார்.

பொள்ளாச்சியில், ஐந்தாண்டுகள் அய்யா தொண்டு செய்தபோது அவருக்கு உணவு மற்றும் போக்குவரத்திற்கு வாகனங்கள் கொடுத்து உதவியவர் பொள்ளாச்சி பி.வி.டி.பஸ் சர்வீஸ் முதலாளி திரு.பாபு என்பவர். அவருக்கு குருவின் அருளாசி பெற்றுத்தர விரும்பினார்.

அருட்தந்தையிடம் அழைத்துச் சென்றார். கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளல் போல், இவர்தான் சாமி எனக்கு உணவு கொடுத்து ஆதரித்து வருகிறார். இவரது காரில்தான் இங்கு அழைத்து வந்தார். இவர் பெயர் பாபு என்று மகரிஷிக்கு அறிமுகப்படுத்தினார்.

அவரை ஆசிர்வதித்த சுவாமிஜி 'தியாகராஜா நீங்கள் எனக்கு எவ்வளவு நாள் உணவு கொடுத்து ஆதரித்திருக்கிறீர்கள். உங்களுக்கு எல்லோருமே உதவுவார்கள். ஆதரிப்பார்கள், உங்களது உதவிகளுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன் நன்றி' என்றார்.

உடனே அய்யா 'சாமி அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். என்னை அணுக்கத் தொண்டனாகத் தாங்கள் அனுமதித்தற்கு நான்தான் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்' என்று மாற்றி மாற்றி ஒருவருக்கொருவர் கும்பிடு போட்டு, நன்றியைப் பரிமாறிக் கொண்டனர். அருகிலிருந்தவர்களுக்கு அது நெஞ்சை உருக்கும் ஒரு காட்சியாக அமைந்தது.

❋

# 30. ஞானத்தை மலர வைப்பததே குருவின் வேலை

***'மனிதனுடைய எண்ணம் என்பது என்ன? அது பிரம்மத்தினுடைய சாயைதானே? பிரம்மத்தினுடைய இயக்கம்தானே எண்ணமாக அறிவாக இருக்கிறது? உணர்ந்த நிலையில் அறிவாகவும் மயக்க நிலையில் மனமாகவும் அதுவே குறிப்பிடப்படுகிறது. அது தானாக அமர்ந்த நிலையில் பிரம்மமாக உள்ளது. பக்குவப்பட்டவன் நினைத்தால் குரு வரவேண்டியதுதானே.***

**– வேதாத்திரி மகரிஷி**

உயர்ந்தவர்களுடைய பண்பு பிறர் தவறுகளைப் பொறுத்த லாகும். அதைவிடச் சிறப்பு அவர் தவறே செய்யாதது போல் மறந்து நடத்தல். அதையும் விட மேலாக, அத்தவறுக்கு ஒரு சரியான மரியாதை அளித்துப் பாராட்டுதலாகும்.

அருள் தந்தையுடன் புலவர் தியாகராஜன் நிழல்போல் இருந்து சேவை செய்து வந்தார்கள். ஒரு நாள் தனது எம்.ஏ. தேர்வுக்குரிய ஹால் டிக்கெட் வாங்கக் கிளம்பினார் புலவர். மகரிஷி வெளியே சென்ற பின்பு, இவர் அறையைப் பூட்டி விட்டு கிளம்பினார்.

ஹால் டிக்கெட் வாங்கும்போது பையில் கையை விட்டுத் துழாவிய புலவருக்கு ஒரே அதிர்ச்சி. அறையை பூட்டி வந்த சாவி காணாமல் போய்விட்டது. தேடினார், தேடினார். கிடைக்கவில்லை. அதிலும், அந்தப் பூட்டுக்கு ஒரே சாவி. நேரம் கடந்தது. மகரிஷி வந்துவிடுவார்களே என்று அவசர அவசரமாகப் புறப்பட்டார்.

புலவர் நினைத்தது போலவே மகரிஷி வீட்டிற்கு வெளியே காத்துக் கொண்டிருந்தார். புலவர் துடித்துப் போனார்.

'சாமி வீட்டின் சாவி தொலைந்து போய்விட்டது!.' என்றார் கவலை தோய்ந்த முகத்துடன்.

'தியாகராஜா! - நாம் இரண்டு சாவியுள்ள ஒரு புது பூட்டை வாங்கிக் கொள்வோம்' என்றார் அமைதியாக. குருவின் அன்பிலும் ஆதரவிலும் திகைத்துப் போனார் புலவர்.

இது போன்ற சின்னச் சின்ன நிகழ்வுகள் எல்லாம் அய்யாவை குருவின் முதன்மைச் சீடராக்கும் தகுதியை வளர்த்துக் கொண்டு இருந்தது.

ஒரு சமயம், மகரிஷிக்கு தேநீர் போட்டு தருகிறார். மகரிஷி அவர்கள் தேநீரை அருந்தியபின்பு தேநீர் கோப்பையைப் புலவரிடம் தருகிறார். அதைப் பெறும்போது தவறுதலாகக் கீழே விழுந்து உடைந்துவிடுகிறது.

'தியாகராஜா! தேநீர் கோப்பை மிகவும் பழசாயிடுச்சு. புதிதாக ஒன்று வாங்குவோம், என்றாராம் மகரிஷி திகைத்து நின்றார் புலவர்.

சீடனைப் பண்படுத்துவதும், அவனுக்கு ஞானத்தை மலர வைப்பதும், குருவின் வேலைதானே?

# 31. செங்கற்பட்டில் புலவர்

**'புரிந்துவிட்ட மனிதனுக்கு வளர - வாழ - பேருலகம் எங்கெங்கும் சொந்தமாகும்.'**

**– வேதாத்திரி மகரிஷி**

பிறப்பு - இறப்பு, இன்பம் - துன்பம், உறவு - பிரிவு, லாபம் - நட்டம், பாராட்டு - தூற்றல், ஏற்றங்கள் - இறக்கங்கள், தோல்வி - வெற்றி என்று எல்லாம் மாறி மாறி வருவதுதான் வாழ்க்கை.

இந்த நியதி, புலவர் அய்யா வாழ்க்கையிலும் நடந்தது. அருட் தந்தையுடன் அணுக்கத் தொண்டராக பத்தாண்டு காலம் வீற்றிருந்தவர்.

புலவர் அய்யா அப்போது பணியிலிருந்தும் ஓய்வு பெற்று விட்டார். அருட்தந்தையும் ஆழியாறில் தங்கிவிட்டார்கள். எனவே, சென்னை தலைமை மன்றமான திருவான்மியூரில், புலவர் பொறுப்பாசிரியராக முழுநேர சேவை செய்து வந்தார்கள்.

நாள்தோறும் அன்பர்களுக்கு தீட்சை அளிப்பது, சிந்தனை விருந்து அளிப்பது போன்ற பொறுப்பாசிரியர் பணியுடன், பேராசிரியர் பணிகளையும் சேர்த்து செவ்வனே செய்து வந்தார்கள்.

அய்யா அவர்கள், நித்ய பிரம்மச்சாரி, இளவயதிலேயே மகரிஷியின் தொடர்பு கிட்டியிருந்தால் எல்லாப் பயிற்சிகளையும் முறையாகச் செய்து மாபெரும் சித்தர் நிலையை அடைந்திருப்பார்கள்.

ஆனால், மகரிஷியோ காயகல்பப் பயிற்சியையே தனது 60 வயதிற்கு மேல்தான் ஆராய்ச்சி முடித்து பொதுமைப்படுத்தினார்கள். 1970 ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் காயகல்பப் பயிற்சி அனைவருக்கும் வழங்கப்பட்டது.

அருட்தந்தை கூறுவது போல வித்துக் குழம்பானது வித்துப் பையில் சில நாட்களுக்குமேல் தேங்கியிருக்குமானால், கழிவுப் பொருளில் கிருமிகள் உற்பத்தியாகி சில வியாதிகள் ஏற்படுவதற்குக் காரணமாகிறது.

அதன் காரணமாக, அய்யாவின் ரத்தம் கெட்டுப்போய் தோல் வியாதி ஏற்பட்டது. அஷ்டகர்ம வியாதிகள் பாரம்பரியமாக வரக் கூடியவை. மருத்துவத்தாலும் தீர்க்க முடியாது. அனுபவித்துத்தான் தீர்க்க முடியும் என்பார் அருட்தந்தை.

தோல் வியாதியால் பலகாலம் சிரமப்பட்டாலும் வெளியில் காட்டிக் கொள்ளமாட்டார் புலவர். உடல் நோயைவிட அன்பர் பணி செய்வதை மகிழ்ச்சியாக செய்து கொண்டிருந்தார்கள்.

ஆனால், புதிதாக நிர்வாகத்திற்கு வந்தவர்கள் திருவான்மியூர் தலைமை மன்றத்திலிருந்து அய்யாவை வெளியே செல்லும்படி சொல்லி விட்டார்கள். என்ன செய்வார் பாவம்? தனிமையாக இருப்பதாக உணர்ந்தார். தனது குருவின் தொண்டிலிருந்து விலகி தூரப் போகச் சொல்கிறார்களே. செய்வதறியாது திகைத்தார்.

தலைமை மன்றத்தை விட்டு வெளியேறினார். உடல் மட்டும் வெளியேறியது. உள்ளமோ அங்கேயே இருந்தது.

கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்புதானே? கோட்டூர் புரத்தில் இருந்த துறவி தேங்காய் பழ சாமியாரிடம் சில காலம் தங்கி இருந்தார்கள். ஆனால் மனதெல்லாம் மனவளக்கலை போதிப்பதில் இருந்தது. மனம் தளரவில்லை.

இந்த நேரத்தில் அய்யாவை ஆதரித்தது, அருட்தந்தை பிறந்த மாவட்டத்தில் உள்ள செங்கற்பட்டாகும். முன்பு காஞ்சிபுர மாவட்டத்தின் தலைநகராக இருந்தது.

இம்மாவட்டத்தின் பெரும் பகுதியில், தாமரை அல்லி போன்று நீர்வாழ் செடியாகிய செங்கழுநீர்ப் பூக்கள் கழனிகளில் மிகுந்து காணப்பட்டதால் - இவ்வூர் செங்கழுநீர்ப்பட்டு என்ற பெயரை முதலில் பெற்றுப் பின்னர் செங்கல்பட்டாகியுள்ளது.

அருள் நிதி தினகரன், அய்யாவை அழைத்துக் கொண்டு செங்கற்பட்டு வந்து சுற்றிலும் உள்ள மனவளக்கலை மன்றங்களில் வகுப்புகள் எடுக்க ஏற்பாடு செய்தார்.

அருள் நிதி தினகரன் 22 வயது இளைஞர். அருட்தந்தையின் மீதும் அவரது பயிற்சியின் மீதும் அளவில்லா ஆர்வம் கொண்டவர். மத்திய அரசு நடத்திய செங்கற்பட்டு தரமணி தொழுநோய் மருத்துவமனையில் உதவியாளராகப் பணிபுரிந்தார்.

தமிழகமெங்கும் உள்ள மனவளக்கலை பேராசிரியர்களை மறைமலைநகர் மன்றத்திற்கு அழைத்து வந்து - குருவின் தொண்டில் ஈடுபட்டு வந்தார். குருவின் மீதுள்ள பற்றினால் - தனது மத்திய அரசுப் பணியையும் ராஜினாமா செய்து விட்டு - ஆழியார் சென்று முழுநேரத் தொண்டில் தன்னை இணைத்துக் கொண்டவர். இன்றும் பிரம்மச்சாரியாகவே ஆழியாறில் வாழ்ந்து வருகிறார்.

செங்கற்பட்டு என்.ஜி.ஓ. நகரில் உள்ள அறிவுத்திருக்கோயிலின் அறக்கட்டளை நிர்வாகியான அருள்நிதி சடகோபன் தம்பதியினரிடம் புலவரை அருள்நிதி தினகரன் அறிமுகப்படுத்தினார்.

அருள்நிதி சடகோபன் அரசுப்பணியில் சார் பதிவாளராகப் பணிபுரிந்து வந்தார். அமைதியானவர், அன்பானவர், தொண்டுள்ளம் கொண்டவர். அவரது துணைவியார் அவரைப் போன்றே நல்லியல்புகள் கொண்டவர்.

பக்தியில் சிறந்த அவ்வம்மையார் மகான்களையும் சாதுக்களையும் ஆதரிப்பதில் மிகச் சிறந்தவர். தெருவில் காவி உடை அணிந்து செல்பவர்களைப் பார்த்தால் போதும். உடனே அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும் அன்புள்ளம் கொண்டவர் அவர்களுக்கு லாவண்யா - ரம்யா - பிரேம்குமார் என்று மூன்று குழந்தைகள்.

தன்னிடம் வந்த புலவரை அருட்தந்தையினைப் போல் மதித்து - தங்கள் வீட்டில் தங்க வைத்து - பணிவிடை செய்து வந்தார்கள். அய்யாவின் மீது இக்குடும்பம் அளவு கடந்த பக்தி வைத்திருந்தது. அய்யாவும் திருமதி கீதாவை 'தியாகத்தின் மறுஉருவம்' என்று பாராட்டுவார்கள்.

திரு.சடகோபன் அலுவலகம் சென்ற பின்பு அவர்கள் வீட்டில் குட்டி சத்சங்கம் நடைபெறும். திருமதி கீதா சடகோபன் 'யோகசித்தி'யை வாசிக்க புலவர் பொருள் கூறுவார்.

மற்ற நேரங்களில் செங்கற்பட்டு, மறைமலைநகர் - கூடுவாஞ்சேரி முதலிய பகுதிகளில் உள்ள தவமையங்களில் உபதேசம் செய்து வந்தார்கள்.

தற்சமயம் அருள்நிதி கீதா அம்மையார் இறைநிலை அடைந்து விட்டார்கள். குழந்தைகள் அமெரிக்காவிலும் லண்டனிலும் வசித்து வருகிறார்கள்.

'அய்யாவின் அருளாலும் ஆசியாலும், எனக்கும் எனது குழந்தைகளுக்கும் பெருவாழ்வு அமைந்தது' என்று இன்றும் அருள்நிதி சடகோபன் சொல்வார்கள்.

திரு.சடகோபன் பணிநிமித்தம் மாறுதல் பெற்று - சென்னை புறப்பட்டார். அப்போது அய்யாவை எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்து தங்க வைத்தார்கள்.

'மிகப் பெரிய பொக்கிஷத்தை தங்களிடம் ஒப்படைக்கிறேன். மகரிஷியின் அருகில் இப்போது நாம் இருக்க முடியுமா? ஆனால் அவரது நிழலான இம் மகானுடன் இருந்ததற்கு - பிற்காலத்தில் மிகவும் மகிழ்ச்சி அடைவீர்கள்' என்று எங்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள்.

இதைக் கேட்டுக்கொண்டு மாடிப்படி ஏறிக்கொண்டிருந்த அய்யா - இறங்கி வந்து 'மகான்களுக்குத்தானே மகான்களைத் தெரியும்' என்று சொன்னது இன்று சொன்னது போல் மனதில் நிழலாடுகிறது.

அன்றிலிருந்து இன்றுவரை அய்யாவை நானும் எனது குடும்பத்தினரும் சிக்கெனப் பிடித்துக் கொண்டோம்.

எங்கள் இல்லத்தில் மாடியில் அமைந்திருந்த தவமையத்தில் அய்யா தங்கி தமது தொண்டினைத் தொடர்ந்தார்கள். இரவெல்லாம் தனது உடம்பில் உள்ள தோல் வியாதிக்கு மருந்து தடவி ஓய்வில் இருப்பார்கள்.

அதிகாலை ஞானக்களஞ்சியப் பாடல்களை இராகத்துடன் பாடிக்கொண்டிருப்பார்கள். காலையிலும் மாலையிலும் தவமையத்தில் சத்சங்கம் நடைபெறும்.

அய்யா அவர்கள் 'தனது நோய் நீங்கி பூரண குணம் பெற்று மீண்டும் குருவிடம் செல்ல வேண்டும்' என்று அடிக்கடி சங்கற்பம் செய்து கொண்டே இருந்தார்கள்.

குருவின் அருளால் சில மாதங்களிலேயே அவரது நோய் முழுவதும் நீங்கிற்று. பின்னர் ஆழியாறு சென்று தங்கினார்கள். அங்கிருந்து தனது தொண்டினைத் தொடர்ந்தார்கள்.

பின்னர் ஆண்டுக்கொரு முறை செங்கற்பட்டு வந்து எங்கள் இல்லத்தில் சில நாட்கள் தங்குவார்கள். இங்கிருந்து மறைமலைநகர் - சைதாப்பேட்டை - மயிலாப்பூர் - கூடுவாஞ்சேரி - சென்னை ஆகிய இடங்களில் உள்ள மன்றங்களில் அருட்தொண்டாற்றிவிட்டு, ஆழியார் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

கடைசியாக, மகரிஷியின் நூற்றாண்டு விழாவின்போது இங்கு வந்து சில நாட்கள் தங்கினார்கள். இங்கிருந்து சென்னை விழாவிற்கு சென்று வந்தார்கள். இதுதான் அய்யாவின் செங்கற்பட்டின் கடைசிப் பயணமாக அமைந்தது.

எங்களது பூர்வ ஜென்ம புண்ணியத்தினால்தான், அய்யாவின் நட்பும் ஆசியும் கிடைத்தது. எங்கள் இல்லத்தில் அய்யா தங்கிய போது - ஒரு பெரிய காந்தக்களத்தினை அமைத்துச் செல்வார்.

இந்த காந்தக்களத்தில் வசித்து வரும் நானும், எங்கள் குடும்பத்தினரும் அவரது அருளால் - வாழ்க்கையில் உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம் மெய்ஞ்ஞானம் பெற்று உயர்ந்த நிலையில் வாழ்ந்து வருகிறோம்.

❋

# 32. காசா லேசா

ஒரு ஊரில் ஒரு செட்டியார் வாழ்ந்து வந்தார். அவர் காசின் மீது அளவற்ற பற்றுக் கொண்டிருந்தார். தான் ஒரு சொம்பில் சேமித்து வைத்திருந்த பொற்காசுகளை நாள்தோறும் எண்ணி மகிழ்வார்.

காசின் மேல் பற்றுக் கொண்டிருந்த செட்டியார் நாள்தோறும் இரவில் ஊர் மக்கள் எல்லோரும் உறங்கிய பின்பு காசுகளை எண்ணுவார். காசை ஒவ்வொன்றாக எண்ணும்போது காசா லேசா என்று வகையில் ஒன்று ஒன்றாக இரண்டு தடவை எண்ணிப் பார்த்து மகிழ்வது அவரது வழக்கம்.

அப்போது பக்கத்து ஊரில் கூத்து நடந்து கொண்டிருந்தது. ஊர்மக்கள் கூத்துப் பார்க்க போன சமயம், சன்னல் கதவுகள் அனைத்தையும் சாத்திவிட்டு சத்தம் கேட்காமல் ஒரு முறை காசினை எண்ணிப் பார்த்து சொம்பை பத்திரப்படுத்தினார்.

கூத்து முடிந்து ஊர் மக்கள் வந்து விட்டனர். ஊர் மக்கள் உறங்கும் வரை சிறிது நேரம் காத்திருந்தார் செட்டியார். மக்கள் உறங்கிய பின்பு சொம்பை எடுத்த செட்டியாருக்கு அதிர்ச்சி. சொம்பு காலியாக இருந்தது.

சொம்பை எடுத்ததும் காசா.....லேசா என்று மனம் வழக்கம் போல் எண்ணியது. காசா......லேசா.......காசா.......லேசா...... என்று முணுமுணுத்துக் கொண்டே உயிர் துறந்தார்.

செட்டியாரை - நெடு நாளாக ஒரு திருடன் கவனித்து வந்தான்.. எப்படியோ மோப்பம் பிடித்து விட்டான். செட்டியார் அசந்தபோது காசினை களவாடி விட்டான்.

இந்தக் கதையைத் - தனது சொற்பொழிவில் அய்யா அடிக்கடி சொல்லுவார்கள். மக்கள் அருள் துறையில்தான் செல்ல வேண்டும். அப்படிச் செல்லும்போது தனக்கு வேண்டிய பொருள்கள் தானே வரும்.

ஆனால் மாறுபட்டு பொருள் துறையிலேயே கவனம் செலுத்தி வந்தால் அருளும் வராது, பொருளும் வராது. பின்பு காசா...லேசா. என்று செட்டியார் முடிவுதான் வரும் என்ற பணத்தாசை பற்றி இக்கதையை அழகாக வர்ணிப்பார்கள்.

இந்தக் கதையைப் பற்றி ஒரு சமயம் அய்யாவிடம் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அய்யா 'இது உண்மைக் கதை எங்கள் ஊரில் வாழ்ந்த பணத்தாசை பிடித்த ஒரு செட்டியாரின் கதை' என்றார்.

அய்யா தனது உபதேசங்களில் - தான் பார்த்த - கேட்ட - அனுபவித்த நிகழ்ச்சிகளை எல்லாம் கதையாகவும் நிகழ்ச்சிகளாகவும் சொல்லி அன்பர்கள் நல்வழியில் பயணிக்க தொண்டாற்றி வந்தார்கள்.

## 33. கணத்திலே எல்லாம் காட்டும்

ஒரு சமயம், செங்கற்பட்டு தவமையத்தில் பௌர்ணமி தவத்தை புலவர் நடத்திக் கொண்டிருந்தார்கள். அருகிலே நாமும் அமர்ந்து தவம் செய்தோம்.

பல ஆண்டுகள் தவம் செய்திருந்தாலும், எமக்கு ஒரு புதிய அனுபவம் ஏற்பட்டது. தவத்தில் பறப்பது போன்ற நிலைமை. துரியாதீதத்தில் நிலை பெற்றது உணர்வு, பேரின்பம். கூடவே அச்சமும் கவ்விக் கொண்டது. காரணமற்ற அச்சம்.

தவம் முடிந்ததும் இதுவரை கிடைக்காத என் உணர்வை புலவரிடம் விளக்கினேன்.

அய்யா! நொடிப்பொழுதில் கிடைத்த அனுபவம் இதுவரை கிடைக்கவில்லையே? இனியும் கிடைக்குமா? '' என்றேன்.

'சாமி! தி.நகர் வால்மீகி தெருவில் உலகெங்கிருந்தும் வந்து பலரும் - மகரிஷியிடம் குண்டலினி தீட்சை பெற்றனர். ஒருநாள் அன்பர்களுக்கு தீட்சை வழ்கிய பின்பு அமைதியாக அமர்ந்திருந்தார் அருள் தந்தை.

டோனி என்ற அமெரிக்க அன்பர் மட்டும் - மகரிஷியின் அறையில் சிந்தனையுடன் நடந்து கொண்டே இருந்தார். அருகில் நானும் அமர்ந்திருந்தேன்.

'சுவாமிஜி குண்டலினி யோகத்தைக் கற்க எவ்வளவு காலமாகும்?'' என்று சுவாமிஜியிடம் வினவினார் டோனி.

'நொடிப்பொழுதில் அதனுடைய முழுமையை அடையலாம்' என்ற மகரிஷி - கையில் சொடுக்குப் போட்டுக் காண்பித்தார்.

சொடுக்குப் போடும் நேரத்தில், குண்டலினிக் கலையைக் கற்கலாம் என்பதைக் கேட்ட அமெரிக்க அன்பருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

அதுபோலவே, நொடிப்பொழுதில் குண்டலினி அனுபவத்தை தாங்கள் பெற்றிருக்கிறீர்கள். பழகப் பழக உங்கள் முயற்சிக்கு பலன் கிடைக்கும் பயப்படவேண்டாம்' என்றார்.

**'சாத்திரம் ஓதும் சதிரிடை விட்டு**
**மத்திரைப் போதும் மறித்து உள்ளே நோக்குமின்**
**பார்த்த பார்வை பசுமரத்தாணி போல**
**மாத்திரைக்குள் அருள் பேறு'**

என்று திருமூலர் சொன்னதையும்

**கணத்திலே எல்லாம் காட்டும்**
**நின் அருளை கண்டனன்**
**இனி சொல்வ தென்ன?''**

என்று வள்ளலார் கூறியதையும்

**'சாத்திரம் பல பேசிடும் கலகர்காள்**
**கோத்திரம் குலமும் கண்டு என் செய்வீர்**
**பாத்திரம் சிவமென்றே பணிந்திரேல்**
**மாத்திரைக்குள் அருளும் மாத்திரே''**

என்ற அப்பர் வாக்கினையும் - மகரிஷி சொடுக்கில் சொன்னதையும் சொல்லி - என்னைச் சொக்க வைத்தார் புலவர்.

# 34. ஆழியாறில் அடைக்கலம்

பன்னிரு ஆழ்வார்களில், குலசேகர ஆழ்வார் திருமலை பெருமாள் மீது அளவு கடந்த அன்பு கொண்டிருந்தார்.

'திருவரங்கத்தில் கோயில் கொண்டுள்ள கரும்பனைய ரங்கநாதனைக் கண்டு மகிழாமலும், அவருக்குத் தொண்டு செய்யாமலும், நீள சுவரென வாழ்ந்து வீண்பொழுது கழித்து விட்டேன்' என்பார் குலசேகர ஆழ்வார்.

ஆழ்வாருக்கு, நாளாக நாளாகத் திருவரங்கப் பெருமான் மீதுள்ள பக்தி அளவு கடந்ததாயிற்று.

'நான் மிகுந்த செல்வமுள்ள குடியிலே மனிதனாகப் பிறந்து வேறு இடத்தில் வாழ்ந்து இன்பம் அடைவதை விரும்பவில்லை. அதைவிடத் தாழ்வான இழிவான பிறவியென்று கருதப்படும் நாரையாகப் பிறந்து உனது திருவேங்கடமலையில் உள்ள கோனேரித் தீர்த்தத்திலே வாழும் நாரைகளுள் கலந்து வாழ்ந்து, எப்பொழுதும் உன்னையும் உனது திருவேங்கட மலையையும் விட்டு நீங்காமல் இருப்பதையே விரும்புகிறேன்' என்பார்.

நான் தேவலோகத்திலே அரசனாக இந்திரனாக வாழ்ந்து அனுபவிக்கும் இந்திர போகத்தையும் விரும்பவில்லை. இவ்வுலகம் முழுவதையும் கண்டு இன்பமடையும் அரசு போகத்தையும் விரும்பவில்லை.

இத்தகைய இன்பங்களையெல்லாம் விட, கோனேரி தீர்த்தத்திலோ அல்லது திருவேங்கடமலையிலே உள்ள வேறு நீர்ச்சுனையிலோ, ஒரு மீனாகப் பிறந்து திருவேங்கடமலையை விட்டுப் பிரியாமல் வாழ்வதையே விரும்புகிறேன்' என்பார்.

ஆழ்வாரைப் போலவே குரு வசித்த ஆழியாறிலேயே தங்கி, தொண்டு புரிய விருப்பப்பட்டவர் புலவர். சீடனின் எண்ணம்

அறிந்த குரு அவரை ஆழியார் அழைத்துக் கொண்டார். ஊர்தோறும் குருவின் உபதேசங்களைக் கூறி வந்த பேராசிரியர் புலவர் 1994 ஆம் ஆண்டிலிருந்து ஆழியாறிலேயே அமர்ந்து சேவை செய்தார்கள்.

பின்பு, குருவின் கட்டளைப்படி ஐந்து ஆண்டுகள் பொள்ளாச்சியில் சேவை செய்தார்கள். இறுதியாக குருவின் மறைவுக்குப் பின்னர், 2006 ஆம் ஆண்டிலிருந்து தமது இறுதிகாலம் வரை ஆழியாறிலேயே வசித்தார்கள்.

ஆழியாறில் இருந்தபோது மணிமண்டபத்தில் ஐந்து வேளையும் தவம் நடத்துவார்கள். பயிற்சி பெறும் அன்பர்களுக்கு வகுப்பு எடுப்பார்கள். பயிற்சி முடித்தவர்களுக்கு மகரிஷியின் இடத்திலிருந்து சான்றிதழ்கள் வழங்கி மகிழ்வார்கள்.

சுவாமிஜியைப் போல் தோற்றமுள்ள அய்யாவை பழைய அன்பர்களும் புதிய அன்பர்களும் தரிசித்து மகிழ்ந்தார்கள். மகரிஷியைப் பார்க்காதவர்களுக்கு இவரது காட்சி தெய்வீகமாக இருந்தது. மகரிஷியைப் பார்த்தவர்களுக்கு மீண்டும் அருள்தந்தையைப் பார்ப்பது போன்ற உணர்வு.

முக்தி அடைவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் கூட, பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கி இன்பமுற்றார்கள்.

❋

# 35. சேவைக்காகவே வாழ்ந்தவர்

**'தனிமனிதன் சொத்துரிமையின் கீழ் வாழும் மக்கள் தங்கள் பொருள் - வருவாய் அல்லது அறிவு உடல் ஆற்றல்கள் இவற்றில் நூறில் ஒரு பங்காகிலும் சமுதாய நலனுக்கென ஒதுக்கி பயன்படுத்துவது, சமுதாயத்தைச் சிறப்பிக்கச் செய்யும் நற்றொண்டு ஆகும்.**

**– வேதாத்திரி மகரிஷி**

தொண்டு என்றால் மற்றவர்கள் துன்பம் அடையும்போது அல்லது மற்றவர்களுக்கு உதவி தேவைப்படும்போது அத்துன்பத்தை நீக்கத் தங்களால் இயன்ற உதவி செய்வது.

அந்தப் பண்புதான் சேவை மனப்பான்மையைக் குறிக்கும். தன்னலம் கருதாது பிறருக்கு உழைக்கும் பண்பினைப் போற்றிப் பெருக்குதல் - நல்ல சமுதாயத்தை உருவாக்கும். பிறருக்கு உதவும் செயலை - பயன் கருதாது செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் போது சிலர் குறை கூறவும் கூடும்.

அதையும் மதித்துக் குறைதீர்க்க முயல வேண்டும். நாம் சேவை செய்யத்தானே வந்துள்ளோம்? தொண்டுக்குத் தியாகமே உரைகல்.

தொண்டு செய்யும் பொழுது, பாராட்டை எதிர்பார்ப்பது வேலைக்கு இழுக்காகும். பாராட்டையோ, பணத்தையோ எதிர் பார்த்து செய்தால் அதை தொண்டு என கூற முடியாது. பிறருடைய தொண்டில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

பிறந்தது முதல் சுமார் 20 வயது வரை இன்னொருவரது உழைப்பே உணவாகிறது. நாம் எல்லோரும் ஏதோ ஒரு பள்ளியிலோ கல்லூரியிலோ படித்திருக்கலாம்.

இந்த நிறுவனங்கள் எல்லாமே சமுதாயத்திலுள்ள பல நல்ல மனிதர்கள் உதவியாலும் மற்றும் பொதுமக்கள் தரும் வரிப் பணத்தாலும் செயல்படுகின்றன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நாம் அன்றாடம் உபயோகப்படுத்துகின்ற அத்தனை சாலைகளும் பொதுமக்களின் வரிப்பணத்தால் அமைக்கப்பட்டவையே. நம் நீண்ட தூரப் பயணத்திற்கு இரயில் மற்றும் விமானங்கள் உதவு கின்றன. இதையெல்லாம் தனி மனிதன் மட்டுமே செய்து விட முடியுமா? எனவே சமுதாயத்தில் உள்ள பலரின் உழைப்பால் நாம் வாழ்வதால் சமுதாயத்திற்கு நமது உழைப்பைத் தருவதே நமது தலையாய கடமை.

இதையே **'என் கடன் பணி செய்து கிடப்பதே'** என்ற **அப்பர்** வாக்கும் 'உழைக்க மனமில்லாதவன் உண்ணலாகாது' என்ற பைபிளின் வாக்கும் கூறுகிறது.

பொருள் வளம் மிகுந்து உடலுழைப்பு தர முடியாதவர்கள், தங்களுடைய பொருள் வளத்தில் ஒரு பகுதியையும் அறிவாற்றலையும் சமுதாய மேம்பாடு கருதி தொண்டாற்றலாம்.

அறிவாற்றல் மிகுந்த ஞானியர், தங்களை முழுமையாகச் சமுதாயத்திற்கே அர்ப்பணித்துக் கொண்டு, சமுதாயத்தை நல்வழி நடத்துவதையே தொண்டாகக் கொள்வார்கள்.

இந்த வகையில் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இச் சமுதாயத்திற்கே அர்ப்பணித்தவர் அய்யா அவர்களாவார்கள்.

மக்களின் ஆன்மீகப் பசியைத் தீர்க்கும் வள்ளலாகவும், அவர் களை அருள் வழியில் கொண்டு சென்ற அருளாளராகவும் வாழ்ந்தவர் நமது புலவராவார்.

ஆசிரியப் பணி மூலம் நல் மாணாக்கர்களை உருவாக்கினார்கள். குருவிடம் கற்ற உபதேசங்களை எல்லாம், தமிழகம் முழுவதும் சென்று பரப்பினார்கள். குருவிற்குப் பிறகு அவரது இடத்திலேயே இருந்து ஆழியாறில் அருட்தொண்டாற்றினார்கள்.

எளிமை, தூய்மை, சுயநலமற்ற தொண்டு, கடின உழைப்பு, இவற்றின் மொத்த வடிவமாக புலவர் அறநெறி வழுவாது வாழ்ந் திருந்தார் என்பதை அனைவரும் அறிவோம்.

இறையருளையும் குருவருளையும் மட்டுமே மூலதனமாகக் கொண்டு உழைத்தவரும் சீரிய பண்புகள் அனைத்தையும் ஒருங்கே பெற்றவரும் அருட்தந்தையின் முதன்மைச் சீடராகத் திகழ்ந்தவருமான புலவர் தியாகராஜன் அவர்களின் தன்னிகரற்ற தொண்டுதானே!

**எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறு ஒன்று அறியேன் பராபரமே'**

என்னும் தாயுமானவர் உள்ளம் புலவரின் இரத்தத்திலேயே கலந்திருப்பதைக் காணலாம்.

**அன்பர்பணி செய்ய எனை ஆள் ஆக்கி விட்டுவிட்டால்**
**இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே'**

என்ற அருட்தந்தையின் வழி நின்று தன் உடலால், செயலால், மனதால், பொருளால், தொண்டாற்றி மகிழ்ந்தவர் நமது புலவர்.

அய்யா அவர்களுக்கு ஆசிரியர் பணி புரிந்ததற்கான ஓய்வூதியம் கடைசி வரை வந்து கொண்டிருந்தது.

**'வாங்கும் கடனும் தேங்கும் பணமும்**
**வளர வளர வாழ்வைக் கெடுக்கும்'**

என்ற அருட்தந்தையின் மொழிக்கேற்ப தன்னுடைய சேமிப்புக் கணக்கில் பணத்தை தேங்க விடமாட்டார்கள்.

உறவினர்கள், மிகவும் ஏழ்மையானவர்களுக்கு கல்விக் கட்டணம் செலுத்துதல், ஏழைப் பெண்களுக்கு திருமணத்திற்காக உதவுதல், ஆதரவற்ற சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் அவ்வபோது பொருள் உதவி செய்தல், தன்னை ஆதரித்த அந்தக் கால அன்பர்களுக்கு உதவி செய்தல் போன்ற பணிகளை சத்தம் இல்லாமல் செய்து வந்தார்கள்.

ஒவ்வொரு நன்கொடைச் செயலும் சொர்க்கத்திற்குச் செல்லும் வழியின் படிக்கல்லாகும் என்பது பழமொழியல்லவா?

தனக்கு வரும் ஓய்வூதியம் மற்றும் அன்பர்கள் அன்பாக வழங்கும் பொருள்கள் இவை யாவற்றிலும் பற்று வைக்காது பற்றற்று வாழ்ந்தார்கள்.

'மற்றவர்களுக்கு பொருள் உதவி உதவுங்கள்' என்று - அவருக்கு உரிமையுள்ள அவர் பணத்தைப் பெறுவதற்கு அவ்வளவு பணிவாகக் கேட்பார்கள். ஒவ்வொரு முறையும் தொகை கேட்கும் போதும், அவர் கேட்கும் விதத்தில் நான் என்னை மறந்து சிலிர்த்து நிற்பதுண்டு.

வலது கை கொடுத்தது இட கைக்குத் தெரியக் கூடாது என்பது அய்யாவின் வழக்கம். எந்த உதவியையும் மற்றவர்களுக்குத் தெரியாமல்தான் செய்வார்கள்.

தான் பிறந்த ஊரில் இருக்கும் உறவினர்கள், மனவளக் கலைப் பயிற்சி எடுப்பதற்கு உரிய கட்டணங்களை அய்யாவே செலுத்தி வந்தார்கள்.

பிணியால் வாடும் மானுடத்திற்கு, பதினாறு வகையான மருந்துகளை கற்றுக் கொண்டு, அவைகளை உரிய முறையில் தயாரித்து, அவர்களது நோய்களை அகற்றினார்.

அய்யா ராணிப்பேட்டையில் ஆசிரியராகப் பணியாற்றிய போது, அங்குள்ள சன்மார்க்க சங்கத்திற்கு பலரையும் உரையாற்ற அழைத்து வருவார்கள். அவர்களுக்குத் தேவையான பொருள் உதவிகளைச் செய்வதை அய்யா வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

அவ்வாறு வந்த சன்மார்க்கிகளில் முருகானந்த அடிகளும் ஒருவராவார். அய்யாவைப் போல பிரம்மச்சாரியாகவே வாழ்ந்தவர். அவர் கடைசி காலத்தில் தருமபுரியில் தங்கியிருந்தார்கள். ஆதர வற்ற அவருக்கு அய்யா அவர்கள், மாதாமாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்கி வந்தார்கள்.

இதைப் போலவே தனக்கு சித்த மருத்துவம் கற்றுத் தந்த வைத்தியர்களான ரெட்டை ஏரி கண்ணப்பன் போன்ற வைத்தியர்களை, மரியாதை நிமித்தமாக காணச் செல்லும்போது ஒரு தொகையைக் கொடுத்து மகிழ்வார்கள்.

''நீதி நெறி உணர் மாந்தராகி, வாழும் சிலை உணர்ந்து, எல்லோரிடமும் அன்பு கொண்டு, தொண்டாற்றி இன்பம் காண்போம் என்கிறார் மகரிஷி. அதுவே இறை உணர்வின் பயனாகும்.

'நாமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில் படமாடும், கோயில் பகவற்கது ஆமே' என்று கூறுகிறார்.

மனிதர்க்குச் செய்யும் தொண்டு இறைவனைச் சென்றடைகிறது. மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகிறது.

'இந்தச் சிற்றுயிர்க்கும் செய்த நன்மை ஒன்றை நீங்கள் எனக்கே செய்தீர்கள்' என்பது விவிலியம்.

அன்பும் கருணையும் மனித வாழ்வுக்கு இன்ப ஊற்றுகள் என உணர்ந்து விழிப்புடன் வாழ்ந்தால் மனித நேயம் என்ற உணர்வில் மனத்தினை விரித்து உயிர்த் தொண்டாற்றி மனித வாழ்வை அர்த்த முள்ளதாக்கிட முடியும்.

**'அன்பும் கருணையுமாய் அகன்ற நிலையிலள்ளாய்**
**என்மனதை வரித்து இணைத்துக் கொண்டாய்**
**உன்னுள்ளே கர்ம வினைகளெல்லாம் கழிந்தன உணர்கின்றேன்**
**உன்னையறிந்து உய்ய உலகோர்க்குத் தொண்டு செய்வேன்'**

என்ற அருட்தந்தையின் வாக்கிற்கேற்ப, மனித நேய அன்புடனும் கருணையுடனும் புலவர் வாழ்ந்தார்.

❋

# 36. வாக்கு தவறாத வள்ளல்

1996 ஆம் ஆண்டு பேராசிரியர்களுக்கான குடியிருப்பில் அய்யா தங்கியிருந்தார்கள். பக்கத்தில் மூத்த பேராசிரியர் திருமதி. மாரியம்மாள் தங்கியிருந்தார்கள்.

ஒரு நாள் காலை, 10 மணிக்கு மகரிஷியைப் பார்க்கப் போவதாக அம்மையாரிடம் புலவர் கூறினார். இருவரும் அருட்தந்தையைப் பார்க்கச் சென்றனர்.

'வாங்க உட்காருங்க' என்றார் சுவாமிஜி.

இருவரும் அமர்ந்தனர்.

'என்ன விஷயம்' என்றார்.

அய்யா தான் கொண்டு சென்ற ஒரு வெள்ளைக் கவரை சுவாமியிடம் கொடுத்தார்.

கவருக்குள் இருந்ததை வெளியில் எடுத்துப் பார்த்தார் சுவாமிஜி.

'என்ன தியாகராஜா எதுக்கு இதைக் கொடுக்கிறீர்கள்?' என்று கேட்டார்.

'அம்மா நினைவிடமாக அமைதித் திருநிலையம் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். எனது பங்களிப்பாகக் கொடுத்துள்ளேன்' என்று பவ்யமாகப் பதில் கூறினார்.

இவர் கூறுவதை சுவாமிஜி சிரித்துக் கொண்டே கேட்டுக் கொண்டிருந்தார்.

பேராசிரியைக்கோ ஒன்றுமே புரியவில்லை.

மாலை நேரம் இருவரும் திண்ணையில் அமர்ந்திருந்தனர்.

'என்ன அய்யா உங்களிடம் சொல்வதற்கென்ன! சொல்கிறேன் என்றார்.

'நான் சென்ற வாரம் சென்னை சென்றிருந்தேனல்லவா? அங்கு இரவு ஒரு கனவு கண்டேன். அமைதித் திரு நிலைய பணிகளுக்காக நான் சுவாமிஜியிடம் ஐம்பதாயிரம் ரூபாய் கொடுப்பதாக காலையில் எழுந்ததும் யாரிடமாக சொல்ல வேண்டும் என்று கருதி அருள்நிதி பானுகுமாரியிடம் சொன்னேன்.

பின்னர் ஆழியார் சென்று சுவாமிக்கு பணம் கொடுக்க வேண்டும் எண்ணத்தில் தூங்கி விட்டேன். காலையில் எழுந்ததும் ஆழியார் நிர்வாக அலுவலர் அருள்நிதி பழனிச்சாமியிடம் கூறி பணத்தைக் கொடுத்து டி.டி. எடுத்து வரச் சொன்னேன்.

'அய்யா எதற்கு இவ்வளவு அவசரமாக அதிகாலையிலேயே இதற்காக வந்தீர்கள்' என்று பழனிச்சாமி கேட்டார்.

'கொடுக்க வேண்டும் என்று எண்ணவிட்டேன். யாரிடமாவது கூறிவிட்டால் கட்டாயம் வாக்கைக் காப்பாற்றுவேன். இல்லையென்றால் கனவுதானே என்று மனம் மாறிவிட்டால் என்ன ஆகுமோ? என்றார் புலவர்.

நேற்று டி.டி. வந்து சேர்ந்தது. இன்று மகரிஷியிடம் அதைச் சேர்த்து வாக்கைக் காப்பாற்றிவிட்டேன்' என்றார்.

வாக்குத் தவறாமையா? உண்மை உணர்வா? குருபக்தியா? அன்னையின் மேல் பக்தியா? ஈகையா? எல்லாமும் தான்.

# 37. பொள்ளாச்சியில் தொண்டு

அப்போது அய்யா ஆழியாறில் பல ஆண்டுகளாகத் அருட் தந்தையின் அருகிலேயே இருந்து தொண்டாற்றிக் கொண்டிருந்தார்கள். அருட்தந்தை நோய்வாய்ப்பட்டிருந்த காலம். பூரண ஓய்வில் இருந்தார்கள். எனவே, ஆழியார் செல்லும் அன்பர்களுக்கு, புலவர் அய்யாவின் தரிசனமும் வாழ்த்தும் - மகரிஷியை தரிசித்த உணர் வுடன் வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

ஒருநாள், பொள்ளாச்சியில் உள்ள அறிவுத்திருக்கோயில் நிர்வாகங் களில் சிலரும் ஆழியார் அறிவுத் திருக்கோயில் அறங்காவலர்களில் சிலரும் அய்யாவிடம் வந்தார்கள்.

'அய்யா, நாங்கள் மகரிஷியிடம் ஒரு கோரிக்கைக்காக அவரைப் பார்க்கப் போகிறோம். எங்கள் முயற்சி வெற்றி பெற வாழ்த்துங்கள்' என்றனர்.

அய்யாவும், வழக்கம் போல் 'வெற்றி உண்டாகட்டும். போய் வாருங்கள்' என்று வாழ்த்தி அனுப்பினார்கள்.

சில மணி நேரங்கழித்து, அருட்தந்தை அய்யாவை அழைத்தார்கள். குரு அழைத்தவுடன் ஓடோடிப் போய் குருவின் முன்பு நின்றார்.

'தியாகராஜா! பொள்ளாச்சியில் சேவை செய்ய அங்குள்ளவர்கள் உன்னை விரும்புகிறார்கள்' என்றார் மகரிஷி.

'குருவின் சொற்படி பொள்ளாச்சி செல்கிறேன் சாமி' என்று மகிழ்ச்சியுடன் குருவார்த்தைக்கு மறு வார்த்தை இல்லாமல் சொன்னார். பெறுவதிலோ வைத்திருப்பதிலோ இல்லை. தருவதில்தான் மகிழ்ச்சி இருக்கிறது என்பது அய்யாவின் குணம்.

அய்யாவுக்கு ஆழியாறில் இருப்பதில் அதிகம் விருப்பம். குலசேகர ஆழ்வார் போல் ஆழியார்மீது அளவுகடந்த அன்பும்

காதலும் கொண்டிருந்தவர் புலவர். ஆனால் குருவே சொன்னபின்பு தனது தாகத்தை தணித்துக் கொண்டு பொள்ளாச்சி சென்றார்கள்.

ஆழியாறில் இருக்கும் அன்பர்களுக்கும் பணியாற்றுபவர்களும் ஒரே திகைப்பு. புலவரிடமே வாழ்த்துப் பெற்று, அவரையே பொள்ளாச்சிக்கு அழைத்துச் சென்று விட்டார்களே? என்ற ஏக்கம்.

அய்யாவின் மேல் இருந்த அன்பு காரணமாக பல அன்பர்கள் 'அய்யா ஆழியாறிலேயே பணியாற்ற வேண்டும், என்று கோரிக்கை மனுவை அறங்காவலர்களிடம் அளித்தார்கள். என்ன காரணத்தாலோ அதற்குப் பயனில்லை.

மிகவும் வருத்தப்பட்டு, அய்யாவிடம் எனது மனவருத்தத்தைத் தெரிவித்தேன். அதற்கு அய்யா கூறிய விளக்கம் என்னை வியப்பில் ஆழ்த்தியது.

'சாமி! ஒரு அரசனிடம், மந்திரி அருகில் இருப்பான் காவற்காரன் கோட்டையின் வாயிலில் இருப்பான். தோட்டக்காரன் தோட்டத்தில் இருப்பான். அவரவர்கள் இருக்குமிடத்தில் இருக்க அரசன் ஆணை யிடுவான். அதுபோலவே குருவுக்குத் தெரியாதா? யார் யாரை எங்கு வைக்க வேண்டும் என்று. நான் மனதிருப்தியுடன் ஆனந்தமாக பொள்ளாச்சியில் எனது தொண்டைச் செய்து வருகிறேன்'

அய்யா பொள்ளாச்சியில் ஐந்து ஆண்டுகள் தொண்டாற்றினார்கள். அங்குள்ள தவ மையங்களில் பயிற்சி தீட்சை சிந்தனை விருந்து அளிப்பதுடன் பல்வேறு இடங்களுக்கும் சென்று பயிற்சி அளித்தார்கள்.

அங்கிருந்தபோது, பஸ் அதிபர் திரு பாபு அய்யாவின் மேல் அளவு கடந்த அன்பு கொண்டொழுகினார். அவருக்குத் தேவையானதை எல்லாம் செய்து வந்தார். மேலும் அன்பார்கள் திரு ரெங்கநாதன், திரு ரகு மற்றும் திருமதி ஞானாம்பாள் ஆகியோர் அய்யாவிடம் மிகவும் நெருங்கிப் பழகி அவரின் அன்புக்கும் அருளுக்கும் பாத்திரமாக விளங்கினார்கள். அவர்கள் அய்யாவை கண்ணும் கருத்துமாகப் போற்றிப் பாதுகாத்து வந்தார்கள்.

மூத்த பேராசிரியர் திருமதி மாரியம்மாவும் அய்யாவுடன் தங்கி தொண்டாற்றி வந்தார்கள்.

அய்யாவை மகரிஷியின் முதன்மைச்சீடர் என்று அழைப்பதைப் போல் திருமதி மாரியம்மாவை 'மிலிட்டரி சீடர்' என்று அன்பர்கள்

அழைப்பார்கள். ஆம், சுவாமி சித்பவானந்தர் போல், அம்மா மிகவும் கண்டிப்பானவர். கறாரானவர் ஒழுங்கு, காலம் முதலியவற்றை கண்டிப்பாகப் பின்பற்றுபவர்.

ஒருவர் அன்பே வடிவமானவர். மற்றவர் கண்டிப்பும், கடுமையான குணமும் உடையவர். அவரது கண்டிப்பு அன்பர்கள் முறையாக பயிற்சி பெறவேண்டும் என்ற எண்ணத்தில் எழுந்ததாகும். மற்றபடி ஒழுங்காக உடற்பயிற்சி, தவம், தற்சோதனை செய்பவர்கள் மீது மிகவும் அன்பாக நடந்து கொள்பவர் அம்மா.

அருட்தந்தை மகாசமாதி அடைந்தபோது, அய்யா பொள்ளாச்சி மகாலிங்கபுரம் தவ மையத்தில் தனியே தங்கி தொண்டாற்றி வந்தார்கள். மகரிஷியின் இறுதிச் சடங்கு முடிந்த மறுநாளே, நிர்வாக அறங்காவலர் திரு சின்னச்சாமியும் மற்றவர்களும் நேராக மகாலிங்கபுரம் வந்து, அய்யாவை அழைத்துக் கொண்டு ஆழியார் சென்றனர்.

அய்யாவை நிரந்தரமாக ஆழியாறிலேயே இருந்து, அருட் தந்தையின் ஸ்தானத்தில் இருந்து எங்களுக்கு வழிகாட்டுங்கள். இங்கேயே இருங்கள். வேறு எங்கும் செல்லாதீர்கள். குருவின் இடத்தில் இருந்து தொண்டாற்றுங்கள் என்று வேண்டிக் கொண்டனர்.

அன்றிலிருந்து தனது இறுதி காலம் வரை அய்யா ஆழியாறிலேயே இருந்து தொண்டாற்றி மகிழ்ந்தார்கள்.

❋

# 38. குழந்தைப் பண்பும் பெருந்தன்மையும்

அய்யா 2002 ஆம் ஆண்டு பொள்ளாச்சி சிடிசி டெப்போவில் பேருந்து ஓட்டுநர் நடத்துனர்களுக்கு மனவளக்கலைப் பயிற்சிகள் நடத்தி வந்தார். அப்பொது அவருக்கு உதவிக்கு ஆளில்லாமல், இவர் ஒருவரே உடற்பயிற்சி, காயகல்பப் பயிற்சிகளைச் செய்து காட்டி பயிற்சிகளை நடத்தி வந்தார்.

பழனியிலிருக்கும் மூத்த பேராசிரியர் திருமதி.மாரியம்மாவை தொலைபேசியில் தொடர்புகொண்டு உதவிக்கு வருமாறு அழைத்தார். அவரும் அன்புடன் இசைந்தார். பழனியிலிருந்து பொள்ளாச்சி வந்து அய்யாவுடன் இணைந்து பயிற்சிகளை நடத்திவிட்டு மீண்டும் பழனி சென்று விடுவார்.

அப்போது 'உடற்பயிற்சிகளை நீங்கள் நடத்துங்கள். நான் மேஜை மீது ஏறிநின்று செய்து காண்பிக்கிறேன்' என்று சொல்லி விட்டு மேஜை மீது சின்னப் பிள்ளையைப் போல உடனே ஏறி நின்று விடுவார்.

'அய்யா, உங்கள் வயதுக்கும், அனுபவத்துக்கும் இவ்வாறு செய்தால் மதிப்புணர்வு குறைந்து விடும்' என்று சொல்லி 'நீங்கள் நடத்துங்கள். நான் செய்து காட்டுகிறேன்' என்று எவ்வளவோ சொல்லியும் ஒத்துக் கொள்ளவில்லை.

ஒரு பெண்ணை - எந்த வயதாயிருந்தாலும், மேடையில் ஏற்றி பயிற்சிகளை செய்து காட்ட விரும்பாமல் தானே மேசையில் குழந்தை போல குதூகலமாக ஏறி நின்று செய்து காட்டி பெருந்தன்மையை வெளிப்படுத்தினார்கள்.

சிறு குழந்தைபோல யார் எதைச் சொன்னாலும், செய்தாலும், உண்மை என்று நம்பி விடுவார். சிடிசி டெப்போவிற்கும் மற்றும்

தவ மையங்கள் போன்ற இடங்களுக்கு அப்போது பொள்ளாச்சியில் மேலாளராக இருந்த அன்பர் (அருள்நிதி எழில்மாறன்) மன்ற உபயோகத்திலிருந்த இருசக்கர வாகனத்தில் அழைத்துச் செல்வார்.

நீண்ட நாளைக்குப் பிறகு அவரது தந்திரம் ஒன்றைத் தான் கண்டு பிடித்து விட்டதாகப் பெருமைப்பட்டுக் கொண்டார் அய்யா. பலமுறை ஜேபியில் பணம் எடுத்து வர மறந்து விட்டேன். அய்யா பணம் கொடுங்கள். திரும்பி வந்து ஆபீஸில் பணம் வவுச்சர் போட்டுக் கொடுத்து விடுகிறேன் என்பார்.

பயிற்சி இடத்திற்கு உரிய நேரத்தில் போய்ச் சேர்ந்துவிட வேண்டுமே என்று நானும் பணம் கொடுப்பேன். ஆனால் அவர் இதுவரை பணத்தைத் திருப்பிக் கொடுத்ததேயில்லை. மற்றவர்களா யிருந்தால் ஆபீஸில் வவுச்சர் போட்டு பணத்தை எடுத்து ஜேவியில் வைத்து விட்டாரா? இல்லையா? என்று கண்டுபிடித்துவிடுவார்கள். எனக்கு அந்த சாமர்த்தியமெல்லாம் போதாது என்று ஒரு முறை கூறினார்.

'மெல்ல மெல்ல பணம் என்ற நச்சை முன்னே முறித்து விட்டால் சிக்கல் பல தீர்ந்து விடும்' என்ற குருவின் வார்த்தை களையும் சொல்லி மகிழ்ந்தார்.

வங்கிகளில் ஏடிஎம் வசதி வந்த சமயத்தில் ஒரு அன்பர் அய்யாவிடம் அதுபற்றிக் கூறியுள்ளார். அதனைப் பார்க்க வேண்டு மென்று விரும்பியதாதல் பொள்ளாச்சி பாரத ஸ்டேட் வங்கிக்கு அழைத்துச் சென்று காட்டியுள்ளார்.

திரும்பி வந்ததும், சிறு குழந்தை போல, திருமதி மாரியம்மாவிடம் 'அம்மா ஒரு பொத்தானை அழுத்தியவுடன் பணம் பொதபொத வென்று வெளியில் வருகிறது. என்ன ஆச்சரியம் எப்படியெல்லாம் விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது'' என்று குதூகலத்துடனும் ஆச்சரியத் துடனும் வியப்புடனும் கூறினார்.

நான் தங்களுக்குரிய ஒரு ஏடிஎம் கார்டு வாங்கித் தருகிறேன். தேவைப்படும்போது எடுத்துக் கொள்ளுங்கள் என்று எவ்வளவோ வற்புறுத்தினேன். ஆனால் என்ன காரணத்தினாலோ புலவர் மறுத்துவிட்டார்கள்.

*

# 39. அருள் அன்னையின் அன்பில்

**'ஒன்றையே நினைத்து நினைத்து அதில் தானே தன்னை நிலை நிறுத்திக் கொண்டு பழகக்கூடிய உளப்பயிற்சியே மனோதிடத்தை (வில் பவர்) உண்டாக்கும்.**

**–வேதாத்திரி மகரிஷி**

அருள் அன்னை லோகாம்பாள் அவர்கள், வேதாத்திரி மகரிஷி அவர்களின் அன்புத் துணைவியார். குருமாதா என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுத்தவர். எப்போதும் எளிய தோற்றம் எல்லோரிடமும் இனிமையான பேச்சு. தோற்றத்திலும் இனிமையிலும் மகரிஷி அவர் களையும் அன்னை அவர்களையும் ஒப்பிடும்போது யார் சிறந்தவர்கள் என்றால் கூற முடியாது ஜாடிக்கேற்ற மூடி என்பதுதான் பொருத்தம்.

மன்ற அன்பர்களுக்கு அம்மா வைத்திருந்த பெயர் 'சங்கத்துப் பிள்ளைகள்.' அவர்களில் புலவரை மூத்தபிள்ளையாக பாவித்து அவரிடம் அளவு கடந்த அன்பு பாராட்டி வந்தார்கள்.

மகரிஷியின் சீடர்கள், உணவு வேளையில் வந்துவிட்டால் அருந்தி விட்டுத் தான் போவார்கள். உணவு நேரத்திற்கு முன்பாக வந்துவிட்டால் மகரிஷி அவர்களிடம் பேசிக் கொண்டிருந்து விட்டு, உணவருந்தி விட்டுத்தான் போக வேண்டும்.

உணவு நேரம் முடிந்து வந்து விட்டாலும், சமைத்த உணவு தீர்ந்து விட்டாலும் மகரிஷியிடம் பேசிக் கொண்டிருக்கும் நேரத்திற்குள் உணவு சமைக்கப்பட்டு விடும். ஆக எந்த நேரத்தில் சென்றாலும் சாப்பிடாமல் மட்டும் போய் விட முடியாது.

**'செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு'**

என்று வள்ளுவர் வகுத்த விருந்தோம்பலுக்கு நமது அருளன்னையே உதாரணமாகத் திகழ்ந்தார்கள்.

தியாகராயநகரில் இருக்கும்போது மகரிஷிக்கும் புலவருக்கும் சமையல் செய்து எடுத்துச் செல்வார்கள்.

கூடுவாஞ்சேரிக்கு புலவர் வரும்போதெல்லாம், சமையல் செய்து, அவரை அருகே அமரச் செய்து தன் கையாலேயே பரிமாறி மகிழ்வார்.

**கூடுவாஞ்சேரியில் மகரிஷிக்குச் சொந்தமான பழைய சிறிய ஓட்டுக் கட்டடத்தில் புலவர் சில ஆண்டுகள் தங்கி அங்குள்ள மக்களுக்கு பயிற்சி அளித்தார்.**

மகரிஷியை நேசித்தது போல் அருளன்னையையும் அய்யா நேசித்து வந்தார்கள். தனது சொற்பொழிவுகளில் அருளன்னையின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் அவர்கள் வாழ்ந்த விதத்தையும் சொல்லி மகிழ்வார்.

கூடுவாஞ்சேரியில் மகரிஷியின் வீட்டில் அன்னை லோகாம்பாள் ஒரு மாமரம் வளர்த்தார். மரம் பழம் தருகின்ற காலத்திலெல்லாம் மகரிஷி வெளிநாடு சென்று விடுவார்.

சுவாமிக்கு ஒரு மாம்பழம் கூட சாப்பிடக் கொடுக்க முடிய வில்லையே என்ற ஆதங்கத்தைப் பலமுறை அம்மா புலவர் தியாகராஜனிடம் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

காலமில்லா தருணத்தில், ஒருநாள் சுவாமிஜி கூடுவாஞ்சேரியி லிருந்தபோது மரத்தின் உச்சியிலிருந்து தொபுக்கடீர்னு ஒரு பழம் கீழே விழுந்தது. அம்மா ஆச்சரியத்துடன் பழத்தை எடுத்து வந்து சுவாமிஜிக்குக் கொடுத்தார். இதிலிருந்து என்ன தெரிகிறது. ஒருவர் ஒரு எண்ணத்தை நினைத்துக் கொண்டையிருந்தால் எண்ணியது நடந்தே தீரும் என்று தெரிகிறதல்லவா? என்று எண்ணம் ஆராய்தல் உரையாற்றும்போது ஒருமுறை அய்யா அவர்கள் நெகிழ்ச்சியுடன் அக்காட்சியை வர்ணித்தார்கள்.

அன்னையார் நோய்வாய்ப்பட்டிருந்தபோது அடிக்கடி கூடுவாஞ்சேரி சென்று அன்னையின் உடல் நலம் குறித்து அவரிடம் உரையாடி வருவார்கள்.

1994ம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் நாள் புலவர் அவர்கள் அருள் தந்தையின் இல்லம் சென்று, அன்னை அருகில் அமர்ந்த சிறிது நேரத்திலேயே, அன்னையார் அவர்கள் உயிர் நீத்தது பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியது.

# 40. புலவரின் சொற்பொழிவுகள்

'நலம் எண்ணி - நலம் சொல்லி - நலமே செய்கின்ற நடமாடும் தெய்வங்களாகிய உங்கள் அனைவரையும் தொண்டே தொழுகையாக உள்ள பேராசிரியப் பெருமக்களையும் மனமாற வணங்குகிறேன்' என்ற உடன்பாடு வார்த்தைகளாகத்தான் பேசத் தொடங்குவார்.

தனது உரையை உபதேசத்தை தொடங்கும்போது, மேடையில் இருப்பவர்களில் முக்கியமானவர்களின் பெயரில் உள்ள மேன்மை களைச் சொல்வார். அது அந்த அன்பருக்கு உற்சாகத்தையும், ஈர்ப்பையும் ஏற்படுத்தும். நிகழ்ச்சி ஏற்பாடு செய்தவர்களின் பெருமைகளை சபையினரிடம் கூறும்போது அங்கிருக்கும் அனைவருக்குமே ஒரு மதிப்புணர்வை ஏற்படுத்தி விடுவார்.

சாதாரண மனிதர்கள், மனிதர்களைப் பற்றி பேசுவார்கள். கொஞ்சம் பக்குவப்பட்ட மனிதர்கள் நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதம் செய்வார்கள். அதைவிட உயர்ந்த ஞானம் உடையவர்கள் கருத்துக் களைப் பற்றி விவாதிப்பார்கள்.

மனிதர்களைப் பற்றி விவாதிப்பது என்பது அடி மட்டம். நிகழ்ச்சிகளை விவாதம் செய்வது சற்று உயர்ந்தது. கருத்துக்களைப் பற்றி விவாதம் செய்வதுதான் மிகவும் கடினமான வேலை. அதனால் நாம் எல்லாம் என்ன செய்வோம் என்றால், மனிதர்களைப் பற்றிதான் விவாதம் செய்வோம். நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதம் செய்வது மிகவும் குறைவு, கருத்துக்கள் மிகவும் அரிதாக இருக்கும்.

புலவர் மனிதர்களைப் பற்றிப் பேசினாலும் சரி... நிகழ்ச்சி களைப் பற்றிப் பேசினாலும் சரி.... அதிலிருந்து கருத்துக்களைச் சொல்வார்கள்.

புலவர் மனிதர்களைப் பற்றி விமர்சனம் செய்யாமல், கருத்துக்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பார்கள். பலவிதமான

செய்திகளிலிருந்து அவற்றில் ஊடாடி இருக்கக்கூடிய கருத்து என்ன என்பது தெளிந்த உள்ளத்திற்குப் புரியும்படி விளக்குவார்கள்.

அவரது உபதேசங்கள் கேட்போரின் இதயத்திற்கு நேராகச் செல்லுகின்றன. அவர் எந்த ஒரு விஷயத்தையும் விரிவாக விளக்கி உரைக்காமல் ரத்தினச் சுருக்கமாகவே எடுத்து உரைப்பார்.

அவர் விஷயங்களைச் சரியாகத் தெளிவாக, எளிமையாக எடுத்து உரைத்தார். அவர் மிகவும் எளிமையாக விஷயங்களை எடுத்து உரைக்கும் தன்மையைப் பார்க்கும் சிலர் - அவர் தத்துவமேதை அல்ல என்று கூறுவர்.

அவரது தத்துவஞானம் எவ்வளவு ஆழமானது என்பது அருட்தந்தைக்குத் தெரியும். அவரின் சொற்பொழிவை, அருட்தந்தையே ஆழ்ந்து கேட்டு மகிழ்வார்கள். பாமரரும் புரிந்து கொண்டு பின்பற்றும் வகையில், அவர் தத்துவங்களை எளிய முறையில் நல்ல கதைகள் மூலம் விளக்கியுரைத்தார்.

குறிப்பிட்ட நேரத்தில், தனது உபதேசத்தை முடிப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார். காலத்தையும் பொன்போல் போற்றினார். விஷயத்தை மேற்போக்காகச் சொல்லாமல், அவசிய மற்றதைப் பற்றிக் கவலைப்படாமல் - மையக் கருத்தைத் தெளிவாக எளிமையாக விளக்குவார்.

அவரது உபதேசங்களில் பெரும்பாலானவை - நடைமுறை வாழ்க்கையிலும் யோக சாதனையிலும் பின்பற்றுவதற்கான அறிவுரை களாக இருக்கும். அருட்தந்தையின் கருத்துக்களுக்கு மாறாமல், திருவள்ளுவரையும், தாயுமானவரையும், மாணிக்கவாசகரையும் துணைக்கு வைத்துக் கொள்வார். அவரது உபதேசங்களுக்கு சொற் களுக்கு மகத்தான சக்தி இருந்தது.

திருமூலர், திருவள்ளுவர், தாயுமானவர், ஆழ்வார்கள், நாயன்மார்கள், வள்ளலார், வேதாத்திரி மகரிஷி போன்ற பெரியோர் களின் எண்ணங்களை எளிமைப்படுத்தி அவற்றை வாழ்வியல் நெறியாக்கித் தன் உபதேசங்களில் கலந்து தந்தார் புலவர்.

'கடைவிரித்தேன் கொள்வாரில்லை' என வருந்திய வள்ளலாரின் கனவு இன்று வேதாத்திரியத்தின் மூலம் புலவர் சொற்பொழிவுகளாக மலர்ந்தன.

மனிதன் தன் உள்ளத்திலுள்ள அழுக்கெனும் குப்பைகளை நீக்க வேண்டும் என்று கூறுவார்.

'தானமும் தியானமும் உங்களை உயர்த்தும்'

'பயத்திற்காக அலைந்து உயர்ந்த பண்புகளை இழக்காதீர்கள்'

'ஒற்றுமையும் உலக சமாதானமும் வேண்டும்'

'அச்சம் தவிர் ஆண்மை கொள்'

போன்ற உயர்ந்த நோக்கங்களை வாழ்வில் இலட்சியமாகக் கொள்வதால் மனித வாழ்க்கை உயர்வடையும் என்கிறார்.

பேரின்ப வாழ்வை அனுபவிக்க வேண்டிய மனித இனம், ஏன் துன்பம்? வறுமை, நோய், சிக்கல்கள், பிணக்குகள், பகை, போர் ஆகியவற்றால் துன்புறுகின்றது என்பதை ஆராய்வதும் அதன் காரணம் கண்டு அவற்றைத் திட்டமிட்ட முறையில் போக்கி மனித வளத்தைச் சீரமைப்பதுமே மனவளக்கலையின் நோக்கம் என்று ஆணித்தரமாகக் கூறுவார்.

பக்தி, ஞானம், ஜபம், யோகம், தியானம் என்பனவற்றை தெளிவுபடுத்தி எல்லோருக்கும் புரியும் வண்ணம், மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் புலவராவார்.

❋

# 41. உண்மையே தெய்வீகமானது

**'உண்மை என்பது ஒப்புவமை இல்லாதது. அது முழுமையானது'**

**– வேதாத்திரி மகரிஷி**

உண்மையான சொற்கள் நேர்த்தியாக இருக்காது. நேர்த்தியான மொழிகள் உண்மையாக இராது.

உண்மைக்கு நாம் செய்யும் பெரிய மரியாதை நாம் உண்மையாக நடப்பதுதான் என்பது எமர்சனின் பொன்மொழியாகும்.

உண்மை தங்குமிடம் அரிது என்பார் ரஸ்கின் என்ற அறிஞர்.

உண்மையாய் இருக்க துணிவு கொண்டவருக்கு பொய் எதற்கும் தேவைப்படுவதில்லை.

உண்மை ஆண்டவனின் முத்திரை. உண்மை தெய்வீகமானது. உண்மை மகிமை பொருந்தியது. அது நிலைத்து நிற்கும்.

அய்யா பொள்ளாச்சியில் தொண்டு புரிந்து கொண்டிருந்தார். அங்குள்ள மேலாளர் திரு.ராஜரத்தினம் பயிற்சி நடத்துவது பற்றிய தகவல் அனுப்புவதில் ஒருமுறை சிறிய தவறு செய்து விட்டார்.

அந்தத் தவறுக்குக் காரணம் தான்தான் என்பதை ஒப்புக் கொள்ளாமல் 'அய்யா தான் காரணம்' என்று வாதிட்டார்.

மேலாளர் 25 வயதிற்கும் இளையவர் எனப் பாராமல், சடாரென்று அவரது காலைத் தொட்டுக் கும்பிட்டு 'மன்னித்து விடுங்கள்' என்று அய்யா கூறினார்.

மேலாளரின் முகம் சகிக்க முடியாத நிலைக்கு மாறியது. தனது தவறை ஒப்புக் கொண்டார். பொய் முதலில் வெல்லுவது போல் இருந்தாலும் உண்மைதான் ஜெயிக்கும்.

'அவர்கள் செய்வதை என்னவென்று அவர்கள் அறியாததால் தந்தையே அவர்களை மன்னியுங்கள்' என்கிறது **பைபிள் வாசகம்.**

இதை எழுதும்போது ஒரு உண்மை நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது.

ஒரு பெரிய மனிதர் தம்மை அடிப்பதற்காக ஆட்கள் திரட்டி யிருக்கிறார் என்ற தகவல் வித்தியாசாகருக்குக் கிடைத்தது.

ஆதலால் அவர் திடீரென்று ஒரு நாள் அந்த மனிதரின் வீட்டுக்குச் சென்று ''நாங்கள் என்னை அடிப்பதற்கு ஆட்களை ஏற்பாடு செய்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். உங்களுக்கு ஏன் சிரமம் என்று நானே வந்துவிட்டேன். என்னை என்ன செய்ய வேண்டுமோ செய்யுங்கள்' என்றார். அந்த மனிதர் வெட்கித் தலைகுனிந்தார்.

மாதந்தோறும் கணிசமாக ஓய்வூதியம் பெறுபவர். நேர்மை, தூய்மை, வாய்மை போன்றவற்றை அணிகலன்களாக அணிந்தவர். அவரது நிலைமையைப் பாருங்கள்.

உபதேசம், சொற்பொழிவு என்று அவரைப் பயன்படுத்தாமல் இந்த மாதிரி சிக்கல்களிலெல்லாம் நிர்வாகத்தினர் அவரிடம் வேலை வாங்கினார்கள். இதைத்தான் பதிவுகள் என்பார் மகரிஷி. ஆனால் அய்யாவோ, பதிவைக் கழிக்க வந்த பண்பாளராயிற்றே.

தனது உடலால் ஏற்படும் துன்பங்களையெல்லாம் சகித்துக் கொண்டு அனுபவித்தவரால்தான் பிறரால் ஏற்படும் துன்பங்களையும் சகித்துக் கொள்ள முடிந்தது.

சகிப்புத்தன்மை என்பது பெரியவர்களின் குணமாகும். அன்று பேருந்து நிலையத்தில் அருட்தந்தையின் மீது வெற்றிலை பாக்கு எச்சில் துப்பிய அம்மையாரை வாழ்த்திய குரு பரம்பரையாயிற்றே.

பிச்சை எடுத்தபோது ஏசிய பெண்மணியின் வார்த்தைகளை சகித்துக் கொண்டவர்தானே புத்தர். கையில் எச்சியைத் துப்பிய அன்பரை நேசித்தவர்தானே அன்னை தெரசா. சிலுவையில் அறைந்த போதும் தெரியாமல் செய்கிறார்கள் என்று சகித்துக் கொண்டவர்தானே **இயேசு பிரான்.** தன்னை ஊரை விட்டே விரட்டியபோதே சகித்துக் கொண்டவர்தானே **வேதாத்திரி மகரிஷி.**

❋

# 42. வாழ்வியல் வழிகாட்டி

அருளாளர்கள், சான்றோர்கள், தத்துவஞானிகள், மனிதநேயச் சிந்தனையாளர்கள் முதலியோருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் சமுதாய மக்களுக்குப் பல்வேறு வாழ்வியல் நெறிகளை வெளிப் படுத்துவனவாக அமைகின்றன.

வாழ்க்கை வரலாறு எழுதுவதில் இரண்டு நிலைகள் உள்ளன. ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றை அவரே எழுதுதல். வாழ்க்கை வரலாறு எழுதுதல் பற்றி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்.

'ஒருவர் வரலாற்றைப் பிறர் எழுதும்போது அவர் கையாளும் முறை வேறு. உள்ளத்தில் எழும் பக்தியால் அன்பால் வரலாற்றுக் குரியவர் புகழ் ஓங்கவேண்டும் எனும் நோக்கத்தோடுதான் எழுதுவார். சில இடங்களில் அவர் வாழ்வில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் படிப்பவர்களுக்குப் படிப்பினையாக அமையவும் கூடும்.

அருட்தந்தையின் வாக்கின்படியே, அடியேன், புலவரின் நிகழ்வு களை உயர்த்தியோ தாழ்த்தியோ எழுதவில்லை. நான் அவரிடம் கண்டதை, கேட்டதை, அப்படியே வடித்தெடுத்துள்ளேன். அவரின் வாழ்வில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் நமக்கெல்லாம் படிப்பினையாக அனுபவமாக அமையும் என்ற கோணத்திலேயே எழுதியுள்ளேன்.

## 1. பெற்றோர்களைப் பேணுதல்

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வகையில் தன் பெற்றோர்கள் மீது அளவுகடந்த பற்று வைத்திருந்தார்கள். தனது குருவுக்கு பிள்ளைத்தமிழ் பாடி புத்தகமாக வெளியிட்டபோது அதனை தன் தந்தையார் திரு கே.பி. கந்தசாமி சர்மாவுக்கு காணிக்கையாக்கினார்கள். தான் சென்னையில் இருந்தபோது தாயாரை அழைத்து வந்து ஆதரித்தார்கள்.

### 2. மனித நேயம்

மனித நேயம் என்பது மனிதர் மீது நேயம் செலுத்துவது, அணுகுவது, போற்றுவது எனலாம். நேயம் என்ற சொல் அன்பு, அருள், விருப்பம், கருணை, அன்பு, பண்பு, பரிவு, இரக்கம், ஆர்வம், ஈரம் ஆகிய பல சொற்களையும் பொருள்களையும் உள்ளடக்கிய சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மனிதன் = மனம் + இதம். மனதை யார் ஒருவர் பயன்படுத்தி உயர்ந்த நோக்கங்களை, உயர்ந்த செயல்களைச் செய்கின்றானோ அவனிடத்தில் பிறருக்கு உதவி புரிய வேண்டும் என்ற மனித நேயம் ஏற்படும். அவனே முழு மனிதனாவான்.

**தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்'**

என்ற திருமுலர் தன்னை அறிதலின் முக்கியத்துவத்தைக் கூறுகிறார். புலவர் அய்யா அவர்கள் வாழ்நாள் முழுதும் மனிதநேயம் கொண்ட மனிதராகவே வாழ்ந்தார்கள்.

### 3. பணிவு

அடியார்க்கு இலக்கணம் பணிவு என்று கூறலாம். முற்றிய கதிர் மணிகளைத் தாங்கி நிற்கும் நெற்கதிர்கள் தலை வணங்கி நிற்கும் காட்சியை யாவரும் காணலாம்.

அத்திருக் காட்சியைப் பணிவுடையார்களுக்கு உவமையாக்கி இலக்கிய ஆசிரியர்கள் உலகத்தவர்க்கு அறிவூட்டுவார்கள். ''சாய்ந்தால் கதிர் நிமிர்ந்தால் பதர்'

'தலையில் சலங்கை கட்டும் தலைகீழ் நர்த்தகிகள்' என்று இக்காலக் கவிஞர் அப்துல் ரகுமான் வருணித்து மகிழ்வார்.

**''பத்தியின் பாலர் ஆகிப் பரமனுக்கு ஆளாம் அன்பர்**
**தத்தமில் கூடி னார்கள் தலையினால் வணங்குமாபோல''**

என்று சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறுவார்கள்.

'எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து'' என்று பணியும் செல்வம் பற்றி வள்ளுவம் பேசும்.

இந்த மெய்யடியார்களை அடிஒற்றி வள்ளற்பெருமானும் 'கையை வீசி நடந்தால் ஆணவம் வருதற்கு அதுவும் வழிகோலுமே'' என்று அஞ்சி கைகளைக் கட்டிக் கொண்டே நடப்பாராம்.

இந்த மெய்யடியார்களை அடிஒற்றி, நமது புலவர் அய்யாவும் பணிவான வாழ்க்கையையே வாழ்ந்தார்கள் பணிவு என்ற வார்த்தைக்கு அகராதியில், புலவரின் வாழ்க்கை என்று அர்த்தம் சொல்லலாம். அவரின் பணிவு பார்ப்போரை வியக்க வைத்தது.

ஆழியாறு மணி மண்டபத்தில் ஐந்து வேளை தவம் நடத்தி முடித்த பின்பு எழுந்து நின்று இருகை கூப்பி அன்பர்களை எல்லாம் வழி அனுப்பி வைத்து விட்டுத்தான் தன் இருப்பிடம் செல்வார்கள்.

பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும்போது, மிகவும் தாழ்ந்து பணிவுடன் வாழ்த்தி சான்றிதழ் வழங்குவார்கள். நமது உலக சமுதாய சேவா சங்கத்தில் 'பணிவுக்கு ஒரு புலவர்' என்ற அடையாளத்துடனே வாழ்ந்தார்கள்.

## 4. அடக்கம்

அடக்கம் துரித வெற்றிக்குச் சாவி. அய்யா அடக்கமாகவே கடைசி வரை வாழ்ந்தார்கள். மகரிஷியின் அணுக்கத் தொண்டர் என்ற நிலையைக் கடைசி வரை காட்டிக் கொள்ளாமலேயே, தொண்டரோடு தொண்டராக அடக்கமாக வாழ்ந்தவர். அடக்கம் அமரருள் வைக்கப் படும் என்ற வள்ளுவத்திற்கு இலக்கணமாக வாழ்ந்தவர்.

சத்திய விரதத்துடன், வைராக்கியத்துடனும் ஆன்மாக்களை இறை வடிவாகவே கருதி அருட்டியி செய்தலே வன்றொண்டு. இருள் வழியினின்று விலக்கி உயிர்கள் அருள்வழி வாழச் செய்தலே மிகச்சிறந்த தொண்டு. அத்தொண்டின்பால் வரும் இசைவசைகளால் மனவேறுபாடுறாத 'நான்செய்தேன்' என்னும் அகந்தையில்லாமல் 'எல்லாம் திருவருட்செயல்' என்று பணிவோடிருத்தலே அடக்கம்.

'நான் எனது என்னால்' என்று ஆணவங்கிளம்பாமல் மனத்தை உள்ளிழுத்து நிறுத்தலே அடக்கம். இத்தன்மைகளைச் சாதனை செய்தால் சித்த சுத்தியும் மனத்தெளிவும் உண்டாகிப் பரம பரிசுத்தமான இறைவனைத் தன்னுட் கலக்கும் இன்பமெய்தும் உள்ளத் தூய்மை உடலில் மெய் வாயில் வாய்மை ஆத்மசித்திக்கு இவை இன்றியமை யாதன. இத்தகைய ஆத்மசித்தி நிரம்பப் பெற்றவர் நமது அய்யா ஆவார்.

## 5. எளிமை

எளிமை என்பதற்கு அடையாளமே புலவர்தான். அளவுக்கதிகமான பொருள்களையோ, பணத்தையோ சேர்த்து வைப்பது அவரின் பழக்கமில்லை. எளிமை தூய்மையே அவரது வாழ்க்கையின் இலட்சியமாக இருந்தது.

## 6. இன்சொல்

இணக்கத்தை வற்புறுத்தும்போதும் பிணக்கத்தைத் தீர்க்கும் போதும் இன்சொல்லையே பயன்படுத்த வேண்டும். இன்சொல்லால் அல்லவை நீங்கி நல்லவை பெறலாம்.

**'அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்'**

என்ற குறளில் பிறருக்கு நன்மை தரும் இனிய சொற்களை சொல்லின் தீயவை தேய்ந்து மறைந்து நன்மை வளர்ந்து பெருகும் என தெய்வப் புலவர் இன்சொல்லின் மேன்மையைக் கூறுகின்றார். புலவர் அய்யாவின் வாயிலிருந்து இன் சொற்கள் மட்டுமே வரும். அவரது சொற்களும் அவரைப் போலவே இனிமையாகவும் எளிமையாகவும் அர்த்தம் பொதிந்தவையாகவும் இருக்கும்.

## 7. நேர்மை

எண்ணம், சொல் இவற்றில் உண்மையும் செயலில் நேர்மையும் இருக்க வேண்டும் என்பது அருட்தந்தையின் உபதேசமாகும்.

**'உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்'**

என்று வள்ளுவரும் உணர்த்துகின்றார்.

மகாத்மா காந்தி நேர்மைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டினார். இன்றளவும் உலகத்தாரால் போற்றப்படுகிறார். நேர்மையின் சின்னமாகவே வாழ்ந்து காட்டினார் நமது புலவர். ஒரு நேர்மையான மனிதன் கடவுளின் உன்னதப் படைப்பாகும்.

முற்கூறின் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் பல வாழ்வியல் நெறிமுறைகளை நமக்குக் கற்றுத் தருகின்றன. அவற்றை நம் வாழ்வியல் வழிகாட்டிகளாகக் கொண்டு வாழ்ந்தால் நாமும் நாம் சார்ந்திருக்கும் சமுதாயமும் உயர்வடையலாம்.

அறநெறி தழுவிய ஒரு புது சமூக அமைப்பிற்காக - புதியதோர் உலகம் அமைப்பதற்காக அருளார்ந்த பெருங் கருணையும் அறிவார்ந்த செழுங் கருத்துக்களை இலக்கியச் செழுமையோடு வாழ்வியல் நெறிகளை உணர்த்தி வாழ்தலின் அர்த்தம் இயற்கைப் பேராற்றல் என வாழ்ந்து வழிகாட்டிய அய்யாவின் நெறிகளைப் பின்பற்றி வளமோடு வாழ்வோமாக!.

## 43. புலவர் எழுதிய கடிதங்கள்

வள்ளல் பெருமான் தன் வாழ்வில் அன்பர்களுக்கு எழுதிய கடிதங்கள் 'திருமுகங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. அதுபோல புலவர் தன் வாழ்வில் அன்பர்களுக்கு எழுதிய கடிதங்களும் ஆன்மீகக் கட்டுரைகளாக இன்று விளங்குகின்றன.

சென்னையிலும், ஆழியாரிலும் வாழ்ந்த புலவர் அவ்வப்போது கடிதங்கள் எழுதி அன்பர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். ஆழியாறிலும் பொள்ளாச்சியிலும் உறைந்த காலங்களில் புலவர் எழுதியுள்ள பல கடிதங்களில் அவரது இயல்புகள் பலவற்றை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

புலவர் மற்றவர்களைக் கொண்டு எழுதச் செய்யாமல், அவரே கடிதங்களை எழுதுவார். தமக்கு வருகின்ற கடிதங்களுக்கு அவரே பதிலும் எழுதுவார்.

அந்நாட்களில் கவரில் கடிதத்தைப் போட்டு அனுப்பும் முறை வழக்கில் இல்லை. கடிதங்களையே நான்காக மடித்து பின்புறத்தில் முகவரி எழுதி, தபாலில் சேர்த்து விடுவார். புலவர் சில சமயங்கள் கடிதங்களை அன்பர்கள் மூலம் அனுப்புவார்.

கடிதத்தை முதலில் 'வாழ்க வளமுடன்' 'சுத்த சக்தி' 'எல்லோரும் வாழ்க.... என்று எழுதிய பிறகே தொடங்குவார்.

சில கடிதங்களில்

*இன்பமே சூழ்க! எல்லாரும் வாழ்க!*

*அன்பே நிறைக! அருளே பொலிக!*

.................... என்று எழுதிய பிறகே தொடங்குவார்.

சில கடிதங்களில்

'நன்றாற்றி மகிழும் திருவருள்மிக்க பெருந்தகையீர்.............
தொண்டாற்றி இன்பமுறும் பெருந்தகையீர்.........

என்றும் தொடங்குவார்.

'குருவருளாலும் திருவருளாலும் இகபர நலங்கள் யாவும் பெற்று வாழ்க வளமுடன்'......

என்று கடிதத்தை முடிப்பார்கள்.

சில கடிதங்களில் 'தங்களுக்கு எல்லாம் செயல்கூடும்'......

என்றும் கடிதத்தை நிறைவு செய்வது அய்யாவின் வழக்கம்.

தமக்கு வரும் திருமண அழைப்பிதழுக்கு, வாழ்த்துரை எழுதி அனுப்புவது புலவரது வழக்கம். வாழ்த்துரை கவிதைகளில் அமைந்திருக்கும். நெருக்கமானவர்களின் குடும்பத் திருமணத்திற்கு முடிந்தவரை போய் வருவார்.

முக்கிய அலுவல் இருப்பின், தனது சகோதரர் மகன் திரு. இராமகிருஷ்ணனை அனுப்புவார். அல்லது வாழ்த்துரையை கண்ணாடி பிரேம் போட்டு மணமகனுக்கும் மணமகளுக்கும் இரண்டு பிரதிகளும், ஒருசில பிரதிகளை அச்சிட்டு வந்திருந்தவர் களுக்கும் வழங்கச் செய்வார்.

இது போன்ற பல சுவையான தகவல்களை அவரது கடிதங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

# 44. புலவர் சொன்ன பொன்மொழிகள்

- மனித வாழ்வு - புனித வாழ்வாக - புண்ணிய வாழ்வாக - பூரண வாழ்வாக அமைய வேண்டும்.
- உள்ளிருக்கும் தெய்வீகத்தை ஓங்குவிக்கவல்லது வைராக்கியம்
- தீய எண்ணங்களை உடலில் உள்ள நோய்க் கிருமிகளோடு ஒப்பிடலாம்.
- ஒன்றைப் பிடி - உறுதிப் பிடி - கடைப்பிடி - மெய்ப்பிடி.
- பண்புக்கு நிகரான நகைநட்டு ஏதுமில்லை.
- அவரவர் தகுதிக்கேற்ப அவரவர்க்கு அருளோ அல்லது பொருளோ இருக்கிறது.
- பொது நல ஸ்தாபனத்துக்குப் புனிதம் தரவல்லது தியாகம்.
- உனது குணத்தையும் குணக்கேட்டையம் தியானம் என்னும் கண்ணாடி விளக்கிக் காட்டுகிறது.
- நல்ல மனப்பான்மை படைத்திருப்பவனுக்குக் கடவுளின் அருள் கிட்டுகிறது.
- தெய்வப்பெற்றி வாய்த்தவனே தெய்வத்தை அறிகிறான்.
- துயரம் உள்ளத்தைத் தூயதாக்குகிறது.
- நடமாடும் தெய்வங்களாகிய மக்களிடத்து மெய்யன்பு கொண்டிருப்பவன் யாரைக்குறித்தும் பொறாமைப்படுவதில்லை.
- உண்மையை உள்ளபடி அறிவது ஞானம்.

- உயர்ந்த எண்ணங்களில் மூழ்கியிருங்கள். அதினின்று மேலாம் செயல்கள் வடிவெடுக்கும்.
- உண்மையை அறிந்து கொண்டால் போதாது. அறிந்து கொண்ட உண்மைக்கு ஏற்ப வாழ வேண்டும்.
- நலமோங்கி வாழ்க - நலமே பெறுக.
- வெற்றி வெற்றி - காரிய சித்தி - எடுத்த காரியம் யாவிலும் வெற்றி - எங்கும் வெற்றி.
- குற்றம் உணர்ந்தவன் குணவான்.
- குறைவில்லா நிறைவுடன் வாழ்க.
- நிறைபேறு நிறைவுடன் வாழ்க.

## 45. வேதலோக அன்புநிலையத் தலைவராக

பொள்ளாச்சியில் 2004 ஆம் ஆண்டு தங்கியிருந்தபோது, அய்யாவும் மூத்த பேராசிரியர் திருமதி.மாரியம்மாவும் அருட்தந்தையைப் பார்த்துவர ஆழியார் சென்றார்கள்.

வயோதிகத்தில் ஏற்படும் சிரமங்களைப் பற்றிக் கூறி, இந்த உடலிருக்கும் வரை உபத்திரவமும் இருக்கும் என்று அவர்களிடம் சுவாமிஜி கூறினார்கள்.

எத்தனையோ திட்டங்களைக் கொடுத்திருக்கிறேன். ஆனால் ஒன்றுகூட நானிருக்கும் காலத்தில் செயல்படுத்த முடியவில்லை. வயதானவர்களுக்கு சேவை செய்வது இளைஞர்களுக்கு ஒரு பெரும் பாக்கியம். அதற்காகத்தான் பிரம்மஞானத் தொண்டர்களை உருவாக்க நினைத்தேன். அத்திட்டமும் செயல்படாமல் போய்விட்டது.

எதிர்காலத்தில் மனவளக்கலையை உலக மக்களிடத்தில் கொண்டு செல்லும் சேவையில் ஈடுபடுபவர்களில் சிலர் திருமணம் செய்ய விரும்ப மாட்டார்கள்.

வயது முதிர்ந்த காலத்தில் அவர்களைப் பாதுகாக்க பராமரிக்க ஒரு இடம் இருக்க வேண்டும். உலக சமாதானத் திட்டங்களிலேயே தொண்டர் படையைப் பற்றிக் கூறியுள்ளேன். நீங்களெல்லோரும் படித்திருப்பீர்கள் என்றெல்லாம் கூறினார்கள்.

பிறகு பொள்ளாச்சி திரும்பிய பின்னர் அய்யாவும் திருமதி.மாரியம்மாவும் சில நாட்கள் வரை, மகரிஷி கூறியவற்றைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.

தாம் அனுபவிக்கின்ற வயோதிகத் துன்பங்களை மனவளக் கலைஞர்கள் அனுபவிக்கக் கூடாது. அப்படிப்பட்ட துன்பமுறும்

நேரத்தில் அரவணைப்பு வேண்டும். இதற்காகத்தான் இதையெல்லாம் அருட்தந்தை நம்மிடம் கூறியிருக்கிறார்கள் என்று சிந்தித்துக் கொண்டே இருந்தனர்.

பிறகு ஒரு நாள், திருமதி.மாரியம்மாள் மட்டும், மகரிஷியைப் பார்க்கச்சென்றார்கள். ஒத்த கருத்துடையவர்கள் குடும்பக் கடமைகளை முடித்த பின்னர் ஒரே இடத்தில் தங்கியிருந்து கூட்டு உணவு முறையைப் பின்பற்றி மரணம் சம்பவிக்கும்வரை ஐந்து வேளையும் தவம் செய்து, தங்கள் குடும்பத்தவரையும் உலகத்தையும் வாழ்த்திக் கொண்டிருந்தாலும், விரைவில் ஒருலக ஆட்சி மலரும் என்று சுவாமிஜி அவரிடம் கூறினார்.

பிறகு, திருமதி.மாரியம்மாள் எப்போது குருவைப் பார்க்கச் சென்றாலும் இக்கருத்துக்களை ஒட்டியே பேசினார்.

பொள்ளாச்சி வந்ததும் அய்யாவிடம் 'சுவாமிஜி என்னிடம் மட்டும்தான் இக்கருத்துக்களை கூறிக் கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். என்ன காரணம் என்று தெரியவில்லை' என்றார்.

'விஷயம் ஏதோ இருக்கும்மா - அதனால்தான் உங்ககிட்டேயே சொல்றார்' என்றார் புலவர்.

மீண்டும் ஒரு நாள் சுவாமிஜியைப் பார்க்கச் சென்ற அதே கருத்துகளைக் கூறினார்.

'சுவாமிஜி! அதற்கான ஒரு அமைப்பை ஏற்படுத்த என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டார்.

உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் திரு. எஸ்.கே.எம். ஐயாவிடம் இது விபரம் பேசும்படிக் கூறினார்கள்.

அம்மாவும் தலைவருக்கு விபரமாக - மகரிஷி கூறியவற்றைத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதினார்கள். அதன் பிறகு 2005ல் பேராசிரியர்கள் கூட்டத்தின்போதும் இது விபரம் கூறினார்கள்.

உலக சமுதாய சேவா சங்க நடைமுறைகள் விதிப்படி, இப்படி ஒரு அமைப்பை நிறுவ இயலாது. தனிநபர்கள் நிறுவினால், நாங்கள் ஆதரவு கொடுக்க இயலும் என்று தலைவர் கூறிய பதிலை மகரிஷியிடம் தெரிவித்தார்கள்.

'தனி டிரஸ்ட்டாக அமைத்து செயல்படுத்த வேண்டும். அதை நீயே செய் அம்மா' என்றார்கள் மகரிஷி.

அம்மாவிற்கு எதுவுமே புரியவில்லை. என்ன செய்யலாம் என்று அய்யாவிடம் கேட்டார். மகரிஷியிடமே கேட்போம் என்று இருவரும் அருட்தந்தையைப் போய்ப் பார்த்தனர்.

டிரஸ்டை எப்படி ஏற்படுத்த வேண்டும் என்ற விபரம் கூறி, 'ட்ரஸ்டுக்கு தியாகராஜனைத் தலைவராக்கி, நீ நிறுவனராக நிர்வாகத்தைப் பார்த்துக் கொள் அம்மா' என்றார்.

'எனக்குப் பொறுப்புகளெல்லாம் வேண்டாம் சுவாமிஜி. நான் முழுமையாகத் தொண்டு செய்கிறேன்' என்றார் அம்மா.

'தியாகராஜனுக்கு எதுவும் தெரியாது. வெறும் கையெழுத்துத்தான் போடுவார். நீதான் மற்றதெல்லாம் பார்க்க வேண்டும்' என்றார்.

'இந்த அமைப்புக்காக குருகாணிக்கைப் பணத்திலிருந்து, எனது பங்களிப்பாக ஒரு லட்ச ரூபாய் தருகிறேன்' என்றும் சுவாமிஜி கூறினார்.

புலவர் அய்யா தலைமையில், சுமார் ஆறு ஏக்கர் நிலத்தில் மகரிஷி அவர்களின் ஆசியோடும் குருகாணிக்கை நிதி உதவியோடும், 2005ல் அருட்தந்தை கூறிய பெயரான வேதலோக அன்பு நிலையம் ட்ரஸ்ட் ஏற்படுத்தப்பட்டது.

அருட்தந்தையின் மகாசமாதிக்குப் பின்னர், அய்யா அவர்கள் ஆழியாறிலேயே இறுதிக் காலம் வரை தொண்டு செய்ததால், மாதம் ஓரிரு முறை மட்டும் வேதலோக அன்பு நிலையத்தில் தொண்டாற்றினார்.

இறுதியாக *10.12.2011* அன்று பேரானந்த நிலை என்ற தலைப்பில் பௌர்ணமி சிறப்பு விளக்கப் பயிற்சியில், உருக்கமான உரை ஒன்றை நிகழ்த்திச் சென்றார்கள்.

இந்த அமைப்பின் நோக்கங்கள் மிகவும் உன்னதமானவை. உயர்வானவை.

1. அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் தத்துவங்களை உலக மக்களிடம் எடுத்துச் செல்லும் பேராசிரியர்கள் தொண்டர்களின் ஒய்வுகால காப்பகம்.

2. உலக நலத் தொண்டர்களின் தொண்டினைத் தொடர்ந்து செய்வதற்கு தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட அருட்தொண்டர்களின் உறைவிடம்.

3. தனது குடும்பக் கடமைகளை நிறைவு செய்த பின்னர் சமுதாயக் கடமைக்கு தன்னை தயார்படுத்திக் கொண்டு, தொண்டாற்றி முழுமைப்பேறு அடைவதற்கான பயிற்சியகம்.

4. வேதலோக அன்பு நிலைய அறங்காவலர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஆன்மீக மேம்பாட்டுப் பயிற்சியகம் மற்றும் விடுப்பு காலங்களில் ஓய்வகம்.

5. உலக சமுதாய சேவா சங்கம் மற்றும் ஆழியாறு அறிவு திருக்கோயிலுக்கு உறுதுணையாகச் செயல்படும் ஆன்மீக நிலையம்.

6. ஆன்மீக அறிவியல் மேம்பட்டு கல்வி நிலையம்.

**இதன் முகவரி:** வேத லோக அன்பு நிலைய டிரஸ்ட் - *11 - 193* ஏ - வேடசந்தூர் - வால்பாளையம் மெயின்ரோடு - பொள்ளாச்சி.

❋

# 46. திருவாசகத்தில் உருகிய தியாகராஜர்

புலவர் அய்யா அவர்கள், தமது அருட்பணிகளை எண்பது வயது வரையிலும் ஆற்றி வந்தார்கள். மகா சமாதியாவதற்கு முன்னர் இரண்டு ஆண்டுகளாக ஆழியாறில் தாம் தங்கியிருந்த அறையில், இரவு ஒன்பது மணிக்கு திருவாசக சத்சங்கத்தில் இருந்து வந்தார்கள்.

இரவு உணவு முடிந்தவுடன் ஆழியார் அறிவுத் திருக்கோயிலில் பணிபுரியும் இளைஞர்களில் திரு. நவநீதன் திரு. பானுதேவன், திரு. பாலாஜி, திரு. காவிரி மணியம், திரு, குமரசெல்வன் போன்ற அன்பர்கள் அய்யாவின் இருப்பிடத்திற்கு வந்துவிடுவார்கள். நான் ஆழியார் செல்லும்போது இந்த சத்சங்கத்தில் கலந்து கொள்வது வழக்கம்.

திருவாசகத்தில் நாள்தோறும் சில பாடல்களை அன்பர்கள் படிப்பார்கள். அப்பாடலுக்கு அருட்தந்தையின் வழியில் அவர்களுக்கு பொருள் கூறி உபதேசம் செய்வார்கள்.

திருவாசகம் என்பது - மெய்ப்பொருள் நிரம்பிய வார்த்தை. மெய்ப்பொருளைத்தரும் வார்த்தை. சாத்திரங்களில் சிறந்தது திருமந்திரம். தோத்திரங்களில் சிறந்தது திருவாசகம்.

அய்யா அவர்கள் திருவாசகத்தின் மீது அளவுகடந்த ஈடுபாடு கொண்டிருந்தார்கள். திருவாசகத்திற்கு உருகாதார் யார்? புறச்சமயத் தவரான ஜி.யு. போப் திருவாசகத்திற்கு உருகி, கண்ணீர் மல்க ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருப்பது ஒன்றே இதன் உலகளாவிய புகழுக்குப் போதுமான சான்றாகும்.

திருவாசகத்தின் பெருமையை, அய்யா அழகாகவும், அருமையாகவும், விரிவாகவும், விளக்கமாகவும் கூறி, அன்பர்களை மகிழ்விப்பார்கள்.

**'வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை**
**நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**

**தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவைக் கலந்து என்**
**ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே'**

என்ற ஆளுடை அடிகள் அருள்மாலைப் பாடலைப் பாடி மகிழ்வது அய்யாவின் வழக்கம்.

திருவாசகத்தை, தமிழ் மொழியில் அமைந்த வேதம் எனலாம். அருள் நாட்டம் கொண்டிருப்பவர்களுக்கு அருள் தாகத்தை வளர்க்கும் தன்மையதாய்த் திருவாசகம் அமைந்திருக்கிறது. அருள்நாட்டத்தின் கூறுகளைத் தெளிவுபடுத்துவது இந்த நூலின் நோக்கமாகும்.

அருள்தாகம் பிடித்தவர்கள் பாக்கியவான்கள் ஆகிறார்கள். சுடர் விளக்குக்கும் தூண்டுகோல் ஒன்று தேவையாயிருப்பது போன்று, அருள் பித்தம் பிடித்தவர்களுடைய பித்தத்தைப் பழுக்க வைக்கவல்லது வாதவூரரது வாசகம்.

சாதன வகைகளின் முறைமைகளையெல்லாம் திருவாசகம் தன்னகத்து அடக்கி வைத்திருக்கிறது. சாதனத்தில் நிலைக்கு ஏற்பச் சாதகனுக்கு அவை யாவும் விளங்கும் சத்சங்கம் பண்ணுவதற்கு நிகர் திருவாசகத்தில் திளைத்திருப்பது.

நல்லார் இணக்கம் சாதனைக்கு ஓர்மைப்படுத்துவது போன்று இந்த நூலும் செய்யவல்லது. திருவாசகத்தில் திகழ்கிற பரம்பொருள் விளக்கம் அனுபூதிவான்களுக்குப் பரவசத்தை உண்டுபண்ணுகிற அருள் விருந்தாகும்.

ஜென்மாந்திரங்களில் மனிதனுடைய உள்ளத்தில் புகுந்துள்ள சிற்றியல்புகள் - அந்தச் சிற்றியல்புகளைக் களையும் முறைகள் - பரத்தை நாடுகிறவர்கள் பெறவேண்டிய பேரியல்புகள் - அப்பேரியல்புகளை வளர்க்கும் முறைகள் - அருள்தாகம் கொள்ளுதல் - அருளைப் பெறுதல் - அருளில் ஆழ்ந்து தோய்தல் - பரமனைக் காணுதல் - பரமனோடு தொடர்புகொள்ளுதல் - பரமனிடமிருந்து பெற வேண்டியதைப் பெறுதல், பக்தியைப் பெருக்குதல் பக்தி பராபக்தியாக வடிவெடுத்தல் பரதத்துவ தரிசனம் பெறுதல் - பரத்தினில் இரண்டறக் கலத்தல் - இத்தனைவித தெய்வீகப் படித்தரங்குகளும் அடங்கப்பெற்றது திருவாசகம்.

அதில் எப்பகுதியை ஆராய்ந்து பார்த்தாலும் அது ஜீவனை சிவசொரூபமாக்க வல்லதாம். அது ஆத்ம சாதகர்களுக்கு வாய்ப்பதற்கு அரிதொரு அருள் விருந்தாம். அதனோடு தொடர்பு வைக்கின்ற ஆத்ம சாதகம் அருட்செல்வனாகின்றான்.

சாதனத்தில் அவன் எந்தப் படித்தரத்தில் இருந்தாலும் அதினின்று மேல்நோக்கிப் போவதற்கு அவன் வழி காண்பான்.

# 47. ஒன்றைப் பிடி – உறுதிப்பிடி – கடைப்பிடி

தனது நோக்கத்தில் இலட்சியத்தில் உறுதியாக நின்று வெற்றி பெற்றவர் அய்யா.

தனது இலட்சியமான ஆன்மீகப் பாதையில் சரியாகப் பயணித்தார். தனது நோக்கமான உன்னதமான சற்குருவை சிக்கெனப் பிடித்துக் கொண்டார்.

தனது சொற்பொழிவுகளில் அடிக்கடி 'ஒன்றைப்பிடி - உறுதிப்பிடி - கடைப்பிடி - மெய்ப்பிடி' என்று சொல்வார்கள்.

தனது வாழ்வில் மனவளக்கலை என்ற ஒன்றை உறுதியாக பிடித்தார்.

தன்னுடைய குருவை உறுதியாகப் பிடித்துக் கொண்டார்.

குருவின் உபதேசங்களைப் உறுதியாகப் கடைப்பிடித்துக் கொண்டு, அதன்படி வாழ்ந்தார்.

குருவின் மொழிப்படி மெய்ப்பிடித்தார்.

தனது எண்ணம் சொல் செயலில் குருவின் நினைவாலேயே வாழ்ந்தவர்.

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுரு சிந்தித்தறிதல் தானே'**

என்ற திருமூலர் சிந்தனையை தம் சிரம் மேற்கொண்டு வாழ்வைத் தொடங்கிய பெருமை இவருக்குண்டு என்பதை எவராலும் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

ஒரு முறை மணிமண்டபத்திற்கு அதிகாலை தவம் நடத்த தன் இருப்பிடத்திலிருந்து சென்றார்கள். மழைக்காலம். ஒரு கையில் குடை. மற்றொரு கையில் டார்ச் லைட்.

மணிமண்டபம் அருகே இருக்கும் வாய்க்காலில் (மலையிலிருந்து வழியும் நீர் செல்லும் வாய்க்கால்) தாண்டும் போது, அவரது குடை நீரில் விழுந்து விட்டது. அதை எடுக்க கீழே குனிந்தார். தானும் வாய்க்காலில் விழுந்து விட்டார்.

'வேதாத்திரி காப்பாற்று! வேதாத்திரி காப்பாற்று! என்று உரக்கக் கத்தினார். அருகிலிருந்த காப்பாளர்கள் வந்து அவரை மேலே தூக்கி முதலுதவி செய்தார்கள்.

தன் எண்ணம் முழுவதும் குருவின் மேல் இருக்கும் ஒரு சீடரால்தான், இவ்வாறு 'வேதாத்திரி காப்பாற்று!' என்று சொல்ல இயலும்.

ஆபத்து வந்தபோது மட்டுமல்ல, அன்பர்களுக்கு ஆசி கூறும் போதும் - சாப்பிடும்போதும் - உறங்கும்போதும் - ஏன் தன்னுடைய எல்லா கர்மங்கள் செய்யும்போதும் 'குருவே துணை' என்பார்கள்.

யாராவது அன்பர்கள் கோரிக்கை வைத்தால் 'குருவின் அருளால் நல்லது நடக்கும்' என்பார்கள்.

தன்னுடைய உயிர் மூச்சு இருக்கும்வரை, குருவின் நினைவுடனேயே வாழ்ந்து மறைந்தார்கள். குருவானவர் அவரது உணர்வில், உள்ளத்தில், இரத்தத்தில் கலந்தவர்.

தன் சொல்படியே, ஒன்றைப்பிடித்து, உறுதிப்பிடித்து, கடைப்பிடித்து வாழ்ந்து வழிகாட்டியவர்.

# 48. ஆனந்தமாக இருங்கள்

**"ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே!**
**வாழத் தெரிந்திடில் ஆனந்தமே!**

அய்யா, தனது ஒவ்வொரு சொற்பொழிவின் இறுதியிலும் இந்தப் பாட்டினை பாடி தனது உரையை முடிப்பது வழக்கம். இதன் மூலம் அங்கிருக்கும் அன்பர்களுக்கும் மானுடத்திற்கும், அய்யா சொன்ன செய்தி, 'ஆனந்தமாக இருங்கள்' என்பதேயாகும்.

மனிதப் பிறப்பின் நோக்கமே நிலையான - நித்தியமான ஆனந்தத்தைப் பெறுவதுதான். ஆன்மீக - ஆனந்தம் - ஆனந்தமயமான வாழ்க்கைக்கும் பெயர்தான் ஆன்மீக வாழ்க்கை. ஆனந்தமயமாக வாழ முடியாமல் போனதற்கு மனிதன் கண்டுபிடித்த புதுப் பெயர்தான் சாதாரண வாழ்க்கை.

நீங்கள் ஆனந்தமாக வாழ முடிவு எடுக்காத வரை குருவே நேரில் வந்தாலும் உங்களுக்கு எந்த உதவியும் செய்ய முடியாது. அதனால்தான் அய்யா அடிக்கடி 'ஆனந்தமாக இருங்கள்' என்று உபதேசித்தார்.

ஆனந்தமாக வாழ முழு மனதாக முடிவு எடுத்துவிட்ட பட்சத்தில் நீங்கள் தேடாவிட்டால் கூட குரு உங்களைத் தேடி வருவார். இதில் விந்தை என்னவென்றால் அப்படி முழு மனதாக முடிவு எடுத்துவிட்ட பட்சத்தில் உங்களால் ஒரு நொடி கூட சும்மா உட்கார்ந்து நேரத்தை வீணடிக்க முடியாது.

ஆனந்தமாக இல்லாதிருக்க என்னென்ன செய்ய முடியுமோ அவ்வளவையும் நாம் செய்து கொண்டிருக்கிறோம். தேவை சிறு மாற்றமே.

ஆனந்தமாக வாழ தைரியம் வேண்டும். ஆனந்தமாக வாழ, செயல்பட புத்திசாலித்தனம் வேண்டும். ஆனந்தம் என்பது

பலருக்குத் தெரியாத ஒன்று. தெரிந்த சிலருக்கு அது புரியாத ஒன்று. அனுபவித்து உணர்ந்த வெகு சிலருக்கு அது விளக்க முடியாத ஒன்று. ஆனந்தம் மாபெரும் சாகசம். ஞானக் கருத்துக்களை உள்ளே வரவிடுங்கள். அது சண்டையிட்டாவது ஜெயித்து விடும்.

துக்கம் நோக்கிச் சுழலும் வாழ்க்கைச் சக்கரத்தையும், காலச் சக்கரத்தையும், ஆனந்தம் நோக்கிச் சுழல வைத்தால் பிரச்சனை தீர்ந்தது. திருப்புங்கள் ஆனந்தமாக இருப்பீர்கள்.

ஆனந்தமாக இருப்பது இயற்கை, ஆனந்தமில்லாமல் இருப்பதுதான் செயற்கை. ஆனந்தத்தின் வழி அழகானது, ஆனந்த மயமானது. காரணம் அந்த வழி ஆனந்தத்தில் துவங்கி, ஆனந்தத்திலேயே முடிகிறது.

ஆனந்தத்தை அனுபவிக்கலாம் அதையும் தாண்டி 'ஆனந்தம் இங்கேதான் இருக்கிறது. ஆனந்தத்தை இப்படிக் கூட அடையலாம். இதுதான் ஆனந்தம்' என்று சுட்டிக் காட்ட முடியும். ஆனால் ஆனந்தத்தை விளக்க முடியாது. உணர முடியும்.

எல்லா ஞானிகளின், ஞான உபதேசங்களும், தியான முறைகளும் அந்த ஆனந்தக் கடலை காட்டத்தான். தனி மனிதன், தன் தனி வாழ்வில் தனக்குள்ளேயே ஆழ்ந்து கண்டுபிடிக்க வேண்டிய ஒன்றுதான் இந்த ஆனந்தம்.

நமக்குள்ளேயே நமது உடம்புக்குள்ளேயே ஆனந்தம் அமைந்துள்ளது. எப்படி? நமது உடலுக்குள் ஐந்து அடுக்குகள் இருக்கின்றன. அந்த அடுக்குகளை கோஷம் என்று சொல்லுவார்கள். கோஷம் என்றால் அடுக்கு.

**முதல் அடுக்கு அன்னமய கோஷம் - இது திடப்பெட்டகம்**

**இரண்டாம் அடுக்கு - பிராணமய கோஷம் - சக்திப் பெட்டகம்.**

**மூன்றாம் அடுக்கு - மனோமய கோஷம் - குழப்பப் பெட்டகம்.**

**நான்காம் அடுக்கு - விஞ்ஞானமய கோஷம் - புதிர்பெட்டகம்.**

**ஐந்தாம் அடுக்கு - ஆனந்தமய கோஷம் - ஆனந்தப் பெட்டகம்.**

இந்த ஆனந்தப் பெட்டகத்தைத் திறக்கும் சாவியின் பெயர் தியானம்.

தியானம் என்பது ஆன்மாவின் கண்ணாடி. அதன் வழியே மனிதன் இறைவனைத் தன்னில் கண்டு ஆனந்தமாயிருக்கிறான்.

பால் நிரப்பப்பட்ட பால் பாக்கெட் போல, உங்களின் மொத்த உடலையும் ஆனந்தம் நிரப்பியிருப்பதாக பாவனை செய்யுங்கள். ஒவ்வொரு செல்லும் ஆனந்த சக்தியில் மூங்கியிருப்பதாக முழுமையாக ஆழமாக உணருங்கள். கொஞ்சம் கொஞ்சமாகப் பொங்க ஆரம்பிக்கும். ஆனந்த உணர்வுக்குள் முழுகிப் போங்கள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் இதைச் செய்யுங்கள். ஆனந்தமாக இருப்பீர்கள். அதன் வழியையும் கற்றிருப்பீர்கள்.

'ஆனந்தம்' என்ற ஒரே வாக்கியத்தில் மகா வாக்கியங்கள் நான்கையும் ஒன்றாக்கி அருளிய வார்த்தையாகும். அஹம் பிரம்மாஸ்மி - நான் பிரம்மமாக இருக்கிறேன். பிரம்மத்தினுடைய நிலை ஆனந்தமாக இருத்தல். இறைவனான பிரம்மம் அள்ள அள்ளக் குறையாத ஓர் ஆனந்தம்தான். நீ பிரம்மமாக இருக்கிறாய் - தத்துவமஸி. ஆகையால் நீ ஆனந்தமயமாகத்தான் இருக்க வேண்டும் என்று நம்மையெல்லாம் அந்த மகான் ஆசிர்வத்திருக்கிறார்கள்.

இறைவனின் இயல்பே ஆனந்தம்தான் என்பதால் அவனை சச்சிதானந்தம் என்று அழைக்கிறோம். இறைவனுடன் ஒன்றும் மனிதன் இயற்கையாகவே முடிவற்ற ஆனந்தத்தை அடைகிறான். இறைவன் எல்லோரையும் தன்னுடைய இருப்பான எல்லையற்ற ஆனந்தத்திலிருந்துதான் படைத்துள்ளான்.

தாந்த்ரீக ஞானியிடம் சீடன் 'ஆனந்தமாயிருக்க நான் ஆசைப் படுகிறேன்' என்றான். ஞானி 'உண்மையாகவா?' என்று கேட்க சீடன் 'ஆமாம் ஆமாம்' என்றான்.

'அது மிக எளிது - உன் கோரிக்கையின் இரு கடைசி வார்த்தை களை நீக்கிவிடு. ஆனந்தமாயிருப்பாய்!' என்றார்.

தனக்கென்று வாழ்கின்றவன் விலங்கு, பாதி தனக்காகவும் பாதி பிறருக்காகவும் வாழ்கின்றவன் மனிதன். பிறர்க்கு என்றே வாழ்பவன் தேவன். இதில் தேவராக - தெய்வமாக - ஒப்பற்ற ஞானியாக - மாபெரும் துறவியாக - குருதேவரின் மாற்று உருவமாக வாழ்ந்து மற்றவர்களையும் வாழ்வித்தவர் நமது புலவராவார்.

***'பூமியில் நேராக வாழ்பவர் எல்லோரும்***
***சாமிக்கு நிகரில்லையா?'***

என்ற கவிஞரின் கருத்திற்கேற்ப நாட்டில் வாழ்ந்து காட்டியவர் சுவாமிஜியின் முதன்மைச்சீடர் அய்யா என்றால் மிகையன்று.

ஆனந்தமாக இருங்கள் என்று அருளி - ஆன்மீகப் பாதையில் அனைவரையும் பயணிக்க வைத்தவர் நமது புலவர் அய்யா.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.**

என்ற குறள் மொழியின் இலக்கணத்திற்கு ஒப்பற்ற ஞானசூரியன் புலவர் அய்யா இலக்கியமாகத் திகழ்கிறார். அவர் ஊன்றிய விதைகள், இன்று வளர்ந்து உலக சமுதாயச் சேவா சங்கத்தின் பெரிய பெரிய விருட்சங்களாகத் தழைத்து பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்க அருள் பெறுவதற்கு இளைப்பாறும் இடமாக பரிணமித்துள்ளது.

அய்யா, சுவாமிஜி காட்டிய பாதையை, அவர் விரும்பிய பாதையைப் பின்பற்றி நடந்து, நாமும் நாடும், உலகமும் நலம்பெற வாழ்வோம்.

நம்மிடம் இருக்கும் அந்த இறைவன் ஆனந்த சொரூபன் என்று உணர்ந்து, நாம் பெற்ற இந்த ஒரு மனித வாழ்க்கைதான் நம்மை கடைத்தேற்ற உதவும் ஒரே ஆயுதம் என்பதை உணர்ந்து ஆனந்தமாக இருப்போம்.

❋

# 49. இறைநிலைப் பயணம்

'நதிகளுக்கு ஓய்வு ஒழிச்சல் இல்லை. அவைகளின் தாயகமாகிய கடலோடு கலந்த பின்னரே அவைகள் அமைதி பெறுகின்றன. கடலினின்று நீர் வெப்பத்தால் நீராவியாக மாறி மேகங்களாக உருப்பெறுகின்றன. மலையில் விழும் மழைநீர் நதிகளாகப் பெருக்கெடுத்தோடுகின்றன.

ஆகவே, நதிகள் உண்டாவதற்குக் காரணமாக இருப்பது கடலே, அதே போன்று ஓய்வு ஒழிச்சலில்லா ஜீவன் அல்லது தனிப்பட்ட ஆன்மா அதன் மூலத்தை அடையும்பொழுது அமைதி பெறுகிறது. அதாவது பிரம்மம் அல்லது அழியாப்பொருளாகிறது.'

புலவர் தம் வாழ்வின் முடிவு பற்றிக் குறிப்புகள் பல காட்டினார். ஆனால் அன்பர்கள் அவைகளின் மீது நம்பிக்கை கொள்ளவில்லை.

என்னுடைய 79 வயதுக்கப்புறம் ஒரு கண்டம் உண்டு. அதில் பிழைத்துக் கொண்டால் 87 வயதுவரை இருப்பேன் என்று என்னிடமே ஒரு முறை அய்யா சொல்லியிருக்கிறார்கள்.

மகா சமாதி ஆவதற்கு பத்து நாட்களுக்கு முன்னர் தொலைபேசியில் பேசினார்கள். அவரது பூர்வீக இடத்தில் கட்டவிருக்கும் சுற்றுச்சுவர் பற்றி பேசிக் கொண்டிருந்தோம். அப்போது கூட அவரது குறிப்பை உணரும் பக்குவம் எனக்கு ஏற்படவில்லை.

கடைசி இரண்டு ஆண்டுகளாக புலவருக்கு கல்லீரலிலும் சிறுநீரகத்திலும் பாதிப்புகள் ஏற்பட்டன. அடிக்கடி கால் வீங்குதல், சிறுநீர் கழிவதில் தொந்தரவு ஏற்பட்டுக் கொண்டே இருந்தது.

அய்யா 2010ம் ஆண்டில் இரண்டு முறை மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். கல்லீரலில் பாதிப்பு ஏற்பட்டு, அதனால் கால்களில் வீக்கமும் சிறுநீரகத்தில் பாதிப்பும் ஏற்பட்டது.

மூன்று முறை மருத்துவமனையில் இருந்தார்கள். இரண்டு முறை சேலம் தனியார் மருத்துமனையில் சிகிச்சை பெற்றார்கள். மூன்றாவது முறை புதுடில்லி சென்று, அங்குள்ள தனியார் மருத்துவமனையில் கல்லீரல் குறித்த பரிசோதனை செய்து வந்தார்கள். அவரது சகோதரர் மகனார் அன்பிற்கினிய திரு.இராமகிருஷ்ணன் உடனிருந்து கவனித்து வந்தார்கள்.

மகான்களுக்கு துறவிகளுக்கு நோய் வரலாமா? 'இந்த உடலுக் குரிய பதிவை சஞ்சித கர்மத்தை - இந்த உடல் வாழும் காலத்திலேயே கழித்துக் கொண்டால்தான் முக்தி பெற இயலும் என்பது விதி.

எனவேதான் இராமகிருஷ்ண பரமஹம்சர், ரமணர், வேதாத்திரி மகரிஷி போன்ற ஞானிகள் உடலுக்குரிய உபாதைகளை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டனர். புலவரும் அவரது உடலுக்குரிய உபாதைகளை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டார்.

நோயற்ற நிலையிலும் நோயுற்ற நிலையிலும் அய்யா ஒரே மாதிரியாக இருந்தார். அவர் நோயுற்றிருந்த காலத்து அவரது இனிய பண்புகளும் இயற்கையான பாசமும் நேசமும் ஒருபோதும் மாறுதலடைந்ததில்லை. அய்யாவை அணுகியவர்கள் அனைவரும் எப்போதும் இருப்பது போன்றே அளவிலா அன்பை உணர்ந்தனர்.

மகாசமாதிக்கு முந்திய நாளான 2011 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் நாள் அய்யா பேசும் நிலையில் காணப்பட்டார்.

### கடைசி வார்த்தை

தன்னை கவனித்து வந்த அ.நி.காவிரிமணியத்திடம் முதல் நாள் இரவு பத்து மணிக்கு - அய்யா கடைசியாகப் பேசினார்கள். 'அய்யா ஏதாவது வேண்டுமா? என்று அன்பர் கேட்கிறார். 'ஒன்றும் வேண்டாம் எல்லாவற்றையும் நான் பார்த்துக்கிறேன். நீங்கள் போய் தூங்குங்கள் 'இதுதான் புலவர் கடைசியாக சொன்ன சொற்கள்.

அய்யா முக்தி அடையும் முதல் நாள் இரவு, பாலும் தேனும்தான் கடைசியாக அருந்தினார்கள்.

டிசம்பர் 30 தேதி காலை நான்கு மணிக்கு சிறுநீர் கழிக்க சென்றவருக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டது முற்றிலும் நினைவு இழந்தார். மருத்துவர்கள் செய்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. நாடித் துடிப்பும் குறையலாயிற்று.

டிசம்பர் 30 ஆம் நாள் - 2010 வெள்ளிக்கிழமை காலை 7.20 மணிக்கு புலவர் தியாகராஜன் தனது குருவான வேதாத்திரியின் திருவடிகளை அடைந்தார். அவரது முகம் எப்பொழுதும் போல் அமைதியாகவே இருந்தது. தெய்வீகமான புன்முறுவலும் அசாதாரணமான அமைதியும் அவரது முகத்தில் தவழ்ந்தன.

அவரது பூத உடல் அன்பர்களின் தரிசனத்திற்காக ஆழியார் - வேதலோக அன்பு நிலையத்தில் வைக்கப்பட்டது. பத்திரிக்கைகள் மூலமாக விவரம் அறிந்த பக்தர்களும் அன்பர்களும் அறங்காவலர் களும் பேராசிரியர்களும் சாதுக்களும் திரண்டு வரலாயினர்.

தமது குருநாதர் அருளிய 'வாழ்க வையகம் வாழ்க வளமுடன்' என்ற மந்திரத்தை இரண்டு நாட்களும் உச்சரித்து தியானத்தில் ஆழ்ந்தனர் அன்பர்கள். அன்று இரவு 7 மணி வரை அவரது பூத உடல் அங்கு வைக்கப்பட்டிருந்தது. பின்பு அவரது சொந்த ஊரான - சேலத்துக்கு 50 கி.மீ தொலைவில் உள்ள பெரியமணலிக்கு அருகில் உள்ள தேவனாங்கபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இரவு 2 மணிக்கு அங்கு ஆத்ம சாந்தி தவம் நடத்தப்பட்டது.

முன்பே புலவரின் விருப்பப்படி அவருக்குச் சொந்தமான 15 சென்ட் இடத்தில் சமாதிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மறுநாள் பிற்பகல் 31.12.2010 சனிக்கிழமை புலவரின் உடல் தேவனாங்கபுரத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

நாற்பது ஆண்டுகாலம் குருவின் நிழலாய், அவரது ஒவ்வொரு அசைவிலும் கூடவே இருந்து, இணைந்து உடலால் உயிரால் உணர்வால், உருவத்தால், குருவாகவே மாறி உலக சமுதாய சேவா சங்கத்தின் மூத்த பேராசிரியராகவும், பொள்ளாச்சி வேதலோக அன்புநிலைய அறக்கட்டளையின் தலைவராகவும், லட்சக்கணக்கான அன்பர்களுக்கு மனவளக்கலை பயிற்சி அளித்த புலவர் தமது சொந்த பூமியில் அமர்ந்துவிட்டார்.

சமாதியானாலும் மகான்களுக்கு மரணமில்லை. அவர் இறை நிலையோடு பயணம் சென்று விட்டாலும் அவர் சென்ற ஆன்மீகப் பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

❋

# 50. வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

| | | |
|---|---|---|
| அவதார நாள் | : | 1932 - செப்டம்பர் ஆங்கீரஸ ஆண்டு ஆவணி மாதம் 21 ஆம் நாள் ஆறாவது குழந்தையாக அவதரித்தல். |
| தலம் | : | பெரியமணலி கிராமம். திருச்செங்கோடு வட்டம். |
| தாயார் | : | திருமதி. பொன்னம்மா |
| பெயர் | : | தியாகராஜன் |
| உடன்பிறந்தோர் | : | மூன்று மூத்த சகோதரர்கள், இரண்டு மூத்த சகோதரிகள். |
| ஆரம்பக்கல்வி | : | வேப்பம்பட்டி புதூர் கிராமப் பள்ளி. |
| 1944 -1951 | : | திருச்செங்கோடு உயர்நிலைப் பள்ளிக் கல்வி. |
| 1955 - 1958 | : | பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ் கல்லூரியில் தமிழ் வித்வான் கல்வி. |
| 1959 -1960 | : | குமாரபாளையம் கல்லூரியில் பண்டிட் ஆசிரியர் பயிற்சி. |
| 1961 | : | அரசுப் பணி. தமிழாசிரியராக ராணிப்பேட்டையில் பணிபுரிதல் |
| 1962 | : | எம்.ஏ. (சைவசித்தாந்தம்) கல்வி |
| 1966 | : | சென்னை வந்தார். |
| 1966 - 1990 | : | சைதாப்பேட்டை மாதிரி மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணி. |

| | | |
|---|---|---|
| *1967* | : | சுத்தானந்த பாரதியாருடன் தொடர்பு |
| *1970* | : | சித்த வைத்தியத்தை கற்றுக்கொள்ளத் தொடங்குதல். |
| *1974* | : | தனது குருவாகிய வேதாத்திரி மகரிஷியுடன் இணைதல். |
| *1975* | : | மகரிஷியுடன் ஒன்றாகத் தங்கி - அணுக்கத் தொண்டராக பணிபுரிதல் |
| *1990* | : | ஆசிரியர் பணியில் பணி ஓய்வு பெற்றார். |
| *1991* | : | மனவளக் கலை பேராசிரியராக முழுநேரத் தொண்டு. |
| *1999* | : | ஆழியாறு அறிவுத்திருக்கோயிலில் முழுநேரத் தொண்டு. |
| *2000 - 2006* | : | பொள்ளாச்சியில் முழுநேரத் தொண்டு |
| *2006 - 2011* | : | ஆழியாறில் தங்கி தொண்டாற்றுதல். |
| *2011* | : | டிசம்பர் *30* மகாசமாதி அடைதல். |

# மணிமண்டபம்

புலவர்சமாதி நிகழ்ச்சி முடிந்தவுடனேயே அங்கு மணிமண்டபம் அமைப்பது குறித்து ஒரு குழு அமைக்கப்பட்டது. திருப்பூர் முரளி அவர்களின் முயற்சியால் அங்கிருந்து பொறியாளர் ஆலோசனையின்படி பிரமிடு வடிவத்தில் பன்னிரண்டு லட்சம் ரூபாயில் மணிமண்டபம் அமைக்க தீர்மானிக்கப்பட்டது.

பேராசிரியர் மாரியம்மாள் தலைமையில் திருப்பூர் சீனிவாசன், செங்கற்பட்டு பானுகுமார், பெரிய மணலி இராமலிங்கம், இராமகிருஷ்ணன் மற்றும் சேலம் சுகுமார் உறுப்பினர்களாக ஒரு குழு அமைக்கப்பட்டது.

குழு தீர்மானித்தபடி 7.2.2012 வெள்ளிக்கிழமை தைப்பூச நன்னாளில் பூமி பூஜை போடப்பட்டது.

புலவருக்குச் அவரது முன்னோர்கள் வழி வந்த பதினைந்து செண்டு நிலத்தில் அவரது பூத உடல் சமாதியாக, மணிமண்டபமாக அமைக்கப்பட்டுள்ளது.

தவக்குடில்
தேவனாங்கபுரம்
பெரிய மணலி அஞ்சல் - 637 410
வையம்பாளையம் வழி
திருச்செங்கோடு வட்டம்
நாமக்கல் மாவட்டம்.

ஆழியாறு மணிமண்டபத்தில் நிலவும் அதே காந்தக் களத்தை - தேவனாங்கபுரத்தில் உள்ள அய்யாவின் மணிமண்டபத்திலும் இருப்பதை அன்பர்கள் உணர்ந்து பயனடைந்து வருகின்றனர்.

# புலவர் சந்தித்த சான்றோர்கள்

- கோவை கிழார் ராஜ்பகதூர் ராமச்சந்திரன்
- திரு.கா.பா. கண்ணன்
- திரு.முருகவேள்
- முருகானந்த அடிகளார்
- கிருபானந்த அடிகளார்
- சௌண்டப்ப சாமிகள்
- சுவாமி சித்பவானந்தர்
- சாது சாமிகள்
- திரு.ம.கா. காமாட்சிநாதன்
- சுத்தானந்த பாரதியார்
- வேதாத்திரி மகரிஷி
- துறவி தேங்காய் பழ சாமியார்
- அரக்கோணம் திருமதி.கஜலெட்சுமி
- நாமகிரிப்பேட்டை கே. பெரியசாமி
- திரு. ப.ந. நம்பி ஆசிரியர்
- மு. கண்ணப்பனார்
- மருத்துவ மாமேதை புழல் டி. கன்னியப்பன்
- அருப்புக்கோட்டை மருத்துவ மேதை சுந்தரமகாலிங்கம்
- வைத்திய பூபதி திருவேங்கடம்
- புலவர் வி. இளங்கண்ணனார்

பகுதி - ஆ

# அன்பர்கள் பார்வையில் அய்யா

– பேராசிரியர் மாரியம்மாள்

"ஏதை நினைக்கிறோமோ அதுவாகவே மாறிவிடுகிறோம்" என்பது மகான்களின் வாக்கு, நினைப்பது எனும் செயலைச் செய்வது மனம். மனம்தான் மனிதன், மனிதன்தான் மனம். மனதை உடையவனாதலால் மனிதன் எனப்படுகிறான்.

**"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று"**

– திருவள்ளுவர்

மனிதர்கள் பிறக்கிறார்கள், வாழ்கிறார்கள், இறக்கிறார்கள். வாழும்போது உடனிருந்தவர்களும் சிலநாட்களில் அவர்களை மறந்து விடுகிறார்கள். "வாழ்ந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும், இவர் போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்" என்பது போல. மிகச் சிலர்தான் வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் மனங்களில் என்றும் நிலைத்திருக்கிறார்கள். அவர்கள்தான் மாமனிதர்கள் என்று கூறப்படுகிறார்கள்.

அந்த வகையில், மாமனிதர் புலவர் க. தியாகராஜன் ஐயா அவர்களின் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம் போன்றது. தமக்கு முன்னர் வாழ்ந்தவர்களின் வாழ்வியல் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்வது எதிர்கால சந்ததியினருக்கு படிப்பினையாக அமையும்.

## ஜீவகாருண்ய ஒழுக்கம்

2004 ஆம் ஆண்டில் பொள்ளாச்சி அறிவுத்திருக்கோயில் வளாகத்திலேயே ஐயா ஒரு வீட்டிலும், நானும் எனது வாழ்க்கைத் துணைவரும் ஒருவீட்டிலும் வசித்துக்கொண்டு அருட் தொண்டாற்றினோம்.

ஒரு நாள் ஒரு பூனை இவரது வாயிலில் நின்றது. ஒரு பாத்திரத்தில் பாலை ஊற்றி வைத்தார், குடித்துவிட்டுச் சென்றது, பின் அடிக்கடி இந்தமாதிரி வந்து பால் குடித்துச் சென்றது, பின்னர் நிரந்தரமாக அவரது வீட்டிலேயே வசிக்கத் தொடங்கி, குட்டிகளையும் ஈன்றது. வீட்டிலிருந்து மன்றத்திற்கு வருகிறார் என்பதை பூனைகள் மூலம் அனைவரும் தெரிந்து கொள்வோம். இவர் பின்னால் ஒரு பூனைப்படையே மியாவ் மியாவ் என்று பெரிய குரலில் கத்திக் கொண்டே வரும்.

மாலை 6 மணிக்கு மேல் மாடியில் தவம் நடத்த மேடையில் அமர்ந்திருப்பார். எல்லாப் பூனைகளும் படிகளில் ஏறி மேல் படியில் அமர்ந்து கொண்டு இவரைப் பார்த்து மியாவ் மியாவ் என்று கத்திக் கொண்டிருக்கும். அவைகள் கத்துவது எனக்கு ஐயா ஐயா என்று இவரைக் கூப்பிடுவது போலவேயிருக்கும். இவர் எழுந்து சென்று அவைகளுக்கு எதையாவது தின்பதற்குக் கொடுத்துவிட்டு வருவார்.

மன்றத்தின் செயலாளர் அருள் நிதி P.M. கார்த்திகேயன் அவர்களுக்கு பூனைக்குட்டிகளைப் பிடிக்காது. அலுவலகத்திற்கு வந்தால் காலைக் கீழே வைக்காமல், நாற்காலியில் கால்களை மடித்து வைத்துக் கொள்வார். இந்த ஐயாவிடம் எத்தனை முறை சொன்னாலும் கேட்காமல் பூனைக்கு உணவளித்து ஒரு கூட்டத்தையே கூட்டிவிட்டார் என்று சொல்வார்.

அவரது அறையிலிருந்த ஒரு அட்டைப்பெட்டிக்குள் ஒரு பூனை குட்டிகளை ஈன்றது, செயலாளருக்குப் பொறுக்கவில்லை கழிவறைகள் சுத்தம் செய்பவரை அழைத்து ஐயாவிற்குத் தெரியாமல் குட்டிகளை சாக்குப்பையில் போட்டு தொலைதூரத்தில் விட்டு வரும்படி கூறிவிட்டார். அம்மாதிரியே அவரும் செய்துவிட்டார். பிறகு பூனைகள் வருவதில்லை.

ஒருமுறை உணவின் காரணமாக வயிற்றுக் கோளாறு ஏற்பட்டு, இரவு முழுவதும் தனிமையில் அறையில் மயங்கிய நிலையில் இருந் துள்ளார். காலை 9 மணிக்கு அலுவலக மேலாளர் திரு. ராஜரத்தினம் வருவதற்கு முன்பே தன்னிடம் உள்ள திறவுகோல் மூலம் கதவுகளைத் திறந்து வைத்து விடுவார்.

அன்று மேலாளர் வந்து தானே கதவைத் திறந்து கொண்டிருந்தார். நான் அப்போது வெளியில் குடியிருந்து கொண்டு அங்கு வந்து சேவை செய்து வந்தேன் நானும் அந்நேரம் வந்து சேர்ந்தேன். என்ன

நீங்கள் கதவைத் திறக்கிறீர்கள்? ஐயாவைக் காணவில்லையே என்றேன். தெரியவில்லை அம்மா என்று பதிலளித்தார். அவரவர் கடமைகளை செய்யத் தொடங்கி விட்டோம்.

மணி 10 ஆகியும் ஐயாவைக் காணவில்லையே என்று அவரது குடியிருப்பிற்குச் சென்றபோது, கதவு தாழ்போடாமல் மூடியிருந்தது, உள்ளே மயங்கிய நிலையில் படுத்திருக்கிறார். அதன் பின்பு தேவையான உதவிகளைச் செய்தோம். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர், அறிவுத் திருக்கோயில் வளாகத்திலேயே ஒரே வீட்டில் ஐயாவுடன் நானும் எனது வாழ்க்கைத் துணைவரும் வசித்தோம். சமையலுக்கு ஒரு பெண்மணியை ஏற்பாடு செய்து, தொண்டு செய்து வந்தோம்.

## நேர உணர்வு

ஒரு முறை நேரம் கருதி உரையை முடித்துள்ளார். அன்பர்கள் கோரசாக'' என்ன ஐயா ஆனந்தம் பாடாமலே முடித்துவிட்டீர்கள்?'' என்று கேட்டு, அதன்பின் மீண்டும் ஆனந்தம் பாடி முடித்ததாக ஒருமுறை கூறியுள்ளார்.

1996 - ல் ஒரு வகுப்பில் மகரிஷி உரையாற்றிக் கொண்டிருந்த போது 'தத்துவஞானி மாரியம்மாள்' என்று கூறினார். அதன் பிறகு மேடையிலே நானிருக்கிற சந்தர்ப்பங்களிலெல்லாம் ''மகரிஷி அவர்களாலேயே தத்துவஞானி என்று பாராட்டுப் பெற்ற பேராசிரியர் மாரியம்மாள் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று ஐயா கூறுவார். அது எனக்கு என்னுடைய நிலையிலிருந்து கீழே இறங்கிவிடாமலிருக்கப் பெரும் உதவியாயிருந்தது.

## மதிப்புணர்வு

ஒரு நாள் சென்னையில் ஒரு வீதியில் நடந்து போய்க் கொண்டிருந்தபோது ஒரு கார் இவரை ஒட்டி வந்து நின்றது. இவர் வீதியின் ஓரத்தில் நின்றுவிட்டார். காரிலிருந்து இறங்கி வந்தவர், ''தமிழ் ஐயா, என்னைத் தெரிகிறதா? நான் உங்களது மாணவன்'' என்று நலம் விசாரித்து அவர் போகவேண்டிய இடத்திற்கு கொண்டு போய் இறக்கிவிடச் சென்றிருக்கிறார்.

இப்படித்தான் மனவளக்கலை அன்பர்களும் திடீரென்று ஐயா என்னைத் தெரிகிறதா? என்பார்கள். தெரியவில்லையென்றால்

வருத்தப்படுவார்களே என்பதற்காக ''முகம் ஞாபகமிருக்கு, ஆனா பேரும் ஊரும்தான் ஞாபகமில்லை'' என்பேன் அதன்பிறகு அவர் களைப்பற்றிக் கூறுவார்கள், நிறையப் பேரை ஞாபகம் வைத்துக் கொள்ள முடிவதில்லை, ஏதாவதொரு சம்பவத்தைக் குறிப்பிட்டுக் கூறுவார்கள். நிறைய விஷயம் எனக்கு மறந்துவிடும் என்றார். ஐயா என்னை மறந்து விடாதீர்கள் என்றேன் சிரித்துக் கொண்டே, அம்மா மாரி இல்லையேல் காரியம் இல்லை, உங்களை மறக்க முடியுமா? நான்தான் உங்களுடனே இருக்கிறேனே என்று கூறிச் சிரித்தார்.

**உலக சமாதானப் பொங்கல்**

1997 ஆம் ஆண்டு ஒரு நாள் மகரிஷியின் அறையில் ஐயாவைப் பற்றியும், அவரே சுயமாக சமைத்துச் சாப்பிடுவது பற்றியும் மகரிஷியிடம் கூறிக் கொண்டிருந்தேன். கனிவு, பணிவு, துணிவுக்கு இலக்கணம் தியாகராஜன் என்றார் மகரிஷி.

அம்மா! தியாகராஜன் ஒரு பொங்கல் செய்வார். அதனை நான் உலக சமாதானப் பொங்கல் என்பேன், அது ஒன்றுமில்லையம்மா அவரிடம் என்னென்ன சாமான்கள் இருக்கிறதோ அத்தனையையும் போட்டு வேகவைத்து ஒரு கிண்டு கிண்டி இறக்கிவிடுவார் நன்றாக இருக்கும் என்றார்.

அடுத்த நாள் காலை ஐயா என்னைப் பார்த்தார். அம்மா கேண்டீன் போய்விட்டு வந்துவிட்டீர்களா? என்று கேட்டார். இல்லை ஐயா இனிமேல்தான் போகணும் என்றேன். இன்றைக்குப் பொங்கல் கொஞ்சம் அதிகமாகச் செய்து விட்டேன், தயவுபண்ணி தாங்கள் சாப்பிடணும் என்று கூறி ஒரு டபரா நிறையப் போட்டுக் கொண்டு வந்து கொடுத்தார்.

நேற்று நாம் சுவாமிஜியிடம் பேசியது இவருக்குத் தெரியாதே, இப்போது அதே பொங்கலைத் தருகிறாரே என்று நினைத்துக் கொண்டே முதல் கவளத்தை வாயில் போட்டேன். துப்பவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவஸ்தைப்பட்டேன். உப்பு, காரம், புளி என்று எதுவுமில்லாமல் சப்பென்று சாப்பிட்டுப் பழக்கமில்லை. இதைத்தான் அவர் பல வருடங்களாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார் என்று நினைத்தபோது பாவமாயிருந்தது.

தோல் வியாதியின் காரணமாக நாக்கைக் கட்டுப்படுத்தி விட்டார் என்பதை அறிந்தேன். நெருக்கமான அன்பர்கள் சிலர்

அவ்வப்போது சுண்டல், உப்புமா, கூட்டு, கீரை போன்றவற்றை உப்பில்லாமல் சமைத்து எடுத்து வந்து தருவார்கள். அவற்றை சாப்பிடுவார்.

அவரது ஸ்தூல உடல் தொண்டு முடிவடைந்தாலும் அவரது சித்த மருந்துகள் சேவை அவரது விருப்பப்படியே வேதலோக அன்பு நிலையத்தில் தொடர்ந்து கொண்டுள்ளது.

அய்யா அவர்களது வாழ்வியல் முறைகளைப் பின்பற்றி வாழ்பவர்கள், உண்மையான வேதாத்திரியத் தூதுவர்களாகத் திகழ்வார்கள் என்பது உறுதி.

# தொண்டாற்றி இன்பமுற்ற மகான்

– பேராசிரியர் பிரம்மகுட்டி அம்மாள்

மகான்கள் அடிக்கடி வருவதில்லை அத்தி பூத்தாற்போல அபூர்வமாகத் தோன்றுகிறார்கள். சமீபத்தில் அபூர்வமாகப் பூத்த அத்திமலரே ''பாமர மக்களின் ஞானி' அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள். இவரது உடற்பயிற்சி தவமும், தற்சோதனையும், காயகல்பமும் விஞ்ஞானப் பூர்வமான தத்துவங்களும் சாதாரண மனிதனை, மாமனிதனாக மாற்றக் கூடியவை. உலக மக்கள் அனைவரும் பின்பற்றக் கூடிய வாழ்க்கை நெறி அருள் தந்தை வகுத்த வாழ்க்கை நெறி.

குருவின் உண்மைச் சீடராக விளங்கியவர் புலவர் அவர்கள்.

**''கல்விக்கு நாயகனாய் மக்கட்பண்பைக்**
**காத்துயர்த்தும் செயலால் ஆசிரியர் மேலோர்**
**நல வாழ்விற்கே கல்வி நலம் கொண்டு பயன்கொள்வோம்**
**நாடும் வீடும் உயரும் நாம் இனிதாய் வாழ்ந்திடலாம்**

என்றபடி ஆசிரியர் தொழிலை வெகு திறமையாகச் செய்து நல்ல திறமையுள்ள மாணவர்களை உருவாக்குவது மட்டும் நம் கடமை யல்ல என்ற முறையில் குருஆசானின் பயிற்சிகளையும், தத்துவங் களையும் சமுதாயத்தில் பரப்பி அவரது லட்சியமான உலக அமைதியை அடைய உறுதுணையாக இருக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு தன் வாழ்நாள் முழுவதையும் உலக சமுதாய சேவா சங்கத்திற்கு அர்ப்பணித்தவர்.

குருவின் அன்றாடப் பணிவிடைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதோடு குருவைப் பார்க்க வருபவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் உத்தமர்.

அருள் தந்தை பிறந்த ஊரான கூடுவாஞ்சேரியில் உள்ள சிறு ஒட்டுக் கட்டடத்தில் சில ஆண்டுகள் தங்கி அங்குள்ள மக்களுக்கு பயிற்சி அளித்தார்.

வாகன வசதி இல்லாத காலங்களில் அருள் தந்தையுடன் பல இடங்களுக்குச் சென்று உலக சமுதாய சேவா சங்கத்தின் வளர்ச்சிக்குக் காரணமாகத் திகழ்ந்தவர். தெய்வ சிந்தனையுடன் பாடல்களையும், கருத்துக்களையும், அருட்தந்தையின் பாடல்களுடனும், கருத்துக் களுடனும் ஒப்பிட்டு உரையாற்றும் திறமையும், இனிமையாகப் பாடும் திறனும் உடையவர்.

அருள் தந்தை போன்ற தோற்றமிக்க அவரை அருள் தந்தை என்று எண்ணி பலர் பலமுறை ஏமாந்தது உண்டு.

**''ஈகை ஒழுக்கத்தோடு இணைந்து ஆற்ற**
**இத்தகைமை அறம் ஆகும் இறையுணர்வாய்**
**ஈகை ஒழுக்கம் இயல்பாய் வந்தால்**
**இவ்வுயர்வு நிலை விடுபேறு நல்கும்**

என்றபடி அருள் தந்தையின் மூலமாக இறையுணர்வு பெற்று, அறநெறி வாழ்க்கை வாழ்ந்தவர். அன்பும் கருணையும் கொண்ட நற்பண்பாளர். ஈத்துவக்கும் இயல்புடையவர் பிறர் துன்பம்கண்டு துயர் போக்கும் அருள் நெறியாளார். சித்த மருத்துவத்தில் வல்லவர்.

ஆழியாரில் அருள் தந்தையின் மணிமண்டபத்தில் காலை, மதியம், மாலை, இரவு என்று எல்லா வேளைகளிலும் தவம் நடத்தி, சிந்தனை விருந்தளித்து தவம் முடிந்தபின் கை கூப்ப எல்லோரையும் வழி அனுப்பும் பாங்கு எல்லோருடைய கருமையத்திலும் பதிந்து நீங்கா நினைவு ஏற்படுத்தியுள்ளது.

ஆசானிடம் மட்டுமன்றி அன்னை லோகாம்பாளிடமும் அன்பும், மரியாதையும் கொண்டவர். அவருடைய அந்த அன்பு ஆசானுக்குச் செய்யும் கடமையாக மலர்ந்தது. வியப்புக்குரியது. அன்னையவர்கள் 2 மாத காலம் உடல் நலம் குன்றி படுத்த படுக்கையாக இருந்தார்கள். 1994ம் ஆண்டு டிசம்பர் 24ம் தேதி புலவர் அவர்கள் அருள் தந்தையின் இல்லம் சென்று அன்னை அருகில் அமர்ந்த சிறிது நேரத்தில் அன்னையவர்கள் உயிர் நீத்தது வியப்பை ஏற்படுத்தியது.

அருள் தந்தையின் மறைவுக்குப்பின் அவருடைய ஸ்தானத்தில் இருந்து எல்லா நிகழ்ச்சிகளிலும் அன்பர்களுக்கு சான்றிதழ் வழங்கிய போது, சான்றிதழைப் பெறும் அன்பர்கள் அருள் தந்தையிடமே சான்றிதழ் பெறுவது போன்ற மகிழ்ச்சியைப் பெற்றனர்.

'இயற்கையின் இயல்பும் எண்ணம் செயல்கள்
இன்பதுன்பங்கள் எழுவதும் அறிந்து
முயற்சியை ஆக்கமுறையில் திருப்ப
முறையை விளக்கி முழுமைப்படுத்தும்
ஆக்க வாழ்வை அனைத்துலகுக்கும்
அளிக்க வல்லதோர் அருள் தொண்டேற்றேன்
ஊக்க மிகுதியால் உட்பொருள் காண
உணர்வில் ஓங்கி உயர் பொருள் கண்டு
கடமை ஆற்றிடும் கருத்துள மகனே!
கற்றதும் பெற்றதும் கடன் அதை திருப்ப
உடையையும் உழைப்பும் ஊருக்குதவி
உயர் தொண்டாற்ற உந்திய உணர்வில்
நாடுகள் பலவும் நகர்கள் பலவும்
நல்லவர் அல்லவர் நலம் பெற்றுய்ய
தேடு வோர் கட்குத் தெளிவைக் காட்டித்
திருந்திட உதவும் தொண்டினை ஏற்றேன்

(ஞா.க.706)

என்று அருள் தந்தையின் வாக்குப்படி உலக சமுதாய சேவா சங்கத்தால் புகழ், பதவி, பணம் என்ற எந்தவித எதிர்பார்ப்புமின்றி உடல் பொருள் ஆவியை அர்ப்பணித்த மகான்.

''நானே ஈசன் சொல் விடுத்து
''நற்பொருளான ஈஸ்வரனே''
நரனுமாக இருக்கின்றான்
''ஞாலம் உயிர்கள் அனைத்துமவன்
நான் இவ்வுண்மை உணர்ந்த பயன்
நல்லுலகுக்கே எனை ஈந்தேன்
நானினித தூயன் என நின்று,
நற்தொண்டாற்றி இன்புறுவீர்

என்று தொண்டாற்றி இன்புற்ற மகான் புலவர் தியாகராஜன் அவர்களைப் பின்பற்றி தொண்டாற்றி. இன்புற்று பிறவிப் பயனை அடைவோமாக.

வாழ்க வளமுடன்

# கோளும் குறிக்கோளும்

- ஜோதிடர் அ/நி. கே. ராமலிங்கம்

புலவர் ஐயா அவர்கள் ஆங்கிரஸ வருடம் ஆவணி மாதம் 21 - ஆம் நாள் (05.09.1932) திங்கட்கிழமை காலை 07 மணி 08 நிமிடத்திற்கு அன்புள்ளம் கொண்ட திரு. கந்தசாமி சர்மா - பொன்னம்மாள் தம்பதியருக்கு மூன்று அண்ணன்கள், இரண்டு தமக்கையர் உடன் ஆறாவது பிறவியாக இப்பூவுலகில் அவதரித்தார்.

அவர் கன்னி லக்னம், சுவாதி நட்சத்திரம், துலாம் ராசியில் பிறந்தார்.

கன்னி லக்னம் சிறந்த சேவை லக்னம், கன்னி லக்னம் என்றாலும் கன்னி - லக்னத்தில் ஏதாவது ஒரு ரகம் வலுவாக அமைந்தால் அவர் மற்றவர் துயரினை துடைப்பார். கன்னி லக்னத்தில் பிறந்தவர்களுக்கு தொண்டுள்ளம் அமையப்பெறும்.

ஆசைகள் குறைக்கும் கேது நட்சத்திர பாதங்களில் ஏதாவது ஒரு கிரகம் அமைந்தால் மருத்துவ சேவை, தொண்டுள்ளம் இயற்கையின் படைப்பிலேயே பதிவு செய்யப்படும்.

உயர்ந்த நட்சத்திரங்கள் என்று ஜோதிட ஞான மகான்களால் குறிப்பிடப்படுவது 27 - நட்சத்திரங்களில், 4 நட்சத்திரங்களே. அவை மிருகசீரிடம், மகம், சுவாதி, அனுஷம் ஆகும்.

நம் புலவர் ஐயா அவர்களின் ஜனன நட்சத்திரம் சுவாதி ஆகும். அவரின் ஜனன ஜாதகத்தில் லக்னத்திற்கு 2 - ஆம் இடமான வாக்கு ஸ்தானத்தில் சந்திரன். சுவாதி நட்சத்திரத்தில் உள்ளார். சந்திரன் தமிழ் பாஷைக்கு அதிபதி. எனவேதான் புலவர் ஐயா சிறந்த தமிழ் புலவராக, கவிஞராக, தலைசிறந்த பேச்சாளராக இருந்தார்.

12 இராசிகளை அறம், பொருள், இன்பம், மோட்சம் என்று நெறிப்படுத்தலாம் என ஜோதிட ஞானிகள் கூறியுள்ளனர்.

அறம் வீடுகளான மேஷம், சிம்மம், தனுசு - அதன் கிரகங்களான செவ்வாய், சூரியன், குருஆகிய மூன்று கிரகங்களும் நல்வகையில் அமைந்திட்டால் மக்கள் தலைவராக, மக்கள் போற்றும் உத்தம சீலராக, எவர் துயரையும் போக்கும் மனிதராக இருப்பார் என்று ஜோதிட சட்டம் கூறுகிறது.

நம் புலவர் ஐயா ஜாதகத்தில் உலக உயிர் தோற்றத்திற்கே மூலமான சிம்மத்தில் புதன், குரு, சூரியன், கேது என்ற கூட்டு கிரகங்கள் ஜொலிக்கின்றன.

தனுசு - அறம் வீட்டினை குரு, செவ்வாய் பார்வை செய்கிறது. எனவே அழகாய் அறம் வீடு இயங்குகின்றது. சூரியன் ஜொலிப்பது போல் குக்கிராமத்தில் நடை பயின்று பின் தமிழ்நாடு முழுவதும் ஜொலிக்க வைத்தது அல்லவா நம் புலவரின் ஜாதகத்தில்.

ஆசிரியர், போதனையாளர் என்பதற்கு சிறப்பு லக்னம் மிதுனம், கன்னி, தனுசு, மீனம். கன்னி லக்னமாகி தொழில், கர்மா, ஜீவன அதிபதியான புதன் 12 - ம் இடத்தில் அறம் வீட்டில் உள்ளார். அதுவே இவருக்கு மோட்ச ஸ்தானமாகிறது.

மறைபொருள் பிரபஞ்ச அதிசயத் தொடர்புகளைக் கொடுத்து இல்லற வாழ்வில் ஜொலிக்க வேண்டிய வயதில் சனி பகவான் திசையும் சேர்ந்து பிரபஞ்ச ரகசிய ஆய்வு வித்தகராய், மருத்துவராய், குருவாய் ஜொலிக்க வைத்தது.

1,5,9 இட வீடுகள் தெய்வ ஸ்தானங்கள். 5 - ம், 9 - ம் அதிபதிகளின் நேரடி சம சப்தம பார்வையினால் அவரை தெய்வ மனிதனாக்கியது.

எண்ணமும், சிந்தனையும், செயலும், கருணையும் கொண்டதும் இதனால்தானே. 12 - ல் குரு, கேது இணைவு, சுக்கிர திசை சனி புத்தியில் 30.12.2012 - ல் மோட்சம் என்று அமைத்து இறுதிப் பிறவியாக, இனி பிறவி இல்லா நிலையை உண்டாக்கியுள்ளது.

நம் துயர் துடைக்கும் உத்தம சீலராக, குருவாய், தெய்வமாய், ஜொலித்துக் கொண்டு உள்ளார். புலவர் ஐயா புகழ் பல தலைமுறை கடந்தும் ஜொலிக்கும். பல அற்புதங்களை இன்னும் படைத்து நமக்கு வழிகாட்டியாக, தெய்வமாய் என்றும் ஜொலிப்பார்.

வாழ்க வளமுடன்

## அருட்தந்தையின் அருட்பதத்தை அடிவருட சென்னாய் சொல்லோ

– கவிஞர் முருகொளி, சேலம்

கேட்டவுடன் நடுநடுங்கி
கண்ணீர் சோர்ந்தார்
கீர்த்தி மிக்க அரும் புலவர்
தியாகராஜன்
நாட்டமது இழந்தார் என்ற செய்தி கேட்டு
நண்பர்களும் அன்பர்களும் வருந்தா நிற்க
நீட்டதனை தேடிக் சென்னாய்
தேட்டமிக்க அருட்தந்தை
வேதாத்திரியின் ஆரம் பதத்தை
அடிவருட சென்னாய் சொல்லோ.

வித்தை யெலாம்
விமலன் போல்
அன்பருக்கு
அருள வேண்டும்
சீர் பெருக்கும் பேரியக்க
மண்டலத்தின் சிறப்பு உரைத்து
உணர்த்தி நின்ற
யோக வேந்தர்
தார்ராளும் மண்டலத்தில் இருந்து
யோக
தத்துவத்தை அனைவருக்கும்
உணர்த்த வேண்டி
நேர்க ஆக உனையழைத்து
கோண்டார் சொல்லோ

நிலையதனை
எமக்குரைக்க
வண்ணம் சென்னாய்
தார்ராளும் அருட்தந்தை
அமுதை எல்லாம்
தரணிக்கு மறவாமல்
வழங்குவாயே
சீர்பெருக்கும்
சிறப்புமிக்க
ஜேடர் பாளையம்
செய் தவத்தால்
சன்மார்க்க
சங்கம் தந்த
பேர் பெருக்கும்
அன்பர்களில்
உமது
தந்தை
பெருந்தகையான்
சர்மாவின்
புதல்வனாக
ஏர் பெருக்கும்
எமது வள்ளல்
அருளினாலே
எம் சங்கம்
அளித்த பெரும்
துறவி ஆனாய்
பார் பெருக்கும்
வேதாத்திரி
சீடனாகி
தவயோகி
தியாகராசன்
நாமம் வாழ்க
சில்வண்டு மலர் அமுதை
எடுத்துச் சென்று
தேன் கூட்டில் கொப்பளிக்கும்

தேரல் போல
வல்ல தொரு
சற்குரு வாம்
வேதாத்திரியின்
வலம் பெருக்கும்
குண்டலியாம்
யோகம் தன்னை
அல்லகல் மனக்கலையை
சேவா சங்கம்
அறிவுத் திருக்கோயில் உள்ள
பணியாற்றி
சென்ற தியாகா
வேந்தனே தியாகராசா
என்று காண்போம்.
என்று காண்போம்.

பூத உடல் மறைந்தாலும்
புகழ் உடம்பு
பூ தலத்தின்
அழியாது
என்பது உண்டு
ஆதவன் போல் அருட்தந்தை
இறையிருக்கும்
அருணன் போல்
நீ இருப்பாய்
யானும் உள்ளேன்
வேதஒளி மன்றமேலாம்
போன்றி நிற்க
வித்தகவர்கள்
உள்ளமதில்
நீ இருப்பாய்
சீத மலர் நாற்றமென
தியாக தீபம்
செறி இருளை
நீக்கி விடும்
தியாக வாழி.

# நினைத்துப் பார்க்கிறேன்

– பிரம்மஞானி நிவேதிதா சீனிவாசன்,
அமெரிக்கா

அப்போது எனக்கு வயது ஏழு. மன்றத்தில் நாள்தோறும் அய்யா தவம் நடத்தி வருவார்கள். அருகில் நானும் அமர்ந்திருப்பேன். அய்யாவின் உபதேசங்களைக் கேட்பதை விட அவரது வார்த்தைகள் இனிமையாக இருக்கும். அவரது அன்பு ஆழமாயிருக்கும். என்னை யறியாமல் அவரது வார்த்தைகள் என் பிஞ்சு உள்ளத்தில் பதிந்துவிட்டது.

எங்கள் வீட்டில் இருந்தபோதும் மற்றும் ஆண்டுதோறும் வரும்போதும் என்னைச் சிறப்பாக வாழ்த்துவார்கள். அவரது வாழ்த்துதலினால் இன்று உயர்வான பதவியில் அன்புக் கணவருடன் அமெரிக்காவில் வசித்து வருகிறேன்.

எனது திருமணத்திற்கு அவர் வழங்கிய வாழ்த்து மடலில் இருக்கும் அவரது வாசகங்கள் இன்றும் என்னையும் என் கணவரையும் வாழ்த்திக் கொண்டே இருப்பதை உணருகிறேன். வாழ்த்து மடலை அழகிய வண்ணத்தில் கண்ணாடி பிரேம் போட்டு கொடுத்ததுடன் - ஆயிரம் பிரதி எடுத்து திருமணத்திற்கு வந்தவர்களுக்கெல்லாம் வழங்கி - அவர்களையும் வாழ்த்தச் சொன்ன அந்த அருளாளர் என்றும் எங்கள் இதயங்களில் வாழ்ந்து வருகிறார்.

## திருமண வாழ்த்து

*நீடு வாழுக! நீடு வாழுகவே*
*பீடுறு நம்பி சினிவாசனாரும்*
*நலமிகு பெற்றோர் ஈன்ற நங்கை*
*உலகம் உய்ய உதித்த நிவேதிதாவும்*
*கண்ணிரண் டென்னக் கருத்துறக் கலந்து*
*புண்ணிய யோகமும் போகமும் பொலிய*

அன்பும் அறனும் அருளும் பெருகிப்
பண்பும் பயனும் பழுத்தினி தோங்கி
இகபர நலங்கள் எல்லாம் எய்தி
மங்கல மாக வாழ்க வாழ்கவே!
நங்குல நன்மை நாளும் பெருகவே!!

உள்ளமே தில்லையாக உயிர்தொறும் நடனம் செய்யும்
வள்ளலின் கருணையாலே வலிமையும் இளமை அன்பும்
தெள்ளறிவாற்றல் யாவும் திருவுடன் பெருகி நாளும்
வள்ளுவர் வாசுகி போல வதுவரர் வாழ்க மாதோ!

நன்று வாழுக! நன்மனை அறத்தினுக்குயிராய்
நின்று வாழுக! நிலவுலகு உயிர்களின் அன்பை
வென்று வாழுக! பொதுநலம் விளங்கிட நீடு
மன்றுளான் அருள் ஓங்கிட மணாளர் வாழியவே!

# ஞானபுருஷர்

– சைதை கருணாகரன்
துணைப் பேராசிரியர்

ஞானம் என்ற வாளையும் கர்மம் என்னும் வாளையும் ஜனகர் போன்ற மகரிஷிகள் ஒரே நேரத்தில் சுழற்றுகின்ற வல்லமை பெற்றிருந் தார்கள். அப்படிப்பட்ட திருக்கூட்ட மரபில் தோன்றியவர்கள் நம் அருட்தந்தையின் முதன்மைச் சீடர் நமது புலவர் அய்யா.

ஒரே நேரத்தில் ஞானம் என்னும் வாளையும் கர்மம் என்னும் வாளையும் சுழற்றுகின்ற பேராற்றல் படைத்த தளபதியாக குருவின் அணுக்கத் தொண்டராக அவர்கள் இருந்ததை நாம் கண்கூடாகப் பார்த்தோம்.

சாதாரண சிலம்பு சுழற்றுவார்கள். சிலம்பு சுழற்றுவதே அபூர்வமான கலை. ஒரு கையால் சுழற்றுவது மிகவும் அபூர்வமானது. இரண்டு கைகளாலேயும் சுழற்றுவது என்பது மிகவும் பெரும் திறம் படைத்தவர்களாலேயே செய்ய முடியும்.

ஆசிரியர் என்ற தொழிலை ஒரு பக்கமும் குருவின் அணுக்கத் தொண்டர் என்ற தொழிலை மறுகையிலும் சுழற்றிய ஒரு அபூர்வமான மகா புருஷரின் சன்னிதானத்திலே நாம் இருந்தோம் என்பதை எண்ணு கிறபோது அது பெறற்கரிய பெரும் பேறு என்பது விளங்குகிறது.

மகாத்மாவாக நம்முடைய ஞானபுருஷர் இருந்திருக்கிறார்கள்.

சாஸ்திரத்திலே சகோரபட் என்று ஒரு பட்சி சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த பட்சியானது ஆகாயத்திலேயே யாண்டும் பறந்து திரிகிறது. அது நிலவுலகுக்கு வருவதில்லை.

நிலவுலகிலிருந்து எந்த நீரையும் எந்த உணவையும் ஏற்றுக் கொள்வதில்லை. சந்திரனிடத்தில் இருந்து வருகின்ற ஒளியை மட்டும் உணவாக ஏற்றுக் கொள்கிறது. அப்படிப்பட்ட ஞானபுருஷர்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் இந்தப் பிரபஞ்சத்திலே இருந்தாலும் இந்த பிரபஞ்சத்திலே உள்ள உணர்வுகள் எதற்கும் ஆட்படமாட்டார்கள். அவர்கள் அதை ஏற்கவே மாட்டார்கள். அவர்கள் மனமானது யாண்டும் அதீதத்திலேயே இருக்கும்.

'சருகுசல பட்சணிகள் ஒரு கோடியல்லாலல் சகோரபட்சிகள் போலவே' என்று தாயுமானவர் சொல்வது போல் அப்படிப்பட்ட சகோரபட்சிகள் போல அய்யா அவர்கள் இருந்ததையும் பார்த் திருக்கிறோம்.

அன்னம் எப்படி பாலை அருந்தி நீரை ஒதுக்குகிறதோ அப்படி பிரபஞ்சத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதற்கிடையில் பல்வேறு கர்மங்களில் ஈடுபட்டதற்கிடையில் உலகின் கவர்ச்சிகளைக் கண்டு மயங்கி விடாது இருந்தார்கள்.

அய்யாவை நான் ஆழியாறில் பார்த்திருந்தாலும் பழகிய தில்லை. அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பை அளித்தவர் அருள்நிதி மன்னார்குடி பானுகுமாராகும்.

1999 ஆம் ஆண்டு அய்யாவுக்கு இரண்டு கண்களிலும் அறுவை சிகிச்சை செய்ய சைதாப்பேட்டை பிரேம் மருத்துவமனையில் திரு.பானுகுமார் அட்மிட் செய்திருந்தார்.

முதலில் ஒரு கண்ணுக்கு அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்ததும் ஒரு வாரம் கழித்து மீண்டும் மற்றொரு கண்ணுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இந்த நாட்களில் உயர்பதவியில் இருந்த திரு.பானுகுமார் விடுப்பு எடுத்துக் கொண்டு அருகிலேயே இருந்து கவனித்து வந்தார்கள்.

இந்த நாட்களில் அய்யாவுக்கு உப்பில்லாமல் உணவு கொடுக்கவும் அவருடன் பழகவும் வாய்ப்பு கிடைத்தது. மேலும் நம்மிடம் தீட்சை பெற்ற டாக்டர் திரு.பிரேம் குமார் அவர்களையே அறுவை சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்யும் பாக்யமும் எனக்கு ஏற்பட்டது. அந்த நாட்களில் அய்யாவின் அன்பும் ஆதரவும் ஆசியும் எனக்கும் எனது குடும்பத்திற்கும் கிடைத்தது பெரும் பாக்கியமாகும்.

அறுவை சிகிச்சை முடிந்ததும் பூரண ஓய்வு கொடுத்து பின்னர் பானுகுமார் அய்யாவை அழைத்துக் கொண்டு ஆழியாறிலேயே விட்டு வந்தார்கள்.

இந்த நட்பிற்குப் பிறகு, ஆண்டுதோறும் ஆழியாறிலிருந்து செங்கை வரும் அய்யா சைதை அறக்கட்டளையான, எங்கள் மன்றத்திற்கு ஒரு நாள் சொற்பொழிவு செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

எங்கள் சைதாப்பேட்டை மாதிரி மேல்நிலைப் பள்ளியில்தான் அய்யா 24 ஆண்டு காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தார்கள் என்பது எங்களுக்கும் எங்கள் சைதாப்பேட்டைக்கும் பெருமையாக அமைந்தது.

சென்னையில் நடைபெற்ற சுவாமிஜியின் நூற்றாண்டு விழாவிற்கு அய்யா வந்திருந்தார்கள். மறுநாள் எங்கள் அறக் கட்டளையின் விஷன் வகுப்புகளை முதன்முதலாக தொடங்கி வைத்த பெருமை எங்கள் அறக்கட்டளைக்கு கிடைத்தது. அன்று முழுவதும் இருந்து விஷன் வகுப்புகளை நடத்தி எல்லோரையும் ஆனந்தத்தில் திளைக்க வைத்தார்கள். இதுவே அய்யா எங்கள் அறக்கட்டளைக்கும் ஏன் சென்னைக்கும் செங்கற்பட்டிற்கும் அய்யாவின் கடைசிப் பயணமாக அமைந்தது.

அய்யா வாழ்ந்து காட்டிய வழியில் நாமும் பயணித்து அவர் அருளைப் பெறுவோமாக!

வாழ்க வளமுடன்.

# ஆசிர்வாத மகிமை

– பிரம்மஞானி கே. நரேந்திரன். பி.இ
சீனியர் சாப்ட்வேர் இன்ஜினியர்

எனக்கு தாய்வழியிலும் தந்தைவழியிலும் இருந்த தாத்தாக்களை நான் பார்த்ததில்லை. நினைவு தெரிந்த நாள் முதலாக எனது தாத்தாவாக நினைத்து அய்யாவிடம்தான் பழகி வந்தேன். ஐந்து வயதிலிருந்து ஏற்பட்ட பழக்கம் உயிரில் கலந்த உறவாகி விட்டது.

அய்யா முக்தி அடைவதற்கு சரியாக 31 நாட்களுக்கு முன் அதாவது 2011 நவம்பர் திங்கள் 29-ம் நாள் அதிகாலை வீட்டில் தொலைபேசி அழைத்தது. நான் எழுந்திருக்கக் கூட இல்லை.

ஆழியாறிலிருந்து அய்யா பேசுகிறார். உறக்கம் தெளிந்து பேசுகிறேன். 'நரேந்திரா உனக்கு எனது பிறந்த நாள் வாழ்த்துகள்.' என்ற இன்ப அதிர்ச்சியை தந்தார்கள். இதுதான் அவரது குரலில் நான் கடைசியாகப் பெறும் வாழ்த்து என்று தெரியவில்லை. ஆனால் இன்றும் என் மனதில் இருந்து கொண்டு என்னை நாள்தோறும் வாழ்த்தி வருகிறார்.

பள்ளி மேல்நிலைப்பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற மதிப்பெண்கள் குறித்து அவருக்குக் கடிதம் எழுதினேன். எப்போதுக் கடிதம் எழுதினாலும் உடனே பதில் அனுப்பி விடுவார். அந்தக் கடிதத்தின் உபதேசங்களை இங்கு நானும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

ஓம்

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

அ.நி. [illegible] கோபால்
மகாலிங்கபுரம்
பொள்ளாச்சி - 2

நன்றாற்றல் மகிழும் நிறைவாழ்வு
மகிழ்க வளமுடனே!

தாங்கள் மேல் பாசமுடன்
அக்காள் விமலா பிரேமா இருவர்
அவர்களை அன்புடன் வாழ்த்த
அ.நி. [illegible] வந்து வாழ்த்து [illegible]
அப்பா அவர்களின் [illegible]
[illegible] காணும் நாள் இருவர்
அவர்களின் [illegible] நினைவு

வாழ்க்கை [illegible] நல்லோர் வாழ்த்
பெற்று வாழ்க வளமுடன் என
வாழ்த்தி மகிழ்கின்றேன்.

27-5-2005 அன்று அனுப்பிய
[illegible] கடிதம் 30-5-2005 இன்று
கிடைக்கப் பெற்றேன். மிக்க
மகிழ்ச்சி.

[illegible]

மேயர் அரங்கநாதன் அவர்கள்

"எண்ணிய எண்ணியாங்கு எண்ணிய படியே
(ஆற்றல்)
எண்ணத்தில் உறுதியும் [illegible]
அமைந்தவர்" என்று உலகே [illegible]
கிறார்.

திருக்குறள் எண்ணம் செயல்
[illegible] — என்று மகாகவி
[illegible] பாரதி
[illegible].

திருவாளர் அருண்மதி V. ரவி
[illegible]
[illegible]
[illegible] வாழ்த்து
உறுதி [illegible].
[illegible]
[illegible] வாழ்த்துகிறேன்.

[illegible] வாழ்த்து
உங்களை. அன்பன்,
கிருபாகரன்.

# எங்கள் தாத்தா

– பிரம்மஞானி அருட்ஜோதி
பாலசுப்பிரமணியம்

**ஞா**ன மார்க்கத்தின் முடிவான படியான முழுமைப் பேறு அடைந்த எங்கள் தாத்தாவின் ஆன்மீக வாழ்வானது பலரும் வியக்கத்தக்கது. வணங்கத்தக்கது. போற்றத்தக்கது.

ஏப்ரல் 1969ல் எனது தந்தை கு.இராமலிங்கம் அவர்களுக்கு, உடல்நலக் குறைவு ஏற்பட்டபோது சென்னை அடையாறில் உள்ள யோக சமாஜத்தில் தாத்தாவுடனும் அவரது குருவான கவியோகி சுத்தானந்த பாரதியாருடனும் பத்து நாட்கள் தங்கி தாத்தாவின் சித்த வைத்தியத்தினால் உடல் நலமடைந்தார்.

பின் 22.08.1974 அன்று தாத்தாவின் அருளாசியால் கவியோகி மகரிஷி. சுத்தானந்த பாரதியார் அவர்களே யாகம் வளர்த்து, அவரது தலைமையிலேயே எனது பெற்றோர் இராமலிங்கம் - ரேணுகாதேவி திருமணத்தை முன்னின்று நடத்தி வைத்து எனது பெற்றோரின் இல்லற வாழ்க்கையை இனிதே துவக்கி வைத்தார்.

1979 - ல் கோயமுத்தூர் செட்டிபாளையம் வகுப்பில் எனது தந்தை கலந்து கொண்டபோது அவருக்கு நானும் (இரா. அருட்ஜோதி) எனது தங்கை (இரா. ஜெகதாம்பாள்) இருவர் மட்டுமே பிறந்திருந்தோம்.

ஆண் மகவு வேண்டுமென விழைந்த எனது தந்தை எனது தாத்தாவுடன் சென்று வேதாத்திரி மகரிஷியை சந்தித்தபோது,

**''வித்தினிலே இரசாயனத்தைக் கூட்டிக் குறைத்து**
**வேண்டும்போல் ஆண் பெண்கள் பிறக்கச் செய்வோம்''**

என்ற கவியை கூறி,

3 முதல் 5 மாதங்கள் பிரம்மசரிய விரதம் இருந்து வலது நாசியில் மூச்சு ஓடும்போது இனச்சேர்க்கை செய்தால் ஆண் மகவு நிச்சயம் பிறக்கும் எனக் கூறினார்.

அவருடைய அறிவுரையின்படி 09.04.1980 - ல் பிறந்தவரே எனது தம்பி இரா. சிவமாணிக்கம் ஆவார். எனக்கும், எனது சகோதரனுக்கும் பெயர் சூட்டியவர் கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்களே ஆவார். இத்தகைய மாபெரும் பாக்கியமும் இளவயதிலேயே மகரிஷி அவர்களின் நல்லாசியும் கிடைத்தது தாத்தாவின் நல்லாசியினால்தான்.

பிறகு மீண்டும் எனது தந்தை 26.01.1982 - ல் வேதாத்திரி மகரிஷியால் நடத்தப்பட்ட சென்னை SKY வகுப்பில் கலந்து கொண்டு பயன் பெற்றார்.

31.12.1982 - ல் பெரியமணலி தேவாங்கபுரத்தில் மனவளக்கலை மெய்விளக்கத் தவக்குடில் எனது தாத்தாவின் பெரு முயற்சியினால் யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்களே நேரில் தலைமை தாங்கி 7 - வது தவமையத்தை எங்களது ஊரில் திறந்து வைத்தார்.

என்னுடைய மேல்நிலைப் படிப்பிற்குப் பின் (+2), நான் சித்த வைத்தியக் கல்லூரியில் பயின்று சித்த வைத்தியர் ஆக வேண்டு மென்பதில் எனது தாத்தாவிற்கு மிக மிக அவா.

ஆனால் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. இருப்பினும் தற்போது அவரைப் போல் அரசு ஆசிரியையாகப் பணியாற்றும் வாய்ப்பு அவருடைய பேரருளினால் கிடைக்கப் பெற்றுள்ளேன்.

எனது மாணவப் பருவத்திலும், கல்லூரிப் பருவத்திலும் கடிதத் தொடர்பு மூலமாக எனக்கு பல அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

நான், எனது தங்கை, எனது தம்பி மூவரும் பிரம்ம ஞானப் பயிற்சி, காயகல்பப் பயிற்சி உள்ளிட்ட ஆறு நாட்கள் பயிற்சியை வேதாத்திரி மகரிஷியிடம் ஆழியாறில் மார்ச் - 1997ல் எடுத்துக் கொள்ள உதவினார். மேலும் சேலம் அறிவுத் திருக்கோயிலிலும் நான், எனது தம்பி இரா. சிவமாணிக்கம், தங்கை இரா. ஜெகதாம்பாள் மற்றும் எனது சித்தப்பாக்களின் குழந்தைகளாகிய சுபத்ரா, மலர்விழி, சிவ இளங்கோ ஆகியோரும் பயிற்சி எடுக்க உதவினார்.

மேலும் எனது சித்தப்பா. சித்தி குடும்பத்தார், எனது தாத்தாவின் அனைத்து உடன் பிறந்த அனைத்து சகோதரன், சகோதரி

குடும்பத்தாருக்கும் வேதாத்திரி மகரிஷியின் அடிப்படை பயிற்சி வகுப்புகளை கற்க ஏற்பாடு செய்தார். அதற்கான அனைத்து பொருட் செலவுகளையும் எனது தாத்தாவே ஏற்றுக் கொண்டார்.

எனது திருமணத்திற்கும் பின் எங்களின் இல்லறம் சிறக்க எனது கணவர் திரு T. பாலசுப்ரமணியம் அவர்களையும் வேதாத்திரி மகரிஷியின் ஐந்து நாள் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு சிறப்படையச் செய்தார்.

அவருடைய விருப்பம், பேரவா என்னவெனில் எங்கள் இல்லத்தார் அனைவரும் பேராசிரியர்களாகவும், தவசீலர்களாகவும், யோகிகளாகவும், ஞானிகளாகவும் விளங்க வேண்டும் என்பதே.

எங்களது குடும்பத்திற்கு அவர் ஆற்றிய அருட்பணிகள் பலப்பல. அவருடைய ஒவ்வொரு மூச்சிலும் எங்களின் நல்வாழ்விற்கான சிந்தனைகள் மட்டுமே பிரகாசமாய் நிறைந்திருந்தது.

# சற்குருவின் உள்உணர்வில் உயிரறிவாய் நிலைத்தவர்

– அருட்செல்வி பிரேமாவதி சீனிவாசன்,
சென்னை

**''தான் தனது என்ற கூட்டை விட்டு வெளியே வா''**

**அகன்று நோக்கு பறந்து உலாவு பிரபஞ்ச வீதியில் பற்று அறும் பழுக்கும் ஞானம்.**

**– வேதாத்திரியார்**

புலவர் க. தியாகராஜன் ஐயா அவர்களை குருவோடு வாழ்ந்தவர் என்பதை விட, புலவர் சற்குருவின் உயிருணர்வில் உயிர் கலப்பு பெற்றவர்.

1986 - ஆம் ஆண்டில் செங்கல்பட்டு மன்றத்தை துவக்கி வைத்து வித்திட்டவர். 1993 - ல் மறைமலை நகரில் மன்றத்திற்கு மாதாமாதம் வேதாத்திரியும், திருவள்ளுவரும், வள்ளலார், தாயுமானவர் என்ற தலைப்பில் சிந்தனை அளித்து செங்கல்பட்டு மன்றத்திலும் மறைமலை நகரில் அகத்தாய்வு பயிற்சிகளை நடத்தியவர்.

அதில் எனக்கு துரியாதீத தவத்தை ஞானத்திறவு கோலாகிய புனிதப் பயணத்தை 1993 - ல் (Gate way of God) ஆக்கினையில் நில், துரியத்தில் கவனி சிவகளத்தில் புறப்படு (Stop, Look, Proceed) நில், கவனி, புறப்படு என்று அறிவின் பயணத்தை துவக்கி வைத்தவர். (Journey of consciousness Towards perfection) முழுமையை நோக்கிய பயணம்.

இன்றுள்ள நிலைக்குத் தக்கவாறு தன்னை மாற்றிக்கொண்ட தகமையாளர் (தக அமைதல்) புலவர் ஐயா அவர்கள் சில ஆண்டுகள் திருவான்மியூரில் இருந்து பணியாற்றி உடல் நிலையின் காரணமாக

வெளியே வந்தார். குருவோடு மீண்டும் இணைந்து இருக்கும் நேரத்தில் இருக்கும் நேரத்தில் தங்களை பொள்ளாச்சி அறிவுத்திருக்கோயிலில் அழைக்கிறார்கள் செல்ல வேண்டும் என்று குறிப்பிட்ட உடனே ''குரு வார்த்தைக்கு மறுவார்த்தை ஏது'' குருவின் கட்டளை என்று பொள்ளாச்சியில் சென்று சில வருடம் பிறகு சற்குருவின் இறுதிக் காலத்தில் ஆழியாரில் வந்து குருவோடு சிக்கெனப் பிடித்தேன் ''சிவபெருமானே'' என்ற நிலையில் இருந்து மீண்டும் இறுதிப் பயணத்தையும் வெளியே அந்த அமைப்பில் பற்றில்லாதவராய் பற்றற்றானை பற்றுக என்ற உணர்வோடு எந்த எதிர்பார்ப்புமில்லாமல் இருக்கும் வரை செயல்பட்டு விட்டு ''துறவிலே உறவை'' கண்ட உத்தமர் என்றால் மிகை ஆகாது.

Attached Detachment என்பதை Detached Attachment ஆக வாழ்ந்த பெருந்தகையாளர் அங்கு இருக்கும் காலத்திலும் அனைத்து அறங்காவலர்களையும் இந்த வாய்ப்பு நல்கியதை நினைவு கூர்ந்து அடிக்கடி நன்றி தெரிவிப்பார்.

''நல்லாரிணக்கம் பேரின்பமாமே'' என்று சிந்தனையிலும் உணர்த்துவார். சற்குருவோடு நிழல் என்றே குறிப்பிடலாம். எப்படி காந்திஜியிடம் What is your Message என்று கேட்டதற்கு My Life is my message என்று குறிப்பிட்டாரோ அதேபோல் சற்குரு (Life Force Particle உணர்ந்த வேதாத்திரியாரும்) *1.1.2006* ''கடைசியாக பொன்னான செய்தியை Last Golden Message ஆக இரண்டே வார்த்தையை வெளியிட்டார்.

யாராவது என்னை என்ன வேண்டும்? என்று கேட்டால்? வேண்டாமை வேண்டும் What you want? Nothing wanted என்று அந்த நிலையில் இருக்கிறேன் என்ற மிக உன்னதமான மகா செய்திக்கு இலக்கணமாக எந்தத் தேவையும் இல்லை. உலக சமுதாய சேவா சங்கத்தின் மீதும் பற்றில்லாதவாறு உங்களிடம் ஒப்படைத்து விட்டேன். ஒவ்வொருவரும் இதை உணர வேண்டும் என்பதற்கு உதாரணமாகத் திகழ்பவர் புலவர் ஐயா அவர்கள்.

**''சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்''**

அதை புலவர் ஐயா அவர்கள் எப்போது சற்குருவோடு 40 ஆண்டு காலம் தொடர்பு ஏற்பட்ட காலத்தில் இருந்து இறுதி வரை ''ஒன்றைப் பிடி, கடைப்பிடி, உறுதிப்பிடி, மெய்ப்பிடி என்று மெய்யுணர்வாளர் களை பற்றிக் கொண்டு, அதிலும் இறுதி காலத்தில் பற்றில்லாமல்

இருக்கவேண்டும் என்பதற்காக முன்பே முடிவு செய்கிறார். சேலம் மாவட்டத்தில் சமாதி வைக்க வேண்டும், என்று ஐக்கியமாகி விட்டார். சில மாதங்களுக்கு முன்பே குறிப்பிடுகிறார் தயார் நிலையில் உள்ளார்.

இவரின்சிந்தனையில் அடிக்கடி ''வேண்டாமை'' என்ற செய்தியை குறிப்பிடுவதோடு வெளிப்படுத்தாமல் இவர் வாழ்க்கையில் சொல்லாமல் செயல்படுத்தி விட்டார். கடைசிவரை சற்குருவை பிடித்ததால் தான் இறைநிலை பிடிப்பதும் இயலும் என்பதை உணர்ந்தவர்.

''வீடுவரை இன்பம் வீதி வரை பெருமை காடு வரை செல்வாக்கு, கல்வி, தொழில், கடைசி வரை ஆதி மெய்பொருள், பிரம்மம், கடவுள்'' என்று மெய்பொருளை உணர்ந்து மெய்யாக வாழ்ந்தவர்.

ஒரு முறை மகரிஷியின் ஆழியாரில் பழைய தங்குமிடத்தில் பயிற்சி நடைபெறுகிறது மேடையில் பேராசிரியர்கள் அமர்ந்துள்ளனர். புலவர் ஐயா அவர்கள் உள்ளே முன்கூட்டியே வந்து கடைசியில் அன்பர்களோடு அமர்ந்து கொள்கிறார்.

அதில் ஒரு அன்பர் தாங்கள் அங்கே மேடையில் அமரலாம் என்று அங்கே உள்ளவரிடத்தில் சொல்ல முற்படும்போது. இங்கு அமருவதில் உள்ள நிறைவு சுகம் எதிலும் இல்லை. கட்டாயப்படுத்தாதீர்கள் என்று விளக்கம் அளிக்கிறார்.

எதிலும்தன்னைவெளிப்படுத்தாமல், முன்னிலைப்படுத்தாமலே சற்குருவோடு மட்டும் மானசீகமான உறவை அதிகமாகவும் மற்றவர்கள் இடத்தில் அதே உறவை பலப்படுத்தி பிறர் உயர்வையே நல்லதையே கண்டு பாராட்டி தான் பெற்ற பேருக்கு எல்லாம் ஆழியார் அனைத்து அறங்காவலர்களையும் பொறுப்பாளர்கள் அனைவரையும் உலக சமுதாய சேவா சங்கத்தையும் நன்றியோடு நினைத்து பல நேரங்களில் விளக்கமளித்து உணரவைத்துள்ளார்.

what is your Aim? Aims is self Realization. Then only god realization என்ற குறிக்கோளை உணர்ந்தவர். What is your aim?

A= Almighty

I= In side

M=Mind

தன்னை அறிவதே குறிக்கோள் அதற்கு உறுதியாக மெய்ப்பிடி என்று சற்குருவை கடைசிவரை பிடித்தவர்.

இவருடைய வாழ்வே துறவிலே கண்ட உண்மைநிலையே உறவு. சற்குருவோடு தொடர்பு இருந்தாலும் மற்றவர்களோடு அதுதான் வீடுவரை இன்பம் வீதி வரை பெருமை காடு வரை கல்வி செல்வாக்கு கடைசி வரை எது? கடைசி வரை ஆதி பிரம்மம் கடவுள் என்று சராசரியாக மிகவும் சாதாரணமாக வாழ்ந்து உணர்வைத் தூண்டியவர். இவர் ஒரு சகாப்தம் இந்த உன்னதமானவரைப் பற்றி குறிப்பிட வேண்டும் என்றால்.

They alone live who live for others

Therest are more dead than Alive

Awake arise and stopnot till the Goal is Reached (Vivekanandar) என்ற இலக்கை எய்தியவர்.

பானுகுமார் அவர்கள், பல நூல்களை வெளியிடுவதற்கும் இன்று ஒரு எழுத்தாளராக மாற்றியது புலவர் ஐயா அவர்களின் தூண்டுதலும் அவரை தந்தைக்கும் மேலாக கவனித்துக் கொண்ட வாய்ப்பை ஏற்படுத்திய இறையருளையும் சற்குருவருளுக்கும் இக்குடும்பத்தினர் நன்றிக்கடன் பட்டவராகிறார்கள்.

**ஒன்றே குலம் ஒருவனே தேவன்**

**வையமெல்லாம் வாழட்டும் வாழ்க்கை வளம் காத்தினிதாய்**
**வளரட்டும் மெய்யறிவு வாழ்க்கை இன்பம் துய்த்ததிலே**
**உய்ய மெய்ப் பொருள் நாட்டம் உலகெங்கும் மக்களிடம்**
**ஓங்குக மேலோங்குக நம் உள்ளம் எல்லாம் ஒன்றுபட**

என்ற சற்குருவின் சிந்தனை போல புலவரின் சிந்தனையிலும் அடிக்கடி குறிப்பிடுவார்.

''விரலுக்கு விரலுண்டு வேற்றுமை''

கூடி வேலை செய்திடில் ஒற்றுமை (ஐந்து விரலும் சேர்ந்தால் ஒற்றுமை)

பழத்துக்கு பழமுண்டு வேற்றுமை

பஞ்சாமிர்தத்தில் ஒற்றுமை (பஞ்சாமிர்தம் பழங்களின் கலவை)

குரலுக்குக் குரலுண்டு வேற்றுமை

கூடி இசைத்திடில் ஒற்றுமை'' இசை (கூடி இசைத்தால் கச்சேரி)

ஒற்றுமையே உயர்வுக்கு வழி ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' இதைத்தான் திருவள்ளுவர்.

**''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு''**

அந்த இசைவான உறவை வாழ்க்கையில் முழுமையாகப் பயன்படுத்தியவரே புலவர் ஐயா அவர்கள் ஆசானின் கவியில் ''இன்னும் வேறு என்ன வேண்டும் இப்பேறு பெற்ற பின்னர் எடுத்த மனிதப் பிறவி எய்தியதே முழுமை'' இந்த முழுமையான வாழ்வே இவருடைய செய்தியாக அளித்த ஐயா அவர்களை குருவின் சரித்திரத்தில் நீங்கா இடம் பெற்றிருப்பது அடியேனால் விவரிக்க இயலாது. வார்த்தைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டது. அதற்கான தகுதியும் அடியேனுக்குக் கிடையாது. சற்குருவே தொண்டர் என்று குறிப்பிட்டால், இவர் தொண்டர்படி ஆள்வாராகப் பணியாற்றியவர்.

நானோ நிழலுக்காக ஒதுங்கியவன் இறையருளாலும் சற்குருவருளாலும் ஆத்ம சம்பந்தத்தை ஏற்படுத்தி வைத்துள்ளது இயற்கை என்றால் மிகையாகாது. எத்தகுதியும் இல்லை. இவ்வாய்ப்பை ஏற்படுத்திய எனது பெற்றோர்களையும் சகோதர சகோதரிகளையும் நன்றியோடு வணங்குகிறேன். உலகில் உள்ள அனைத்து அமைப்புகளையும் வணங்குகிறேன். உலக சமுதாய சேவா சங்கத்தில் உள்ள அனைவரையும் நன்றியோடு வணங்குகிறேன்.

பகுதி – இ

# குருவின் நினைவுகள்

– புலவர் கே. தியாகராஜன்
அறிவுத்திருக்கோயில், ஆழியார்

***"தந்தைதாய் ஆவானும், சார்கதி இங் காவானும்
அந்தமிலா இன்பம் நமக் காவானும் – எந்தமுயிர்
தானாகு வானும், சரணாகு வானும் அருட்
கோனாகு வானும் குரு"***

***"பன்னருங் கேள்வியின் பயனைக் காட்டிலும்
தன்னை விருத்திகும் தலத்தைக் காட்டிலும் என்னது
யான் ஏனம் இயைபில் மாதவர்
முன்னிலை இருப்பது முக்தி யாகுமே"***

குருவினுடைய தொடர்பு, எய்தற்கு அரிய பேறுகள் அனைத்தையும் அளிக்கும் என்பதை மேலே கண்டுள்ள பாடல்களால் உணர்ந்து கொள்ளலாம்.

எனக்கு அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் உடன் இருக்கும் நல்வாய்ப்பு 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி முதலே கிடைத்துப் பயன் அடைந்து வருகின்றேன்.

தாம் உணர்ந்ததை அனைத்து மக்களும் உணரவேண்டும் என்பதே மகான்களின் ஆதங்கம். சென்னையில் வால்மீகி தெருவில் மகரிஷி அவர்களுடன் இருந்து வரும்போது ஒரு நாள் இரவு ஒன்றரை மணி அளவில் என்னுடைய அறையில் நிழல் வருவதும் போவதுமாக இருப்பதைப் பார்த்தேன். வேறு யாரும் இல்லை. திருடன் ஒருவன் அறையைநோட்டமிடும்போது காணப்பட்டதே அந்த நிழல் வடிவமாகும்.

அருள்தந்தை இரவு ஓய்வில் உள்ளபோது சிறிய விளக்கு எரிந்து கொண்டு இருக்கும். மேலும் கோடைக்காலம் ஆதலால் மேல்மாடிக் கதவுகள் திறந்த வண்ணம் காற்றோட்டத்திற்காக அமைந்திருந்தது.

திருடன் என்னுடைய கைக்கடிகாரத்தை எடுத்துக் கொண்டு மேலும் எதை எடுக்கலாம் என்று நோட்டமிட்டபோது நிழல்வடிவம் கண்டேன். மெல்லச் சென்று திருடனுக்குப் பின்புறம் நின்று கொண்டேன். எங்கே சென்று விடுவான் என்பது என் எண்ணம்.

என்னைப் பார்த்ததும் வெளியே செல்ல ஆரம்பித்து விட்டான். அவன் சென்ற வேகத்தில் கதவின் சத்தம் தடதட என்று கேட்டது. அருள்ஞான வேதாத்திரி மகரிஷி அவர்கள் என்ன என்று விசாரித்தார். சுவாமிகளே திருடன் ஒருவன் வந்து சென்றான் என்று கூறினேன். கைக் கடிகாரத்தை எடுத்துச் ெ சன்றான் என்றேன்.

சுவாமிகள் மாடியின் வெளிப்புறத்தில் நின்று கொண்டு ''வாழ்க வளமுடன், வாழ்க வளமுடன்'' என்று வாழ்த்தினார்.

திருடன் வாழ்த்தைக் கேட்டவுடன் செய்வது அறியாது நின்று இருந்தான். கள்ளன் மகரிஷியைப் பார்த்து விட்டான். இவ்வளவு பெரிய அருள் உள்ளம் படைத்தவருடைய வீட்டில் களவு செய்தது பற்றிச் சிந்தனை செய்தான்.

அரை மணி நேரம் கழித்து என் அறையின் ஜன்னல் பக்கம் வந்து. ''இந்தா, உங்கள் கடிகாரம்'' என்று கூறி- பத்து ரூபாய் கொடுக்க வேண்டினான்.

''இது மகான் வேதாத்திரி மகரிஷி அவர்கள் எழுந்தருளி உள்ள இடம். இந்தக் கடிகாரத்துடன் திருந்திக் கொள்'' என்று கூறினேன்.'' ஐந்து ரூபாயாவது கொடுத்து உதவுங்கள்'' என்று கேட்டான். அதற்குள் மகரிஷி அவர்கள் என் அறைக்கு வந்து திருடனைப் பார்த்து அறிவுரை கூறினார். ''ரூபாய் ஒன்று பெற்றுச் செல்; இனி இதுபோன்ற திருட்டுத் தொழிலைச் செய்யக் கூடாது' என்று அறிவுரையைக் கூறினார். திருடன் கடிகாரத்தைக் கொடுத்து விட்டு ஒரு ரூபாய் பெற்றுக் கொண்டு சென்று விட்டான்.

சிலநாள் கழித்து எங்கள் இருப்பிடம் வந்து சுவாமிகளைத் தரிசித்து, வாழ்த்துப் பெற வேண்டினான். 'வாழ்த்து எதற்காக?' என்று மகரிஷி கேட்டார். கள்ளன் கூறியதாவது 'சுவாமிகளே! என்னைப் போன்று பலர் உள்ளோம். நாங்கள் திருடித்தான் பிழைக்கிறோம்.

திருட்டு நன்றாய்க் கிடைக்க வாழ்த்தி அருளவேண்டும்' என்று கேட்டான். அருள்தந்தை அவர்கள் 'திருட்டுத் தொழில் கூடவே கூடாது' என்று அறிவுரை கூறியதோடு அமையாமல், 'தனாகர்ஷண சங்கல்பம்' செய்து 'ஒரு ரூபாய் வைத்துக் கொள்; உனக்கு நல்ல வேலை கிடைக்கும்'என்று வாழ்த்தி அனுப்பினார். பகைவனுக்கும் கள்ளனுக்கும் கருணை செய்யும் அருள்வள்ளல் அன்றோ நம் மகரிஷி அவர்கள்.

பிறர் இன்புறக் கண்டு தாம் இன்புறுவதே பிழையில்லாச் சலிப்பில்லாப் பேரின்பம் என்ற தம்முடைய அருள் வாழ்த்திற்கு ஏற்ப நடந்து வழிகாட்டும் வள்ளலன்றோ நம் அருள் ஆசான் அவர்கள். ஐந்தில் அளவு முறைகளை நமக்கு வழங்கியதோடு அல்லாமல் தாமே ஓர் எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்தார்.

சிற்றுண்டியாகச் சிறிய அளவு தோசையைச் சாப்பிடுவார். தோசையின் அளவில் சற்று அதிகமாகக் கொடுத்தாலும் வழக்கமான அளவே எடுத்துக் கொள்வார். அருள்நிதி கந்தசாமி அவர்கள் உலக சமுதாய சேவா சங்கத் துணைத் தலைவராவார். அவருக்கு வீட்டில் ஒரு பிரச்சனை. அதை அறிந்து கொண்ட சுவாமிகள் நேரில் சென்று மனைவியாரிடம் அருள் உரையைக் கூறிச் சமாதானம் செய்து வைத்தார்.

நானும் எனது நண்பர் அருள்நிதி கண்ணன் மணியனும் ரிஷிகேசம் சிறப்புப் பயிற்சிக்காகச் செல்கிறோம். அருள்தந்தை அவர்கள் ரிஷிகேசம் பயணம் மேற்கொண்ட பிறகு நாங்கள் பயணம் மேற் கொண்டோம். எங்களுக்கு டில்லியில் உள்ள அன்பர்கள் எவரும் அறிமுகம் இல்லை. எங்களையும் அவர்களுக்குத் தெரியாது. இந்தச் சிக்கலை அருள்தந்தை தீர்த்து வைத்தார். எப்படி? அருள்தந்தை அவர்களே சில அன்பர்களுடன் நேரில் வந்து எங்களை அழைத்துச் சென்றார்கள். எதை எங்கே எப்படிச் செய்ய வேண்டுமோ அதை அங்கே செய்து வழிகாட்டியாய் விளங்குபவர் மகான் மகரிஷி அவர்கள் ஆவார்.

அன்பே வடிவாய் அருளே உளமாய்த் திகழ்பவர் மகரிஷி அவர்கள். அருள்தந்தை அவர்களுக்குத் தொண்டாற்றும் வாய்ப்புக் கிடைத் திருந்தது. ஒரு முறை டீ தயாரித்து அருள்தந்தை அவர்களுக்குக் கொடுக்கிறேன். அவர் பருகிவிட்டுக் கோப்பையில் நீர் ஊற்றி வைப்பார். நான் அவரிடம் கோப்பையை என்னிடம் தரும்படிக் கேட்டு வாங்கியபொழுது நழுவவிட்டு விட்டேன். கோப்பை கீழே விழுந்து உடைந்து விட்டது. அருள்தந்தை அவர்கள் 'கோப்பை பழையதாய் போய்விட்டது. புதியது வாங்கிக் கொள்ளலாம்' என்று எனக்கு ஆறுதல் கூறினார்.

இறைநிலை உணர்வோடு வாழ்ந்து வரும் அருள்தந்தை எல்லாருக்கும் இறையுணர்வை வளர்த்து வருகிறார்கள்.

கூடுவாஞ்சேரியில் அரசிடம் நிலம் வாங்கி அறிவுத் திருக்கோயில், பள்ளிக்கூடம், சமூகக்கூடம், முதியோர் இல்லம் போன்றவற்றை அமைத்து, உலகநலம் செய்ய ஏற்பாடுகள் செய்து கொண்டு இருந்தார். ஊர் மக்களில் சிலர் இரவோடு இரவாக மகான் மகரிஷியின் நோக்கம் நிறைவேறாதபடி, குடிசைகள் அமைக்க மக்கள் ஒருவருக்கொருவர் முந்திக் கொண்டு இருந்தார்கள்.

அந்த வேளை விடியற்காலமாய் இருந்தது. அருள் அன்னை லோகாம்பாள் டீ கொடுத்துச் செல்ல வந்திருந்தார்கள்.

'இவர்கள் குடிசைக்கு இடம் பிடித்துக் கொண்டு இருக் கிறார்கள். நீங்கள் ஒன்றும் பேசாமல் இருக்கிறீர்களே' என்றார். அருள்தந்தை கூறியதாவது- 'நான் கடவுளிடம் பேசிக் கொண்டு இருக்கிறேன் இந்த இடம் நமக்கு வேண்டாம் என்பது இறைவன் திருவுள்ளம்' என்றார்.

இறையருளால் அருட்பெருஞ்ஜோதி நகர் ஆழியாறில் சிறப்பாக அமைந்து உலகிற்கே ஒளி விளக்காய் அறிவுத் திருக்கோயில் அமைந் துள்ளதை யாவரும் அறிவர்.

இறைத் தன்மைகளான அன்பும் கருணையும் உடையவராய் வாழ்ந்து, மற்றவரும் அன்பும் கருணையுமாய் வாழ வழி வகைகளை அமைத்துக் கொடுத்துப் பேரின்பப் பெரு வாழ்வில் திளைத்துக் கொண்டுள்ளார்.

நன்றி:- பெரியநாயக்கன் பாளையம் அறிவுத்திருக்கோயில்
திறப்புவிழா மலர்

*06.11.2006*

# தொண்டே தொழுகை

– புலவர் க. தியாராஜன்
மனவளக்கலை மூத்த பேராசிரியர்

**அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்து
ஆற்றும் கடமை எல்லாம்
அன்பின் செயலாகும்**

–மகரிஷி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ விரும்புகின்றன.

மனிதன் துன்பம் இல்லாத இன்பத்தைப் பெற்று எந்நாளும் இன்பத்தில் திளைக்க விரும்புகின்றான்.

தொண்டாலேயே அதைப் பெற முடியும். தொண்டு என்றால் என்ன?

இயற்கை நிலையினையும் எண்ணத்தின் நிலையினையும் இன்ப துன்ப இயல்பையும் அறிந்த பேரறிவின் எல்லையில் நிலைத்து, ''தான், தனது'' என்று குறுகி நிற்கும் எல்லையைக் கடந்து, தன்னை உலக மக்களின் வாழ்வின் நலத்திற்காகவே அர்ப்பணித்த எண்ணம், சொல், செயல் என்ற மூன்றுவித ஆற்றல்களைப் பயன்படுத்தும் பெருநோக்கச் செயல் தொண்டு என்று அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார். தன்னையும் மனித சமுதாயத்தையும் தூய்மை ஆக்கி உயர்த்தும் தொண்டினால் மட்டுமே இன்பம் உண்டாகும்; என்றும் நிலைக்கும்.

தொண்டின்பமாகிய அமிர்தம் யாவருக்கும் பயனாகும்.

இறைவன் அருட்குலமாகிய உயிர்கள் இன்புறத் தொண்டு செய்வதால் தீமை ஒழிந்து வாய்மையும், தூய்மையும் உண்டாகும்.

அருட்பணியாகிய தொண்டினால் ஒருவன் உலகுள்ள அளவும் மாந்தர் உள்ளத்தில் அமரனாக வாழுகின்றான்.

கல்வி, தொழில், ஒழுக்கம், உடல் நலம், கூட்டுறவு, சுதந்திர உணர்ச்சி, மன உறுதி ஆற்றல் - இவை பெருகப் பணி செய்தலே சிறந்த தொண்டாகும்.

ஒவ்வொருவரும் ஓர் உண்மையைத் தேர்ந்து அதைக் கொண்டு உலகம் நன்மை பெற உண்மைத் தொண்டாற்றுவதாய் இவ்வுலகில் வந்த பயனையும் வீட்டின்பத்தையும் ஒருங்கே பெற்றுப் பேரின்ப வாழ்வில் திளைக்கலாம்.

உண்மைக்கு உயிர் வாழும் உத்தமர் உள்ளமே எல்லாப் பேறு களையும் எளிதே பெற்று உய்வு பெறும்.

**"நல்வினை யேசூழ நாளும் இருப்பாயேல்**
**பொல்லா வினையெல்லாம் போம்."**

வாழ்க வளமுடன்.

நன்றி:- திருவண்ணாமலை - ஞானமலர்

# நல்ல மனப்பான்மை

– அருள்நிதி க. தியாகராஜன்
மனவளக்கலை பேராசிரியர், ஆழியாறு

மனிதன் அடையக்கூடிய மேன்மைகளுக்கு அடிப்படையாய் அமைவது நல்ல மனப்பான்மையேயாகும். மனம் போல வாழ்வு என்பது பழமொழி. மனமானது எண்ணம், சொல், செயல்களில் ஈடுபடுகிறது.

**''எச்செயலும் மூலமெனும் எண்ணத்தால் ஆம்''**

என்ற சொற்றொடரை ஒவ்வொருவரும் நினைவில் வைத்துச் செயலாற்றி வரவேண்டும், அப்போது நன்மைக்கும் தீமைக்கும் எண்ணமே அடிப்படைக் காரணம் என்பதை உணர்ந்து கொள்ளலாம். நாம் எல்லோரும் விரும்புவது நன்மையையே. துன்பத்தை எவரும் விரும்புவதில்லை. செயலுக்கேற்ற விளைவு நிச்சயம் வந்தே தீரும்.

உலக வாழ்வு நமக்குத் துன்பம் தருவதாக அமைந்தாலும் அல்லது இன்பம் தருவதாக இருந்தாலும் அவை யாவும் நமக்குப் பாடம் புகட்டுவதற்காக அமைந்தவையேயாகும். நம் மனதைப் பண்படுத்துவதற்கு அந்தச் சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொள்வதே நல்ல மனப்பான்மை பெற்றிருப்பதற்கு அறிகுறியாகும்.

படகு தண்ணீரில் மிதந்து கொண்டிருக்கலாம். ஆனால் படகுக்குள் தண்ணீர் புகுந்து விடக் கூடாது. எத்தகைய மனப்பான்மை, நம் வாழ்க்கையை உருவாக்கி உயர்த்தும் என்பதை அறிந்து அத்தகைய மனப்பான்மையை நாம் பெற முயல வேண்டும்.

''தனக்கோ, பிறர்க்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, உடலுக்கோ, உயிர் உணர்ச்சிக்கோ' துன்பம் வராத அளவில் நம் எண்ணம், சொல், செயல்களை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும்.

குழந்தைகளும், செல்வமும் இருப்பதில் குற்றமில்லை, நேர்மையான முறையில் பொருள் தேடுவது, நேர்மையான வாழ்க்கை ஆகின்றது. முறைதவறிச் செல்வத்தைச் சேகரிக்கும்போது, அப்படிச் சேகரிப்பவன் தன் மனதைக் கெடுத்துக் கொள்கிறான்.

முறையாகத் தேடிய செல்வத்தை முறையாகப் பகுத்துக் கொடுப்பதன் மூலம் மனத் தெளிவு உண்டாகும், மனதை நேர்மையான முறையில் நாள்தோறும் வளர்த்து வந்தால் வாழ்க்கை இனிமை நிறைந்ததாக இருக்கும்.

செல்வத்தைத் தேடுவதிலும் அதைச் செலவழிப்பதிலும் பாலம் போன்று இருக்க வேண்டும். பாலத்தின் ஒரு புறம் தண்ணீர் வந்து கொண்டே இருக்கும் பாலத்தின் மறுபுறம் வந்த தண்ணீர் வெளியேறிக் கொண்டேயிருக்கும். அங்ஙனம் செல்வம் வந்து கொண்டிருப்பதற்கிடையில் அது நல்ல முறையில் செலவழிந்தும் கொண்டிருக்க வேண்டும்.

**''வாங்கும் கடனும் தேங்கும் பணமும் வளர வளர**
**வாழ்வைக் கெடுக்கும்''**

என்று அருட்தந்தை கூறியுள்ள சிந்தனையை எப்போதும் மனதில் தவறாமல் வைத்துக் கொண்டால் நன்றாற்றி இன்புற்று வாழலாம். செல்வம் வாய்த்தாலும் சரி வாய்க்காவிட்டாலும் சரி மனநிலை நல்ல நிலையில் இருக்க வேண்டும். மனதை நல்ல நிலைமையில் வைத்து அந்நிலையில் உறுதி பெற்றிருப்பதாக வாழ்ந்து வருபவன் நன்கு வாழத் தெரிந்து கொண்டவன் ஆகின்றான்.

**மனமே மனிதன், மனமே உலகம்**
**மனமே துன்பம், மனமே இன்பம்**
**மனத்தின் வெற்றியே வாழ்வின் வெற்றி**
**தியானமே மனதை ஜெயிக்கும் சாதனம்**
**தியானமே யோக சித்தியின் உயிராம்**
**புறத்தே செல்லும் புலன்களை அடக்கி**
**அலையும் சித்தம் அலையாதிருத்தி**
**நிம்மதியான செம்மதி உடனே**
**உற்றெழும் நினைப்பை உதிக்கும் இடமே**
**யார் எனக் கேட்டு விழிப்புடன் ஒட்டி**
**நானார்? நானே சுத்தான்மா என்பதை**

**உள்ளத்தில் கொண்டு வாழ்வதால்**

**நல்ல மனப்பான்மை உடையவனாகத் திகழலாம்.**

அதனால் எடுத்த காரியம் யாவினும் வெற்றி, எங்கும் வெற்றி, எல்லாம் வெற்றி, எதிலும் வெற்றி பெற்றுத் திகழலாம்.

**"ஆக்கத் துறையில் அறிவைச் செலுத்து**
**ஊக்கமுடன் உழை, உயர்வு நிச்சயம்"**

- அருட்தந்தை

நன்றி:- நெல்லை அறிவுத்திருக்கோயில் திறப்புவிழா
சிறப்பு மலர்,
*21.1.2000*

# குருவே துணை

– புலவர்.க. தியாகராஜன்

அறிவுத்திருக்கோயில் பொள்ளாச்சி

## குருவருளும் திருவருளும்

''தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே'' (திருமூலர்)

''குருவருள் இன்றித் திருவருள் இன்றே'' (தாயுமானவர்)

குரு என்பதன் பொருள் ஆசிரியர் என்பது ஆகும். இந்தச் சொல்லானது, நம் அறியமையைப் போக்கி, நம்மை நாம் யார் என்று அறிந்து கொள்ளும்படி உதவி செய்கின்ற ஓர் ஆன்மீக ஆசிரியருக்கே வழங்கப் பெறுகிறது.

குரு என்னும் சொல், கு-ரு என்னும் இரண்டு எழுத்துக்களால் அமைந்துள்ளது 'கு' என்பது அறியாமை அல்லது அஞ்ஞானம், 'ரு' என்பது அருள் அல்லது கருணை. எவர் ஒருவர் நம்முடைய அறியாமையையும், அஞ்ஞானத்தையும் தம்முடைய கருணை அல்லது அருளால் போக்குகின்றாரோ, அவரே குரு எனப் பெறுவார். நம்முடைய அடிப்படை அறியாமையை, நம்மைநாமே தெரிந்து கொள்ளாமல் இருக்கும் அறியாமையை நீக்கி அருள்பவரே நம்முடைய ஆன்மீக குரு ஆவார்.

நம்முடைய பலவகையான சந்தேகங்கள், அச்சங்கள், கவலைகள் ஆகியவற்றிற்கு எது காரணம்? நம்மை நாம் அறிந்து கொள்ளாதுள்ள அடிப்படையான அறியாமையே காரணம். நம்முடைய அடிப்படை

அறியாமையை நீக்கிக் கொள்ளுதலில் யார் நமக்கு உதவி செய்கின்றாரோ அவர்தான் நமக்கு உண்மையான குரு ஆவார். ஒரு பிள்ளை தனது அன்னை தந்தையின் நன்மொழிகளைப் பின்பற்றி முன்னேறுகிறான். இறைவன் உலகத் தந்தை. அவன் சக்தியாகிய திருவருள் உலகத் தாய். திருவருளின் துடிப்பாகிய சுத்தான்மா உணர்ச்சியில் ஒன்றாகி வாழ்வதே யோக வாழ்வாகும்.

எல்லாம் உயிர் வாழ்வும் திருவருளாகிய உள்ளொளியிற் பூத்த பெரிய தாமரை போன்றவை; ஒவ்வொரு ஜீவனும் அதன் இதழே; உள்ளான்மாவில் உயிர்கள் ஒன்றிப்பை அறிந்தால், பிரிவினை உணர்ச்சியில்லாமல், பேதபுத்தியில்லாமல், எல்லாரும் சேர்ந்து வாழலாம், இன்புறலாம். உலகவாழ்விற்குக் கண் போன்றது அறிவு. புறக்கண் புறப்பொருளையே பார்க்கும், உளக்கண் உள்ளுண்மையைக் காணும், உள்ளறிவைத் தூண்டும், இந்தக் கண்ணைத் திறப்பவனே ஞான குரு; நல்லாசிரியன். ஆசான் அறிவொளி தேசவிளக்காகும். வான்போல் அறிவு, மழை போல் கருணை, நிலம் போல் வளமை, நேரிய ஒழுக்கம், தராசு போல் நடுநிலை, நிதானம், மலர் போல் புன்னகை, தாய் போல் உள்ளம், தந்தை போல் பரிவு - இவற்றைக் கொண்டு அருள் பாலிப்பான் நல்லாசான்.

இன்று குழந்தை நாளை மனிதன்; இன்றைய செடி நாளைய மரம், இன்றைய சிறுவர் இனிவரும் பெரியார். குழந்தை ஓர் குட்டி உலகம், அதனுள் கண்ணன், புத்தன், ஏசு, அப்பர், வள்ளலார், காந்தி போன்ற பெரியார் தன்மைகள் பொதிந்து கிடக்கின்றன. நல்லாசான். வருங்கால வீரர், அறிஞர், கலைஞர், முனிவர் ஆகிய சிறிய பெரியோர் களை அழகு பொலிய நிறைவாக்கும் உயிர்ச்சிற்பி நல்லாசான். அறிவழகும், குணவழகும், நன்னடையழகும், சொல்லழகும், பொருள் அழகும் சேர்ந்த ஆசானே சீடனுக்கு அன்னை, தந்தை, நண்பன், இறைவன் ஆவான். யோகக்கலையும், காலத்திற்கேற்ற உலகக் கலைகளும், இயற்கைக் கலையும், தொழிற்கலையும் சீடன் பெற்று சிறக்க வேண்டும். அப்போதே கல்வி நிறைவுறும். மேற்கூறிய வாழ்க்கைக் கல்வியை அருள்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள் உலகுக்கு அளித்து வருகிறார். அவர் உலக நலத் தொண்டராய் நம்மிடையே வாழ்ந்து வருவதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

உள்ளுணர்ந்து தன்னையறிந்து அந்நிலையில் நிலைத்து வாழும் தனிக்கருணை வடிவான அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஆதியாம் கருவைப் புருவத்திடை உணர்த்தி, அவ்விடத்தில்

நிலைத்திருக்க அருள்பாலிக்கிறார். அதனால் பேதமற்ற நிலையை உணர்ந்து இறைநிலையை அடைய முடிகிறது. அந்நிலையை அடைகின்ற பொழுது உண்மையான நிறைவு, பரிபூரணம், பிறவிப் பெற்றியைப் பெறலாம். தெய்வத் தன்மையை அறிந்து அதுவாதலே மாணிடத்தின் பயன், அப்பெருநிலையை குரு உயிரின் சேர்க்கையால் யாவரும் பெறலாம்.

**எவரொருவர் குருவை மதித்து ஒழுகினாலும்**
**தப்பாது குருவுயர்வு மதிப்போர் தம்மைத்**
**தரத்தில் உயர்த்திப் பிறவிப் பயனை நல்கும்''**

என்னும் அருள் தந்தையின் அருள்வாக்கு பேரின்ப வாழ்விற்கு வழி காட்டுகிறது.

அரிதாகிய மனிதப்பிறவியில் குரு திருவடியை வணங்கி வாழ்த்தி வாழும் நெறியை அறிந்து பின்பற்றி வாழவே உலக சமுதாய சேவா சங்கத்தை நிறுவினார் அருள்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மாமகரிஷி அவர்கள்.

**எளியமுறை உடற்பயிற்சி**
**எளியமுறைக் குண்டலினி யோகம் எனும் தியானப் பயிற்சி**
**எளியமுறைக் காயகல்பப் பயிற்சி**
**தற்சோதனை என்னும் அகத்தாய்வு முறைகள்**
**அறிஞர் குழு**

ஆகியவை குருவருள் தந்த திருவருள் ஆகும்.

நிலவு ஒளி பகலவனின் ஒளியால் நிலவுகிறது. அவ்வாறே உயர் குருவின தனிக் கருணை உலக மக்களுக்கு மெய்ஞ்ஞானம் பெற உதவுகிறது. அகத்தாய்வில் அறுகுணச் சீரமைப்பு முறை அன்பும் கருணையுமாய் விளங்கும் இறை உணர்வை எளிதில் எய்தத் துணை புரிகிறது. மனித வாழ்வில் நிகழ்ந்த கொடுமைகள்; போர்கள், துன்பங்கள் அத்தனையும் உணர்ச்சிவயப்பட்ட அறுகுணங்களாலேயே நிகழ்ந்துள்ளன.

பொய், களவு, கொலை, சூது, கற்பழிப்பு எனும் ஐம்பெரும் பழிச்செயல்கள் அறுகுண எழுச்சிகள் என்னும் தீய மன நிலைகளால் தான் விளைகின்றன. தெளிந்த அறிவோடும், விழிப்போடும் இருந்தால் இந்த ஆறு மனோநிலைகளில் பேராசையை நிறைமனமாகவும்,

சினத்தைப் - பொறையுடமையாகவும், கடும்பற்றை - ஈகையாகவும், முறையற்ற பால் வேட்டைக் கற்பாகவும், உயர்வு தாழ்வு மனப் பான்மையை - நேர்நிறையுணர்வாகவும் வஞ்சத்தை - மன்னிப்பாகவும் சீர் அமைத்துக் கொள்ள அருள் தந்தை தற்சோதனை என்ற முறையில் வடிவமைத்துக் கொடுத்துள்ளார். இல்லறத்தில் இருந்தே வீட்டின்பத்தை அடையும் வழிமுறைகளை வகுத்துக் கொடுத்துப் பயிற்சி அளித்து வருவது இனபத்தில் இன்பம் அளிப்பதாகும். தவம், தற்சோதனை, குணநலப்பேறு, முழுமைப்பேறு ஆகியவற்றால் நாம் அறிவின் முழுமைப்பேறு பெற்று அமைதி என்னும் நல்வாழ்வை அடைந்து இன்புற்று வாழலாம்.

**''எல்லாம் உடையான் குருவாகி ஈங்கு எமது**
**அல்லல் அறுத்தான் என்று உந்தீபற**
**அவன்தாள் தொழுவாம் என்று உந்தீபற''**

(சாந்தலிங்கர்)

**''தந்தை தாய் ஆவானும் சார்கதி இங்கு ஆவானும்**
**அந்தமிலா இன்பம் நமக்கு ஆவானும் - எந்தம் உயிர்**
**தானாகுவானும் சரணாகுவானும் அருட்**
**கோனாடுவானும் குரு''**

(சிதம்பரசுவாமிகள்)

நன்றி:- அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி பன்முக ஆய்வு

# குடும்ப அமைதி

**யோ**கம் என்பது துறவிகளுக்கு மட்டும் உரியது என்று நினைப்பது தவறாகும். இல்லறத்தாரும் யோக சித்தி பெறவேண்டும். ஆண், பெண் வாழ்வே சுத்த சக்தி யோகமாக வேண்டும்.

அகில வாழ்வும் ஆண் பெண் குடித்தனம், இல்லறவொழுக்கம் தொல்லறவொழுக்கம். இல்லறம் இன்றி இயலாது உலகம்.

உண்ணும் காய்கனி தானியங்களும் தாவரங்களின் இல்லற வாழ்வில் வருவன. பொன் அணியுடன் நீங்காது ஒன்றான பொன் போன்று, அறிவிற் சிறந்து ஓங்கும் ஆண் மகனுடன் பெண் சக்தியும் பொருந்தியதே இல்லற வாழ்க்கையாகும்.

விளக்கும் சுடரும், கனலும் ஒளியும், மலரும் மணமும், வானும் நீலமும், நீரும் பயிர் நிலமும் போல ஆண், பெண் தத்துவங்கள் இரண்டும் இணை பிரியாதனவாகும்.

மனித சமுதாயத்திற்கு அடிப்படை சிறு வட்டம் குடும்பமே யாகும். குடும்ப அமைதிக்கு பொருள் ஈட்டும் திறன், வாழ்க்கை அனுபவம் இருகண்கள் போன்றவை, பெற்றோர் மக்கள் பாரமரிப்புக் கடமையாக மாறி அது செயலாகும் கூட்டுறவு வட்டம் குடும்பம் எனப்படுகிறது.

நட்பிலே கணவன் மனைவி உறவு மிகப் பெருமை உடையது. ஒருவர் தேவைகளையும் விருப்பங்களையும் மற்றவர் மதித்து, உதவி, தன் தேவை விருப்பங்களைக் கட்டுப்பாட்டோடு முடித்துக் கொள்ளும் வாழ்க்கை அறத்தைக் கணவன் மனைவி இருவருமே உயிர் போலக் காக்க வேண்டும்.

கற்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் உயிரை விட மேலாகப் போற்றக்கூடிய ஒழுக்கம். உடல் உரம், மனநலம், பொருள்வளம் மூன்றையும் காத்து குடும்ப அமைதியைத் தரும்.

வீட்டில் அன்பு, அருள் இன்முகக்கலை இவற்றோடு கூடிய உருவப் படங்களை மாட்டி வைப்பதால் குடும்பத்தில் அமைதியும் இன்முகமும் நிலவும், குழந்தைகளும் நல்லவர்களாக அழகு மிக்கவராகப் பிறப்பார்கள், வளர்வார்கள்.

வீட்டின் விரிவே பெருமை உள்ள உலகம். அதாவது மனை வாழ்வின் பெருக்கமே உலக வாழ்வாகும். வீடுகளின் கூட்டமே நாடு. வீடு செழிக்க நாடு செழிக்கும். ஒவ்வொரு நாடும் இல்லறத்தைக் கண்போலக் காக்கவேண்டும்.

இயல்பான குடும்ப வாழ்வு இன்பம் அளிக்கும்.

அறம், அன்பு, நல்ல தொழில், மனப்பொருத்தம், வாய்மை, கற்பு, பகுத்துண்டு வாழ்தல், உடல் நலம், பொறுமை முதலியவற்றால் குடும்ப வாழ்வு வெற்றி பெறும், அமைதி ஏற்படும். அறத்தில் நிலைத்து அன்பில் திளைப்பதே குடும்ப அமைதிக்கு வழியாகும்.

அது காதலர், பெரியோர், முனிவர், முதியோர், முன்னோர், விருந்தினர், மாணவர், உறவினர், வீரர் அனைவருக்கும் ஆதரவு ஆகும். குடும்ப அமைதியே குவலய அமைதிக்கு அடிப்படை. ஒளிவு மறைவு இல்லாமல் வாழும் வாழ்க்கையில்தான் குடும்ப அமைதி நிலைக்கும். பிறரைப்பற்றி குறை கூறுதல், வற்புறுத்தல், கட்டளை இடுதல் மூன்றும் இல்லாவிட்டால் குடும்பத்தில் அமைதி நிலைத்திருக்கும்.

சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், தியாகம் மூன்றின் காரணமாக குடும்பத்தில் அமைதி ஓங்கும். கணவன் மனைவிக்கு இடையே நட்புறவையும் ஒற்றுமையையும் உயிர்போல பாதுகாக்க வேண்டும். அதைப் பெற எதை வேண்டுமானாலும் கற்பு ஒன்றைத் தவிர வேறு எதை வேண்டுமானாலும் தியாகம் செய்யலாம்.

பிறர் குற்றத்தைப் பெரிதுபடுத்தாமையும் பொறுத்தலும் மறத்தலும் குடும்ப அமைதிக்கு வழிகளாகும். ஒவ்வொருவரும் தன்னிலே அமைதி பெற்று மகிழ்ச்சி பெற்று சுகமாக இனிமையாக வாழ்ந்தால் குடும்பம் நாடு, உலகம் எல்லோரும் நலமாக இருக்கலாம்.

கணவன் மனைவி இருவரும் காலையில் எழுந்தவுடன் ஒருவரை ஒருவர் "வாழ்க வளமுடன்" என்று வாழ்த்திக் கொள்வதால், இதைப் பார்க்கக்கூடிய குழந்தைகளுக்கும் இப்பண்பாடு உருவாகும். சுற்றி உள்ளவர்கள் நன்றாக இருப்பார்கள். உலகமே நன்றாக இருக்கும்.

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!

நன்றி:- கோபி செட்டிப் பாளையம் - முப்பெரும் விழா மலர்

# தொண்டாற்றி இன்பம் காண்போம்

"தொண்டே தொழுகை" என்பது சான்றோர்கள் கண்டறிந்த வொரு நெறியாகும். "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்பது ஔவையார் அருளிச் செய்த திருவாக்காகும். தன்னையும் மனித சமுதாயத்தையும் தூய்மையாக்கி உயர்த்தும் தொண்டினால் எய்தும் இன்பமே யாவருக்கும் பயனாகும்.

உலகில் அருள் ஒளி, அருள் அறிவு, அருள் வாழ்வு, அருள் ஆட்சி ஆகியவற்றை மலர வைத்தலே தலைசிறந்த தொண்டனே யாவான். தொண்டு செய்பவன் அறிந்தாலும் அறியாவிட்டாலும் அவன் தெய்வத்தின் தொண்டனேயாவான். ஆருயிர்க்குச் செய்யும் தொண்டே ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாகும். இதை மக்கள் அனைவரும் மறவாது இருக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

சிறந்த தொண்டுள்ளம் படைத்தவர் எந்த உயிரையும் பார்த்து அஞ்சுதல் கூடாது. நாம் உண்மையான தொண்டர்களா? என்பதைச் சோதித்துப் பார்ப்பதற்குரிய உரை கல்லாய் இருப்பது அஞ்சாமைதான்.

நடமாடும் தெய்வங்களாக மக்களையும் மற்ற உயிர்களையும் நாம் வழிபட வேண்டும். உயிர்கள் அனைத்தையும் கடவுளின் வடிவங்களாகக் கருதி அவைகளுக்குத் தொண்டு புரிதலே உண்மையான கடவுள் வழிபாடாகும்.

மனிதன் தொண்டு செய்யப் பிறந்தவன் தொண்டு செய்து கடவுளை அடைதற்பொருட்டே நமக்கு மனித உடல் தரப்பட்டுள்ளது. உயிர்கள் அனைத்துள்ளும் நல்ல உடலையும் நல்ல உள்ளத்தையும் மனிதன் பெற்றிருக்கின்றான். உடலையும் உள்ளத்தையும் பயன்படுத்தி மனிதன் பணிபுரியலாம். பணிபுரிதலே மனிதனது கடமையாகும்.

பணிபுரிதலோடு மனிதனுடைய கடமை முடிவடைந்து விடுகின்றது. நம்முடைய குருநாதர் அருள்தந்தை அவர்கள் தன்னை

முற்றிலுமே உலக நலனுக்காகவே அர்ப்பணித்துக் கொண்டவர். அவர் எழுதிய ''வாழ்க்கை விளக்கம்'' என்ற நூலில் எத்தனை எத்தனை வகையான தொண்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் என்பதை தெளிவாக யாவரும் அறிந்து கொள்ளலாம்.

பண்பிலே மகரிஷியைப் போல் மற்றொருவரைக் காணமுடியாது சிறந்த தத்துவ ஞானத்தையும் அவர் உலகுக்கு வழங்கி வருகிறார். உலக மக்களிடத்து ஒப்பற்ற அனுதாபத்தையும் காட்டி வருகிறார்.

''உலக சமாதான நூல்'' ஒன்றே அவரின் உலகநலத்தை, உலக ஒற்றுமையை, ஒருலக ஆட்சியின் அவசியத்தை எடுத்து விளக்கும் அவர் ஒரு பெரிய தன்னிகரற்ற தத்துவஞானி. ஒப்புயர்வற்ற தத்துவங்களை அவர் உலகுக்கு புகட்டி வருகிறார். செயற்கரிய பெரிய செயல்களை உலகிலே செய்து கொண்டு இருப்பதற்கு இடையில் நமக்கு ஒரு தனி இடத்தை அவர் விரும்பாதவராக விளங்குவதனை நாம் அறிவோம்.

உலக நலத்தொண்டில், தான், தனது என்பவனவற்றையெல்லாம் அறவே துறந்தவர். பாமர மக்களின் தத்துவ ஞானியாகவும் விளங்குவதோடு, உலக சமாதானத்திற்கென்றே தொண்டாற்றி வரும் உலக உத்தமராகவும் விளங்கி வருகிறார். கர்மயோகத்தின் உச்ச நிலையை அவரிடத்து நாம் காண்கிறோம்.

அவர் ஆற்றிய, ஆற்றிவரும் அரும்பெரும் தொண்டிற்கு அடிப்படையாக சுயநலநோக்கமே சிறிதேனும் இல்லை. அருள்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷியின் நல்வாழ்வையே மற்றவரும் வாழ்ந்து வரும்படி நாமும் உதாரண புருஷராக விளங்கித் தொண்டாற்றி இன்பம் காண்போம்.

வாழ்க வளமுடன்.

நன்றி: நாமக்கல் வெள்ளி விழா சிறப்பு மலர்
9.2.2003

குருவே துணை

# நல்வழி காட்டும் நூல்

ஆசான் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் உலகம் உய்ய வந்த உத்தமர். அவர் வாக்குகள் அனைத்தும் யோக வாழ்வில் கனிந்து வெளிவந்தவை. உலக மக்களுக்குப் பெரிதும் உதவக் கூடியவை.

''பெரியாருடன் கூடல் பேரின்பமாமே'' என்ற திருமூலர் திருவாக்கும், ''எவர் ஒருவர் குருவை மதித்து ஒழுகினாலும் தப்பாது குருவுயர்வு மதிப்போர் தம்மைத் தரத்தில் உயர்த்திப் பிறவிப் பயனை நல்கும்'' என்ற மகரிஷிகள் திருவாக்குகளும் வேதங்களென மதிக்கத்தக்கவை.

தாம் அடைந்த மேன்மையினை உலக மக்கள் யாவரும் பெற வேண்டும் என்பது மகான்களின் ஆதங்கம்.

அவ்வகையில் ஆசான் அருள்தந்தையின் வாழ்க்கை வரலாற்றில் நூறு நிகழ்ச்சிகள் அமைந்த நல்ல நூலினை ஞானச் செல்வர் பானுகுமார் அவர்கள் வடிவமைத்து உள்ளார்கள்.

அவர்கள் எண்ணங்களை எல்லாம் எழுத்து ஆக்கக்கூடிய பரந்த, பண்பட்ட நெஞ்சம் படைத்தவர்கள்.

கடமையைக் கடவுள் பணியாக ஆற்றி வருபவர்; செய்வன வற்றைத் திருந்தச் செய்யும் பண்பாளர்; காலத்தைப் பொன்போலப் போற்றித் தொண்டாற்றி வருபவர்; அவர் எண்ணத்தால், சொல்லால், செயலால், எழுத்தால் பலருக்கும் உதவி வரும் பெருந்தகையாளர்; அன்பில் நெகிழ்வும், வாழ்வில் எளிமையும், உழைப்பில் ஓய்வின்மையும், கொள்கையில் உறுதியும், ஆராய்ச்சியில் நடுநிலையும், அறிவில் தெளிவும், புகழில் மயங்காமையும் கொண்டு திகழ்பவர்.

மனவளக்கலையில் அதாவது குண்டலினி யோகத்தில் ஞான ஆசிரியராய் விளங்கி தமது இல்லத்திலேயே தவ மையம் அமைத்து மக்கள் தொண்டாற்றிச் சிறப்புடன் திகழ்ந்து வருகிறார்கள்.

பல்வகையான முதல்தரமான நூல்களைத் தந்துகொண்டு இருக்கும் அருள் சுரங்கம் பானுகுமார் அவர்கள்.

கலைகளில் எழுத்துக் கலைக்குத் தனி ஆற்றல் உண்டு. காலங் கடந்து வாழும் பண்பு எழுத்துக்கே உரியதாகும்.

அவ்வகையில் ஆசான் அருள்தந்தை வேதாத்திரி அவர்களின் வாழ்வில் நூறு நிகழ்ச்சிகள் என்ற வாழ்க்கை விளக்கம் தரும் நூல் வெளிவருவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. இந்நூல் தென்தமிழ் போல் விளங்கி நல்வழி காட்டும் என்பது உறுதி.

ஆசான் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் நிழல்போல் யான் உடனிருந்து நேருக்கு நேர் அறிந்த நிகழ்ச்சிகள் பெரிதும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இதனை அன்பர்கள் அனைவரும் ஓதி உணர்ந்து வாழ்வில் அனைத்து நலன்களையும் பெற்றுப் பேரின்ப வாழ்வில் திளைக்கக் குருவருளையும் திருவருளையும் வேண்டுகிறேன்.

*ஆழியாறு,*
*26.06.2006*

அன்பன்,
**புலவர். க. தியாகராஜன்**

*நன்றி:- வேதாத்திரி மகரிஷியின் வாழ்வில்*
*100 சுவையான நிகழ்ச்சிகள்*

# சன்மார்க்கம்

– அருள்நிதி.க. தியாகராஜன்
மனவளக்கலை பேராசிரியர்
ஆழியாறு [07.01.2000]

**வள்ளலார் அருள்**

**என்று எனை இராமலிங்க வள்ளல் பெருமானார்**
**எதிர் நின்று காட்சி தந்து அருளைப் பொழிந்தாரோ**
**அன்று முதல் உடல் உயிரோடறிவை அருட் பணிக்கே**
**அர்ப்பணித்து விட்டேன் என் வினைத்தூய்மையாச்சு**
**இன்று எந்தன் மனநிலையோ வள்ளற் பெருமானார்**
**எந்த செயல் செய்யென்று உணர்த்துவாரோ அதுவே**
**நன்று எனக் கொண்டவற்றை நான் முடிக்கும் பேற்றால்**
**நல்லறிஞர் பலர் எனக்கு நட்பை அளிக்கின்றார்.**

சன்மார்க்கம் நன்மார்க்கம், நன்மார்க்கம் என்றார் வள்ளலார்.

அருள்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள் உலகம் உய்ய உதித்த உத்தமர், புனிதர், புண்ணியர், பூரணர் ஆவார்.

சூரியனுக்குக் கதிர் இயல்பு போல அருள்தந்தை அவர்களுக்கு அருள் வாக்கும் அருள் தொண்டும் இயல்பாய் உள்ளன.

அவர் தரும் சன்மார்க்கம் சாதி, மத, நாடு, நிற, சாத்திர, கோத்திர, மொழி முதலான பேதங்கள் இல்லாமல் உலகோர் அனைவருக்கும் வழங்கும் உலகப் பொதுச் சமயமாகும்.

***சத்+மார்க்கம் = சன்மார்க்கம்***

***சத் – உண்மை; மார்க்கம் – நெறி, வழி***

தோற்றம் ஒடுக்கம் முதலிய வேறுபாடுகள் இல்லாமல் ஒரு தன்மையாய் இயங்குவது சத் அல்லது மெய்ப்பொருள் என்பது. அச்சத்து எனும் உண்மைப் பொருள் வழி பின்பற்றி நடக்க மக்கள் கடமையாகக் கொள்ள வேண்டும். மக்கள் வாழ்விற்குரிய நெறி சன்மார்க்கம் ஒன்றே.

சத்மார்க்கமே - சன்மார்க்கம்; சமரசத்திற்கு சன்மார்க்கமே உரியதாகும், சமரசத்திற்கும் சன்மார்க்கத்திற்கும் உள்ள இணக்கம் என்றும் பிரியாதது ஆகும். சன்மார்க்க நல்வாழ்விற்கு மகரிஷி அவர்கள் கூறும் அருளுரை அகில உலகிற்கும் பொருந்துவதாகும்.

**''சத்து எனும் மெய்ப்பொருளின் நிலையுணர்ந்து**
**சன்மார்க்க வாழ்வு பெற வேண்டுமென்றால்**
**சித்து எனும் மனமயக்கில் சிக்கிடாதீர்**
**சிலர் மயங்கித்தரும் பொருளோ புகழோ**
**வித்துவை நீ கருதறித்தால் வறுக்கும் போது**
**விளைகின்ற ஈடு இணையற்ற சக்தி**
**அத்தனையும் அறிவிற்கே ஊட்டமாக்கி**
**அறிவறிந்து மக்கள் தொண்டாற்று வீரே''**

என்ற திருப்பாட்டு மூலம் சன்மார்க்க வாழ்விற்கு வழிவகுத்துள்ளார். மேலும் சன்மார்க்கப் பெருவாழ்விற்கு நல்வழி காட்டுகிறார்.

**''சிந்தனையும் சீர்திருத்தம் சிக்கனம் கைப்பற்றிச்**
**சிதறாமல் வாழ்வில் சேர்ந்து வாழ்வதோடு**
**எந்த ஒரு வழியேனும் ஏழைகட்கு உதவும்**
**ஏற்றமுள்ள செயல் செய்து இறைஉயிர் அறிவு**
**இந்த மூன்று தத்துவமும் இயன்றவரை தேர்ந்து**
**இன்முகமும் கருணைக்கு இருப்பிடமாய் மனதில்**
**சாந்த நிலையோடு சன்மார்க்க சங்கத்தில்**
**சார்ந்து நலம் காண்போம்''**

என்ற கவிதையால் எப்படி வாழ வேண்டும் என்பதை அறிவுறுத்தி உள்ளார்.

சன்மார்க்கம் ஆகிய நன்மார்க்கத்தை மக்கள் கைக்கொண்டு பின்பற்றி வாழும் வழியை மேலும் விளக்கி உள்ளதைக் காண்போம்.

சமூகத்திற்கு அவசியமான நன்மை விளைவிக்கும் செயல்கள் அல்லது தீமையான செயல்களை யாருமே செய்யாதிருக்கும் சூழ் நிலைகள் பெற்றுவிட்டால் சன்மார்க்கப் பெருவாழ்வு சித்தியாகும் என்று விளக்கி உள்ளார்.

ஒரு மனிதனின் எண்ணம் சொல் செயல்களின் விளைவு சமூகத்தில் அச்செயலின் தரத்திற்கேற்ப பலருக்கும் நன்மையோ தீமையோ தரும். எனவே மனிதனின் சிறப்பாற்றலை உணர்ந்து கொண்டால் உலகில் உள்ள எண்ணிறந்த மக்களின் ஒத்துழைப்பின் மூலமே ஒவ்வொரு மனிதனும் நல்வாழ்வைப் பெற்று உய்யலாம்.

இந்த எண்ணத்தால் இன்ப துன்பங்களில் பங்குகொண்டு வாழும் சகிப்புத் தன்மையை எல்லோரும் பெறுவார்கள்.

இவ்வுலகில் மனிதகுலம் இனிது வாழ எத்தனை எத்தனையோ பேரறிஞர்கள் சுத்த சன்மார்க்க நெறியைப் பரவச் செய்ய வழிகள் வகுத்து உள்ளனர். அப்பேரறிஞர் உழைப்பால் மனித இனம் ஒழுக்கம், அறம், உள்ளுணர்வு பெற்றுள்ளதை அறிகிறோம். இருந்தபோதும் அத்தனையும் மீறிப் போர்கள் அவ்வப்போது மனிதர்களை அழித்து வருகின்றன.

போர் ஒழிய உலக சமாதானத் திட்டம் வேண்டும்.

சம + ஆசனம் = சமாதானம். மனிதனுக்கு மனிதன் சமஉரிமை வேண்டும். நாம் காணும் உலகம் எங்கெங்கும் எவ்வாறு நோக்கினும், உலகில் வாழும் எல்லா மனிதருக்கும் பொது உரிமை ஆகிறது. அப்படி அல்லாமல் யாரோ தனிப்பட்ட ஒருவருக்கே உரிமை உடையதன்று.

உலகம் திருவருள் வீடாம்; அதன் தலைவன் இறைவன், தாய் இயற்கை; உயிர்கள் யாவும் திருவருட்குலம் என்பதை உணர்ந்து கொண்டால் சுத்த சன்மார்க்க வாழ்வை எல்லோரும் பெறலாம்.

சமாதானத் தூதுவர்கள் துணைக்கொண்டு சுத்த சன்மார்க்க நெறி உலகெங்கும் பரவத் திட்டம் கொடுத்துள்ளதைக் காண்போம்.

**''சமாதானத் தூதுவர்கள் பலரைத் தோற்றித்**
**தம்பதிகளாய் உலகம் முற்றும் சுற்றி**
**சமாதானம் மக்களிடம் நிலவச் செய்ய**
**சன்மார்க்க நெறியுணர்ந்த முறை வகுப்போம்.**
**சமாதான நோக்குடையோர் ஒத்துழைப்பால்**
**சகலதொழில் கலாசாலை யாவும் தோற்றி**

**சமாதானப் புது உலகைச் சிருட்டி செய்வோம்.**
**சர்வதேச அறிஞர்குழு ஒன்றின் மூலம்.''**

மேலும், உலக மக்கள் எல்லா நலன்களையும் எளிதில் பெற்று இன்புறும் வண்ணம் ஐந்தொழுக்கப் பண்பாட்டை வழங்கி உள்ளார். இறையருள் உணர்த்த இப்புதியதொரு பண்பாட்டை உலகிற்குக் கொடுத்துள்ளார்.

புதியதொரு பண்பாடு உலகுக்கு வேண்டும்

போதை, போர், பொய் ஒழித்துப் பொறுப்போட முல் செய்வோம் அதிக சுமை ஏதுமில்லை.

(1) அவரவர்தம் அறிவின் ஆற்றலினால் உடல் உழைப்பால் வாழவென்ற முடிவும்

(2) மதிபிறழ்ந்து மற்றவர்கள் மனம் உடல் வருந்தா மாநெறியும்

(3) உணவிற்குயிர் கொல்லாத நோன்பும்

(4) பொது விதியாய்ப் பிறர்பொருளை வாழ்க்கைச் சுதந்திரத்தைப் போற்றிக் காத்தும்

(5) பிறர்துன்பம் போக்கும் அன்பும் வேண்டும்.

அறிவின் மயக்கமே பல சமயப் போருக்கும் கண்மூடி வழக்க ஒழுக்கங்கட்கும் பிற கேடுகளுக்கும் காரணமாக நிற்கிறது. போதை தரும் பொருளே அறிவின் மயக்கத்திற்குக் காரணம். போதை, போர், பொய் ஒழித்துப் பொறுப்போடு நல்வழியில் சன்மார்க்கத்தில் வாழ வேண்டும்.

அறிவாலோ உடலாலோ அறிவாலும் உடலாலும் ஒவ்வொருவரும் உழைத்துப் பிழைக்க வேண்டும்.

**''உழைப்பால் உடலும் உள்ளமும் உலகமும்**
**பயன்பெறும் உணர்வீர்!'' என்பது**
**மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்தாகும்.**

ஒத்தும் உதவியும் வாழும் பண்பாட்டில் அடுத்தவர் மனம், உடல் வருந்தாப் பெருவாழ்வு மலரும். மனிதன் மனத்தை இதமாக வைத்துக் கொள்ளத் தெரிந்தவன். உணவுக்கு வேண்டிய தானியங் களையும் பிறவற்றையும் பயிர்த்தொழில் மூலம் பெற்று வாழ

முடியும், அடுத்தவருக்கு உதவ முடியும். அதனால் பிறவுயிரைக் கொன்று வாழ வேண்டிய நிர்ப்பந்தம், கட்டாயம் இல்லை. உணவுக்காக உயிர்களைக் கொல்லாத நோன்பில் வாழக் கடமைப்பெற்றவன் ஆகின்றான்.

**"நோன்பெனப் படுவது கொன்று தின்னாமை"**

என்றார் ஔவையாரும் ஒருவருக்கொருவர், பிறர் பொருளைக் கவராமலும் பிறர் வாழ்க்கைச் சுதந்திரத்தைப் போற்றியும் காத்தும் வாழ வேண்டும்.

அதற்கு அன்பு வேண்டும். அறம் வேண்டும், அன்பு துன்பத்தைப் போக்கும், இன்பத்தை ஆக்கும். துன்பம் போக்கும் அன்பும் வேண்டும். எனவே, வாழ்விற்கு எல்லா நன்மைகளையும் தருகின்ற ஐந்தொழுக்கப் பண்பாடு ஒன்றே எளிதில் பின்பற்றி வாழும் முறை. பிறருக்கு நன்மை தரும் முறையில் வாழ முடியாவிட்டாலும் தீமை செய்யாமலாவது வாழலாம். சுத்த சன்மார்க்க நெறி உலக மக்கள் அனைவருக்கும் எளிதில் அமைவதாகும்.

**வாழ்க வாழ்கவென் வாழ்க்கைத் துணைவி**
**வாழ்க வாழ்கவென் குழந்தைகள் எல்லாம்**
**வாழ்க வாழ்க என்னுடன் பிறந்தோர்கள்**
**வாழ்க வாழ்கவென் நண்பர்கள் அனைவரும்**
**வாழ்க வாழ்கவென் தொழில்துறை அன்பர்கள்**
**வாழ்க பகைவர்கள் வளமொடு திருந்தி**
**வாழ்க இவ்வுலகில் வாழ் மக்களெல்லாம்**
**வாழ்க வாழ்க இவ்வையகம் வாழ்க**
**வாழ்க அறநெறி வாழ்க மெய்ஞ்ஞானம்!**

நன்றி: வேதாத்திரிய இலக்கிய கருத்தரங்கு மலர்.



ஆன்மீக கருத்துகளுக்கு பொக்கிஷமாகவும், ஆழ்ந்த தத்துவ விளக்கங்களுக்கு களஞ்சியமாகவும் விளங்கும் இந்நூலினது தனிப் பெருமையாவது - ஞானக் கடலாகவும், உணர்வுமிக்க கலைஞராகவும் விளங்கிய புலவர், குருவுடன் இணைந்து வாழ்ந்தவர் - அவரோடு பேசியவர் என்பதே இத்தகைய பெறுதற்கரிய பேறு அவருக்குக் கிடைத்திருந்தது.

குருவுடன் வாழ்ந்தவர் என்ற இப்புத்தகம் உலக இன்பங்களைத் தேடியலையும் மக்களுக்கு உண்மையான இன்பம் எதுவென்று உணர்த்துவது மட்டுமல்லாமல் இன்பத்தை அடைதற்குரிய வழியையும் காட்டுகின்றன.

தெய்வத்தின் திருவுருவாக வாழ்ந்தவர். அவர் திருவாய் மொழிகள் வெறும் கல்விமானின் சொற்களல்ல. வாழ்வெனும் நூலின் பக்கங்கள் அவை. அவர்தம் சுய அனுபூதியின் வெளிப்பாடுகள்.

பானுமதிகுமார்

ISBN 818446478-9

9788184464788

Rs.105/-